
# 1974 அவ்யக்த முரளி



பொருளடக்கம் - 30

**18.01.1974** பாபா வரவில்லை !

**23.01.1974** இப்பொழுது சக்தி சேனையின் பெயரை நிரூபணம் செய்ய வேண்டும்!

**25.01.1974** நிராகார சொரூபத்தின் நினைவிலிருப்பது மற்றும் ஆனந்த ரசனையைப் பெறுவதற்கான சகஜ விதி!

**28.01.1974** மகிமையை ஏற்றுக் கொள்வதன் மூலம் ஆன்மீக சக்தியில் குறை!

**03.02.1974** விலகிய உள்ளுணர்வு மற்றும் ஜுவாலா ரூபத்தின் திட எண்ணத்தினால் விநாச காரியத்தை நிறைவேற்றுங்கள்!

**06.02.1974** பகுத்தறியும் சக்தி மூலம் மகாரதியை பகுத்தறிவது!

**20.02.1974** எப்பொழுதும் சகயோகி மற்றும் சகஜயோகியாக ஆகுங்கள்!

**15.04.1974** விக்ன விநாஷக் (விநாயகர்) ஆகி அங்கதனுக்குச் (ஹனுமானுக்கு) சமமாக மாயாவின் மீது வெற்றி அடையுங்கள்!

**24.04.1974** திரிமூர்த்தி ஒளியின் சாட்சாத்கார மூர்த்தி ஆவதற்கான தேதியை நிர்ணயம் செய்யுங்கள்!

**28.04.1974** ஸ்தூல சாதனங்களின் கூடவே சூட்சும சாதனங்களினால் ஈஸ்வரிய சேவையில் வெற்றி!

**02.05.1974** தந்தைக்குச் சமமாக அனைத்து குணங்கள் நிரம்பியவர்களாக ஆகுங்கள்!

**16.05.1974** மகாரதி நிலையின் லட்சணம்!

**20.05.1974** பாப்தாதாவின் இதயம் என்ற ஆசனத்தில் அமர்ந்திருக்கும் குழந்தைகளே அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள்!

**23.05.1974** எல்லைக்குட்பட்ட கவர்ச்சிகள் மற்றும் பெருமைகளிலிருந்து விலகியிருப்பவர் தான் உண்மையான வைஷ்ணவன்!

**27.05.1974** உலக நன்மை காரியத்திற்காக பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களின் வார்த்தைகளும் எப்பொழுதும் நன்மை பயப்பதாகும்!

**30.05.1974** ஆன்மீக சேவையில் எப்பொழுதும் தந்தையின் சகயோகியாக (உதவியாளராக) மற்றும் எவரெடியாக (தயாராக இருப்பவராக) ஆகுங்கள்!

**18.06.1974** லைட் ஹவுஸ் மற்றும் மைட் ஹவுஸ் ஆகி புது உலகை படைப்பவர் ஆகுங்கள்!

**21.06.1974** மகான் (உயர்ந்த) பதவியின் புக்கிங் (முன்பதிவு) செய்வதற்காக நுண்ணிய ரூபத்தில் செக்கிங் (சோதனை) அவசியமாகும்!

**24.06.1974** இராஜயோகி தான் உலக இராஜ்யத்தின் அதிகாரி ஆவார்!

**26.06.1974** அனைத்து சித்திகளின் (வெற்றிகளின்) பிராப்தியின் ஆன்மீக போதையில் எப்பொழுதும் நிலைத்திருங்கள்!

**30.06.1974** அவ்யக்த (வியக்த-பௌதீக நிலையிலிருந்து) நிலையில் நிலைத்திருப்பதினால் முயற்சி செய்வதின் வேகம் அதிகமாகிறது!

**04.07.1974** சுயநிலையின் சிரேஷ்ட தன்மையின் மூலம் வீணான எண்ணங்களின் குழப்பத்தின் முடிவு!

**08.07.1974** மாஸ்டர் ஞானம் நிறைந்தவர் மற்றும் சர்வ சக்திவான் விதவிதமான க்யூவிலிருந்து (வரிசையிலிருந்து) விடுபட்டிருக்கிறார்!

**11.07.1974** முரளியில் கொடுக்கப்பட்டுள்ள டைரக்ஷன் (வழிகாட்டுதல்) மூலமாக அனைத்து குறைகளிலிருந்து விடுபடுதல்!

**14.07.1974** தந்தைக்குச் சமமாக வெற்றி அடைபவராக ஆவதற்கான சாதனம் அனைவருக்காக சுபபாவனை வைப்பது!

**18.07.1974** சம்பூர்ண தூய்மையான உள்உணர்வு மற்றும் பார்வை மூலமாக உயர்ந்த அதிர்ஷ்டத்தின் சித்திரம்!

**13.09.1974** முரபி குழந்தையாகி (ஒரு பாபாவை முழு ஆதாரமாக ஆக்கியிருக்கும் குழந்தையாகி) தன்னுடைய நிலையை யோகயுக்த் (யோகம் சொரூபமானதாக) மற்றும் யுக்தி யுக்தானதாக (புத்தி கூர்மையானதாக) ஆக்குங்கள்!

**15.09.1974** முயற்சி செய்வதின் கடைசி லட்சியம் அவ்யக்த ஃபரிஷ்தா நிலை!

**05.12.1974** வீணான எண்ணங்களை சக்திசாலியாக ஆக்குவதின் மூலம் காலன் மீது வெற்றி அடையலாம்!

**24.12.1974** ஒரு தடவை சகயோகம் கொடுப்பது என்றால் கடைசி வரை சகயோகம் பெறுவதாகும்!

## 27.12.1974 யோகி ஆகுக மற்றும் தூய்மை ஆகுக என்பதின் மூலம் வரதானங்களின் பிராப்தி!

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!**

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂

# 23.01.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இப்பொழுது சக்தி சேனையின் பெயரை நிரூபணம் செய்ய வேண்டும்!

தன்னை சக்தி சேனையின் போர் வீரன் என்று நினைக்கிறீர்களா? எப்படி உங்களுடைய குழுவின் பெயர் சக்தி சேனையாக இருக்கிறதோ. அப்படி நீங்கள் உங்களை சக்தி என்று நினைக்கிறீர்களா? இந்தப் பெயரோ உங்களுடைய அறிமுகத்தைக் கொடுக்கிறது. ஏனென்றால் இது காரியத்தின் ஆதாரத்தில் இருக்கிறது. சக்தி சேனையின் அர்த்தமாவது அனைத்து சக்திகளும் நிறைந்த ஆத்மாக்களின் குழு ஆகும். எப்படி பெயர் (தன்) அறிமுகத்தை நிரூபிக்கிறது என்றால் அதே போல் நடைமுறையில் காரியமும் இருக்கிறதா? என்ற கேள்வி தான் எழுகிறது. அனைத்து சக்திகள் நிரம்பியவராக ஆவதற்கான வழியைக் கூறிக் கொண்டே "எப்பொழுதும் தந்தை பெயர் என்ன மற்றும் தந்தையின் மகிமை என்ன?" என்ற இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் என்று பாபா கூறினார். அதன் பிறகு எது தந்தையின் காரியமோ அதுவே என்னுடைய காரியமாகவும் இருக்கிறதா என்று சிந்தியுங்கள். ஒருவேளை தந்தையின் பெயரை நிரூபிக்கக்கூடிய காரியம் செய்யவில்லை என்றால் தந்தையின் பெயரை எப்படி புகழடையச் செய்வீர்கள்? தந்தையின் மகிமையாக சர்வ சக்திவான் என்பது இருக்கிறது அதே போலவே என்னுடைய சொரூபமும் இருக்கட்டும் என்று யோசியுங்கள். ஏனென்றால் தந்தையின் மகிமையின் அனுசாரமாகத் தான் தன்னுடைய சொரூபத்தையும் உருவாக்க வேண்டும். தந்தை சர்வ சக்திவானாக இருக்கிறார் மற்றும் குழந்தைகள் சக்தியற்றவர்கள், தந்தை ஞானம் நிறைந்தவராக இருக்கிறார் மற்றும் குழந்தைகள் படிப்பற்றவர்களாக இருக்கிறார்கள் என்றால் இது அழகாக இருக்குமா?

ஒவ்வொரு நொடியும் முன்னேறும் கலையின் பக்கம் இருக்கிறதா? என்ற இதைப் பார்க்க வேண்டும். ஒரு நொடி முன்னேறும் கலைக்கு

பதிலாக நிற்கும் கலையாக இருக்க வேண்டாம். இறங்கும் கலைக்கான விஷயமோ இல்லவே இல்லை. நீங்கள் வழிகாட்டிகள் ஒருவேளை வழிகாட்டி நிற்கும் கலையில் வந்து விட்டார் மற்றும் நின்று விட்டார் என்றால் உங்களுக்குப் பின்னால் செல்லக்கூடிய உலகின் ஆத்மாக்கள் அனைவரும் நின்று விடுவார்கள். ஒருவேளை இஞ்சின் நின்று விட்டது என்றால் கூடவே பெட்டிகளும் தானாகவே நின்று விடும். உங்கள் அனைவரின் பின்னால் உலகின் ஆத்மாக்கள் இருக்கிறார்கள். உங்களுடைய ஒரு நொடி நின்று விடுவதும் சாதாரண விஷயம் இல்லை. அந்தளவு பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்கிறீர்களா? விசேஷ ஸ்தானத்தில் விசேஷமான பதவியின் ரூபத்தில் அனைவரின் பார்வையில் இருக்கிறீர்கள் இல்லையா? அப்படி எப்பொழுது நாடகப்படி விசேஷ ஸ்தானத்தில் விசேஷ பங்கைச் செய்வதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்றால் தன்னுடைய விசேஷ பங்கிற்கு மகத்துவம் கொடுத்து நடந்து கொள்ள வேண்டும் இல்லையா? ஒருவேளை தன்னுடைய மகத்துவத்தை முன் வைக்கவில்லை என்றால் மற்றவர்களுக்கும் உங்களுடைய மகத்துவத்தை ஏற்க மாட்டார்கள். எனவே இப்பொழுது தன்னுடைய வாழ்க்கை பங்கின் மகத்துவத்தை தெரிந்து கொள்ளுங்கள். நமக்கு மேல் எந்த பொறுப்பும் இல்லை என்ற இந்த எண்ணத்தைக் கூட இப்பொழுது வைக்காதீர்கள். உங்கள் அனைவரையும் பார்த்து யாராவது முடிவெடுக்கிறார் என்றால் முடிவெடுக்க வைப்பவர் நீங்கள் தான் இல்லையா.

ஒருவேளை ஸ்தாபனைக் காரியத்திற்கான ஏற்பாடுகள் குறைவாக இருக்கிறது என்றால் விநாசத்திற்கான ஏற்பாடுகள் எப்படி ஏற்பட முடியும். இதுவோ புரிந்து கொள்ள வேண்டிய விஷயம். இவை இரண்டிற்கும் ஒன்றோடு ஒன்று தொடர்பு இருக்கிறது இல்லையா? அந்த நேரத்தில் தயாராகியே விடும் என்று நினைப்பது கூட தவறாகும். ஒருவேளை வெகுகாலமாக மகாவிநாசத்தை எதிர்நோக்குவதற்கான ஏற்பாடுகள் செய்வதற்கான பயிற்சி இல்லை என்றால் அந்த நேரம் வெற்றி அடைய முடியாது. இதற்காக வெகுகாலத்துப் பயிற்சி தேவையாக இருக்கிறது. இல்லையென்றால் பயிற்சிக்காக இத்தனை வருடங்கள் ஏன் கொடுக்கப்பட்டிருக்கிறது? வெகுகாலத்திற்கு தொடர்பு இருக்கிறது எனவே தான் நாடகப்படி அதிக காலம் முயற்சி செய்வதற்காகவும் கிடைத்திருக்கிறது. அதிக காலத்து பிராப்திக்காக

# 1974 அவ்யக்த முரளி

அதிக காலத்து முயற்சியும் செய்ய வேண்டும். அந்த மாதிரி வெகுகாலத்து முயற்சி இருக்கிறதா? அறிவியலைச் சேர்ந்தவர்களுக்கு மகாவிநாசத்திற்கான கட்டளையிடலாமா? ஒரு நொடிக்கான விஷயமே தான், சமிக்ஞை கிடைத்தது மற்றும் செய்தார்கள். அந்த மாதிரியே சக்தி சேனையும் தயாராக இருக்கிறதா? எப்பொழுதுமே ஆத்ம அபிமானியாக இருங்கள் என்பது தான் ஒரு நொடியின் சமிக்ஞை ஆகும். கொஞ்ச காலத்திற்காக இல்லை சதா காலத்திற்காக அப்படி ஆகி விடுங்கள். அந்த மாதிரி சமிக்ஞை கிடைக்கிறது என்றால் நீங்கள் ஆத்ம அபிமானியாக ஆகி விடுவீர்களா அல்லது அந்த நேரம் சாதனத்தை தேடுவீர்களா? ஞான பாயின்ட்ஸ்களை யோசிப்பீர்களா அல்லது தன்னை ஸ்திரமாக்குவதற்காக (அசையாதிருக்க) முயற்சி செய்வீர்களா? எனவே இப்பொழுதிலிருந்தே அந்த மாதிரி முயற்சி செய்யுங்கள். இராணுவத்தினருக்கோ திடீரென்று தான் கட்டளை கிடைக்கும் இல்லையா.

நீங்களாகவே உங்களுக்கான புரோகிராமை (நிகழ்ச்சியை) தயாரியுங்கள். மேலும் நீங்களாகவே முன்னேற்றம் அடையுங்கள். புரோகிராம் உருவானது என்றால் செய்து விடுவோம் என்ற இந்த ஆதாரத்தையும் வைக்காதீர்கள். பட்டி உருவாகிறது என்றால் மூன்று நாட்களை மிக நன்றாகக் கழிப்பீர்கள், இதிலேயோ குழுவின் சகயோகம் கிடைக்கிறது ஆனால் இந்த ஆதாரமும் இருக்க வேண்டாம். சில நேரம் சகயோகம் கிடைக்க முடியும் மற்றும் வேறு சில நேரம் சகயோகம் கிடைக்க முடியாமலும் இருக்கும். செய்யும் பயிற்சி எதன் ஆதாரத்திலும் இருக்கக்கூடாது. ஒருவேளை வாய்ப்பு கிடைத்து விட்டது என்றால் நல்லதே தான். கிடைக்காதபோதிலும் பயிற்சி செய்வதிலிருந்து விலகக்கூடாது. புரோகிராமின் ஆதாரத்தில் தன்னுடைய முன்னேற்றத்தின் ஆதாரத்தை உருவாக்குவது என்ற இதுவும் பலவீனம் தான். இதுவோ அனாதி புரோகிராம் கிடைத்திருக்கிறது இல்லையா? அதை ஏன் நினைவு வைத்துக் கொள்வதில்லை. ஒவ்வொரு நேரமும் பட்டியில் இருக்க வேண்டும் என்ற இந்த அனாதி புரோகிராமோ கிடைத்திருக்கிறது இல்லையா?

நல்லது. எப்படி தன்னுடைய பெயரோ அப்படி காரியம் செய்யக்கூடிய, தந்தையின் பெயரை புகழடையச் செய்யக்கூடிய, ஒரு நொடியில்

கிடைக்கும் கட்டளைப்படி தயாராகக்கூடியவர்களுக்கு, ஆதாரமில்லாமல் முயற்சி செய்யக்கூடிய ஆன்மீக போர்வீரர்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 25.01.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நிராகார சொரூபத்தின் நினைவிலிருப்பது மற்றும் ஆனந்த ரசனையைப் பெறுவதற்கான சகஜ விதி!

எப்படி தன்னுடைய சாகார சொரூபம் எப்பொழுதும் மற்றும் இயல்பாகவே நினைவில் இருக்கிறது அதே போலவே தன்னுடைய நிராகார சொரூபம் எப்பொழுதும் மற்றும் இயல்பாக நினைவில் இருக்கிறதா? எப்படி சாகார சொரூபம் தன்னுடையதாக ஆன காரணத்தினால் இயல்பாகவே நினைவில் இருக்கிறது. அதே போல் நிராகார சொரூபமும் தன்னுடையது என்றால் தன்னுடையது அந்த சொரூபமும் இயல்பாக நினைவிருக்கிறதா? தன்னுடையதை மறப்பது கடினமாக இருக்கும். ஸ்தூல பொருளிலும் எப்பொழுது தன்னுடையது என்ற உணர்வு வந்து விடுகிறது என்றால் அதுவும் இயல்பாகவே நினைவிலிருக்கும் அதை நினைவு செய்ய வேண்டியது இருக்காது. இதுவும் தன்னுடைய இயற்கையான மற்றும் அழியாத சொரூபமாகும் என்றால் இதை நினைவு செய்வதில் ஏன் கடினம்? தெரிந்து கொண்ட பிறகோ சுலபமாக நினைவிலேயே இருக்க வேண்டும். தெரிந்து கொண்டு விட்டீர்கள் இல்லையா, இப்பொழுது இந்த நினைவு சொரூபத்தின் பயிற்சியில் ஆழத்தில் செல்ல வேண்டும்.

எப்படி அறிவியலைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொன்றின் ஆழத்தில் செல்கிறார்கள் மற்றும் புதுப்புது கண்டுபிடிப்புக்களை செய்து கொண்டிருக்கிறார்கள். அதே போல் தன்னுடைய உண்மையான சொரூபம் மற்றும் அதன் அனாதி குணம் மற்றும் சம்ஸ்காரம் என்ற இந்த ஒவ்வொரு குணத்தின் ஆழத்தில் செல்ல வேண்டும். எப்படி ஆனந்த சொரூபம் என்று கூறுகிறோம் என்றால் அந்த ஆனந்த சொரூபத்தின் நிலை என்ன? அதனுடைய அனுபவம் என்ன, ஆனந்த சொரூபம் ஆனதினால் அதன் விசேஷ பிராப்தி என்ன மற்றும் ஆனந்தம்

என்று எதைக் கூறுவது? அந்த நேரத்தின் நிலையின் பிரபாவம் பிரத்யக்ஷமாக தன் மேல் மற்றும் மற்ற ஆத்மாக்கள் மேல் என்ன ஆகிறது? அந்த மாதிரி ஒவ்வொரு குணத்தின் ஆழத்தில் செல்லுங்கள். எப்படி அவர்கள் கடலின் ஆழத்தில் செல்கிறார்கள் மேலும் எவ்வளவு ஆழத்தில் உள்ளே செல்கிறார்களோ அந்த அளவே அவர்களுக்கு புதுப்புது பொருட்கள் கிடைக்கின்றன. அதே போல் நீங்கள் எவ்வளவு உள்நோக்குமுகமாகி தன்னுள் மூழ்கியிருக்கிறீர்களோ அப்பொழுது நிறைய புதுப்புது அனுபவம் ஆகும். அந்த மாதிரி நீங்கள் இதில் மூழ்கிப் போய் இருப்பதாக உணருவீர்கள்.

எப்படி மீன் தண்ணீருக்குள் இருந்து கொண்டே தான் வாழ்ந்து கொண்டிருப்பதை உணருகின்றது செய்கிறது, அதனுடைய பற்றுதல் தண்ணீர் மேல் இருக்கிறது. உடல் நிர்வாகத்திற்காக ஒருவேளை வெளியில் வந்தால் கூட ஒரு நொடி வெளியில் வந்தது பிறகு உள்ளே சென்று விடுகிறது ஏனென்றால் தண்ணீர் இன்றி அது உயிருடன் இருக்க முடியாது. அதே போல் உங்கள் அனைவரின் பற்றுதல் தன்னுடைய இயற்கையான சொரூபத்தின் விதவிதமான அனுபவத்தின் கடலோடு இருக்க வேண்டும். காரியம் செய்வதற்காக வெளிமுகத்தில் வந்தீர்கள், கர்ம இந்திரியங்களின் ஆதாரத்தை எடுத்தீர்கள் அதாவது சாகார சொரூபமுடைய நிலையில் வந்தீர்கள் ஆனால் உங்களுடைய பற்றுதல் மற்றும் ஈர்ப்பு அந்த அனுபவக்கடலின் பக்கமே தான் இருக்க வேண்டும். எப்படி ஸ்தூல பொருள் தன்னுடைய விதவிதமான ரசனைகளின் அனுபவம் செய்விக்கிறது தான் இல்லையா? எப்படி சர்க்கரை தன்னுடைய இனிப்புத் தன்மையை அனுபவம் செய்விக்கிறது மற்றும் ஒவ்வொரு குணமுடைய பொருள் தன்னுடைய குணத்தை அனுபவம் செய்வித்துக் கொண்டே தன் பக்கம் ஈர்க்கிறது. அதே போலவே நீங்கள் உங்களுடைய இயற்கையான சொரூபத்தின் ஒவ்வொரு குணத்தின் ரசனையின் அனுபவத்தை மற்ற ஆத்மாக்களுக்குச் செய்வியுங்கள். அப்பொழுது தான் ஆத்மாக்கள் கவரப்படுவார்கள். அப்படி இப்பொழுது இந்த அனுபவம் செய்வது மற்றும் செய்விப்பது தான் தன்னுடைய விசேஷக் காரியம் என்று புரிந்து கொள்ளுங்கள். வர்ணனையின் கூடவே ஒவ்வொரு குணத்தின் அனுபவம் செய்வியுங்கள். அதை எப்பொழுது நீங்களே இந்த அனுபவக்கடலில் மூழ்கியிருப்பீர்களோ அப்பொழுது தான் செய்விக்க முடியும் என்றால் அந்த மாதிரி மூழ்கிப்

போய் இருக்கிறீர்களா? இதன் மூலம் சுலபமாக நினைவு சொரூபமானவராக ஆகி விடுவீர்கள்.

நினைவு எப்படி செய்வது? இதற்குப் பதிலாக நினைவு எப்படி மறக்க முடியும்? என்ற கேள்வி எழட்டும். இந்தளவு மாற்றம் வந்து விடட்டும். இப்பொழுதோ கொஞ்சம் அனுபவம் செய்திருக்கிறீர்கள். கொஞ்சம் சுவைத்து மட்டும் பார்த்திருக்கிறீர்கள். எப்பொழுது அதில் மூழ்கி விடுகிறீர்களோ அப்பொழுது சாப்பிடவும் செய்வீர்கள் மற்றும் சொரூபத்திலும் கொண்டு வந்தீர்கள் என்று கூறலாம். இப்பொழுது அதிக அனுபவம் செய்வதற்கான அவசியம் இருக்கிறது. எப்பொழுது இந்த அனுபவத்தில் சென்று விடுவீர்களோ பின்பு இந்த சின்னச் சின்ன விஷயங்கள் தானாகவே அகன்று விடும் அதாவது விடைபெற்று விடும். நல்லது.

வரதானம்: நிச்சயத்தின் ஆதாரத்தில் எப்பொழுதும் ஒரே ரசனையில் இருந்து அசையாத நிலையில் நிலைத்திருக்கக்கூடிய கவலையற்றவர் ஆகுக!

நிச்சயபுத்தி உடையவரின் அடையாளமே எப்பொழுதும் கவலையற்றிருப்பது. அவர் எந்த விஷயத்திலும் மேலே கீழே போக முடியாது, எப்பொழுதும் ஆடாமல் அசையாமல் இருப்பார். எனவே என்ன ஆனாலும் யோசிக்காதீர்கள், என்ன? ஏன்? என்பதில் ஒருபொழுதும் செல்லாதீர்கள், மூன்று காலத்தையும் தெரிந்தவராகி கவலையற்றவராக இருங்கள் ஏனென்றால் ஒவ்வொரு அடியிலும் நன்மை இருக்கிறது. எப்பொழுது நன்மை செய்பவர் தந்தையின் கையைப் பிடித்திருக்கிறீர்கள் என்றால் அவர் நன்மையற்றதையும் கூட நன்மையாக மாற்றி விடுவார். எனவே எப்பொழுதும் கவலையற்றவராக இருங்கள்.

சுலோகன்: யார் எப்பொழுதும் அன்பானவராக இருக்கிறாரோ அவர் ஒவ்வொரு காரியத்திலும் இயல்பாகவே சகயோகியாக ஆகிறார்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 28.01.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மகிமையை ஏற்றுக் கொள்வதன் மூலம் ஆன்மீக சக்தியில் குறை!

குழந்தைகளே, நீங்கள் போர்க்களத்தில் நின்று கொண்டிருக்கும் ஆன்மீகப் போர் வீரர்கள்; பின்பு எங்காவது போரிடும் தன்மையை மறந்து தனது சகஜ சுகமான வாழ்க்கையை ஓட்டிக் கொண்டே தனது வாழ்க்கைக்குத் தேவையான சாதனம், செல்வங்களை ஈடுபடுத்தியபடியே நேரத்தைக் கழிக்கவில்லைதானே? எப்படி போர் வீரனுக்கு வெற்றி அடைய வேண்டும் என்ற தீவிரம் இருந்து கொண்டேயிருக்கிறது, அது போல் மாயாஜீத் ஆவதற்கான ஈடுபாடு, அக்னியைப் போல் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறதா? குழந்தைகளே! இப்போது உங்கள் முன் சேவையின் பலன் சாதனங்களின் ரூபத்தில் மற்றும் மகிமையின் ரூபத்தில் பிராப்தி செய்வதற்கான நேரம் இது. இச்சமயம் ஒருவேளை இந்தப் பலனை ஏற்றுக் கொண்டீர்கள் என்றால் பின்பு கர்மாதீத் நிலையின் பலன், சம்பூர்ண தபஸ்வியின் பலன் மற்றும் அதீந்திரிய சுகத்தினுடைய பிராப்தியின் பலனை அடைய முடியாமல் போய் விடும். எந்த ஒரு ஆதாரத்தின் மீதும் வாழ்க்கையின் ஆதாரம் இருக்கக்கூடாது; புருஷார்த்தமும்கூட எந்த ஒரு ஆதாரத்தின் மீதும் இருக்கக்கூடாது. இதனால் யோகபலத்தின் சக்தியின் பிரயோகத்தில் குறை ஏற்பட்டு விடும் மற்றும் எந்தளவு யோகபலத்தின் சக்தியைப் பிரயோகம் செய்யவில்லையோ, அந்தளவு அந்த சக்தி அதிகரிக்காது. யோகபலம் பயிற்சியின் மூலம் நிச்சயமாக அதிகரிக்கும். எப்படி ஏதாவது ஒரு விஷயம் முன்னால் வருகிறது எனில் ஸ்தூல சாதனம் உடனே நினைவுக்கு வந்து விடுகிறது, ஆனால் ஸ்தூல சாதனம் இருந்தும்கூட முயற்சியும் (trial) யோகபலத்தினால் தான் செய்ய வேண்டும்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 03.02.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# விலகிய உள்ளுணர்வு மற்றும் ஜுவாலா ரூபத்தின் திட எண்ணத்தினால் விநாச காரியத்தை நிறைவேற்றுங்கள்!

எப்படி பாப்தாதாவை சாகாரம், ஆகாரம் மற்றும் நிராகாரம் ஆகிய மூன்று நிலைகளில் அனுபவம் செய்கிறீர்கள். அதே போல் தன்னையும் தந்தைக்குச் சமமாக சாகாரத்தில் இருந்த போதும் ஆகாரி மற்றும் நிராகாரியாக எப்பொழுதும் அனுபவம் செய்கிறீர்களா? இந்த அனுபவம் நிரந்தரமாக ஆவதினால் இந்த சாகார உடல் மற்றும் இந்த பழைய உலகத்திலிருந்து இயல்பாகவே விலகியிருப்பவராக ஆகி விடுவீர்கள். பார்வையாளர் ஆகி இந்த பழைய உலகத்தின் காட்சிகளை மேலோட்டமாக பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று அப்படி அனுபவம் செய்வீர்கள். அந்த மாதிரி சக்திசாலியான நிலை இப்பொழுது நிரந்தரமானதாக இருக்க வேண்டும். அந்த மாதிரி நிலையில் நிலைத்திருக்கும் ஆத்மாவைப் பார்க்கும் பொழுதே என்ன தென்படும்? லைட் ஹவுஸ் மற்றும் பவர் ஹவுஸ் மாதிரி தென்படும். அந்த மாதிரியான ஆத்மாக்கள் தந்தைக்குச் சமமான விஷ்வ கல்யாணகாரி (உலகிற்கு நன்மை செய்பவர்கள்) என்று கூறப்படுகிறார்கள். யார் எதிரில் வந்தாலும் ஒவ்வொருவரும் லைட் (ஞானம்) மற்றும் மைட்டை (சக்தியை) பிராப்தி செய்து கொண்டே செல்லட்டும். அப்படியானால் அந்த மாதிரியான களஞ்சியமாக ஆகியிருக்கிறீர்களா? அந்த மாதிரி மகாதானி, வரதானி, சர்வ குணதானி சர்வ சக்திகளின் தானி, தொடர்பில் வருபவர்களுக்கு ஆன்மீக வர்ணம் பூசக்கூடிய, பார்வையால் முன்னேற்றம் செய்யக்கூடிய, குருடர்களுக்கு மூன்றாவது கண் கொடுக்கக்கூடிய, அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு சென்றடைய வேண்டிய இடத்தைக் கூறக்கூடிய, துடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்களை சீதளமான, சாந்தமான மற்றும் ஆனந்தமானவராக ஆக்கக்கூடிய ஆத்மாவாக

ஆகியிருக்கிறீர்களா? இந்த லட்சியத்தின் போதையிலேயே இருக்கிறீர்களா? இது தான் தந்தைக்குச் சமமான நிலை என்று கூறப்படுகிறது.

எப்படி நேரத்தின் அருகாமை தென்படுகிறது. அதே போலவே தன்னுடைய நிலையின் அருகாமை மற்றும் சமநிலை தென்படுகிறதா? எப்படி உலகில் மக்கள் நேரத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதே போலவே ஸ்தாபனை மற்றும் விநாஷ காரியத்தைச் செய்விக்கக்கூடிய நீங்கள் தன்னுடைய காரியத்தை மற்றும் தன்னுடைய நிலையை முழுமையாக ஆக்குவதற்காக ஏற்பாடுகள் செய்வதிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்களா? அல்லது ஏற்பாடுகள் செய்பவர்கள் அலட்சியமாகவும் மற்றும் காத்துக் கொண்டிருப்பவர்கள் தீவிரமானவர்களாகவும் இருக்கிறார்களா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? ஏற்பாடுகளை முழு மூச்சாக செய்து கொண்டிருக்கிறீர்களா? அல்லது என்ன ஆகுமோ அதைப் பார்த்துக் கொள்ளலாம் என்று எப்படி உலகத்தினர் கூறுகிறார்களோ அதே போலவே ஏற்பாடுகள் செய்வதற்கான பொறுப்பில் இருப்பவராக ஆகியிருக்கும் ஆத்மாக்கள் நீங்களும் என்ன ஆகுமோ அதை அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம் என்று யோசிக்கவில்லையே? இதைத் தான் அலட்சியம் என்று கூறுவது. இப்பொழுதோ இவ்வளவு பெரிய காரியம் செய்வதற்காக மிக அதிக ஏற்பாடுகள் தேவையாக இருக்கிறது, என்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று தெரியுமா? சங்கருக்கு காரியம் செய்விக்க வேண்டுமா? சங்கர் எப்பொழுது விநாஷம் செய்விப்பார் என்று அவரையே பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? விநாஷ ஜுவாலை எப்பொழுது மற்றும் எப்படி பிரகாசமாக எரிந்தது? இதற்கு பொறுப்பானவராக யார் ஆனார்கள்? இதற்கு பொறுப்பாக சங்கர் ஆனாரா அல்லது யக்ஞத்தை படைக்கும் தந்தை மற்றும் பிராமணக் குழந்தைகள் பொறுப்பாளர்களாக ஆனார்களா? எப்பொழுதிலிருந்து ஸ்தாபனை காரியத்திற்காக யக்ஞம் படைக்கப்பட்டதோ அப்பொழுதிலிருந்தே ஸ்தாபனையின் கூடவே யக்ஞ குண்டத்திலிருந்து விநாஷ ஜுவாலை வெளிப்பட ஆரம்பித்தது. அப்படி விநாஷத்தை எரிய வைக்கக் கூடியவர்கள் யாராக ஆனார்கள்? தந்தை மற்றும் நீங்களும் சேர்ந்தே ஆனீர்கள் இல்லையா? அப்படி யார் எரிய வைக்கக்கூடியவர்களோ அவர்கள் நிறைவேற்றவும் வேண்டும்.

மேலும் இதற்கான பொறுப்பு சங்கர் இல்லை. சங்கருக்குச் சமமாக ஜுவாலா ரூபம் உடையவராகி எரிய ஆரம்பித்திருக்கும் விநாஷ ஜுவாலையை முழுமையாக்க வேண்டும். ஏதாவது இறந்த உடலை எரிக்கிறார்கள் என்றால், எரிக்கத் தொடங்கிய பிறகு இடையிடையே அக்னியை மிக அதிமாக்குவார்கள். அப்படியானால் இந்த விநாஷ ஜுவாலை கூட எவ்வளவு பெரிய அக்னி. இதை முழுமையாக்குவதற்காக பொறுப்பாளராகியிருக்கும் ஆத்மாக்களுக்கு இதை அதிகப்படுத்துவதற்காக அசைக்க வேண்டியதிருக்கும். எப்படி ஆசைப்பீர்கள்? கையாலா? அல்லது கம்பாலா? எண்ணத்தினால் இந்த விநாஷ ஜுவாலையை அதிகரிக்க வேண்டியதிருக்கும். அப்படி ஜுவாலா ரூபமாகி விநாஷ ஜுவாலையை அதிகரிப்பதற்கான எண்ணம் உருவாகிறதா அல்லது இது நம்முடைய காரியம் இல்லை என்று நினைக்கிறீர்களா? டிராமா அனுசாரம் நிச்சயம் நடக்கும் என்று ஆன போதிலும் பொறுப்பிலிருப்பவராக ஆகியிருக்கும் ஆத்மாக்களுக்கு முயற்சியையும் செய்யத் தான் வேண்டும். இந்த விதமாக இப்பொழுது இந்த முக்தி மற்றும் ஜீவன்முக்தியின் கதவுகளைத் திறப்பதற்கான பொறுப்பு தந்தையுடன் உங்கள் அனைவரது பொறுப்பும் சேர்ந்தே இருக்கிறது. இந்த விநாஷம் அனைத்து ஆத்மாக்களின் அனைத்து விருப்பங்களையும் நிறைவேற்றுவதற்குக் காரணமான சாதனம் ஆகும். இந்த சாதனம் உங்களுடைய சாதனா மூலமாக நிறைவேறும். இப்பொழுது அனைத்து ஆத்மாக்களுக்கும் நன்மை ஏற்படட்டும் என்று அந்த மாதிரியான எண்ணம் வெளியாக வேண்டும். அனைத்து துடித்துக் கொண்டிருக்கும், துக்கமான மற்றும் அமைதியில்லாத ஆத்மாக்கள் வரமளிக்கும் வள்ளல் தந்தை மற்றும் குழந்தைகள் மூலமாக வரதானத்தைப் பெற்று எப்பொழுதும் அமைதியானவராகவும் மற்றும் சுகமானவராகவும் ஆகி விடட்டும். மேலும் இப்பொழுது வீடு செல்லட்டும். இந்த எண்ணம் நேரத்தின் அருகாமையின் பிரகாரம் சக்திசாலியானதாக இருக்க வேண்டும். ஏனென்றால், இந்த எண்ணத்தினால் தான் மற்றும் இந்த நினைவினால் தான் விநாஷ ஜீவாலை சுடர்விட்டு எழும் மற்றும் அனைவருக்கும் நன்மை ஏற்படும்.

இப்பொழுது எவ்வளவு தூரம் எல்லைக்கப்பாற்பட்ட விசால சொரூபத்தின் சேவையை தீவிர ரூபத்தில் செய்து கொண்டே இருக்கிறீர்களோ, அந்த அளவே எல்லைக்கப்பாற்பட்ட விலகிய உள்

உணர்வையும் தீவிரமாக்க வேண்டும். உங்களுடைய எல்லைக்கப்பாற்பட்ட விலகிய உள்உணர்வு மற்றும் வைராக்கிய உள்உணர்வு உலகின் ஆத்மாக்களில் அற்ப காலத்திற்காக இருக்கும். அது அவர்களின் சுகத்தின் மேல் வைராக்கியத்தை உருவாக்கும். அப்பொழுது தான் வைராக்கியத்திற்குப் பிறகு முடிவு ஏற்படும். நமக்குள் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வு இருக்கிறதா என்று உங்களை நீங்களே கேளுங்கள். செய்து கொண்டிருந்தும் செய்யாதவர், உறவு நெருக்கத்தில் இருந்து கொண்டும் கர்மாதீத் நிலை என்றவொரு மகிமை இருக்கிறது, அந்த மாதிரி நிலை இருக்கிறதா? எந்தவொரு பற்றுதலும் இருக்க வேண்டாம். சேவை மேலும் பற்றுதல் இருக்க வேண்டாம் ஆனால் நான் ஒரு கருவி என்ற உணர்வோடு இருக்கட்டும். இதன் மூலமாக கர்மாதீத் நிலையை அடைந்தவர் ஆகி விடுவீர்கள். இப்பொழுது உங்களுடைய காரியத்தை முடிப்பதற்குத் தொடங்குங்கள். எந்த அளவு இப்பொழுதிலிருந்தே அதைத் தொடங்குவீர்களோ அப்பொழுது தான் விரைவில் நிறைவேற்ற முடியும். முடிப்பதிலும் காலம் எடுக்கும். பொதுவாக ஏதாவது காரியம் அல்லது கடை ஆகியவற்றை மூடும் காரியத்தை செய்யத் தொடங்குகிறார்கள் என்றால், பொதுவாக என்ன செய்யப்படுகிறது? விற்பனை (தள்ளுபடி) செய்கிறார்கள். எப்பொழுது விற்பனை என்று எழுதி விடுகிறார்களோ அப்பொழுது அந்தப் பொருட்கள் வேகவேகமாக காலியாகி விடுகின்றன. அப்படி இந்த கண்காட்சி கூட (கடைசி நேர) என்ன? இது கூட விற்பனை போடப்பட்டிருக்கிறது தான் இல்லையா? அதன் மூலம் விரைவில் அனைவருக்கும் செய்தி கிடைத்து விட வேண்டும். என்ன வாங்க வேண்டுமோ அதை வாங்கிக் கொள்ளுங்கள்; இல்லையென்றால் புகார்கள் நிறைவேறாமலேயே இருந்து விடும். இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? காரியத்தை முடிக்க வேண்டும் அதாவது தன்னுடைய பற்றுதலை முடிவடையச் செய்ய வேண்டும். ஒருவேளை தன்னை அனைத்து பக்கங்களிலிருந்தும் விடுவித்து எவரெடியாக ஆக்கினீர்கள் என்றால் நீங்கள் எவரெடி ஆவதினால் விநாஷமும் ரெடியாகி விடும். எப்பொழுது நெருப்பை எரிய வைப்பவர்களே சீதளமாகி உட்கார்ந்து விட்டார்கள் என்றால் என்ன நெருப்பு இருக்கும். அப்பொழுது நெருப்பு மந்தமாகி விடும் இல்லையா? எனவே இப்பொழுது ஜுவாலா ரூபமாகி தன்னுடைய எவரெடி ஆவதற்கான சக்திசாலியான எண்ணத்தினால் விநாஷ ஜுவாலையை கொழுந்து

விட்டு எரிய வையுங்கள். எப்படி துக்கமான ஆத்மாக்களின் மனதிலிருந்து இப்பொழுது விநாஷம் ஏற்படட்டும் என்ற செய்தி எழ ஆரம்பித்திருக்கிறதோ அதே போலவே உலகிற்கு நன்மை செய்யும் ஆத்மாக்கள் உங்களுடைய மனதில் இப்பொழுது விரைவிலேயே அனைவருக்கும் நன்மை ஏற்படட்டும். அப்பொழுது தான் முடிவு ஏற்படும் என்ற இந்த எண்ணம் உருவாகட்டும். புரிந்ததா?

பாலனையோ செய்தீர்கள், இப்பொழுது நன்மை செய்பவராக ஆகுங்கள். மேலும் அனைவரையும் முக்தி செய்வியுங்கள். விநாஷம் செய்பவர்களுக்கு நன்மை செய்யும் ஆத்மாக்களின் சகயோகம் தேவையாக இருக்கிறது. அவர்களுடைய எண்ணத்தின் சமிக்ஞை தேவையாக இருக்கிறது. எதுவரை நீங்கள் ஜுவாலா ரூபமாக ஆகவில்லையோ அதுவரை சமிக்ஞை செய்ய முடியாது. எனவே இப்பொழுது தன்னை தயார் செய்வதின் கூடவே உலக மாற்றத்திற்கான தயாரிப்புகளையும் செய்யுங்கள். இது தான் உங்களுடைய கடைசிக் காரியம். ஏனென்றால் இது தான் சக்தி சொரூபத்தின் காரியம் ஆகும். நீங்களே பயப்படவில்லையே! விநாஷம் ஆகுமா அல்லது ஆகாதா, என்னவாகும் மற்றும் எப்படி ஆகும்? என்று இப்படி நினைப்பதற்குப் பதிலாக, நம் மூலமாக ஆக வேண்டும் என்று அப்படி நினையுங்கள். இதைத் தெரிந்து கொண்டு தன்னை சக்தி சொரூபமாக ஆக்குங்கள். தன்னை லைட் ஹவுஸ் மற்றும் பவர் ஹவுஸாக ஆக்குங்கள். நல்லது. ஒவ்வொரு விஷயத்திலும் நீங்கள் நிச்சயபுத்தி உடையவர்களாக இருக்கிறீர்களா?

அந்த மாதிரி எப்பொழுதும் ஆடாத அசையாத, பயமற்ற, சுத்தமான எண்ணத்தில் நிலைத்திருக்கக் கூடியவர்களுக்கு, எண்ணத்தின் சித்தியை அடையக்கூடியவர்களுக்கு, எப்பொழுதும் அனைத்து கர்ம பந்தனங்களிலிருந்தும் விடுபட்டு கர்மாதீத் நிலையில் நிலைத்திருக்கக்கூடியவர்களுக்கு மேலும் பாப்தாதாவின் உயர்ந்த காரியத்தில் எப்பொழுதும் சகயோகியாக இருக்கும் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 06.02.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பகுத்தறியும் சக்தி மூலம் மகாரதியை பகுத்தறிவது!

எப்படி தந்தையை ஆவஹானம் (வரவழைக்க) செய்ய முடியுமோ அதாவது சர்வ சக்திவானை ஆவஹானம் செய்ய முடியுமோ அது போலவே தன்னுள் எந்த நேரம் எந்த சக்தி தேவையாக இருக்கிறதோ அந்த சக்தியை ஆவஹானம் செய்ய முடியுமா? அதாவது உள்ளடங்கியிருக்கும் சக்தியை சொரூபத்தில் கொண்டு வர முடியுமா? எப்படி தந்தையை அவ்யக்கத்திலிருந்து (உடலற்ற நிலையிலிருந்து) வியக்தத்தில் (உடலில்) கொண்டு வருகிறீர்களோ அம்மாதிரியே ஒவ்வொரு சக்தியையும் காரியத்தில் கொண்டு வர முடியுமா? ஏனென்றால், அனைத்து சக்திகளையும் காரியத்தில் கொண்டு வருவதற்கும், வெளிப்படுத்துவதற்குமான நேரம் இதுவாகும். எப்பொழுது வெளிப்படுமோ அப்பொழுது தான் சக்தி சேனையின் வெற்றி முழக்கம் நாலாபுறமும் பரவும். இதில் வெற்றிக்கான முக்கியமான ஆதாரம் பகுத்தறிவதின் சக்தி ஆகும். பகுத்தறிவதற்கான சக்தி இருந்தால் தான் மற்ற சக்திகளினாலும் காரியம் செய்ய முடியும். பகுத்தறியும் சக்தியின் குறை இருப்பதினாலும் மேலும் சக்திகளை மிகச் சரியாகக் காரியத்தில் கொண்டு வராததினாலும் எப்பொழுதும் வெற்றி அடைபவராக ஆக முடிவதில்லை. அஷ்ட சக்திகளும் இப்பொழுது வெளிப்படையான ரூபத்தில் தென்பட வேண்டும். அஷ்ட சக்திகள் ஒவ்வொரு நேரமும் வெளிப்படையான ரூபத்தில் தென்படுவது தான் மகாவீரனின் அடையாளமே ஆகும். அந்த மாதிரியான ஆத்மாக்கள் தான் அஷ்ட இரத்தினங்களில் வர முடியும்.

நான் மகாரதியின் (யானைப்படையின்) நிலையில் இருக்கிறேனா அல்லது குதிரைப்படையின் நிலையில் இருக்கிறேனா என்று பகுத்தறிய முடியும் அளவிற்கு முயற்சி செய்வதில் என்ன இடைவெளி இருக்கிறது? யார் மகாரதியாக இருப்பாரோ அவர் எந்தவொரு

பிரச்சனையையும் அல்லது வரக்கூடிய சோதனையையும் வருவதற்கு முன்பாகவே தெரிந்து கொள்வார் என்ற இது தான் முக்கியமான வித்தியாசமாக இருக்கும். தடைகளை முன்பாகவே தெரிந்து கொள்ளும் காரணத்தினால் புயல் அல்லது பிரச்சனையை எதிரில் வர விட மாட்டார். எப்படி தற்சமயம் அறிவியலின் மிக முன்னேற்றமான நிலை எது? தூரத்தில் இருந்தும் முன்பாகவே தெரிந்து விடுகிறது. முன்பாகவே தெரிந்து விடும் காரணத்தினால் பாதுகாப்பிற்கான வழியைக் கடைப்பிடித்து விடுகிறார்கள். எதிரி வந்து பின்பு அவரோடு சண்டையிட்டு வெற்றி அடைவது இதில் கூட நேரம் எடுக்கும் இல்லையா? தற்சமயம் எப்படி அறிவியலின் கண்டுபிடிப்பு தரத்தில் மிகவும் துல்லியமாகிக் கொண்டே போகிறதோ அதுபோன்றே மகாரதிகளின் முயற்சி செய்வதும் கூட மிகவும் உயர்ந்ததாக இருக்க வேண்டும். தடை வந்தது மற்றும் ஒரு விநாடியில் சென்று விட்டது என்று அப்படி கூட கூடாது. இதுகூட மகாரதியின் நிலை அல்ல. மகாரதியோ தடையை வரவே விட மாட்டார். அதாவது அதில் ஒரு விநாடியைக் கூட வீணாக்க மாட்டார். நிரந்தர யோகி என்று கூறுகிறீர்கள் என்றால், நிரந்தரத்தின் அர்த்தம் என்ன? ஒரு விநாடிக்கான வித்தியாசம் கூட இருக்கக்கூடாது. ஒருவேளை மாயா வந்தது மற்றும் அதை அகற்றுவதிலேயே முழுமையாக ஈடுபட்டுக் கொண்டிருந்தீர்கள் என்றால் தொடர்ந்து தந்தையின் நினைவிலேயே மூழ்கியிருப்பதற்கான நிலையாக என்ன இருக்க வேண்டுமோ அதில் வித்தியாசம் ஏற்பட்டு விடும் இல்லையா? மகாரதி என்றால் அந்த மாதிரி மகான் முயற்சி செய்யக்கூடியவர், தூரத்திலிருந்தே விரட்டுவதற்கான முயற்சி செய்வது தான் மகாரதி நிலையின் அடையாளமாகும். ஏதாவது தடை வருவதாக இருந்தால் இன்று ஏதோ நடக்கப்போகிறது என்று புத்தியில் எண்ணம் வரும் என்ற இந்த அனுபவத்தையும் நாளாக நாளாகச் செய்வீர்கள். பின்பு எவ்வளவிற்கு எவ்வளவு யோகம் நிறைந்த நிலை மற்றும் யுக்தி நிறைந்த நிலை இருக்குமோ அந்த அளவே அவருக்கு வரக்கூடிய தடை ரூபம் தெளிவாகத் தென்படும். அந்த மாதிரியான கண்ணாடி தயாராகி விடும்.

சமர்ப்பணம் மற்றும் சர்வஸ்வ (அனைத்து ரீதியிலும்) தியாகி என்று யாரைக் கூறமுடியும்.? விகாரங்களின் அனைத்து வம்சங்களையும் யார் தியாகம் செய்கிறாரோ அவரைத் தான் அப்படி கூற முடியும். பெரிய

ரூபத்திலோ விகாரங்களின் தியாகம் ஆகி விடுகிறது, ஆனால் விகாரங்களின் வம்சம் மிக சூட்சுமமானது, அதை வம்சத்தோடு தியாகம் செய்பவர் தான் மகாரதி அதாவது சர்வஸ்வ தியாகி (அனைத்தையும் தியாகம் செய்தவர்) ஆக இருப்பார். எப்பொழுது இங்கு வம்சத்தையும் சேர்த்து அனைத்து விகாரங்களையும் தியாகம் செய்கிறீர்களோ அப்பொழுது அங்கு 21-வம்சத்தையும் சேர்த்து தடையற்ற விகாரமற்ற தலைமுறை இருக்கும். அரைக்கல்பம் தே வம்சம் இருக்கும், பின்பு அரைக்கல்பம் விகாரங்களின் சூத்திர வம்சமும் அதிகரித்துக் கொண்டே இருக்கும். அப்படி இந்த (விகாரங்களின்) வம்சத்தை அழிப்பவர் தான் 21 வம்சத்தையும் சேர்த்து தன்னுடைய தெய்வீக இராஜ்ய பாக்கியத்தை பிராப்தி செய்கிறார். ஒருவேளை வம்சத்தை தியாகம் செய்யும் பொழுது கொஞ்சமாவது குறை இருந்து விடுகிறது என்றால், அங்கே 21 வம்சத்திலும் சிறிது குறை ஏற்பட்டு விடும். எப்பொழுது அனைத்தையும் சேர்த்து அர்ப்பணம் செய்தாகி விட்டது என்றால் அதில் உடல், மனம்,பொருள்,செல்வம், நேரம், உறவு மற்றும் நெருக்கத்தையும் அர்ப்பணம் செய்தீர்கள் இல்லையா? ஒருவேளை நேரத்தைத் தனக்காக ஈடுபடுத்தி தந்தையின் நினைவு மற்றும் தந்தையின் காரியத்தில் அந்த அளவு ஈடுபடுத்தவில்லை என்றால், எவ்வளவு நேரம் தனக்காக ஈடுபடுத்தினீர்களோ அவ்வளவு காலம் குறைந்து விடும்.

எப்படி பக்தி மார்க்கத்தில் கூட தானம் செய்யப்பட்ட பொருளை தனக்காக உபயோகப்படுத்துவதில்லை. அதுபோலவே இங்கேயும் கணக்கு இருக்கிறது. தன்னுடைய பலஹீனத்திற்காக மற்றும் தன்னுடைய முயற்சிக்காக பொருளை ஈடுபடுத்துவது என்பது அடமானமாக வைக்கப்பட்ட மற்றவரின் பொருளில் ஏமாற்றுக் காரியம் செய்வதாக ஆகி விடும். இந்த மாதிரி ஆழமான முயற்சி செய்வது மகாரதியின் அடையாளமாகும். மகாரதிகளுக்கு இப்பொழுது தன்னுடைய அனைத்தையும் உலக நன்மைக் காரியத்தில் ஈடுபடுத்த வேண்டும். அப்பொழுது தான் மகாதானி மற்றும் வரதானி என்று கூறப்படுவார். எப்படி லைட் ஹவுஸின் பிரபாவம் தூரத்திலிருந்தே பார்க்கத் தென்படுகிறது மற்றும் நாலாபுறமும் பரவுகிறது. அதே போலவே மகாரதி நிலையின் பிரபாவமும் அந்த மாதிரி இருக்கும் ஆனால் காரிய விவகாரத்தில் யார் அனுபவியாக இருக்கிறாரோ அவருடைய பிரபாவம் கூட அவருடைய முகம் மற்றும் நடத்தையின்

மூலம் தென்படும். இப்பொழுது மகாரதிகள் மற்றும் மகாவீரர்களின் அந்த மாதிரி பிரபாவம் ஏற்பட வேண்டும். மூகத்திலிருந்தே இப்பொழுது இந்த அடையாளங்களினால் தான் என்னுடைய வரிசை எண் எங்கே இருக்கும் என்று புத்தியில் அனுபவம் ஆகும். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 20.02.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எப்பொழுதும் சகயோகி மற்றும் சகஜயோகியாக ஆகுங்கள்!

எப்படி தந்தைக்கு மகிமை உள்ளதோ அதே போல் யார் தந்தையின் காரியத்தில் எப்பொழுதும் சகயோகியாக இருக்கிறாரோ மேலும் தந்தையுடன் எப்பொழுதும் அன்பானவராக இருக்கிறாரோ அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்களுக்கும் மகிமை உண்டு. எப்பொழுதும் சகயோகி என்றால், ஒவ்வொரு எண்ணம் மற்றும் ஒவ்வொரு மூச்சும் தந்தையின் காரியத்திற்காக இருக்க வேண்டும். அப்படியானால் அந்த மாதிரி எப்பொழுதும் சகயோகி மற்றும் சகஜயோகியாக ஆகியிருக்கிறீர்களா? விசேஷ வரதான பூமியின் நிவாசிகளாக ஆன காரணத்தினால் முயற்சி செய்வதின் கூடவே அனேக விதமான சகயோகமும் பிராப்தி ஆகியிருக்கிறது. உள்உணர்வு மற்றும் நினைவு இவை இரண்டுமே முயற்சி செய்வதில் முன்னேறிச் செல்வதில் சகயோகிகளாக இருக்கின்றன. நினைவு, சகவாசம் மற்றும் தொடர்பினால் உருவாகிறது. மேலும் உள்உணர்வு, சூழ்நிலை மற்றும் சுற்றுப்புறச்சூழலினால் உருவாகிறது. எப்படி ஸ்தூல செல்வத்தை சம்பாதிப்பவர் முழு நாளும் அந்த காரியத்திலேயே இருக்கிறார் என்றால். அதன் பிரபாவம் நினைவிலும் அந்த அளவு ஏற்பட்டு விடுகிறது. அவருடைய கனவில் கூட அதே நினைவு இருக்கிறது. அப்படி உங்களுக்கு அமிர்தவேளையிலிருந்து இரவு வரை முழு நாளும் இதே உயர்ந்த சகவாசம் இருக்கிறது. சுத்தமான சூழ்நிலை இருக்கிறது மற்றும் அமைதியான சுற்றுப்புறச்சூழல் இருக்கிறது. எப்பொழுது உடன் இருப்பவர்கள் மற்றும் தொடர்பு, மேலும் சூழ்நிலை இரண்டுமே உயர்ந்ததாக பிராப்தியாகி இருக்கிறது என்றால் நினைவு மற்றும் உள்உணர்வு சுலபமாகவே உயர்ந்ததாக ஆக. முடியும். நாடகத்தில் இந்த பொன்னான வாய்ப்பு உங்களுக்கு பிராப்தி ஆகியிருக்கிறது என்றால் அதனுடைய லாபத்தை அந்தளவிற்கு எடுக்கிறீர்களா?

# 1974 அவ்யக்த முரளி

வெளியில் இருப்பவர்கள் சேற்றிலிருக்கும் தாமரை மலர் போன்றவர்கள். உங்களுக்கோ தாமரை மலரை விடவும் உயர்ந்த ஆன்மீக ரோஜா மலராக ஆவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ரோஜா மலர் பூஜைக் காரியத்திற்கு உதவுகிறது அதாவது அது தேவதைகளுக்கு அர்ப்பிக்கப்படுகிறது. தாமரை மலரின் சிறப்புக்கள் மகிமை செய்யப்படுகிறது ஆனால் அது அர்ப்பிக்கப்படுவதில்லை. அப்படி நீங்கள் அனைவரும் தந்தையின் எதிரில் அர்ப்பிக்கப்பட்ட ரோஜா ஆவீர்கள். எப்படி ரோஜா சுற்றுப்புறச்சூழலில் பரவுகிறதோ அது போலவே நீங்கள் அனைவரும் நாலாபுறத்திலும் தன்னுடைய ஆன்மீகத்தின் நறுமணத்தை பரப்புபவர்களா? எப்படி பெயரோ அப்படியே செய்யும் காரியம் இருக்கிறதா, எப்படி ஸ்தானமோ அப்படியே நிலை இருக்கிறதா, எப்படி சூழ்நிலையோ அப்படி உள்ளுணர்வு இருக்கிறதா? மேலும் எப்படிப்பட்ட தொடர்பில் இருக்கிறீர்களோ அப்படியே நினைவு இருக்கிறதா? இதில் அலட்சியத்தன்மையாக என்ன இருக்கிறது? காரணம் என்னவென்றால் எப்படி தந்தையின் அறிமுகம் இல்லை என்றால் பிராப்தியும் இல்லை இதே போல் தனக்கு கிடைத்துள்ள உயர்ந்த பாக்கியத்தை தெரிந்து கொள்ளவில்லை. அப்படி அலட்சியத்தன்மையின் காரணமாக ஞானத்தின் குறைவு மற்றும் தெரிந்து கொள்வதில் குறைவு இருக்கிறது. எனவே இப்பொழுது நேரத்தின் அருகாமையின்படி முழுமையான ஞான சொரூபமானவராக ஆகுங்கள். அப்பொழுது தான் ஞானத்தின் பலனை அனுபவம் செய்வீர்கள். புரிந்ததா?

பாண்டவர்களின் கோட்டையோ பிரசித்தியானது. கோட்டையை உறுதியாக்குவது இது பாண்டவர்களின் காரியம் தான். ஒருவேளை சுயம் தானே உறுதியாக இருக்கிறார் என்றால், கோட்டையும் உறுதியாக இருக்கும். கோட்டையின் சுவராக என்ன இருக்கிறது? சுயம் தானே தான் சுவர். சுவரின் நடுவில் இருந்து ஒருவேளை ஒரே ஒரு செங்கல் அல்லது கல் கூட ஆட்டம் கண்டுவிட்டது என்றால், மேலும் சுவரில் சிறிது வெடிப்பு வந்து விட்டது என்றாலும் முழு சுவருமே பலஹீனம் ஆகி விடும். மாயாவின் புயல் மற்றும் மாயாவின் பூகம்பம் அஸ்திவாரத்தை (வேரை) அசைக்கவோ இல்லையே அல்லது வெடிப்போ ஏற்படவில்லையே? கோட்டை உறுதியாக இருக்கிறது இல்லையா? கோட்டை என்றால் ஒட்டு மொத்த குழு (சங்கடன்).

எப்பொழுது உலகின் மேல் பிரபாவம் ஏற்படுத்த முடியும் என்றால் நெருக்கத்தில் உள்ளவர்களை பிரபாவமானவர்களாக ஆக்க முடியாதா என்ன? உங்களைப் பார்த்தவுடனேயே மற்றவர்களுக்கு யோகா வந்து விடும் அளவிற்கு சகயோகியாக ஆகுங்கள். கொஞ்ச நேரம் அதிகாரமாக நடந்து கொள்வது கூட முழு நாளின் ஆன்மீக நிலையை இழக்க வைத்து விடுகிறது. இதிலிருந்தோ உடனடியாக விலகிச் சென்று விட வேண்டும். ஆண்களுக்கு இந்த அதிகாரத்தன்மை பிறப்புரிமை அதிகாரமா என்ன? அனைவருமே ஆத்மாக்கள் தான் இல்லையா? எப்பொழுது நான் ஆத்மா என்று புரிந்து கொள்கிறீர்களோ அப்பொழுது தான் அன்பும் உருவாகும். பின்போ சகோதரன் சகோதரனின் பார்வையில் கூட அதிகார தோரணை இருக்காது. இதுவோ கலியுக பிறப்புரிமை அதிகாரமே அன்றி ஈஸ்வரிய அதிகாரம் இல்லை. சகோதரியை பார்க்காதீர்கள், சகோதரனைப் பார்க்காதீர்கள். ஏனென்றால் இதில் கூட விபத்து நடக்கிறது. எனவே எப்பொழுதுமே ஆத்மாவைப் பாருங்கள். அதனால் தான் இந்த திருஷ்டியின் பயிற்சி செய்விக்கப்படுகிறது. நான் ஆண் என்ற இந்த நினைவிலிருந்து பாண்டவர்கள் உருகிப் போய் விட்டார்கள். உடலிலிருந்து உருகிப்போவதின் அர்த்தம் என்ன? உடலின் நினைவிலிருந்து உருகுவது. அனைவரும் உருகிப் போய்விட்டார்கள் என்று பாண்டவர்களைப் பற்றி கூறப்படுகிறது. எப்படி தங்கத்தை உருக்கினார்கள் என்றாலும் தங்கம் தங்கமாகவே தான் இருக்கும் ஆனால் அதனுடைய ரூபம் மாறி விடும். அப்படி உருகிப்போய்விட்டார்கள் என்றால் மாறிவிட்டார்கள் என்பதாகும். எனவே இந்த அதிகார தோரணையும் முடிவடைந்தது. நல்லது.

**வரதானம்: தன்னுடைய நினைவின் ஜோதி மூலம் பிராமண குலத்தின் பெயரை பிரகாசமாக்கக்கூடிய குல தீபம்!**

இந்த பிராமண குலம் அனைத்தையும் விட உயர்ந்ததிலும் உயர்ந்ததாகும். நீங்கள் அனைவரும் இந்தக் குலத்தின் தீபம் ஆவீர்கள். குல தீபம் என்றால் எப்பொழுதும் தன்னுடைய நினைவின் ஜோதி மூலமாக பிராமண குலத்தின் பெயரை பிரகாசிக்கச் செய்பவர். இடைவிடாத ஜோதி என்றால் எப்பொழுதும் நினைவு சொரூபம் மற்றும் சக்தி சொரூபம், நான் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆவேன் என்ற நினைவு

ஒருவேளை இருக்கிறது என்றால் சக்தி சொரூபம் தானாகவே இருக்கும். இந்த இடைவிடாத ஜோதியின் ஞாபகார்த்தமாக உங்களுடைய ஜடச்சித்திரங்களின் எதிரில் அகண்ட தியை எரிய விடுகிறார்கள்.

**சுலோகன்: யார் அனைத்து ஆத்மாக்களுக்காகவும் சுத்த எண்ணம் வைக்கிறாரோ அவரே வரதானி மூரத் ஆவார்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 15.04.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# விக்ன விநாஷக் (விநாயகர்) ஆகி அங்கதனுக்குச் (ஹனுமானுக்கு) சமமாக மாயாவின் மீது வெற்றி அடையுங்கள்!

அனைவரும் முன்னேற்றத்தின் பக்கமாக சென்று கொண்டிருக்கிறீர்களா? முன்னேறும் கலையின் அடையாளம் என்ன, அதைத் தெரிந்திருக்கிறீர்களா? எப்பொழுதுமே தந்தையின் அன்பிலேயே மூழ்கியிருக்கும் மற்றும் விக்ன விநாஷக் (தடைகளை அழிப்பவர்) என்ற இந்த இரண்டு அடையாளங்களும் அனுபவம் ஆகிக் கொண்டிருக்கிறதா? விக்ன விநாஷக் ஆக ஆவதற்குப் பதிலாக தடைகளைக் கண்டு தன்னுடைய நிலையிலிருந்து கீழே வந்து விடவில்லையே? அனேக விதமாக வந்திருக்கும் புயல்கள் உங்களுடைய புத்தியில் புயலை உருவாக்கவில்லையே? எப்படி யார் மூலமாகவாவது பரிசு கிடைக்கிறது என்றால் புத்தி குழப்பம் அடைவதில்லை மாறாக உற்சாகம் ஏற்படுகிறது. இதே விதமாக வந்திருக்கும் புயல் உற்சாகத்தை அதிகரிக்கிறதா அல்லது குழப்பத்தை அதிகரிக்கிறதா? ஒருவேளை புயலை புயல் என்று நினைத்தீர்கள் என்றால் குழப்பம் இருக்கும் மேலும் பரிசு என்று நினைத்தீர்கள் மற்றும் அனுபவம் செய்தீர்கள் என்றால் அதன் மூலம் உற்சாகம் மற்றும் தைரியம் அதிகமாக அதிகரிக்கும். இது தான் முன்னேறும் கலையின் அடையாளம் ஆகும். பயப்படுவதற்குப் பதிலாக ஆழத்தில் சென்று அனுபவங்களின் புதுப்புது இரத்தினங்களை இந்த சோதனைகளின் கடலிலிருந்து பிராப்தி செய்வார்கள். அப்படியானால் அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? இது என்ன நடந்து கொண்டிருக்கிறது, ஏன் நடந்து கொண்டிருக்கிறது. இது எப்படி நடக்கலாம்... இந்த மாதிரி எண்ணம் எழுகிறது என்றால், இதைத்தான் குழப்பம் என்று சொல்வது குழப்பத்திற்குள் இரத்தினம் உள்ளடங்கியிருக்கிறது. மேலோட்டமாக அதாவது வெளிமுகமான பார்வை அல்லது புத்தி மூலமாக

பார்ப்பதினால் குழப்பம் தென்படுகிறது. மேலும் அனுபவம் ஆகும் ஆனால் வந்திருக்கும் அதே விஷயங்களை உள்நோக்குமுக பார்வை அல்லது புத்தியால் பார்ப்பதினால் அனேக விதமான ஞான இரத்தினம் அதாவது பாய்ன்ட்டுகள் கிடைக்கும்.

ஏதேனும் விஷயத்தை பார்த்து அல்லது கேட்டு ஆச்சரியம் அனுபவம் ஆகிறது என்றால் இதுவும் கூட இறுதியான (சம்பூர்ண) நிலை என்று கூற முடியாது. இந்த மாதிரியோ நடக்கவே கூடாது, ஆனாலும் என்ன நடந்ததோ அது நடக்கத்தான் வேண்டும். டிராமாவில் இவ்வாறு இருந்த பிறகும் கூட ஒருவேளை இம்மாதிரி எண்ணம் உருவாகிறது என்றால், இதையும் அம்ச மாத்திரத்தில் குழப்பத்தின் ரூபம் என்றே கூறுவோம். இதுவரை இந்த ஏன், என்ன என்ற கேள்வி இருப்பதின் அர்த்தமாவது குழப்பம்! தடை வருவது அவசியமாகும்! மேலும் எவ்வளவு தடை வருவது அவசியமோ அவ்வளவு ஒருவேளை 'இதுவொன்றும் புதியதல்ல' என்பது புத்தியில் இருக்கிறது என்றால், அந்த மாதிரியான மஹாரதி மகிழ்ச்சி நிறைந்தவராக இருப்பார். 'ஒன்றும் புதிதல்ல' என்ற இது தான் இறுதியான (சம்பூர்ண) நிலை. ஒருவேளை ஏதாவது குழப்பமான காரியம் செய்கிறீர்கள் என்றால் கடல் மாதிரி மேல் மட்டத்தில் குழப்பம் தென்பட்டாலும் அதாவது கர்ம இந்திரியங்களின் குழப்பத்தில் வருகிறீர்கள் என்றாலும் உங்களுடைய நிலையானது 'ஒன்றும் புதியதல்ல' என்பதில் இருக்க வேண்டும். ஒருமுகப்பட்ட, ஒரே சீரான, ஏகாந்தம் அதாவது ஒரு படைப்பவர் மற்றும் படைப்பின் எல்லையை தெரிந்திருக்கக்கூடிய திரிகாலதரிசியின் நிலையில் சௌகரியமான அமைதியின் நிலையில் நிலைத்திருக்கிறீர்களா அல்லது கர்ம இந்திரியங்களின் குழப்பம் உள்மனதின் நிலையையும் ஆட்டுகிறதா? எப்பொழுது ஸ்தூலமான கடல் இரண்டு ரூபத்தையுமே காட்டுகிறது என்றால் மாஸ்டர் ஞானக்கடல் அந்த மாதிரியான ரூபத்தை வெளிக்காட்ட முடியாதா என்ன? இந்த இயற்கையானது புருஷ்னாது (ஆத்மாக்கள்) பின்பற்றி இருக்கிறது. (காப்பி அடித்திருக்கிறது). நீங்களோ புருஷோத்தமர்கள் அவ்வாறு இயற்கை தன்னுடைய தகுதியை வெளிக்காட்ட முடியும் என்றால் புருஷோத்தமர்கள் நீங்கள் வெளிக்காட்ட முடியாதா என்ன?

நேரம் இப்பொழுது எந்தப் பக்கமாகச் சென்று கொண்டிருக்கிறது என்று தெரிந்திருக்கிறீர்களா? மிகவும் கொடூரமான நிலையின் பக்கம் சென்று கொண்டிருக்கிறது. அனைத்து பக்கங்களிலும் மிகத் தீவிரமான நிலை தென்படுகிறது. கடைசியின் அடையாளம் மிகத் தீவிரமான நிலை. அப்படியானால் எப்படி இயற்கை முடிவின் பக்கம் தீவிரமாகச் சென்று கொண்டிருக்கிறதோ, அதுபோன்ற முழுமையாக ஆகக்கூடிய ஆத்மாக்களின் எதிரில் இப்பொழுது சோதனைகள் மற்றும் தடைகளும் தீவிரமான ரூபத்தில் வரும். எனவே இதற்கு முன்பெல்லாம் இப்படி இருந்ததில்லையே, இப்பொழுது மட்டும் ஏன்? என்று ஆச்சரியப்படக்கூடாது. இந்த ஆச்சரியமும் இருக்கக்கூடாது. கடைசி பரீட்சையில் ஆச்சரியப்படும்படியான விஷயங்கள் கேள்வித்தாளின் ரூபத்தில் வரும் அப்பொழுது தான் பாஸ் அல்லது ஃபெயில் ஆவார்கள். விரும்பாவிட்டாலும் கூட புத்தியில் கேள்வி எழுவது இது தான் பரீட்சை. மேலும் பரீட்சையும் ஒரு நொடிக்கானது 'ஏன்' என்ற எண்ணம் (வருபவர்களை) சந்திரவம்சத்தினரின் வரிசையில் கொண்டு நிறுத்திவிடும். முதலில் வருவதோ சூரியவம்சத்தினரின் ராஜ்யம் அல்லவா? சந்திரவம்சத்தினரின் வாய்ப்பு பின்னால் தான் வரும். ஆக அந்த இராஜ்யத்தில் சிம்மாசனதாரியாக ஆவதின் வரிசையில் தான் அவரது எண் (வாய்ப்பு) வரும். எனவே ஒரே ஒருவரது ரசனையில் நிலைத்திருப்பதற்கான பயிற்சி நிரந்தரமாக இருக்கட்டும். பிரச்சனையின் ஆசனத்தை தக்க வைத்துக் கொள்வதிலேயே ஈடுபட்டு விடாதீர்கள் ஆனால் ஆசனத்தில் அமர்ந்து பிரச்சனையை எதிர்கொள்ள வேண்டும். இப்பொழுதோ பிரச்சனை ஆசனத்தின் நினைவை ஏற்படுத்துகிறது. தடை வருகிறது என்றால் யோகா செய்கிறீர்கள் மற்றும் பட்டியும் வைக்கிறீர்கள் இல்லையா? இதிலிருந்து எதிரி தான் ஆயுதத்தின் நினைவூட்டுகிறார் என்று நிரூபணம் ஆகிறது ஆனால் நினைவு தானாகவே மற்றும் இயல்பாகவே இருப்பதில்லை. நிரந்தரமான யோகியா அல்லது அவ்வப்போது யோகியா? பட்டமோ நிரந்தர யோகிக்கானது தான் இல்லையா? எதிரி வரவே வேண்டாம். பிரச்சனையை எதிர்கொள்ள வேண்டியது இல்லை. ஈட்டியிலிருந்து முள்ளாவது இதுவும் இறுதி நிலை கிடையாது. ஈட்டியிலிருந்து முள் ஆனது, மேலும் முள்ளை பின்பு யோக அக்னியினால் தூரத்திலிருந்தே பஸ்பம் ஆக்கி விட வேண்டும். முள் குத்திய பின்பு அதை எடுத்தீர்கள் என்ற இது இறுதி நிலை. முள்ளை தன்னுடைய சம்பூர்ண நிலையினால்

அழித்து விட வேண்டும். இதுவே இறுதி நிலையாகும். அந்த மாதிரி லட்சியத்தை வைத்துக் கொண்டே தன்னுடைய நிலையை முன்னேறும் கலையின் பக்கம் அதிகரித்துக் கொண்டே செல்ல வேண்டும். பெரிய விஷயத்தை சிறியதாக அனுபவம் செய்வது இந்த நிலை வரை மகாரதி அவரவர் சக்திக்கேற்ப வரிசைக்கிரமமாக வந்தடைந்திருக்கிறார்கள். இப்பொழுது அம்சம் மற்றும் வம்சமும் அழிந்து விட வேண்டும். அந்த நிலை வரை வந்தடைய வேண்டும்.

நீங்கள் அனைவரும் தைரியம், உற்சாகம் மற்றும் அனைவரின் சகயோகியாக எப்பொழுதும் இருந்தே நடந்து கொள்கிறீர்கள் தான் இல்லையா? கலியுக உலகத்தை அழிப்பதற்காக மற்றும் பரிவர்த்தனை செய்வதற்காக, மாயாவிற்கு விடை கொடுப்பதற்காக ஒற்றுமையுடன் அதாவது முற்றுகை ஏற்படுத்தியுள்ளீர்கள் இல்லையா? உறுதியான முற்றுகை இடப்பட்டிருக்கிறதா அல்லது இடையிடையே யாராவது தொய்வாகி விடுகிறீர்களா? அடதாவது, களைப்போ அடைந்து விடவில்லையே அல்லது சென்று கொண்டிருக்கும் போதே நின்று விடுவதில்லையே? முன்னேறிச் செல்வதும் இல்லை, பின்னோக்கி வருவதும் இல்லை. எப்படி இருந்தீர்களோ அப்படியே இருக்கிறீர்கள் என்ற இந்த பாடத்தையோ உறுதியாக்கவில்லையே? நேரம் தள்ளிவிட்டது என்றால் செல்ல ஆரம்பித்து விடுவோம் என்று நினைத்து எங்கே இருக்கிறீர்களோ அங்கேயோ நின்று விடவில்லையே. ஏதாவது விதமான ஆதரவிற்காக காத்திருந்து கொண்டே நின்று கொண்டிருக்கவில்லையே? அந்த மாதிரி நிலை உள்ளவர்களை என்னவென்று கூறுவது? இதையே அங்கதனின் நிலை என்று நினைக்கவில்லையே? ஒருவேளை அந்த மாதிரி நின்று விட்டீர்கள் என்றால் கடைசியில் வந்தவர்கள் வேகமாகச் சென்று விடுவார்கள். இப்பொழுதெல்லாம் மலைகளில் பனி விழுகிறது மற்றும் ஒன்றாகச் சேர்ந்து விடுகிறது என்றால் பாதை அடைபட்டு விடுகிறது. பின்பு பனியை உருக்குவதற்காகவும் மற்றும் அதை அகற்றுவதற்காகவும் முயற்சி செய்கிறார்கள் இல்லையா? இங்கேயும் ஒருவேளை பனி மாதிரி இருகிப்போய் விட்டீர்கள் என்றால், யோக அக்னியின் குறை என்று நிரூபணம் ஆகிறது. யோக அக்னியை அதிகரித்தீர்கள் என்றால், பாதை சீராகி விடும். கிடைத்திருக்கும் தைரியம் மற்றும் உற்சாகத்தின் ஞான கருத்துக்களை புத்தியில் ஓடவிட்டீர்கள் என்றால் பாதை சீராகி

விடும். இப்பொழுதைய ரிசல்ட்டில் அரைகுறையாகத் தான் இருந்து கொண்டிருக்கிறீர்கள் எனவே இதை அதிகரியுங்கள். இந்த ரிசல்ட் புருஷோத்தம ஆத்மாக்களுக்கு நன்றாக இருக்கிறதா? எனவே முயற்சி செய்வதின் வேகத்தில் அங்கதன் ஆகாதீர்கள், மாயாவிடம் தோல்வி அடைவதில் அங்கதன் ஆகாதீர்கள் மாறாக வெற்றி அடைபவராக ஆவதற்காக அங்கதன் ஆக வேண்டும்.

நல்லது, உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தை மூலமாக பாலனை பெறக்கூடிய, உலகினை பாலனை செய்யக்கூடிய, விஷ்ணு குலத்தின் உயர்ந்த ஆத்மாக்களுக்கு, இயற்கையை பரிவர்த்தனை செய்யக்கூடிய புருஷோத்தம ஆத்மாக்களுக்கு உலகின் எதிரில் சாட்சாத்கார மூர்த்தியாக பிரசித்தி ஆகக்கூடிய ஆத்மாக்களுக்கு மற்றும் யோக சொரூப ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 24.04.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# திரிமூர்த்தி ஒளியின் சாட்சாத்கார மூர்த்தி ஆவதற்கான தேதியை நிர்ணயம் செய்யுங்கள்!

இன்று இந்த சபையின் எந்த விசேஷத்தை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார்? ஒவ்வொரு வரும் தன்னுடைய விசேஷத்தை தெரிந்திருக்கிறீர்களா? திரிமூர்த்தி வம்சாவளியில் இந்த ஒளி தன் பக்கம் கவரக்கூடியதாக இருக்கிறதா? அல்லது வரிசைக்கிரமமானதா? என்று திரிமூர்த்தி தந்தை இன்று மூன்று ஒளியைப் பார்த்துக் கொண்டிருந்தார். எப்பொழுது மூன்று ஒளியுமே பிரகாசமாக ஒளிவிட்டுக் கொண்டிருப்பதாகத் தென்படுமோ அப்பொழுது தான் அனைவருக்கும் சாட்சாத்காரம் செய்விக்க முடியும். தூய்மையின் ஒளி, சதோபிரதான திவ்ய திருஷ்டியின் ஒளி மற்றும் நெற்றி மணியின் (ஆத்மாவின்) ஒளி - இந்த மூன்று தான் சம்பூர்ணம் ஆக்குவதின் முக்கியமான விஷயங்களாகும். அப்படியானால் எப்பொழுதும் சதோபிரதான ஆத்மீக பார்வை, எப்பொழுதும் ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு வார்த்தை மற்றும் செயலில் தூய்மையின் ஜொலிப்பு எவ்வளவு இருக்கிறது என்று தன்னைத் தானே கேளுங்கள். எப்பொழுதுமே நினைவு சொரூபமானவராக ஆகியிருக்கிறீர்களா? ஒருவேளை ஒரு விஷயத்தின் குறை இருக்கிறது என்றாலும் திரிமூர்த்தி ஒளியின் சாட்சாத்காரம் செய்விக்க முடியாது. இந்த ப்யூரிட்டி தான் (தூய்மை தான்) அனைத்தையும் விட உயர்ந்த மற்றும் சகஜமான பப்ளிசிட்டி (விளம்பரம் ஆகும். மேலும் இது தான் இறுதி பப்ளிசிட்டிக்கான ரூபம் ஆகும். இதை வேறு எந்த ஆத்மாக்களும் செய்ய முடியாது. உலக மாற்ற காரியத்தில் அனைத்தையும் விட சக்திசாலியான பப்ளிசிட்டிக்கான சாதனம் விசேஷ ஆத்மாக்கள் உங்களுடைய இது தான். அப்படியானால் அந்த மாதிரி பப்ளிசிட்டி செய்து கொண்டிருக்கிறீர்களா, ஏதாவது அந்த மாதிரி திட்டத்தை

உருவாக்கியிருக்கிறீர்களா அல்லது அந்த மாதிரி ஏதாவது விசித்திர திரைப்படத்தை தயாரித்திருக்கிறீர்களா? எப்படி ஸ்தூல திரைப்படம் பார்ப்பதினால் இன்றைய மனிதர்கள் பிரபாவம் அடைகிறார்கள். அதே போலவே உங்கள் அனைவரின் நெற்றி மற்றும் கண் அந்த மாதிரி விசித்திர அனுபவம் செய்விக்கக்கூடிய திரைப்படத்தை காண்பிக்கட்டும். அப்படியானால் மக்கள் பரிவர்த்தனையில் வர மாட்டார்களா என்ன? எப்படி திரைக்கு எதிரில் அமருவதினால் விதவிதமான காட்சிகள் திரையில் தென்படுகிறது. அதே போலவே உங்கள் எதிரில் வருவதினால் அனேக விதமான தெய்வீகக் காட்சிகள் தென்படும். அந்த மாதிரியான திரைப்படச்சுருளை தயாரித்துக் கொண்டிருக்கிறீர்களா? இந்த முயற்சியிலேயே ஈடுபட்டு கொண்டிருக்கிறீர்களா அல்லது இதுவரையிலும் தன்னை சீட்டில் அமர வைப்பதிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்களா?

உலகத்து ஆத்மாக்களுக்கு இன்றைய நாட்களில், ஒருபொழுதும் யாருடைய எண்ணத்தில் கூட வராத அந்த மாதிரி ஏதாவது புது விஷயம் தேவையாக இருக்கிறது. அந்த மாதிரி காரியத்தைக் காண்பிப்பதற்கு பொறுப்பானவராக யார் ஆவார்கள்? மகாரதி. ஒவ்வொருவரும் தன்னை மகாரதி என்றோ நினைக்கிறீர்கள் தான் இல்லையா? எப்பொழுது எதிர்காலத்தில் ஸ்ரீ லட்சுமி, ஸ்ரீ நாராயணன் ஆவதற்கான தைரியம் வைக்கிறீர்கள் என்றால், மேலும் சந்திர வம்சிக்காக யாரும் கை உயர்த்துவதில்லை என்றால் சூரிய வம்சி ஆபவர்கள் மகாரதி ஆனார்கள் இல்லையா. எப்பொழுது அனைத்து மகாரதி அந்த மாதிரி மகான் காரியம் செய்யத் தொடங்கி விட்டார்கள் என்றால் உலக மாற்றம் எவ்வளவு காலத்தில் ஏற்படும்? மகாரதிகளின் சபை அவ்வப்பொழுது கூடிக் கொண்டே தான் இருக்கிறது. இப்பொழுதைய இந்த சபையிலும் கடந்து சென்ற கூட்டங்களின்படியே தான் திட்டங்களை உருவாக்குவீர்களா அல்லது நடைமுறை பிரபாவம் ஏற்படுவதற்கான தேதியையும் நிர்ணயம் செய்வீர்களா? எப்படி மற்ற அனைத்து விஷயங்களுக்கு திட்டம் மற்றும் தேதியை நிர்ணயம் செய்கிறீர்களோ, அதே போலவே சம்பூர்ண வெற்றி, திரிமூர்த்தி ஒளியின் சாட்சாத்கார மூர்த்தி ஆவதற்கான திட்டம் மற்றும் தேதியை இந்தத் தடவை நிர்ணயம் செய்வீர்களா? அல்லது இதற்காக வேறு ஏதாவது மீட்டிங் இருக்குமா? அறிவியலைச் சேர்ந்தவர்கள் டைம் பாம்

தயாரிக்கிறார்கள் என்றால், நீங்கள் டைம் பாம் தயாரிப்பதில்லையா. நீங்கள் பாம்ஸ் மட்டும் தான் தயாரிக்கிறீர்களா என்ன? அல்லது இப்பொழுது பிரத்யக்ஷ பலன் என்ற பழம் உருவாவதற்காக நிலமே தயாராகவில்லை என்று யோசிக்கிறீர்களா? இன்றைய நாட்களில் நிலத்தை பரிவர்த்தனை செய்வது ஒன்றும் கடினமான விஷயம் இல்லை. எப்படிப்பட்ட நிலமாக இருந்தாலும் இன்றைய நாட்களில் அறிவியல், பழத்தை உருவாக்கி விடுகிறது தான் இல்லையா? நம்பிக்கை இல்லாததிலும் நம்பிக்கையை உருவாக்கி விடுகிறது தான் இல்லையா?

அப்படியானால் மாஸ்டர் சர்வ சக்திவான், கிரீடம், ஆசனம் மற்றும் திலகமிட்ட நீங்கள் நம்பிக்கை இல்லாததையும் நம்பிக்கை உடையதாக ஆக்க முடியாதா? அசம்பவத்தை சம்பவமாக்கும் இந்த சவால் பிராமணர்கள் உங்களுடைய சுயதர்மம் ஆகும்; அதாவது தாரணை ஆகும். அப்படி சுயதர்மத்தில் நிலைத்திருப்பது சகஜமா அல்லது கடினமா? என்ன போர்ட் (பலகை) மாட்டியிருக்கிறீர்களோ அதில் என்ன எழுதுகிறீர்கள்? ஒரு நொடியில் பிறப்புரிமையை அடைந்து கொள்ளுங்கள். அப்படி ஒரு நொடியில் பிராப்தி செய்வதற்கான திட்டம் நடைமுறையில் அவசியம் இருக்கிறது; அதனால் தானே எழுதுகிறீர்கள் இல்லையா? அப்படி அசம்பவத்தை சம்பவமாக்குவதற்காக இந்த சவாலைத் தான் விடுகிறீர்கள் இல்லையா. அப்படியானால் அந்த மாதிரி துரிதக் காரியத்தை எப்பொழுதிலிருந்து தொடங்குவீர்கள்? ஆனால் போர்டின் கீழே இன்னும் சில வார்த்தைகளை எழுதுகிறீர்கள் "இப்பொழுதில்லையேல் எப்பொழுதும் இல்லை". பின்போ இப்பொழுதிலிருந்தே ஆக வேண்டும் இல்லையா? எனவே இந்த வருடத்தில் அந்த மாதிரி ஏதாவது புதுமையான திட்டத்தை உருவாக்குங்கள். முதலில் சாட்சாத்கார மூர்த்தி தயாராக இருக்கிறார்களா? ஏனென்றால் பக்தியில் கூட கொஞ்சம் சிறிது உடைந்த சிலையை பூஜைக்கு அல்லது தகுதியானதாக ஆக முடியாது என்ற நியமம் இருக்கிறது. மேலும் தரிசனத்திற்கான மூர்த்தியாகவும் ஆக முடியாது. நாடகத்தின் திரைச்சீலை அகன்றது மற்றும் மூர்த்தி யின் அலங்காரம் இன்னும்முடியவில்லை என்றால், அழகாக இருக்குமா என்ன? எப்படி அலங்காரத்தில் 15 அலங்காரம் பிரசித்தியானது, அப்படியே சம்பூர்ண 16 கலைகள் நிறைந்தவர்களாக

ஆகியிருக்கிறீர்களா? அல்லது தேவையான நேரத்தில் எந்தக் கலையின் அவசியமாக இருக்கிறதோ அந்த நேரம் அந்தக் கலையை சொரூபத்தில் கொண்டு வர முடிவதில்லையா? ஒருவேளை நினைவில் வருகிறது ஆனால் சொரூபத்தில் வர முடிவதில்லை என்றால், உங்களுக்கு எப்படி வெற்றி கிடைக்கும்? ஒருவேளை யுத்த மைதானத்தில் தேவையான நேரத்தில் ஆயுதத்தை உபயோகத்தில் கொண்டு வரமுடியவில்லை என்றால், வெற்றி கிடைக்குமா? முதலில் தன்னை சம்பன்னமாக்குவதற்காக நடைமுறை திட்டத்தை உருவாக்கினீர்கள் என்றால் சுலபமாக வெற்றி உங்கள் எதிரில் வந்து விடும்.

இதுவரை என்ன ரிஸல்ட்டைப் பார்த்தோம்? தன்னுடைய மற்றும் மற்ற ஆத்மாக்கள் இருவரின் சேவை சேர்ந்தே மற்றும் எப்பொழுதும் நடந்து கொண்டே இருப்பதாக மற்றும் இரண்டின் சமநிலை இருப்பதாக தென்படுகிறதா? இரண்டின் சமநிலை உலகிலுள்ள அனைத்து ஆத்மாக்களுக்கு ஆனந்தத்தைக் கொடுப்பதற்கான காரணமாகும். பார்க்கப்போனால் அனைத்து காரியமும் தந்தையினுடையது தான் ஆனால் எப்படி மற்ற காரியத்தில் பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்கள் என்றால், இதில் ஏன் மறந்து விடுகிறீர்கள்? எப்படி பக்தர்களுக்கு ஏதாவது காரியம் கடினமாகப் படுகிறது என்றால் பகவான் மேல் போட்டு விடுகிறார்கள் இல்லையா? சுலபமானதில் அவர் மற்றும் கடினத்தில் பகவான். இப்பொழுதோ தந்தை அனைத்து சக்திகளின் மற்றும் அனைத்து காரியங்களுக்காக உங்களை பொறுப்பாளர் ஆக்கி விட்டார் இல்லையா? ஏனென்றால், தந்தை தன்னை வானபிரஸ்தியாக ஆக்கி உங்கள் அனைவரையும் ஆசனதாரி யாகவும், கிரீடதாரியாகவும் ஆக்கியிருக்கிறார். தந்தையின் என்னென்ன பொறுப்புக்கள் இன்னும் செய்ய வேண்டியது இருக்கிறதோ அவை இப்பொழுது குழந்தைகள் உங்களுடையது. உதவியாளராக தந்தை அவசியம் இருக்கிறார், ஆனால் சாகார சொரூபத்தில் மற்றும் பெயரை புகழடைச் செய்வதில் குழந்தை தந்தையை வெளிப்படுத்துகிறார்; எனவே நீங்கள் அனைவரும் பொறுப்புள்ள ஆத்மாக்கள், சாதாரண ஆத்மாக்கள் அல்ல. நீங்கள் ஞான சொரூப ஆத்மாக்கள் மற்றும் வெற்றி இரத்தினங்கள் ஆவீர்கள். புரிந்ததா. இது தான் மகாரதிகளின் காரியம் ஆகும். நல்லது.

உடனடி பலனின் நடைமுறை திட்டத்தை உருவாக்கக்கூடிய, வெற்றி எப்பொழுதும் நம்முடைய பிறப்புரிமை என்று அந்த மாதிரி அதிகாரத்தை பிராப்தி செய்யக்கூடிய, சவாலை நடைமுறையில் கொண்டு வரக்கூடிய, எப்பொழுதும் முழுமையான சாட்சாத்கார மூர்த்தி, திரிமூர்த்தி ஒளியை தாரணை செய்யக்கூடிய திரிமூர்த்தி வம்சிகளுக்கு, ஒரு நொடியில் மூன்று சக்திகளின் மூலம் கூடவே காரியம் செய்யக்கூடிய, மேலும் பாப்தாதாவின் நிரந்தர துணைவர்களாக இருக்கும், அந்த மாதிரி மகாவீரர்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் இரவு வணக்கமும். நல்லது.

வரதானம்: தன்னுடைய லேசான நிலையின் மூலமாக ஒவ்வொரு காரியத்தையும் லேசாக ஆக்கக்கூடிய தந்தைக்குச் சமமான விலகிய அன்பானவராக ஆகுக!

மனம், புத்தி மற்றும் சம்ஸ்காரம் என்ற ஆத்மாவின் இந்த மூன்று சூட்சும சக்திகளில் லைட் அனுபவம் செய்வது தான் தந்தைக்குச் சமமாக விலகிய அன்பானவர் ஆவது. ஏனென்றால், நேரத்திற்கேற்றபடி வெளியில் உள்ள தமோபிரதான சூழ்நிலை, மனித ஆத்மாக்களின் உள்உணர்வில் சுமையாக இருக்கும். எவ்வளவு வெளிசூழ்நிலை பாரமாக இருக்குமோ அந்த அளவு குழந்தைகள் உங்களுடைய எண்ணம், செயல் மற்றும் சம்மந்தம் லேசாகிக் கொண்டே இருக்கும். மேலும் லேசான காரணத்தினால் அனைத்து காரியமும் லேசாக நடந்து கொண்டே இருக்கும். காரிய விவகாரங்களின் பிரபாவம் உங்கள் மேல் ஏற்படாது. இந்த நிலை தான் தந்தைக்குச் சமமான நிலை ஆகும்.

சுலோகன்: "ஆஹா நான்" என்ற இந்த ஆன்மீக போதையில் இருந்தீர்கள் என்றால் மனம் மற்றும் உடல் மூலமாக இயற்கையாக நடனம் ஆகிக் கொண்டே இருக்கும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋ ❋❋❋❋❋❋❋❋

## 28.04.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஸ்தூல சாதனங்களின் கூடவே சூட்சும சாதனங்களினால் ஈஸ்வரிய சேவையில் வெற்றி!

இன்றைய இந்த சபையை எந்த சபை என்று கூறலாம்? இந்த சபையின் பொறுப்பின் விசேஷமாக என்ன இருக்கிறது? நீங்கள் இந்த அனைத்து விஷயங்களை உங்களுடைய இந்த சபையில் தெளிவு படுத்தியிருக்கிறீர்களா? பொறுப்பு கிடைத்திருக்கிறதா? அல்லது எடுத்திருக்கிறீர்களா? தன்னுடைய மனநிலையை உயர்ந்ததாகவும் பரிபக்குவமாகவும் ஆக்குவதின் பொறுப்பு கிடைத்திருக்கிறதா? அல்லது எடுக்கவில்லையா? குறிப்பாணை தயாரிப்பதற்கான பொறுப்பை எடுத்திருக்கிறோம்; மேலும் தன்னுடைய மனநிலையை உருவாக்குவதன் பொறுப்பு கிடைத்திருக்கிறது என்று அப்படி நினைக்கிறீர்களா?

தற்சமயத்திற்கேற்றபடி முக்கிய பொறுப்பாக என்ன இருக்கிறது? ஈஸ்வரிய சேவைக்கோ விதவிதமான சாதனம் மற்றும் சொரூபம் உருவாகிக் கொண்டே இருக்கிறது மேலும் வரும் நாட்களில் இன்னும் உருவாகும் ஆனால் கடைசியில் துரித சாதனமாக மற்றும் சொரூபமாக என்ன இருக்கும்? கருத்துக்களோ மிக நல்லதாக வெளியாகியிருக்கின்றன - விளம்பர பலகையும் வைப்போம், திரைப்படமும் தயாரிப்போம், குறிப்பாணையினையும் உருவாக்குவோம், சுடுகாடு மற்றும் கிராமங்களுக்கும் செல்வோம், இவை அனைத்தையுமே அவசியம் செய்வீர்கள்; ஆனால் தன்னுடைய நெற்றியில் எந்த விளம்பரப் பலகையைத் தொங்க விடுவீர்கள்? தன்னுடைய இந்த முகம் மூலமாக மற்றும் சொரூபம் மூலமாக உலகின் ஒவ்வொரு ஆத்மாவிற்கு எந்த மற்றும் எப்படிப்பட்ட குறிப்பாணை கொடுப்பீர்கள். தன்னுடைய தெய்வீக ஆன்மீக வாழ்க்கை

மற்றும் நற்சிந்தனை மூலமாக மேலும் புன்முறுவலிட்ட உருவம் மூலமாக எந்த ஆன்மீகத் திரைப்படம் காண்பிப்பீர்கள்? நீங்கள் ஒரே ஒரு திரைப்படம் தான் தயாரிப்பீர்களா அல்லது இந்த அனைவரும் (சபையில் வந்திருக்கும் பிரம்மாகுமாரர்கள்) மதுபன் வரதான பூமியிலிருந்து உயிரோட்டமான மற்றும் ஆன்மீகத் திரைப்படத்தை உருவாக்குவீர்களா? ஒருவேளை இந்த அனைத்து திரைப்படத்தையும் ஒரு இடத்தில் மக்களுக்கு காண்பிக்க முடியும் என்றால் இது தான் கடைசியில் நடக்கும் துரிதமான சேவையாக இருக்காதா? ஒவ்வொரு கிராமத்தில் மற்றும் ஒவ்வொரு இடத்தில் நிரந்தரமான அமைதி மற்றும் ஆனந்தத்தின் அனுபவத்தை தன்னுடைய அனுபவ சொரூபம் மூலமாக காண்பியுங்கள் மற்றும் செய்வித்தீர்கள் என்றால் குறைந்த செலவில் நிறைந்த பலன் அளிக்கும் சேவையாக இருக்காதா என்ன? உண்மையான குழந்தைகளின் சகயோகி குழந்தைகளின், மற்றும் சேவை செய்யும் குழந்தைகளின் ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு சொல் மற்றும் ஒவ்வொரு செயலில் இந்த கடமை தான் இருக்கிறது மற்றும் இது ஒன்று தான் அனைத்தையும் விட பெரிய பொறுப்பாகும். பாண்டவர்கள் உங்களுடைய குழு மற்றும் பொறுப்பிலிருப்பவர்களாக ஆகியிருப்பவர்களின் குழு ஸ்தூல சேவைக்கான சாதனங்களை ஒன்றாக சேர்ப்பது மற்றும் அவற்றை நடைமுறையில் கொண்டு வருவது என்பது வரை மட்டுமல்ல. ஸ்தூல சாதனங்களின் கூடவே சூட்சும சாதனம் மற்றும் திட்டத்தின் கூடவே தெளிவான மனநிலை மற்றும் நினைவு இருக்கட்டும். இந்த விஷயங்களை தன்னுடைய பொறுப்பு என்று புரிந்து நடந்து கொள்ள வேண்டும் அதாவது காரியம் செய்ய வேண்டும், யாரெல்லாம் இங்கு அமர்ந்திருக்கிறீர்களோ அவர்கள் அனைவரும் இந்த விஷயங்களின் பொறுப்பில் தன்னை பொறுப்பாளராக நினைத்து எடுத்தார்கள் என்றால் விஸ்தாரமான சேவையின் ரூபம் தென்படாதா?

எப்படி ஈஸ்வரிய சேவை நிலையங்களில் டீச்சர்கள் மற்றும் முக்கிய ஆத்மாக்கள் ஒவ்வொரு காரியத்தின் பொறுப்பிற்காக பொறுப்பிலிருப்பவராக ஆகியிருக்கிறார்களோ அதே போலவே நீங்கள் உங்களை இவ்வளவு பொறுப்புள்ளவர் அல்லது பொறுப்பிலிருப்பவராக நினைக்கிறீர்களா? எப்படி ஒவ்வொரு ஈஸ்வரிய மரியாதையை பாலனை செய்வது மற்றும் செய்விப்பது டீச்சர்களின் ஒரு

பொறுப்பாகும். நீங்கள் தன்னை ஒவ்வொரு ஈஸ்வரிய மரியாதைக்கு உள்ளே நடப்பதற்கு பொறுப்பானவர்கள் என்று நினைக்கிறீர்களா அல்லது இது டீச்சர்கள் மற்றும் தீதி, தாதியுடைய வேலை என்று நினைக்கிறீர்களா? டீச்சர்களை விட முதலில் இந்தப் பொறுப்பு, பொறுப்பாளர் ஆகியிருக்கும் பாண்டவர்கள் உங்களுடையது. ஏனென்றால், உலகின் எதிரில் குடும்ப வாழ்க்கையில் இருந்து கொண்டே தாமரை மலருக்குச் சமமாக விலகிய மற்றும் அன்பானவராக இருப்பதற்கான சவால் விட்டிருக்கிறீர்கள். சேற்றில் இருந்த போதும் தாமரை அதாவது கலியுகத்தினரின் நெருக்கத்தில் இருந்து கொண்டே பிராமணர் இந்த சவாலை நடைமுறை ரூபத்தில் கொண்டு வருவதற்காக பொறுப்பாளர்களாக இருக்கிறார்களே அன்றி டீச்சர்ஸ் கிடையாது. இந்த காரியம் பாண்டவர்களினுடையது மற்றும் குடும்ப வாழ்க்கையில் இருப்பவர்களினுடையது. டீச்சர்களிடம் வந்து சேருவதற்கு முன்பு உதாரண ரூபத்தில் நீங்கள் இருக்கிறீர்கள். உதாரணப்பொருளைப் பார்த்து தான் வியாபாரம் செய்வதற்கான தைரியம் மற்றும் உற்சாகம் வருகிறது. அப்படியே ஒவ்வொரு விஷயத்தில் பொறுப்பாளராகி நடந்து கொள்வது தான் தன்னுடைய பங்கு என்று புரிந்து நடந்து கொண்டிருக்கிறீர்களா? அனேகர் டீச்சர்களிடம் வருகிறார்கள், கேட்ட பிறகு அந்த மாதிரி ஏதாவது வெளிப்படையான ரூபத்தை காண்பியுங்கள் என்று கேட்கிறார்கள். மேலும் இது முடியுமா அல்லது இல்லையா என்பதற்கான உதாரணம் கேட்கிறார்கள். அப்படியானால் டீச்சர்களைவிட அதிகமாக பொறுப்புள்ளவர்களாக யார் ஆனார்கள்? டீச்சர்களின் மரியாதைகள் அவர்களுடையது, ஆனால் உங்களுடைய மரியாதைகள் டீச்சர்களினுடையதை விட குறைந்தது அல்ல. அமிர்தவேளையில் தொடங்கி நினைவிற்காக, உள்ளுணர்விற்காக, பார்வைக்காக மற்றும் செயல்களுக்காக உருவாக்கப்பட்டிருக்கும் அனைத்து மரியாதைகளும் அனைவரின் புத்தியில் எப்பொழுதும் தெளிவாக இருக்கிறதா? ஒவ்வொரு எண்ணத்தையும் மரியாதைப்படி நடைமுறையில் கொண்டு வருகிறீர்களா? இது தான் நடைமுறை சொரூபத்தில் கடைசி மற்றும் துரிதமான சேவைக்கான சாதனம் ஆகும்.

முதன்முதல் சவாலோ, எதை இதுவரை யாரும் செய்ய முடியவில்லை மற்றும் செய்யவும் மாட்டார்கள், அந்த முதல் சவால் எது? முதல்

சவால் தூய்மையாக இருப்பது. உறவு நெருக்கத்தில் இருந்து கொண்டே எண்ணத்தில் கூட இந்த முதல் சவாலின் பலஹீனம் இருக்க வேண்டாம். முதல் உறுதிமொழியாக என்ன இருக்கிறது? மற்ற தொடர்புகளைத் துண்டித்து ஒருவரின் தொடர்போடு இணைத்துக் கொள்வோம். மேலும் உங்களோடு தான் அமர்வோம், உங்களோடு தான் அருந்து வோம், உங்களோடு தான் மேலும் என்னுடையவரோ ஒரே ஒருவர் தானே அன்றி வேறு யாரும் இல்லை. எது முதல் உறுதிமொழியாக இருக்கிறது மற்றும் முதல் சவாலாக இருக்கிறது அவை இரண்டும் ஒன்று இன்னொன்றோடு சம்மந்தம் வைத்திருக்கிறது. இரண்டின் மீதும் எவ்வளவு கவனம் இருக்கிறது. இந்த முதல் விஷயத்தின் டென்ஷன் தான் இருக்கிறது. இந்த யுத்தத்திலோ மகாரதியாக இல்லை தான் இல்லையா? மகாரதியின் அர்த்தம் டென்ஷனில் இருப்பதில்லை, மாறாக எப்பொழுதும் அடென்ஷனில் இருப்பது. அனைத்தையும் விட முதல் பிரபாவம் இந்த விசேஷ விஷயத்தின் மேல் தான் இருக்கிறது. ஏனென்றால் இது தான் அசம்பவத்தை சம்பவமாக்கக்கூடிய ஒரு விஷயமாகும். அப்படியானால் முதலில் பிரபாவம் செய்யும் விஷயங்கள் (பாய்ன்ட்டுகள்) உறுதியாக இருக்கிறதா? அல்லது இதுவரையிலும் சம்ஸ்காரங்களின் நிர்பந்தங்கள் இருக்கிறதா? யார் தன்னுடைய சம்ஸ்காரங்களின் நிர்பந்தத்தில் இருக்கிறாரோ அவர் மற்றவர்களை அவர்களின் நிர்பந்தங்களிலிருந்து சுதந்திரம் ஆக்கி விடுவது என்ற இது நிரந்தரமாக இருக்க முடியாது. தற்காலிக பிரபாவமோ ஏற்பட முடியும் ஆனால் காலப்போக்கில் அந்த ஆத்மாக்களிலும் நிர்பந்தங்களின் அலை உருவாகும். எனவே எந்த விதமான நிர்பந்தங்களையும் அகற்ற வேண்டும் என்பது தான் இந்தக்குழுவின் முதன் முதல் பொறுப்பாகும். முதலில் தன்னுடையது பிறகு உலகத்தினுடையது. இந்த முதல் சவாலில் பொறுப்பாளராகுங்கள். இது தான் பொறுப்பாகும். பாப்தாதாவும் மேலும் உலகின் அனைத்து ஆத்மாக்களும் இந்தப் புதுமை மற்றும் விசேஷத்தைப் பார்க்க விரும்புகிறார். வரும் நாட்களில் எவ்வளவு சேவையின் சாதனங்கள் மூலமாக சேவையை அதிகரிப்பீர்களோ மற்றும் களத்தில் பிரசித்தி ஆகிக் கொண்டே இருப்பீர்களோ அந்த அளவே ஒவ்வொரு விதமான மனிதர்கள் உங்களுடைய ஒவ்வொரு விஷயத்தை மந்திரங்கள் மூலமாக மற்றும் அவர்களுடைய சித்திகள் மூலமாக சோதனை செய்வதற்கான சவால் விடுவார்கள்.

எண்ணங்களையும் காரியங்களையும் சோதனை செய்வதற்காக உங்கள் பின்னால் உளவாளிகள் இருப்பார்கள். அப்படியே சுலபமாக ஏற்றுக் கொள்வார்களா என்ன? அத்தாட்சி மற்றும் நிரூபணமின்றி புத்தியுள்ள மனிதர்கள் ஏற்றுக்கொள்வதற்கு தயாராவதில்லை. சவால் விடுவதின் கூடவே மற்றும் சேவையின் ஸ்தூல சாதனங்களின் கூடவே அந்த மாதிரி ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருக்கிறீர்களா? மனதைக் கட்டுப்படுத்துவதற்கான பரீட்சை எடுப்பார்கள். நீங்கள் யோகாவில் அமர்ந்திருக்கும்பொழுது சோதனை செய்வார்கள் என்று அப்படியில்லை, முக்கியமான சூழ்நிலையின் நேரத்தில் மனக்கட்டுப்பாடு மற்றும் மனநிலையை சோதனை செய்வார்கள். மாயாவின் உளவு அகள் சாதாரணமானவர்கள் அல்ல. அந் மாதிரி ஏற்பாடுகள் கான பொறுப்பு மற்றும் சொரூபமாகி உதாரண ரூபத்தில் முன்னேறி வருவதற்கான பொறுப்பு இந்த குரூப்பினுடையது. அதனால் தான் பாண்டவர்களின் நினைவுச் சின்னத்தை மிக உயரமுள்ளதாகக் காண்பிக்கிறார்கள். உயர்ந்த நிலையின் காரணமாக நினைவுச்சின்னம் அப்படியிருக்கிறது. அடுத்த தடவை எப்பொழுது வருவீர்களோ அப்பொழுது இந்த விஷயத்தில் கௌரவமாகத் தேர்ச்சி பெற்றவராகி வாருங்கள். அப்பொழுது தான் பாண்டவ சேனை என்று கூறுவோம். இப்பொழுதோ ஒரே ஒரு தலைப்பு மற்றும் ஒரே ஒரு விஷயத்தைத் தான் கொடுக்கிறோம். இதையே ஒரே சீரான நிலை வரை கொண்டு வந்தீர்கள் என்றால் வாழ்த்துக்கள் கொடுப்போம். சுலபம் தான் இல்லையா?

எவ்வளவு காலமாக கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? பிறந்ததிலிருந்தா? எது பிறந்ததிலிருந்தே முயற்சி செய்யக்கூடிய விஷயமாக இருக்கிறதோ அது கடினமாக இருக்குமா என்ன? தன்னுடைய பிறப்புரிமை அதிகாரத்தை பிராப்தி செய்வது கடினமா என்ன? என்று மற்றவர்களுக்குக் கூறுகிறீர்கள். அதே போலவே பிராமணர்களுடைய முதல் தாரணை மற்றும் காரியமாக என்ன இருக்கிறதோ அதைச் செய்வது பிராமணர்களுக்கு கடினமா என்ன? உடலிலிருந்து கொண்டே இறந்தவர்களாக ஆகி விட்டீர்கள் இல்லையா? அல்லது இறந்த பிறகு உயிர் பெற்று விடுகிறீர்களா? சூத்திர நிலையிலிருந்து இறக்க வேண்டும், பிராமண நிலையில் வாழ வேண்டும். இது பிராமணர்களின் ஆன்மீக வாழ்க்கை ஆகும்.

# 1974 அவ்யக்த முரளி

பிராமணர்களுக்கு ஏதாவது கடினமாக இருக்குமா என்ன? பிராமண வாழ்க்கையின் உயிர்தானத்தின் ஆதாரமாக என்ன இருக்கிறது? முரளி. படிப்பின் ஆதாரம் கூட முரளி தான். அப்படி உயிர்தானத்தின் ஆதாரத்தை மிக நன்றாக அன்போடு முயற்சி செய்வதில் கொண்டு வருகிறீர்கள். நியமப்படி அன்றி உயிர்தானத்தின் ஆதாரம் என்று புரிந்து அன்பான ரூபத்தில் ஏற்றுக் கொள்கிறீர்கள். எவ்வளவு அன்பு உயிர்தானத்தோடு இருக்கிறதோ அந்த அளவே வாழ்க்கைக் கொடுத்தவர் மேலும் அன்பு இருக்கும். அந்த மாதிரி அன்பானவர் மற்ற ஆத்மாக்களையும் எப்பொழுதும் அன்பானவராக மற்றும் தடையற்றவராக ஆக்க முடியும். இப்பொழுது அந்த மாதிரி ஆதார ரூபம் என்று புரிந்து அனைவரின் எதிரில் உதாரண ரூபம் ஆகுங்கள். இதுவும் பொறுப்பு தான். காரியம் செய்து கொண்டே பாண்டவர்களின் வாயிலிருந்து முரளியின் ஆன்மீக உரையாடல் மற்றும் சர்ச்சை குறைவாகக் கேட்க முடிகிறது. கோபிகளின் (சகோதரி களின் வாயிலிருந்து முரளியின் சர்ச்சை அதிகமாகக் கேட்க முடிகிறது. ஏன்? உங்களுக்குள் ஞான சர்ச்சை செய்வது இதுவோ பிராமணர்களின் கடமை ஆகும். எந்த விஷயத்தில் யாருக்கு ஈடுபாடு இருக்குமோ அதற்காக நேரமில்லை என்பது ஒருபொழுதும் இருக்க முடியாது.

எனவே ஒன்று தூய்மை, மற்றொன்று உயிர்தானத்தின் மகத்துவம் ஆகிய இந்த இரண்டு விஷயங்களின் மேல் கவனம் வையுங்கள். சூட்சும சாதனத்திற்காக தனியாக நேரத்தின் அவசியம் இல்லை. எப்படி உலகிலுள்ளோர் குடும்பம் மற்றும் ஆஸ்ரமத்தைப் பிரித்து விட்டார்கள் மற்றும் நீங்கள் இரண்டையும் சேர்த்து ஒன்றாக்குகிறீர்கள். அதே போல் ஸ்தூலம் மற்றும் சூட்சும சாதனங்களை பிரிக்கிறீர்கள். எனவே உடனடி பலன் கிடைப்பதில்லை. இரண்டும் சேர்ந்தே இருப்பதினால் உடனடி பலனை பார்ப்பீர்கள். வார்த்தைகளின் கூடவே எண்ணங்களின் சக்தியும் தேவையாக இருக்கிறது மேலும் காரியங்களின் கூடவே எண்ணங்களின் சக்தியும் தேவையாக இருக்கிறது. ஏனென்றால் இப்பொழுது கடைசி நேரம் இல்லையா? கடைசி நேரத்தில் என்னென்ன உயர்ந்த ஆயுதங்கள் இருக்கின்றனவோ அவை அனைத்தும் உபயோகிக்கப்படுகின்றன.

# 1974 அவ்யக்த முரளி

**வரதானம்: தந்தை மூலமாக பிராப்தியாகியிருக்கும் அனைத்து பொக்கிஷங்களை காரியத்தில் ஈடுபடுத்தி அதிகரிக்கக்கூடிய ஞான யோக சொரூபமான ஆத்மா ஆகுக!**

பாப்தாதா குழந்தைகளை அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பியவராக ஆக்கியிருக்கிறார் ஆனால் யார் தேவையான நேரத்தில் ஒவ்வொரு பொக்கிஷத்தையும் காரியத்தில் ஈடுபடுத்துகிறாரோ அவருடைய பொக்கிஷம் எப்பொழுதும் அதிகரித்துக் கொண்டே இருக்கும். அவர்கள் நான் விரும்ப இல்லை ஆனால் அப்படி ஆகி விட்டது என்று அந்த மாதிரி ஒருபொழுதும் சொல்ல முடியாது. பொக்கிஷங்களினால் நிரம்பிய ஞான யோக சொரூப ஆத்மாக்கள் முதலில் யோசிக்கிறார்கள். பின்பு செய்கிறார்கள். நேரத்திற்குத் தகுந்தாற்போல் அவர்களுக்கு டச் ஆகும் (உணர்வு ஏற்படும்). அதை அவர்கள் கேச் செய்து (புரிந்து கொண்டு) நடைமுறையில் கொண்டு வருகிறார்கள். செய்த பிறகு ஒரு நொடியாவது யோசித்தார் என்றால் ஞான சொரூப ஆத்மா என்று சொல்ல மாட்டோம்.

**சுலோகன்: சுபாவம் மற்றும் கருத்துக்களில் வேற்றுமை இருந்த போதிலும் அன்பில் வித்தியாசம் இருக்கக்கூடாது!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 02.05.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தந்தைக்குச் சமமாக அனைத்து குணங்கள் நிரம்பியவர்களாக ஆகுங்கள்!

தன்னைத் தானே மாஸ்டர் ஞானக்கடல் என்று நினைக்கிறீர்களா? எப்படி ஞானக்கடல் அனைத்து சக்திகளினால் நிரம்பியிருக்கிறாரோ, அதே போல் தன்னையும் அனைத்து பிராப்திகளினால் நிரம்பியவராக அனுபவம் செய்கிறீர்களா? "தேவதைகளின் பொக்கிஷத்தில் கிடையாது என்ற பொருள் எதுவுமே இல்லை" என்ற பழமொழி இருக்கிறது, இந்தப் பழமொழி பிராமணர்களுக்காக கூறப்பட்டதா அல்லது தேவதைகளுக்காகவா? அனைத்து சம்ஸ்காரங்களையும் பிராமண வாழ்க்கையிலேயே நீங்கள் அனுபவம் செய்கிறீர்கள், ஏனென்றால் இப்பொழுது அனைத்து சம்ஸ்காரங்களையும் நீங்கள் உங்களில் நிரப்பிக் கொண்டிருக்கிறீர்கள். அப்படி மகிமை செய்யப்பட்ட சம்ஸ்காரத்தை இப்பொழுதிலிருந்தே நீங்கள் அனுபவம் செய்கிறீர்களா? ஏனென்றால் இந்த நேரம் உயர்ந்ததிலும் உயர்ந்த பாப்தாதாவின் குழந்தைகள் நீங்கள் ஆனால் தேவதை வாழ்க்கையில் நீங்கள் மாஸ்டர் சர்வ சக்திவான் என்று அழைக்கப்பட மாட்டீர்கள். இப்பொழுது கடலின் குழந்தைகளாக இருக்கிறீர்கள் என்றால் கடலுக்குச் சமமாக நிரம்பியவராக இப்பொழுது இருப்பீர்களா அல்லது எதிர்காலத்தில் இருப்பீர்களா? ஞானக்கடல் தந்தை குழந்தைகளை அனைத்திலும் நிரம்பியவர்களாக இப்பொழுது ஆக்குகிறார். அதனால் தான் இறுதி நிலையின் மகிமையாக சர்வ குண சம்பன்னம், 16 கலைகள் நிரம்பியவர், சம்பூர்ண நிர்விகாரி மற்றும் சம்பூர்ண அஹிம்சைவாதி... மகிமையில் கூட அனைத்தின் கூடவே சம்பன்னம் மற்றும் சம்பூர்ணம் என்ற வார்த்தை இருக்கிறது. இந்த சம்பன்ன நிலையின் ஆஸ்தி தந்தை மூலமாக இந்த பிராமண வாழ்க்கையில் தான் கிடைக்கிறது. இப்பொழுது நீங்கள் உங்களுடைய ஆஸ்தியின் அதிகாரியாக இருக்கிறீர்களா அல்லது இனிமேல் தான் ஆக வேண்டுமா? எப்பொழுதிலிருந்து தந்தையின் குழந்தையாக ஆனீர்களோ அப்பொழுதிலிருந்தே ஆஸ்தியின் அதிகாரியாக ஆகி

விட்டீர்கள். ஆஸ்தியாக என்ன இருக்கிறது? ஆஸ்தியில் அனைத்து பிராப்தியும் இருப்பதாக மற்றும் அனைத்தும் அளவில்லா பொக்கிஷமாக அனுபவம் செய்கிறீர்களா?

நீங்கள் ஆஸ்திக்கு அதிகாரியாக இருக்கிறீர்கள் என்றால் அதிகாரிக்கான அடையாளமாக என்ன? அதிகாரி தந்தைக்குச் சமமாக எப்பொழுதும் நன்மை செய்பவர், இரக்க மனம் உடையவர், மகாஞானி, குணதானி, ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு சொல், ஒவ்வொரு செயல் மூலமாக தந்தையை சாட்சாத்காரம் செய்விக்கக்கூடியவர், சாட்சாத் (அப்படியே) தந்தைக்குச் சமமாக இருப்பார். அந்த மாதிரி அதிகாரியின் மகிமையாகத் தான் அவருடைய வாழ்க்கையில் இல்லை என்ற பொருளே இல்லை என்று பாடப்பட்டிருக்கிறது. யார் அனைத்திலும் நிரம்பியவராக இருப்பாரோ அவருடைய கண் மற்றும் புத்தி யார் பக்கமும், எதன் பக்கமும் மூழ்குவதில்லை. அவர் எப்பொழுதும் ஆன்மீக போதையில் இருப்பார், அனேக வீணான எண்ணங்களிலிருந்து மற்றும் அனேக பக்கங்களில் புத்தி மற்றும் பார்வை போவதிலிருந்து விலகியிருப்பார், அனைத்து கவலைகளிலிருந்து விடுபட்டு மேலும் தந்தை மூலமாக கிடைத்திருக்கும் பொக்கிஷத்தை எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டே இருப்பார். அவருக்கு பிற வேறு எண்ணங்களை எண்ணுவதற்குக் நேரமே இருக்காது, ஏனென்றால் தந்தை மூலமாகக் கிடைத்திருக்கும் பொக்கிஷங்களை தனக்காகவும் மற்ற ஆத்மாக்களுக்காகவும் கொடுப்பது மற்றும் தாரணை செய்வதில் அவர் மிகவும் பிஸியாக இருக்கிறார். அனைத்தையும் விட மிகப் பெரிய தொழில், அனைத்தையும் விட மிகப் பெரிய தானம் அல்லது அனைத்தையும் விட மிகப் பெரிய புண்ணியம் என்று எப்படிக் கூறினாலும் அது இது தான். இவ்வளவு உயர்ந்த காரியம் மற்றும் உயர்ந்த தானம் புண்ணியத்தை விட்டு விட்டு வேறு என்ன செய்வார்? மற்ற சின்ன சின்ன வீணான காரியம் செய்வதற்கும் மற்றும் எண்ணத்தை உருவாக்குவதற்கும் நேரம் கிடைக்கிறதா, அல்லது காரியத்தை செய்து முடித்து விட்டீர்கள் அதனால் நேரம் கிடைக்கிறதா? செய்து முடிக்கவில்லை என்றால் பின்பு எங்கிருந்து நேரம் வரும்? இவ்வளவு பெரிய காரியத்தில் பிஸியாக இருக்கக்கூடியவர், பின்பு பொம்மை விளையாட்டில் ஏதாவது பிராப்தி இருக்கிறதா என்ன? அதனால் ஏதாவது ரிசல்ட் கிடைக்கிறதா? இவ்வளவு பெரிய மனிதனாக இருந்து ஒவ்வொரு அடியிலும் பலகோடி மடங்கு வருமானம்

செய்யக்கூடியவர் மேலும் அவர் இந்த மாதிரி பொம்மைகளின் விளையாட்டு விளையாடுகிறார் என்றால் அவரை மிகப் பெரிய புத்திசாலி என்று சொல்லலாமா? வீணான எண்ணம் பொம்மைகளின் விளையாட்டு தானே? இதுவரையிலும் கூட அந்த மாதிரி குழந்தைப் பருவத்தின் சம்ஸ்காரம் இருக்கிறதா என்ன?

யாருக்கு தன்னுடைய தேவையான மற்றும் நெருக்கமான சைத்தன்ய சக்திகள், எண்ணங்கள் மற்றும் புத்தி, மேலும் மனம் மற்றும் புத்தியின் மேல் கட்டுப்பாடு இல்லை, அதிகாரம் இல்லை அல்லது வெற்றி இல்லை என்றால், அவர் உலகின் சுயராஜ்யத்தின் அதிகாரியாக மற்றும் வெற்றி இரத்தினமாக ஆக முடியுமா? எந்த இராஜ்யத்தின் முக்கியமான அதிகாரி தன்னுடைய அதிகாரத்தில் இல்லை என்றால் அந்த இராஜ்யம் (ஆட்சி) ஸ்திரமான, தொடர்ந்து நிலையாக மற்றும் தடையற்றதாக நடக்க முடியுமா? இந்த மனம் மற்றும் புத்தி ஆத்மா உங்களுடைய நெருக்கமான சக்திகள் மற்றும் முக்கிய இராஜ்ய அதிகாரி மற்றும் காரியம் செய்வதற்கான அதிகாரிகள். ஒருவேளை அவையும் உங்கள் கட்டுப்பாட்டில் இல்லை என்றால் அந்த மாதிரியானவரை என்னவென்று சொல்லலாம்? மிகப் பெரிய வெற்றி அடைந்தவர் என்றா அல்லது மிகப் பெரிய பலஹீனமானவர் என்றா? எனவே உங்களுடைய முக்கிய இராஜ்ய அதிகாரி, உங்களுடைய அதிகாரத்தில் இருக்கின்றதா என்று உங்களை நீங்களே பாருங்கள். ஒருவேளை இல்லை என்றால் உலக இராஜ்ய அதிகாரி மற்றும் இராஜாவாக எப்படி ஆவீர்கள்? தன்னுடைய சிறு சிறு வேலைக்காரர்களே தனக்கு ஏமாற்றம் கொடுக்கிறார்கள் என்றால், அந்த மாதிரியானவரை மகாவீரன் என்று சொல்ல முடியுமா? நாங்கள் சட்டம் மற்றும் ஒழுங்கு நிரம்பிய இராஜ்யத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறோம் என்று சவாலோ விடுகிறீர்கள். அப்படி சவால் விடுபவர்களின் இந்த சிறு சிறு வேலையாட்கள் அதாவது கர்ம இந்திரியங்கள் தன்னுடைய சட்டம் மற்றும் ஒழுங்கிலேயே இல்லை மேலும் அவரே வேலையாட்களின் வசமாகியிருக்கிறார் என்றால் அந்த மாதிரியானவர் உலகில் சட்டம் மற்றும் ஒழுங்கை ஸ்தாபனை செய்ய முடியுமா? ஒவ்வொரு கர்ம இந்திரியங்களும் எந்த அளவு தன்னுடைய அதிகாரத்தில் இருக்கிறது? இதை சோதனை செய்யுங்கள் மற்றும் இப்பொழுதிலிருந்தே வெற்றி அடையும் சம்ஸ்காரத்தை தாரணை செய்யுங்கள், பாப்தாதாவின்

பெயரை புகழடையச் செய்பவர் தான் தந்தைக்குச் சமமாக சம்பன்னமானவர்களாக இருக்கிறார்கள்.

அந்த மாதிரி இஷாரா (சமிக்ஞை) மூலம் புரிந்து கொள்ளக்கூடிய ஒவ்வொரு வேலையாட்களையும் தன்னுடைய இஷாரா மூலம் செய்விக்கக்கூடிய, ஒவ்வொரு ஆத்மாவை தந்தையின் பக்கம் இஷாரா கொடுக்கக்கூடிய, எப்பொழுதும் தன்னுடைய அதிகாரத்தைஅனுபவத்தில் கொண்டு வரக்கூடிய, எப்பொழுதும் சம்பன்னமான மற்றும் எப்பொழுதும் வெற்றியடையும் அந்த மாதிரி விவேகம் நிறைந்த குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள், இரவு வணக்கம் மற்றும் நமஸ்காரம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

# 16.05.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மகாரதி நிலையின் லட்சணம்!

இந்த நேரம் அனைவரின் மனதில் கேட்பதற்கான விருப்பம் இருக்கிறதா அல்லது சமமாக ஆக வேண்டும் என்பதற்கான விருப்பம் இருக்கிறதா? கேட்ட பிறகு ஒவ்வொரு விஷயத்தையும் உள்ளடக்குவதினால் சமமாக ஆகி விடுகிறார்கள். மேலும் உள்ளடக்குவதினால் எதிர்கொள்ளும் சக்தி தானாகவே சுலபமாக வந்து விடுகிறது. எதிர்கொள்ளும் சக்தியினால் அனைத்து விருப்பங்களிலிருந்து இயல்பாகவே விடுதலை கிடைத்து விடுகிறது. அப்படி தன்னை அந்த மாதிரி விடுபட்ட ஆத்மா என்று அனுபவம் செய்கிறீர்களா? எந்த விதமான பந்தனமோ தன்பக்கம் கவர்ந்திழுக்கவோ இல்லையே. பந்தனத்திலிருந்து விடுபட்டவர் தான் யோகம் நிறைந்தவராக ஆக முடியும். ஒருவேளை ஏதாவது சுபாவம், சம்ஸ்காரம், நபர் மற்றும் சாதனத்தின் பந்தனம் தன்பக்கம் ஈர்ப்பு செய்கிறது என்றால் தந்தையின் நினைவின் ஈர்ப்பு எப்பொழுதும் இருக்க முடியாது. எதனுடையவாவது வசமாகும் நேரத்தில் அந்த ஆத்மாவைப் பற்றி, இவர் வசமாகியிருக்கிறார் என்ற வார்த்தை தான் கூறப்படுகிறது. வசம் ஆவது என்பதும் ஐந்து பூதங்களின் கூடவே ராயல் ரூபமான பூதம் ஆகும். எப்படி பூதங்களின் பிரவேசம் ஆவதினால் தன்னுடைய சுபாவம், தன்னுடைய காரியம் மற்றும் தன்னுடைய சக்தி மறந்து விடுகிறதோ அது போலவே ஏதாவது விஷயத்தின் வசமாவதினால் இந்த மாதிரியான நிலை உருவாகி விடுகிறது. வசீகர மந்திரம் கொடுப்பவர் ஒருபொழுதும் வசமாக முடியாது. அப்படியானால் எங்காவது வசமாகியோ இருக்கவில்லையே? என்று இப்பொழுது சோதனை செய்யுங்கள்.

இன்றைய நாட்களில் பாப்தாதா விசேஷ காரியத்தில் மிகவும் பிஸியாக இருக்கிறார். அது என்ன காரியமாக இருக்கும்? எந்தக் காரியத்திலும் தந்தையுடன் குழந்தைகளின் சம்மந்தம் இருக்கும் இல்லையா? அப்படியானால் தன்னுடைய சம்மந்தப்பட்ட காரிய நிகழ்ச்சியை

# 1974 அவ்யக்த முரளி

தெரிந்திருக்கவில்லையா? அமிர்த வேளையில் எப்பொழுது தந்தையிடம் குட்மார்னிங் மற்றும் ஆன்மீக உரையாடல் செய்ய வருகிறீர்கள் என்றால், அந்த நேரம் அனுபவம் செய்வதில்லையா அல்லது அந்த நேரம் பெறுவதிலேயே அதிகமாக பிஸியாக இருக்கிறீர்களா? என்ன உணர்வு ஏற்படுகிறது? தற்சமயம் இறுதி முடிவுக்கான நேரம் அருகாமையில் வந்து கொண்டிருக்கிறது. இறுதி முடிவில் லாஸ்ட் மற்றும் ஃபாஸ்ட் (கடைசியில் இருப்பவர்கள் மற்றும் வேகமாக முன்னேறிக் கொண்டிருப்பவர்கள்) இருவர்களின் பிரத்யக்ஷ ரூபம் காட்சியாகத் தென்படுகிறது, பாப்தாதா ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு குழந்தையின் செட்டிங் மற்றும் ஃபிட்டிங் இந்த இரண்டின் விஷயங்களையும் பார்க்கிறார். சிலர் தன்னைத் தானே செட் செய்ய முயற்சியும் செய்கிறார்கள் ஆனால் ஃபிட்டிங் சரியாக இல்லாத காரணத்தினால் செட்டிங்கும் ஆவதில்லை. ஃபிட்டிங் என்றால் என்ன மற்றும் செட்டிங் என்றால் என்ன இதையோ நீங்கள் தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? ஈஸ்வரிய மரியாதைகளின் படி தன்னைத் தானே நடத்துவித்துக் கொள்வது என்பதாஈஸ்வரிய மரியாதைகளில் ஃபிட்டிங் செய்வது. இந்த மரியாதைகளின் ஆதாரத்தினால் மனநிலையின் செட்டிங் ஆகிறது.

பாப்தாதா எப்பொழுது வரிசைக்கிரமமான மகாவீரர்களைப் பார்க்கிறார் என்றால் மற்றும் மகாரதிகளின் மகாரதி ஆசனத்தை செட்டிங் செய்கிறார் என்றால் என்ன பார்க்கிறார்? ஏதாவது விஷயத்தின் மற்றும் மரியாதையின் ஃபிட்டிங் இல்லாத காரணத்தினால் சீட்டில் செட் ஆக முடிவதில்லை. இந்த நேரம் சீட்டில் இருக்கிறார்கள் மற்றும் அடுத்த நேரம் சீட்டில் இருப்பதற்குப் பதிலாக ஏதாவது சைட்டில் (இடத்தில்) தென்படுகிறார்கள். அப்படி பாப்தாதா இந்தக் காரியத்தில் பிஸியாக இருக்கிறார். நம்பிக்கைக் குரியவர்களாக அதிகமானோர் தென்படுகிறார்கள். மேலும் வரிசையும் மிகப் பெரியதாகத் தென்படுகிறது ஆனால் எடுத்துக்காட்டு சொரூபமாக ஒரு சிலர் தான் இருக்கிறார்கள்.

நம்பிக்கைக்குரியவராக ஆவதற்காக முக்கியமான முயற்சி எது? மிகவும் சுலபமான முயற்சி தான் ஆனால் தன்னுடைய பலஹீனங்களின் காரணத்தினால் சுலபமானதை கடினமானதாக ஆக்கி

விடுகிறார்கள். ஒவ்வொரு விஷயத்தில் குழந்தைகளிடமிருந்து என்னவொரு எதிர்பார்ப்பு தந்தைக்கு இருக்கிறது அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுவது தான் நம்பிக்கைக்குரியவர் ஆவது. தந்தையின் விருப்பங்களை நிறைவேற்றுவது குழந்தைகளைப் பொருத்தவரை கடினமாக இருக்குமா என்ன? குழந்தைகளின் ஜென்மம் ஏற்படுவதே தந்தையின் விருப்பங்கள், எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்காகத் தான். தந்தையின் எதிர்பார்ப்புகள், விருப்பங்களை நிறைவேற்றுவது தான் குழந்தைகளுக்கு தன்னுடைய வாழ்க்கையின் லட்சியமாக இருக்கிறது. இதைத் தான் வேறு வார்த்தைகளில் குழந்தைகள் தந்தையை வெளிப்படுத்துகிறார்கள் என்று கூறுகிறார்கள். அப்படி நம்பிக்கைக்குரியவராக ஆவது உங்களுடைய பிராமண வாழ்க்கையின் முக்கிய லட்சியமாகும். எப்பொழுது பாப்தாதா ஒவ்வொரு அடியின் பின்னால் லட்சக்கணக்கான அடிகள் அவரும் சகயோகி ஆகி தைரியம் மற்றும் உற்சாகத்தை அதிகரிக்கிறார் என்றால் பின்பு ஏன் கடினமானதாக ஆகும். எப்பொழுது உலகின் அனைத்து கடினங்களையும் சுயம் நீங்களே அகற்றுபவர்களாக இருக்கிறீர்கள் மற்றும் கடினமான விஷயத்தை சுலபமானதாக அனுபவம் செய்விக்கக்கூடியவர்கள் என்றால் அந்த மாதிரி அனுபவ மூர்த்திகளுக்காக எந்தவொரு விஷயமும் கடினமானது என்று அப்படி யோசிக்கக்கூட முடியாது. கடினம் என்று தெரிந்து கொள்வது காலாட்படையின் அனுபவம் என்பது சரி தான் ஆனால் இப்பொழுது தன்னை ஏதாவது ஒரு விஷயத்தில் ஒருவர் இன்னொருவரை விட எந்த விதத்திலும் குறைந்தவர் அல்ல என்று நினைக்கிறீர்கள் அதாவது ஏதாவது விதத்தில் தன்னை மகாரதி என்று நினைக்கிறீர்கள், கடைசியில் வந்தவர் வேகமாகச் செல்வதின் லட்சியத்தை வைக்கிறார் என்றால் மகாரதி ஆனார் இல்லையா.? எந்த விஷயத்திலும், தான் யார் எதிரிலும் தலைகுணிவது மற்றும் தன்னுடைய குறையை உணர்வது நல்லதில்லை என்று நினைக்கிறீர்கள். தன்னை பிரசித்தி ஆக்குவதற்காக ஒவ்வொரு விஷயத்தையும் நிரூபிக்கிறீர்கள் என்றால் இதை என்னவென்று கூறுவது? தன்னை காலாட்படை (மெதுவாக முன்னேறிச் சென்று கொண்டிருப்பவர்) என்று நினைக்கிறீர்களா அல்லது ஏதாவது ரூபத்தில் மகாரதி (முன்னுக்கு போய்க் கொண்டிருப்பவர்) என்று நினைக்கிறீர்களா? நிரூபிப்பவர் என்றால் பிடிவாதம் செய்பவர். இந்த மாதிரி ஒருபொழுதும் பிரசித்தி ஆக

முடியாது. பிடிவாதம் செய்பவர் ஒருபொழுதும் வெற்றியை அடைய முடியாது. வெற்றியை அடைபவர் தன்னை பணிவு நிறைந்தவராக ஒவ்வொரு விஷயத்திலும் தன்னைத் தானே குணத்தை கிரகிப்பவராக ஆக்குவார். பிரசித்தி ஆவதற்காக லட்சியம் வைக்கிறீர்கள் மற்றும் தூரமாவதற்காக முயற்சி செய்கிறீர்கள் என்றால் இதை சோதனை செய்யுங்கள். சோதனை கூட மிகவும் நுணுக்கமானதாக இருக்க வேண்டும்.

மகாரதிக்கு ஏதாவது விஷயம் கடினம் அனுபவம் ஆகிறது என்றால் அவர் மகாரதியே இல்லை. மகாரதி தன்னுடைய சகயோகத்தினால் மற்றும் தந்தையின் சகயோகத்தினால் மற்றவர்களின் கடினங்களையும் சுலபமாக்கி விடுவார். மகாரதிகளின் எண்ணத்தில் கூட ஒருபொழுதும் இது எப்படி, அப்படி ஏன்? என்ற இந்தக் கேள்வி எழ முடியாது. 'எப்படி' என்பதற்கு பதிலாக 'இப்படி' என்ற வார்த்தை வரும். ஏனென்றால் மாஸ்டர் ஞானம் நிறைந்தவர், திரிகாலதரிசியாக இருக்கிறார் இல்லையா.

இந்த விஷயங்களை சோதனை செய்யுங்கள். எப்படி செய்வேன்? எப்படி ஆகும்? என்ற இவை தனக்காகவும், மற்றவர்களுக்காகவும் இருக்க வேண்டாம். இரண்டு ரூபங்களிலுமே கேள்வி முடிவடைந்து விடட்டும். அந்த மாதிரியானவர் தான் எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்த மற்றும் மலர்ந்த முகமுடையவராக இருக்கிறார். மகாரதியின் லட்சணம் என்ன என்று இப்பொழுது புரிந்து கொண்டீர்களா? செய்வதில் ஒன்றும் குறையில்லை. எப்பொழுது ஒவ்வொருவரின் நெருக்கத்தில் வருகிறார்கள் என்றால் தன்னை ஒருவர் இன்னொருவரை விட குறைந்தவர் என்று நினைப்பதில்லை. நினைப்பதில் ஒவ்வொருவரும் தன்னை அதிகாரம் நிறைந்தவர் என்று நினைக்கிறார்கள் மேலும் தன்னுடைய உரிமையை வைத்துக் கொள்கிறார்கள். புரிந்து கொள்வதில் மற்றும் செய்வதில் இந்த இரண்டிலும் உரிமை உடையவர் ஆகுங்கள் அப்பொழுது தான் உலகின் இந்த ஈஸ்வரிய குடும்பத்தின் பாராட்டுதலுக்கு உரிமை உடையவர் ஆவீர்கள். ஒவ்வொருவரும் தன்னுடைய இராஜ்யத்தின் பாராட்டுதலை உங்களுக்கு அவர்களே தருவார்கள். எந்தவொரு விஷயத்திலும் வேண்டும் என்று கேட்பவராக ஆகாதீர்கள். கொடுப்பவராக ஆகுங்கள். பெயர், புகழ், பாராட்டு, மதிப்பு

ஆகியவை கிடைக்க வேண்டும் என்ற ஆசையை வைக்காதீர்கள். கேட்டீர்கள் என்றால் எப்படி இன்றைய நாட்களில் கேட்பவர்களுக்கு எந்த பிராப்தியும் செய்விப்பதில்லை மேலும் தூரத்திலிருந்தே அவர்களை விரட்டுகிறார்கள். இந்த விதமாக இராயலாக கேட்கக்கூடியவர்கள் அனைத்து ஆத்மாக்களிடமிருந்து தானாகவே தூரமாகி விடுகிறார்கள். அந்த மாதிரியானவர் மகாரதி சீட்டில் செட் ஆவதில்லை. எனவே நீங்கள் அனைவரும் மகாரதிகளா? குதிரைப்படை மற்றும் காலாட் படையின் நேரம் முடிந்து விட்டது. இப்பொழுது ஒவ்வொரு மகாரதிக்கு தன்னுடைய மகாரதி நிலையின் லட்சணத்தை எதிரில் வைத்துக் கொண்டே தன்னுள் நிரப்ப வேண்டும். நல்லது.

அந்த மாதிரி அனைத்து ஆசைகளை உள்ளடக்கக் கூடிய, தந்தைக்குச் சமமாக அனைத்து சக்திகளின் அதிகாரியாக இருக்கக்கூடிய, எப்பொழுதும் ஒருவரின் நினைவு ஒரே சீரான நிலையில் நிலைத்திருக்கக்கூடிய, ஒரு பலம் ஒருவர் மேல் உள்ள நம்பிக்கை, எப்பொழுதும் ஒருமுகப்பட்ட, ஏகாந்தவாசி, உள்நோக்குமுகமுடைய மற்றும் பாப்தாதாவின் நம்பிக்கை நட்சத்திரங்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள், இரவு வணக்கம் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: யதார்த்த விதி மூலமாக வீணானதை முடிவுகட்டி நம்பர் ஒன் பெறக்கூடிய பரமாத்ம சித்தி சொரூபமானவர் ஆகுக!

எப்படி வெளிச்சத்தினால் இருள் தானாகவே மறைந்து விடுகிறது. அதே போல் நேரம், எண்ணம். சுவாசம் பயனுள்ளதாக ஆக்குவதினால் வீணானவை தானாகவே முடிவடைந்து விடுகிறது. ஏனென்றால் பயனுள்ளதாக ஆக்குவதின் அர்த்தம் சிரேஷ்ட காரியத்தில் ஈடுபடுத்துவது. அப்படி உயர்ந்த காரியத்தில் ஈடுபடுத்துபவர்கள் வீணானதின் மேல் வெற்றி அடைந்து நம்பர் ஒன் பெற்று விடுகிறார்கள். அவர்களுக்கு வீணானதை நிறுத்துவதற்கான சித்தி பிராப்தி ஆகி விடுகிறது. இது தான் பரமாத்ம சித்தி ஆகும். அந்த ரித்தி சித்தி செய்பவர்கள் அற்பகாலத்து அதிசயங்களை காண்பிக்கிறார்கள் ஆனால் நீங்களோ யதார்த்த விதி மூலமாக பரமாத்ம சித்தியை பிராப்தி செய்கிறீர்கள்.

**சுலோகன்: அபகாரம் செய்பவர்களுக்கும் உபகாரம் செய்பவர் தான் ஞான சொரூப ஆத்மா ஆவார்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 20.05.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பாப்தாதாவின் இதயம் என்ற ஆசனத்தில் அமர்ந்திருக்கும் குழந்தைகளே அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள்!

இன்று பாப்தாதா என்ன பார்த்துக் கொண்டிருக்கிறார்? இன்று அதிர்ஷ்டம் நிறைந்த பல கோடி மடங்கு பாக்கியசாலி குழந்தைகளின் மாலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். மாலையின் ஒவ்வொரு மணியின் விசேஷத்தைப் பார்த்துக் கொண்டே மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். எப்படி தந்தை குழந்தைகளின் உயர்ந்த பாக்கியத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறாரோ அதே போல் நீங்கள் உங்களுடைய சௌபாக்கியத்தைப் பார்த்து எப்பொழுதும் மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறீர்களா? பாக்கிய நட்சத்திரம் எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டிருப்பதாக எதிரில் தென்படுகிறதா அல்லது சில நேரம் பாக்கிய நட்சத்திரம் உங்கள் எதிரிலிருந்து மறைந்து விடுகிறதா? எப்படி ஸ்தூல நட்சத்திரங்கள் சில நேரம் இடத்தை மாற்றி விடுகின்றன. அதே போல் பாக்கிய நட்சத்திரம் மாறுவது இல்லையே? ஒரே ஒரு நட்சத்திரம் தான் தன்னுடைய இடத்தை மாற்றுவது இல்லை. அப்படியானால் நீங்கள் அந்த மாதிரி நட்சத்திரமா? அது திட எண்ணம் என்ற நட்சத்திரம், அதைத் தான் உங்களுடைய இந்த உலகத்தில் துருவ நட்சத்திரம் என்று கூறப்படுகிறது. அந்த மாதிரி திட நிச்சயபுத்தி மற்றும் ஒரே சீரான நிலையில் எப்பொழுதும் நிலைத்திருக்கும் பல கோடி மடங்கு பாக்கியசாலியாக ஆகியிருக்கிறீர்களா அல்லது ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? தன்னுடைய அதிர்ஷ்டத்தின் விஸ்தாரத்தை தன்னுடைய நினைவில் கொண்டு வருகிறீர்களா? அதிர்ஷ்டம் நிறைந்த நிலையின் அடையாளங்கள் மற்றும் அனைத்து பிராப்திகளாக என்ன இருக்கிறதோ அதைத் தெரிந்திருக்கிறீர்களா? யாருக்கு அனைத்து பிராப்திகளும் இருக்கிறதோ அவரைத் தான் அதிர்ஷ்டம் நிறைந்தவர் என்று கூறப்படுகிறது. அனைத்து பிராப்திகளில் ஏதாவது குறை

இருக்கிறதா? வாழ்க்கையில் முக்கியமான பிராப்தி உயர்ந்த சம்மந்தம், உயர்ந்த தொடர்பு, உண்மையான அன்பு மற்றும் அனைத்து விதமான செல்வம் மற்றும் வெற்றி இந்த ஐந்து முக்கிய விஷயங்களையுமே தனக்குள் பாருங்கள். இப்பொழுது யாருடன் உறவை இணைத்திருக்கிறீர்கள்? முழுக் கல்பத்தில் இதை விட உயர்ந்த சம்மந்தம் எப்பொழுதாவது பிராப்தி ஆக முடியுமா? சம்மந்தத்தில் அழியாத சம்மந்தம் தான் முக்கியமான விஷயமாக இருக்கிறது. அழியாத தந்தையின் அனைத்து சம்மந்தம் தான் அழியாதது. ஒருவர் மூலமாக அனைத்து சம்மந்தங்களின் பிராப்தி இருக்கிறது. அந்த மாதிரியான உறவினர் எப்பொழுதாவது கிடைத்து பார்த்திருக்கிறீர்களா? அப்படியானால் அனைத்து சம்மந்தங்கள் நிரம்பியவராக இருக்கிறீர்களா?

இன்னொரு விஷயம் தொடர்பு அதாவது உடன் இருப்பது மற்றும் துணைவன். ஒருவரை ஏன் துணைவனாக ஆக்கப்படுகிறது. ஏன் தொடர்பு வேண்டியதாக இருக்கிறது மற்றும் யாருடன் வைக்கப்படுகிறது? தேவையான நேரத்தில், கஷ்டமான நேரத்தில் ஆதரவு மற்றும் சகயோகத்திற்காக, சோர்வான நிலையில் மனதிற்கு குஷியை கொண்டு வருவதற்காக மற்றும் துக்கமான நேரத்தில் துக்கத்தைப் பகிர்ந்து கொள்வதற்காக துணைவன் தேவையாக இருக்கிறார். அந்த மாதிரி உண்மையான துணைவன் மற்றும் எந்த உயர்ந்த தொடர்பு வேண்டும் என்ற உயர்ந்த லட்சியத்தை வைத்திருக்கிறீர்களோ அந்த மாதிரியான உயர்ந்த துணைவன் கிடைத்திருக்கிறாரா? அந்த மாதிரியான துணைவன் யார் சுயநலமற்றவர். பாராபட்சமற்றவர். அழியாதவர். சக்திசாலியானவர் அந்த மாதிரியான தொடர்பு எப்பொழுதாவது கிடைத்ததா மற்றும் கிடைக்க முடியுமா? அழியாத மற்றும் உண்மையான உயர்ந்த துணை மற்றும் தொடர்பாக எது மகிமை செய்யப்பட்டிருக்கிறது? பாரஸ்நாத். எது இரும்பையும் உண்மையான தங்கமாக்கி விடுமோ, அந்த மாதிரியான சத்தியமான தொடர்பு மற்றும் சம்பந்தம் கிடைத்திருக்கிறதா அல்லது கொஞ்சம் அப்ராப்தியும் இருக்கிறதா? அந்த மாதிரி கிடைத்திருக்கிறதா அல்லது கிடைக்க வேண்டுமா? கிடைத்திருக்கிறதா அல்லது இப்பொழுது பகுத்தறிந்து கொண்டிருக்கிறீர்களா? எப்பொழுது துணை கிடைத்திருக்கிறது

என்றால் துணையைப் பெற்ற பிறகு ஏன் சில நேரம் துணைவனிடமிருந்து விலகி விடுகிறீர்கள்? துணையை வைத்துக் கொள்வதில் குறும்புக்காரனாக ஏன் ஆகிறீர்கள்? சில நேரம் கோபப்படும் விளையாட்டையும் செய்கிறீர்கள், துணைவன் அவரே வந்து சமாதானம் செய்யட்டும் என்பதில் மகிழ்ச்சி வருகிறதா அதனால் தான் இந்த விளையாட்டு விளையாடுகிறீர்களா மேலும் குழந்தைகளில் விளையாடும் சம்ஸ்காரம் இருக்கவே இருக்கும். அந்த மாதிரி புரிந்து இந்த சம்ஸ்கார வசமாகி அந்த மாதிரி விளையாட்டு செய்கிறீர்களா? இந்த மாதிரி விளையாடுவது நன்றாக இருக்கிறதா? சொல்லுங்கள் நன்றாக இருக்கிறதா. அதனால் தான் செய்கிறீர்கள் ஆனால் இந்த விளையாட்டில் என்ன இழக்கிறீர்கள் என்று அதைத் தெரிந்திருக்கிறீர்களா? எதுவரை இந்த விளையாட்டு இருக்கிறதோ அதுவரை உண்மையான துணைவனோடு உடன்பாடு ஏற்படாது. அப்படி இந்த விளையாட்டில் சந்திப்பை இழந்து விடுகிறீர்கள். இவ்வளவு காலம் தந்தையை சந்திப்பதற்காக குழந்தைகள் அழைத்தல் (ஆவாஹனம்) மற்றும் நல்விருப்பங்களை வைத்துக் கொண்டே வந்திருக்கிறீர்கள். மேலும் இந்த சந்திப்பு கூட எவ்வளவு நாட்களுக்கு மற்றும் எவ்வளவு குறுகிய காலத்திற்கு என்று தெரிந்தும் இருக்கிறீர்கள். இருந்தாலும் இவ்வளவு கொஞ்ச காலத்தில் சந்திப்பதை விளையாட்டில் இழந்து விடுகிறீர்கள். பின்பு எப்பொழுதாவது நேரம் கிடைக்குமா? எனவே இந்த விளையாட்டை இப்பொழுது முடிவு கட்டுங்கள். நீங்கள் அனைவருமே வானபிரஸ்திகள், வானபிரஸ்திகளுக்கு இந்த விதமாக விளையாடுவது அழகாக இருக்கிறதா என்ன? உண்மையான துணைவன் கிடைத்திருக்கிறாரா, உயர்ந்த சம்பந்தம் மற்றும் தொடர்பு நிரந்தரமாக பிராப்தி ஆகியிருக்கிறதா என்று சாட்சியாகப் பாருங்கள்.

மூன்றாவது விஷயம் அன்பு அனைத்து சம்மந்தங்களின் அன்பை பிராப்தி செய்யவில்லையா மற்றும் அனுபவியாக ஆகவில்லையா? அனைத்து சம்மந்தங்களில், அன்பில் ஏதாவது பிராப்தியின்மை இருக்கிறதா? இதை அடைவதற்காக ஒரே ஒரு விஷயத்தின் அவசியம் இருக்கிறது, ஒருவேளை அது இல்லை என்றால் அன்பு கிடைத்த போதிலும் அதை அனுபவம் செய்ய முடிவதில்லை. உண்மையான அன்பு மற்றும் ஒருவர் மூலமாக அனைத்து உறவுகளின் அன்பை

பிராப்தி செய்வதற்காக முக்கியமாக என்ன வழி இருக்கிறது மற்றும் தன்னுடைய அதிகாரத்தை பிராப்தி செய்வதற்காக எந்த முக்கிய விஷயம் அவசியமாக இருக்கிறது? ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற இந்த விஷயம் வாழ்க்கையில், எண்ணத்தில் மற்றும் நடைமுறையில் இருக்கிறதா? எண்ணத்தில் மட்டுமின்றி நடைமுறையிலும் கூட ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற நிலை இருந்தால் தான் உண்மையான அன்பு மற்றும் அனைத்து அன்பின் அனுபவம் செய்ய முடியும். அதே போலவே செல்வம் மற்றும் என்னென்ன விஷயங்கள் கூறினோமோ அந்த அனைத்து விஷயங்களில் சுலபமாகவே அனைத்து பிராப்திகளும் ஆகிறதா? அந்த மாதிரி அதிர்ஷ்டம் நிறைந்தவர்களுக்கு பிராப்தியில்லை (கிடைக்கவில்லை) என்று எந்த பொருளுமே இருக்காது. அந்த மாதிரி தெரிந்து கொண்டும், ஏற்றுக் கொண்டும், மேலும் நடந்து கொண்ட பிறகும் சில நேரம், தன்னுடைய பாக்கிய நட்சத்திரத்தை ஏன் மறந்து விடுகிறீர்கள்?

பாப்தாதா உங்களுடைய பாக்கியத்தின் நட்சத்திரத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார் மற்றும் குண மகிமை செய்கிறார். அந்த மாதிரி அதிர்ஷ்டம் நிறைந்த குழந்தைகளின் மாலையை தினசரி நினைவு செய்கிறார். அந்த மாதிரி தந்தை நினைக்கும் அளவிற்கு மாலையின் மணியாக ஆகியிருக்கிறீர்களா? வெற்றி மாலையின் மணியாக ஆவது ஒன்றும் பெரிய விஷயமில்லை ஆனால் தந்தையால் நினைவு செய்யப்படும் மணியாக ஆவது தான் அதிர்ஷ்டமாகும். அந்த மாதிரி அதிர்ஷ்டம் நிறைந்தவர் மற்றும் பாப்தாதாவின் இதயசிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவர் ஆக இருந்தும் பின்பு ஆசனத்தில் இருந்து இறங்கி விடுகிறீர்கள். தந்தை தன்னுடைய உயர்ந்த காரியத்தின் பொறுப்பு மற்றும் கிரீடத்தை குழந்தைகளுக்கு அணிவித்திருக்கிறார். அந்த மாதிரி கிரீடம் அணிந்தவராக ஆன பிறகு கிரீடத்தைக் கழற்றி விட்டு கிரீடத்திற்குப் பதிலாக தன்னுடைய தலையில் என்ன வைத்து விடுகிறீர்கள்? ஒருவேளை தன்னுடைய அந்தப் படத்தையும் பாருங்கள், மேலும் கிரீடம் ஆசனத்தில் அமர்ந்திருக்கும் படத்தையும் வைத்தீர்கள் என்றால் என்னவாகும்? எந்தப் படம் பிடித்தமானதாக இருக்கும்? கிரீடம் - ஆசனத்தில் அமர்ந்திருக்கும் படம் விருப்பமானதாக இருக்கும் ஆனால் இன்னொன்றைச் செய்கிறீர்கள். கிரீடத்தை கழற்றி விட்டு,

வீணான எண்ணங்களினால் வீணான பேச்சுக்களினால் நிரம்பிய சுமையின் கூடையை மற்றும் மூட்டையை தலையில் வைத்து விடுகிறீர்கள். கிரீடமற்றவராக ஆகி விடுகிறீர்கள். அந்த மாதிரியான படத்தைப் பார்க்கவே விரும்பவில்லை என்றால், அவர்களைப் பார்த்து இரக்கமனமுடையவராக ஆகிறீர்கள், ஆனால் தன்னில் ஏன் வைத்துக் கொள்கிறீர்கள்? எனவே தன்னை அந்த மாதிரி அதிர்ஷ்டம் நிறைந்தவராக்கி மற்றும் புரிந்து நடந்து கொள்ளுங்கள். புரிந்ததா?

நல்லது. அந்த மாதிரி எப்பொழுதும் ஒருவருடன் உறவு, நெருக்கம் மற்றும் அன்பில் இருக்கக்கூடிய எப்பொழுதும் அழியாத செல்வத்தினால் நிரம்பியிருக்கக்கூடிய, உண்மையான துணையை வைத்துக் கொள்ளக்கூடிய மற்றும் ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்று அந்த மாதிரி நினைவில் இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள், காலை வணக்கம் மற்றும் நமஸ்காரம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

## 23.05.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எல்லைக்குட்பட்ட கவர்ச்சிகள் மற்றும் பெருமைகளிலிருந்து விலகியிருப்பவர் தான் உண்மையான வைஷ்ணவன்!

தன்னை ஒரு நொடியில் சப்தத்திலிருந்து விலகிய வானபிரஸ்த நிலையில் நிலைத்திருக்கச் செய்ய முடியுமா? எப்படி வார்த்தையில் சுலபமாகவே வந்து விடுகிறீர்களோ அதே போல் வார்த்தைகளிலிருந்து விலகிய நிலையும் சுலபமாகவே உருவாக முடியுமா? எப்படிப்பட்ட சூழ்நிலையாக இருந்தாலும், வாயுமண்டலம் இருந்தாலும் அல்லது இயற்கையின் புயலாக இருந்தாலும் ஆனால் இவை அனைத்தும் இருந்து கொண்டே, பார்த்துக் கொண்டே, கேட்டுக் கொண்டே, உணர்ந்து கொண்டே, எவ்வளவு தான் வெளியிலுள்ள புயல் இருந்தாலும் அவ்வளவு, தான் ஆடாத அசையாத அமைதி நிலையில் நிலைத்திருக்க முடியுமா? அமைதியின் போது அமைதியாக இருப்பது ஒன்றும் பெரிய விஷயமில்லை ஆனால் அமைதியில்லாத சூழ்நிலையிலும் அமைதியாக இருப்பது இதைத் தான் ஞானசொரூபம், சக்திசொரூபம், நினைவு சொரூபம் மற்றும் அனைத்து குணங்களின் சொரூபம் என்று கூறப்படுகிறது. விதவிதமான காரணங்கள் இருந்தபோதிலும் சுயம் தான் நிவாரண ரூபமாக வேண்டும். இதைத் தான் முயற்சியின் வெளிப்படையான நிரூபணம் என்று கூறுவது. அந்த மாதிரி மகாவீரனாக ஆகியிருக்கிறீர்களா அல்லது இதுவரையிலும் வீரனாக மட்டும் தான் ஆகியிருக்கிறீர்களா? எந்த நிலை வரை வந்தடைந்திருக்கிறீர்கள். மகாவீரனின் நிலை எதிரில் தென்படுகிறதா அல்லது அருகில் தென்படுகிறதா மற்றும் தந்தைக்குச் சமமாக தனக்குத் தானே தென்படுகிறீர்களா?

தந்தைக்குச் சமமான வரிசைக்கிரமமான மூன்று நிலைகள் இருக்கின்றன. ஒன்று சமநிலை, இரண்டாவது சமீபம், மூன்றாவது

எதிரில். அப்படியானால் நீங்கள் எதுவரை வந்து சேர்ந்திருக்கிறீர்கள். சமமாக இருப்பவர்களின் அடையாளம் ஒரு நொடியில் எங்கு மற்றும் எப்படி விரும்புகிறார்களோ. என்ன விரும்புகிறார்களோ அதைச் செய்ய முடியும் மற்றும் செய்கிறார்கள். இரண்டாவது நிலை ஒரு நொடிக்குப் பதிலாக கொஞ்ச நேரத்தில் தன்னை செட் செய்ய முடியும். மூன்றாவது நிலை சில மணி நேரங்களில் மற்றும் சில தினங்களில் தன்னை செட் செய்ய முடியும். சமமானவர்கள் எப்பொழுதும் தந்தைக்குச் சமமானவர்களாக, தன்னுடைய மகத்துவத்தை, தன்னுடைய சர்வ சக்திகளின் மகத்துவத்தை மற்றும் ஒவ்வொரு முயற்சி செய்பவரின் வரிசைக்கிரமமான நிலையை, குணதானம், ஞான செல்வத்தின் தானம் மற்றும் தன்னுடைய நேரத்தின் தானம், இந்த அனைத்தின் மகத்துவத்தை தெரிந்திருப்பவர்களாக மற்றும் அப்படி நடந்து கொள்பவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் செய்யும் காரியங்களை, சம்ஸ்காரம் மற்றும் சுபாவத்தை தெரிந்திருக்கும் ஞான சொரூபமானவர்களாக இருப்பார்கள். அப்படி ஞான சொரூபமானவர்களாக ஆகியிருக்கிறீர்களா?

வார்த்தைகளைக் கேட்பதற்கு மற்றும் சொல்வதற்கான விருப்பம் எவ்வளவு வைக்கிறீர்கள். துடிப்பு இருக்கிறது, வாய்ப்பை உருவாக்கவும் செய்கிறீர்கள். அதே போலவே வார்த்தைகளிலிருந்து விலகிய நிலையில் நிலைத்திருப்பதற்கான வாய்ப்பை உருவாக்குவதற்காக மற்றும் பெறுவதற்கான ஆர்வம் உள்ளவர்களாக இருக்கிறீர்களா? இந்த ஆர்வம் இயல்பாகவே தன்னுள் உருவாகிறதா உ அல்லது நேரத்திற்கேற்றபடி, பிரச்சனைக்கேற்றபடி மற்றும் நிகழ்ச்சிக்கேற்றபடி அந்த ஆர்வம் உருவாகிறதா? முதல் நிலை வரை வந்தடைந்திருக்கும் ஆத்மாக்களின் முதல் அடையாளமாக என்ன இருக்கும்? அந்த மாதிரி ஆத்மாவிற்கு, இந்த அனுபவத்தின் நிலையில் மூழ்கியிருக்கும் காரணத்தினால் எந்தவொரு பெருமை மற்றும் எந்தவொரு எல்லைக்குட்பட்ட பிராப்தியின் ஈர்ப்பும் அவர்களை அவர்களுடைய எண்ணத்தில் கூட தொட முடியாது. ஒருவேளை ஏதாவது எல்லைக்குட்பட்ட பிராப்தியின் ஈர்ப்பு எண்ணத்தில் கூட தொடுவதற்கு தைரியம் வைக்கிறது என்றால் இதை என்னவென்று கூறுவது? அந்த மாதிரியானவரை வைஷ்ணவன் என்று கூறுவோமா? எப்படி இன்றைய நாட்களில் வெளியுலகில் வைஷ்ணவன் என்ற பெயர் உள்ளவர்கள்

## 1974 அவ்யக்த முரளி

அனேக விதமான விரதத்தைக் கடைபிடிக்கிறார்கள், அனேக மனிதர்களையும் மற்றும் அனேக விதமான பொருட்களையும் தன்னைத் தொட விடுவதில்லை. ஒருவேளை ஏதாவது ஒரு காரணத்தினால் யாராவது தொட்டு விட்டால் அது பாவம் என்று நினைக்கிறார்கள். எப்படி பெயரோ அப்படிக் காரியம் செய்யக்கூடிய, எப்படி எண்ணமோ அப்படி சொரூபமாக ஆகக்கூடிய உண்மையான வைஷ்ணவர்கள் நீங்கள். அந்த மாதிரி உண்மையான வைஷ்ணவர்களை யாராவது தொடுவதற்கான தைரியம் வைக்க முடியுமா? தற்சமயம் மகாரதி என்று தன்னைக் கூறிக் கொள்ளும் பெரும்பான்மையானவர்களும் அமிர்தவேளையின் ஆன்மீக உரையாடலில் சக்திசாலியான நிலை என்ன இருக்க வேண்டுமோ அது ஏன் இருப்பதில்லை என்ற கேள்வியும் கேட்கிறார்கள் மற்றும் புகாரும் செய்கிறார்கள். ஏன் அந்த நிலை கொஞ்ச நேரம் இருக்கிறது? இதற்கான காரணம் இந்த சூட்சும பாவம் ஆகும். இது தான் தந்தைக்குச் சமமாக ஆக விடுவதில்லை.

எப்படி ஐந்து விகாரங்களின் வசமாகி செய்யும் காரியங்களை பாவம் என்று கூறப்படுகிறது. இது தான் பாவத்தினுடைய மேலோட்டமான ரூபமாகும். அதே போலவே நுண்ணிய முயற்சி என்றால் மகாரதியின் எதிரில் ஐந்து தத்துவங்கள் தன்னுடைய தரப்பிலிருந்து விதவிதமான ரூபத்தில் கவர்ந்திழுத்து நுண்ணிய பாவம் செய்விப்பதற்கு காரணமாகி விடுகிறது. ஐந்து விகாரங்களைப் புரிந்து கொள்வது மற்றும் அவற்றின் மேல் வெற்றி அடைவது சுலபமாகும் ஆனால் ஐந்து தத்துவங்களின் கவர்ச்சியிலிருந்து விலகியிருப்பது, இது மகாரதிகளைப் பொருத்தவரை விசேஷ முயற்சி ஆகும். எப்பொழுது இந்த பத்தையும் புரிந்து இவைகளின் மேல் வெற்றியை அடைகிறீர்களோ அப்பொழுது தான் உண்மையான தசரா பண்டிகை இருக்கும். விஜயதசமி இந்த நிலைக்கான நினைவு பண்டிகை தான். மகாரதிகளின் சோதனை நுண்ணியமானதாக இருக்க வேண்டும். அந்த மாதிரி வெற்றி அடைபவர்கள் தான் அஷ்டரத்தினங்களாக பிரசித்தி ஆவார்கள். பிரத்யக்ஷ ரூபத்தில் தென்படக்கூடிய சிறுசிறு தவறுகள் அந்த மாதிரி நுண்ணிய முயற்சியாளர்களின் எதிரில் என்னவாகத் தென்படுகிறது?

தற்சமயம் ராயல் முயற்சி செய்பவரின் ராயல் சுலோகன் என்னவாக இருக்கிறது? ராயல் முயற்சியாளர் என்று யாரைக் கூறுவது? யாருக்கு ஒவ்வொரு விஷயத்திலும் ராயல்டி (பதவி) மற்றும் சகஜ சாதனம் தேவையாக இருக்கிறதோ அதை வைத்துக் கொள்வதற்காக ராயல் என்ற வார்த்தை கூறப்படுகிறது. சாதனங்களின் ஆதாரத்தில் மற்றும் பிராப்தியின் ஆதாரத்தில் முயற்சி செய்பவர்களை இராயல் முயற்சியாளர்கள் என்று கூறப்படுகிறது. இராயல்டி என்ற வார்த்தைக்கு இன்னொரு அர்த்தமும் இருக்கிறது. யார் இப்பொழுது இராயல் முயற்சி செய்பவராக இருக்கிறாரோ அவருக்கு தர்மராஜ்புரியில் இராயல்டியும் (அபராதக் கட்டணமும்) கொடுக்க வேண்டியதாக இருக்கும். இராயல் முயற்சியாளரின் அடையாளமாக என்ன இருக்கும் அதன் மூலம் நான் இராயல் முயற்சியாளர் இல்லை என்று தெரிந்து கொள்ள முடியும். மற்றவர்களைத் தெரிந்து கொள்ள வேண்டியது இல்லை ஆனால் தன்னைத் தெரிந்து கொள்ள வேண்டும். எப்படி ஸ்தூலமாக இராயல் தன்மையில் இருப்பவர்கள் தன்னுடைய அனேக ரூபத்தை வைத்துக் கொள்வார்கள். அதே போல் இராயல் முயற்சியாளர் பல ரூபங்கள் மற்றும் புத்திசாலித்தனம் உள்ளவர்களாக இருப்பார்கள், அவர்கள் எப்படி நேரமோ அப்படி ரூபத்தை தாரணை செய்வார்கள் ஆனால் இராயல்டியில் ரியாலிட்டி (உண்மை) இருப்பதில்லை, கலப்படமாக இருக்கும், ஆனால் ஒரே சீரான நிலையில் தன்னை நிலைத்திருக்கச் செய்ய முடியாது. அந்த மாதிரி இராயல் முயற்சியாளர்கள் இந்த மாதிரியான விளையாட்டுக் காரியத்தைச் செய்கிறார்கள். அப் அன்ட் டவுன் (மேலே மற்றும் கீழே). இந்த நேரம் மிக உயர்ந்த நிலை மற்றும் அடுத்த நேரம் மிகத் தாழ்ந்த நிலை. முன்னேறும் கலையிலும் கதாநாயக பாத்திரம் என்றால் இறங்கும் கலையிலும், பூஜ்யத்திலும் கதாநாயகன். அந்த மாதிரி முயற்சி செய்பவரின் காரியமாக என்ன இருக்கிறது? அவர் இயற்கையின் மற்றும் விகாரங்களின் வசமானவராக, அற்ப காலத்து போலியான பயமற்ற ரூபத்தில் இருப்பது மற்றும் தன் மூலமாக மற்றவர்களை பயமுறுத்தும் விஷயங்களைப் பேசுவது. அவர்களுடைய சுலோகனாக என்ன இருக்கிறது? இதைச் செய்து விடுவேன் அல்லது அதைச் செய்து விடுவேன். கொலை செய்யும் மகாபாவத்தின் பயமுறுத்தும் நடத்தை மற்றும் அந்த மாதிரியான வார்த்தைகளைப் பேசுவது அவர்களின் காரியமாக இருக்கிறது. அந்த மாதிரி இராயல் முயற்சி செய்பவராக ஒருபொழுதும்

ஆகாதீர்கள். ஒருபொழுதும் அந்த மாதிரி இராயல் முயற்சியாளரின் சேர்க்கையில் வராதீர்கள். ஏனென்றால் முயற்சி செய்பவராக இருக்கும் ஆத்மாக்களை தன்னுடைய தொடர்பில் கொண்டு வந்து பிரபாவம் செய்யக்கூடிய விசேஷத்தன்மை மாயாவின் வசமாகியிருக்கும் ஆத்மாக்களுக்கு மாயா மூலமாக வரதானமாக பிராப்தி ஆகிறது. அந்த மாதிரியான தொடர்பை மிகப் பெரிய புதைகுழி என்று புரிந்து கொள்ளுங்கள். அது வெளியிலிருந்து பார்ப்பதற்கு மிக அழகானதாகத் தென்படும் ஆனால் அழிக்கக்கூடியதாக இருக்கும் எனவே பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் தற்போதைய நேரத்தின், மாயாவின் இராயல் ரூபத்தின் எச்சரிக்கையை முன்பாகவே கொடுக்கிறார். அந்த மாதிரியான தொடர்பிலிருந்து எப்பொழுதும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். மேலும் புத்திசாலித்தனம் உள்ளவராக இருக்க வேண்டும். மாயாவும் தற்சமயம் அந்த மாதிரி இராயல் முயற்சி செய்பவரின் மாலையைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருக்கிறது.

தன்னுடைய மணிகளை மிக நல்ல முறையில் மற்றும் தீவிர முயற்சியில் தேடிக் கொண்டிருக்கிறது. எனவே மாயாவின் மாலையின் மணிகளாக ஒருபொழுதும் ஆகாதீர்கள். ஒருவேளை அந்த மாதிரி மாயாவின் மாலையின் மணிகளின் பிரபாவத்தில் வந்து விட்டீர்கள் என்றால் வெற்றி மாலையின் மணியிலிருந்து விலகி விடுவீர்கள். ஏனென்றால் தற்சமயம் இரண்டு மாலைகளும் ஒன்று மாயாவினுடையது. இன்னொன்று வெற்றி மாலை தந்தையினுடையது. இந்த இரண்டின் தேர்வு மிக வேகமாக நடந்து கொண்டிருக்கிறது. அந்த மாதிரி நேரத்தில் ஒவ்வொரு நொடியும் நாலாபக்கங்களிலும் கவனம் வேண்டும். புரிந்ததா?

அந்த மாதிரி எப்பொழுதும் உண்மையாக முயற்சி செய்பவருக்கு, உண்மையான தந்தையுடன் எப்பொழுதும் உண்மையாக இருக்கக்கூடியவர்களுக்கு, ஐந்து விகாரங்கள் மற்றும் ஐந்து தத்துவங்களின் கவர்ச்சியிலிருந்து எப்பொழுதும் விலகியிருக்கக்கூடியவர்களுக்கு, சுலபமாக சப்தத்திலிருந்து விலகிய நிலையில் நிலைத்திருக்கக்கூடியவர்களுக்கு, வெற்றி மாலையின் வெற்றி மணிகளுக்கு, எப்பொழுதும் பாப்தாதாவுடன் இருப்பவர்களுக்கு, எப்பொழுதும் சத்தியமான தொடர்பில் இருக்கக்கூடிய மற்றும் வீணான

தொடர்பிலிருந்து விலகியிருக்கக்கூடியவர்களுக்கு, அந்த மாதிரி அன்பான தந்தையின் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள், காலை வணக்கம் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: சம்பூர்ணத்தின் நிலை மூலமாக இயற்கைக்கு கட்டளை இடக்கூடிய உலகை மாற்றுபவர் ஆகுக!

எப்பொழுது உலகை மாற்றம் செய்யும் ஆத்மாக்கள் நீங்கள் ஒன்றாகச் சேர்ந்து குழு ரூபத்தில் சம்பன்னம், சம்பூர்ண ஸ்திதி மூலமாக உலகை மாற்றம் செய்வதற்கான எண்ணத்தை உருவாக்குவீர்களோ அப்பொழுது இந்த இயற்கை முழுமையான குழப்பம் செய்வதற்கான நடனத்தைத் தொடங்கும். காற்று, பூமி, கடல், நீர் இவற்றினுடைய சீற்றங்கள் தான் சுத்தம் செய்யும் ஆனால் எப்பொழுது . உங்களுடைய சகயோகி கர்ம இந்திரியங்கள் மற்றும் மனம், புத்தி, சம்ஸ்காரம் உங்களுடைய கட்டளையை ஏற்று நடக்கின்றனவோ அப்பொழுது தான் இந்த இயற்கையும் உங்களுடைய கட்டளையை ஏற்று நடக்கும். கூடவே அந்த அளவு சக்திசாலியான தபஸ்யாவின் உயர்ந்த நிலையும் இருக்க வேண்டும். அனைவருக்கும் ஒரே நேரத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும்' என்ற எண்ணம் இருக்கட்டும். மேலும் இயற்கை ஆஜராகி விடட்டும்.

சுலோகன்: தன்னுடைய உயர்ந்த பாக்கியம் மூலமாக அனைவரின் பாக்கியத்தை உருவாக்கிக் கொண்டே எப்பொழுதும் பகவானின் நினைவை ஊட்டிக் கொண்டே இருங்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 27.05.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உலக நன்மை காரியத்திற்காக பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களின் வார்த்தைகளும் எப்பொழுதும் நன்மை பயப்பதாகும்!

சப்தத்தில் வருவது மற்றும் சப்தத்திலிருந்து விலகிச் செல்வதில் எவ்வளவு இடைவெளி இருக்கிறது என்ற இதன் அனுபவியாக அனைவரும் ஆகி விட்டீர்களா? (மைக்கில் கொஞ்சம் சப்தம் தெளிவாக இல்லாமல் இருந்தது). பாருங்கள் சப்தம் ஒருவேளை சரியாக இல்லை என்றால் நன்றாக இல்லை இல்லையா? இயந்திரத்தில் கொஞ்சமாவது கோளாறு இருக்கிறது என்றால் அந்த மாதிரி சப்தத்தை விரும்புவது இல்லை தானே! அப்படி உங்களுடைய இயந்திரமான இந்த வாயும் மைக் தான். இந்த வாய் மூலமாகவும் எப்பொழுது யதார்த்தமான மற்றும் யுக்தியுக்தான வார்த்தைகள் வெளியாவது இல்லை என்றால் அந்த நேரம் அனைவருக்கும் என்ன அனுபவமாகும்? அல்லது அந்த நேரம் உங்களுக்கு தெரிய வருவதே இல்லையா என்ன? எப்பொழுது ஸ்தூலமான இயந்திரத்தின் சப்தத்தையும் விரும்புவதில்லை என்றால் இயற்கையான வாய் மூலம் வெளியாகியிருக்கும் வார்த்தைகள் மற்றும் சப்தம் தனக்கும் மற்றும் மற்றவர்களுக்கும் அந்த மாதிரியே அனுபவம் ஆக வேண்டும். ஒருவேளை இதை உணர்ந்தீர்கள் என்றால் அந்த நேரமே என்ன மாற்றம் ஏற்பட்டு விடும்? தெரிந்திருக்கிறீர்களா? அந்த நேரத்திலிருந்தே நிரந்தரமாக வீணான வார்த்தை, விஸ்தாரப்படுத்தக்கூடிய வார்த்தை, நேரத்தை வீணாக்கும் வார்த்தை மற்றும் தன்னுடைய பலஹீனங்கள் மூலமாக மற்ற ஆத்மாக்களை தீய சேர்க்கையில் கொண்டு வரக்கூடிய வார்த்தை அனைத்தும் முடிவடைந்து விடும். மகான் ஆத்மாக்களின் ஒவ்வொரு வார்த்தையையும் மகாவாக்கியம் என்று கூறப்படுகிறது. மகாவாக்கியம்

என்றால் மகான் ஆக்கக்கூடிய வாக்கியம். மகாவாக்கியம் விஸ்தாரமானதாக இருப்பதில்லை. எப்படி மரத்தின் உள்ளே விதை மகானாக இருக்கிறது மேலும்அதனுடைய விஸ்தாரம் இருப்பதில்லை ஆனால் அதில் அனைத்து சாரமும் நிரம்பியிருக்கிறது, அதே போலவே மகாவாக்கியத்தில் விஸ்தாரம் இருப்பதில்லை ஆனால் அதில் சாரம் இருக்கும். அந்த மாதிரி சாரம் நிறைந்ததான மிகச் சரியானதான, யுக்தி யுக்தாக யோக யுக்தியாக, சக்தி யுக்தாக அன்பு யுக்தியாக, சுயமரியாதையின் யுக்தியாக மற்றும் நினைவு யுக்தியான வார்த்தைகளை பேசுகிறீர்களா?

எப்படி தற்சமயம் உலகத்தில் அழியக்கூடிய பதவியை பெறக்கூடிய விசேஷ ஆத்மாக்களாக யார் இருக்கிறார்களோ அவர்களும் தன்னுடைய வார்த்தையையும் சோதித்து பின்பு தான் பேசுவார்கள். என் மூலமாக அந்த மாதிரி எந்த வார்த்தையும் வெளியாகி விடக்கூடாது, அதனால் தேசத்தில் மற்றும் உடன் இருப்பவர்களில் எதிர்ப்பை உருவாக்கி விடக்கூடாது என்று நினைப்பார்கள். அதே போலவே உலகிற்கு நன்மை செய்வதற்கான உயர்ந்த காரியத்தில் பொறுப்பாளராகியிருக்கும் நீங்கள் உயர்ந்த ஆத்மாக்கள் ஆவீர்கள், உங்களுக்கு உலகில் விசேஷ அந்தஸ்து இருக்கிறது. என் மூலமாக என்னென்ன வார்த்தைகள் வெளியாகிறதோ அது அனைவருக்கும் மற்றும் தனக்கும் நன்மை பயப்பதாக இருக்கிறதா என்ற இதையும் நீங்கள் சோதனை செய்ய வேண்டும். வீணான விஷயங்களையோ முற்றிலும் விட்டு விடுங்கள், ஆனால் இப்பொழுதைய நிலையின் அனுசாரம் நன்மை செய்வதற்கான காரியம் அடங்கியில்லாத வார்த்தை ஒன்று கூட வாயிலிருந்து வெளியாகக்கூடாது. விசேஷ ஆத்மாக்கள் உங்களுடைய ஒவ்வொரு வார்த்தையின் மகத்துவத்தின் நினைவுச்சின்னம் இது வரையிலும் பக்தி மார்க்கத்தில் வந்து கொண்டிருக்கிறது என்று ஏற்கனவே கூறியிருந்தோம். அது என்ன? உங்களுடைய ஒவ்வொரு வார்த்தையின் மகத்துவத்தின் நினைவுச் சின்னமாக பக்தி மார்க்கத்தில் என்ன இருக்கிறது? கீதையோ ஞானத்தின் நினைவுச் சின்னமாகும். நடைமுறை வாழ்க்கையில் அந்த மகத்துவத்தை வர்ணனை செய்கிறார்கள். பாருங்கள் இன்றைய நாட்களின் மகான் ஆத்மாக்களாக யார் இருக்கிறார்களோ அவர்கள் கூறும் ஒவ்வொரு வார்த்தைக்காக பக்தி மனிதர்கள் சத்திய மகா

வாக்கியம் மகாராஜ் (சத்தியம் கூறும் பெரியவர்) என்று கூறுகிறார்கள். அது வீணானதாக இருந்தாலும் அல்லது உண்மையில்லாததாக இருந்தாலும் கூட இது மகான் ஆத்மாவின் வார்த்தை என்று நினைக்கிறார்கள். அப்படி இந்த மகத்துவத்தை வைக்கிறார்கள். சத்திய மகா வாக்கியம் மகாராஜின் இந்த நினைவுச்சின்னம் எப்பொழுதிலிருந்து தொடங்கியது? முதலில் யதார்த்த நடைமுறை வாழ்க்கையில் நடக்கிறது. பின்பு பக்தி மார்க்கத்தில் நினைவுச்சின்னம் மட்டும் இருந்து விடுகிறது யதார்த்தமானதாக இருப்பதில்லை, அப்படி எப்பொழுது பக்தி மார்க்கத்தில் கூட ஒவ்வொரு வார்த்தையின் மகத்துவம் இந்த அளவு இதுவரை கூட இருக்கிறது. அதை கடைசி நேரம் வரை பார்க்கவும். கேட்டுக் கொண்டும் இருக்கிறீர்கள் என்றால் அந்த மாதிரி மகத்துவம் நிறைந்த வார்த்தை சத்தியமானதாகவும் மற்றும் உலகிற்கு நன்மை பயப்பதாகவும் இருக்கட்டும். அப்படியானால் அந்த மாதிரி ஒவ்வொரு வார்த்தையும் வெளியாகிறதா? நாளாக நாளாக வரிசைக்கிரமமான முயற்சியின் அனுசாரம் யார் மகாரதி மற்றும் மகாவீர் ஆகிக் கொண்டிருக்கிறார்களோ அவர்களுடைய வாயிலிருந்து வெளியாகக்கூடிய ஒவ்வொரு வார்த்தையும் சத்தியமாகி விடும். இப்பொழுது அப்படி ஆவதில்லை. ஏனென்றால் இதுவரையிலும் வீணான மற்றும் சாதாரண வார்த்தைகள் அதிகமாக வெளியாகிறது.

எப்படி யாராவது கட்டுரை அல்லது பத்திரிகைச் செய்தி எழுதுகிறார்கள் மற்றும் ஏதாவது பத்திரிகை, வார மாத இதழ்களில் பிரசுரிக்கச் செய்விக்கிறார்கள் என்றால் என்ன எழுதப்பட்டதோ அது சரியாக இருக்கிறதா மற்றும் பிரபாவம் ஏற்படுத்துவதாக இருக்கிறதா, என்ன நோக்கம் மற்றும் தலைப்பு இருக்கிறதோ அதன் அனுசாரம் எழுதியது இருக்கிறதா என்று எழுதுபவர் மீண்டும் சரி பார்ப்பார். அதே போல் நீங்களும் அமிர்தவேளையிலிருந்து இரவு வரை நடைமுறையில் எண்ணம், சொல், செயல் மூன்றிற்கும் ஒரு கட்டுரை அல்லது கணக்கு எழுதுகிறீர்கள் அதாவது டிராமாவில் காரியம் மூலமாக நிரப்புகிறீர்கள். இரவில் தன்னுடைய ஒவ்வொரு நாளில் நடைமுறையில் நிரப்பியதை மற்றும் கட்டுரையை எவ்வளவு சக்திசாலியானதாக அதாவது பிரபாவம் ஏற்படுத்துவதாக இருந்தது மற்றும் எவ்வளவு வீணானதாக இருந்தது என்று சோதனை செய்யுங்கள். அந்த மாதிரி சோதனை செய்கிறீர்களா?

பாப்தாதாவிடம் ஒவ்வொரு குழந்தையின் ஒவ்வொரு நேரத்தின் மூன்று ரூபங்களில் அதாவது எண்ணம், சொல், செயலால் செய்யப்பட்ட நடைமுறை காரியங்கள் வெளிப்படுகிறது அதன் மூலம் (ரிசல்ட்டாக) முடிவாக என்ன தென்படுகிறது? இதுவரை 75 சதவிகிதம் குழந்தைகளின் பாதி முடிவு வீணான வார்த்தைகள் மற்றும் சாதாரண வார்த்தைகள் இருப்பதாகத் தென்படுகிறது. இந்தக் கணக்குப்படி ஒருவேளை இப்பொழுதிலிருந்தே சத்திய மகாவாக்கியம் மகாராஜ் ஆகி விட்டீர்கள் என்றால் அனேக ஆத்மாக்களின் முயற்சியை பலஹீனமாக்குவதற்கு மற்றும் முயற்சியை சாதாரணமாக்குவதற்கு காரணமானவர் ஆகி விடுவீர்கள் எனவே இப்பொழுது (டிராமாப்படி) நாடகத்தின்படி இந்த வரதானம் அனைவருக்கும் பிராப்தியாகவில்லை. மிகக்குறைந்த ஆத்மாக்களுக்கு அவர்களுக்கும் கூட மிகக்குறைந்த அளவில் அதாவது 25 சதவிகிதம் அந்த மாதிரியான உயர்ந்த வரதானம் பிராப்தியாக ஆரம்பம் ஆகியிருக்கிறது, எனவே தன்னுடைய பொறுப்பு மற்றும் மகத்துவத்தைப் புரிந்து ஒவ்வொரு வார்த்தையிலும் இந்த அளவு கவனம் வையுங்கள். நீங்கள் சாதாரண முறையில் பேசுவீர்கள் ஆனால் மகான் ஆத்மாக்கள் உங்களுடைய வார்த்தை சத்தியமாகும் காரணத்தினால் அனேக ஆத்மாக்களுக்கு நன்மையின்மை ஏற்பட்டு விடுகிறது. எனவே பக்தியில் கூட வரதானத்தின் கூடவே சாபத்திற்கும் மகிமை செய்யப் பட்டிருக்கிறது. சாபம் கொடுப்பதில்லை ஆனால் அந்த மாதிரி வீணான நடத்தை மற்றும் வீணான வார்த்தை நன்மையின்மைக்கான காரணமாக தானாகவே ஆகி விடுகிறது, அதாவது கேட்கக்கூடிய மற்றும் பார்க்கும் சாதாரண ஆத்மாக்கள் உங்களுடைய வார்த்தை மற்றும் காரியம் மூலமாக இறங்கும் கலையில் அதாவது முயற்சி செய்யாத நிலையில் சென்று விடுகிறார்கள். இந்த விதமாக அவர்கள் உங்கள் மூலமாக சபிக்கப்பட்டு விடுகிறார்கள்.

உலக நன்மைக்கான காரியத்தில் நிமித்தமாக ஆகியிருக்கும் ஆத்மாக்கள் ஒருவேளை விரும்பா விட்டாலும் மற்றும் யோசிக்காவிட்டாலும் சாதாரண வகையில் கூட எந்த ஆத்மாவிற்கும் சாபம் கொடுப்பதின் காரியத்திற்கு நிமித்தமாகி விடுகிறார் என்றால் அவரை என்னவென்று கூறலாம்? வரதானம் கொடுப்பவர் என்று கூறுவோமா என்ன? அப்படி இவ்வளவு கவனம் மற்றும் நுணுக்கமான

சோதனை தற்சமயம் மிக அவசியமாகும். ஏனென்றால் இப்பொழுது உங்களுடைய உயர்ந்த வாழ்க்கை உலகின் சேவைக்காக இருக்கிறது. இதுவரை தன்னுடைய சேவைக்காக மற்றும் தன்னுடைய மாற்றத்திற்காக, தன்னுடைய சம்ஸ்காரம் மற்றும் சுபாவ வசமாகி தன்னைத் தானே சரி செய்ய மேலும் கெடுப்பதற்காக இருந்தது என்றால் இப்பொழுது அந்த நேரம் கடந்து விட்டது. இப்பொழுது ஒவ்வொரு மூச்சு, ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு வினாடி, ஒவ்வொரு காரியம் அனைத்து சக்திகள், அனைத்து ஈஸ்வரிய சம்ஸ்கா பாவம் மற்றும் பிராப்தியாகியிருக்கும் அனைத்து பொக்கிஷங் உலகத்தின் சேவைக்காகத் தான் பிராப்தியாகியிருக்கிறது. ஒருவேளை இதுவரையில் தனக்காவே ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்றால் பின்பு பிராப்தியாக என்ன கிடைக்கும்? மாஸ்டர் படைப்பவர் ஆவீர்களா அல்லது படைப்பாகவா? படைப்பு தனக்காகத் தான் இருக்கும் ஆனால் படைப்பவர் படைப்புக்காக இருப்பார். யார் இப்பொழுதே மாஸ்டர் படைப்பவர் ஆகவில்லையோ அவர் எதிர்காலத்திலும் உலகின் அதிபதியாக ஆக முடியாது.

இப்பொழுது சம்பூர்ண நிலை மற்றும் சம்பூர்ண இறுதி முடிவின் (ரிசல்ட்) நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது. முடிவை பாப்தாதா வாய் மூலமாக வெளிப்படுத்த மாட்டார் அல்லது ஏதாவது காகிதத்திலோ அல்லது பலகையிலோ நம்பர் எழுத மாட்டார் ஆனால் முடிவு எப்படி வெளியாகும்.. நீங்கள் தனக்குத் தானே தன்னுடைய தகுதிக்கு ஏற்றபடி தனக்கு நிச்சயிக்கப்பட்ட வரிசை எண்ணிற்கு தகுதியானவர் என்று நினைப்பீர்கள் மற்றும் நிரூபிப்பீர்கள். தானாகவே அவருடைய வாயிலிருந்து தன்னுடைய இறுதி (ரிசல்ட்டின்) முடிவின் வரிசை எண்ணை யோசிக்காமலேயே அவர் வாயிலிருந்து கேட்க முடியும். மேலும் நடத்தையிலிருந்து தென்படும். இதுவரையிலோ (இராயல்) மேன்மையான முயற்சி செய்பவர்களுக்கு இராயல் பாஷை காரியம் செய்து கொண்டிருக்கிறது ஆனால் கொஞ்ச காலத்தில் (இராயல்) மேன்மையான பாஷை உண்மையாகி விடும். எப்படி (இராயல்) மேன்மையான முயற்சி செய்பவர்களின் சென்ற கல்பத்தின் மகிமை இருக்கிறது. எவ்வளவு தான் தன்னை உருவாக்குவதற்கு முயற்சி செய்தாலும் ஆனால் சத்தியம் என்ற கண்ணாடியின் எதிரில் இராயல் கூட உண்மையாக தென்படும். அப்படி வரும் நாட்களில் அந்த

மாதிரி சத்தியமான வார்த்தை, சத்தியமான உள்உணர்வு, சத்தியமான பார்வை, சத்தியமான சூழ்நிலை மற்றும் சத்தியத்தின் குழு பிரசித்தியாகத் தென்படும் அதாவது பிராமண பரிவாரம் ஒரு கண்ணாடி மாளிகை ஆகி விடும். அந்த மாதிரியான இறுதி (ரிசல்ட்) முடிவு தானாகவே வெளியாகி விடும்.

இப்பொழுது பெரிய பெரிய கரைகள் கூட மறைப்பதினால் மறைந்து விடுகிறது. ஏனென்றால் இப்பொழுது நாலாபுறங்களிலும் உள்ள கரைகள் தெளிவாகத் தென்படும் மாதிரி கண்ணாடி மாளிகை உருவாகவில்லை. இப்பொழுது விலகி விட்டார்கள் என்றால் கரை மறைந்து விடுகிறது. அதாவது கண்ணாடியின் எதிரில் தன்னை கொண்டு வருவதிலிருந்து விலகி விட்டார் என்றால் பாவம் மறைந்து விடுகிறது. மறைவதில்லை, ஆனால் விலகியிருந்து மறைந்திருக்கிறது என்று புரிந்து தன்னை குஷி படுத்திக் கொள்கிறார்கள். தந்தையும் குழந்தைகளுக்கு நன்மை செய்பவராகி ஒன்றுமே தெரியாதது போல் தெரியாதவராகி விடுகிறார். ஒருவேளை இந்தக் கரை இவ்வளவு காலமாக இந்த ரூபத்தில் இருக்கிறது என்று நான் தெரிந்திருக்கிறேன் என்று தந்தை கூறிவிட்டார் என்றால் சொல்பவருக்கு என்ன சொரூபமாகி விடும். சொல்ல விரும்பினாலும் கூட வாய் அடைத்துப் போய்விடும் ஏனென்றால் சொல்வதற்கு விதி செய்யப்பட்டுள்ளது.

தந்தை தெரிந்திருந்தும் கூட ஏன் கேட்டுக் கொண்டிருக்கிறார்? ஏனென்றால் தன் மூலமாகச் செய்த காரியம் மற்றும் எண்ணத்தை எப்பொழுது அவர்களே வர்ணனை செய்வார்களோ அப்பொழுது தான் உணரும் படியில் கால் வைக்க முடியும். உணருவது அல்லது வருத்தப்படுவது அல்லது மன்னிப்பு கேட்பது அனைத்து விஷயங்களும் ஒன்றாகி விடுகிறது. எனவே சொல்ல வேண்டும் என்பதின் அர்த்தம் தன்னை லேசாக ஆக்குவதற்காக அல்லது மாற்றம் செய்வதற்கான விதியாக உருவாக்கப் பட்டிருக்கிறது. இந்த விதி மூலம் பாவங்கள் வளருவது குறைந்து விடுகிறது. எனவே கண்ணாடி மாளிகை உருவான பிறகு தன்னை தெளிவாகப் பார்த்து தன்னை தெளிவுப்படுத்தினார் என்றால் (ரிசல்ட்) முடிவு என்னவாக இருக்கும் என்ற இதைத் தெரிந்திருக்கிறீர்களா? பாப்தாதாவும் (டிராமாப்படி) நாடகப்படி அந்த ஆத்மாக்களுக்கு தெளிவான சவால் கொடுக்கிறார் என்றால் பின்பு

அவர்களால் செய்ய முடியுமா? எனவே இப்பொழுது உணர்தலின் ஆதாரத்தில் தெளிவாகி விடட்டும் அதாவது சுமையிலிருந்து தன்னை லேசாக்கிக் கொள்ளுங்கள். அப்பொழுது தான் டபுள் லைட் சொரூபம் அதாவது பரிஷ்தா மற்றும் ஆத்மீக ஸ்திதி சொரூபம் ஆக முடியும்.

நல்லது. இரக்கமனமுடைய தந்தையின் இரக்க மனமுடைய குழந்தைகளுக்கு, உயர்ந்த எப்பொழுதும் தெளிவான கண்ணாடி ரூபம், திவ்ய மூர்த்தி, ஞானமூர்த்தி, எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்த மூர்த்தி, அனைத்து கவர்ச்சிகளிலிருந்து விலகிய ஆன்மீக கவர்ச்சி மூர்த்தி, தெய்வீக குணமூர்த்தி, அனைத்து ஆத்மாக்களுக்காக நன்மை செய்யும் நன்மைக்கான ஆதாரமூர்த்தி அந்த மாதிரியான மகான் ஆத்மாக்கள் மற்றும் சேவைக்கு தகுதியான ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள், குட்நைட் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: பொறுப்பின் நினைவு மூலமாக எப்பொழுதும் அலர்ட்டாக (உஷாராக) இருக்கக்கூடிய சுபபாவனை மற்றும் சுபவிருப்பங்கள் நிரம்பியவர் ஆகுக!

குழந்தைகள் நீங்கள் இயற்கை மற்றும் மனித ஆத்மாக்களின் உள்உணர்வை மாற்றுவதற்கான பொறுப்பிலிருப்பவர்கள் ஆவீர்கள் ஆனால் எப்பொழுது உங்களுடைய உள்உணர்வு சுபபாவனை, சுபவிருப்பங்களால் நிரம்பி சதோபிரதான மற்றும் சக்திசாலியானதாக இருக்குமோ அப்பொழுது தான் இந்தப் பொறுப்பை நீங்கள் நிறைவேற்ற முடியும். பொறுப்பின் நினைவு எப்பொழுதும் உஷாராக்கி விடும். ஒவ்வொரு ஆத்மாவிற்கும் முக்தி, ஜீவன்முக்தி, ஆஸ்திக்கு அதிகாரி ஆக்குவது என்ற இது மிகப் பெரிய பொறுப்பாகும். எனவே ஒருபொழுதும் அலட்சியம் வர வேண்டாம். உள்உணர்வு சாதாரணமானதாக இருக்க வேண்டாம்.

சுலோகன்: தன்னுடைய ஒவ்வொரு செயல் மூலமாக ஆதரவளிக்கும் தந்தையை பிரத்யக்ஷம் செய்தீர்கள் என்றால் அனேக ஆத்மாக்களுக்கு புகலிடம் கிடைத்து விடும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 30.05.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆன்மீக சேவையில் எப்பொழுதும் தந்தையின் சகயோகியாக (உதவியாளராக) மற்றும் எவரெடியாக (தயாராக இருப்பவராக) ஆகுங்கள்!

அனைத்து ஆயுதங்களினால் அலங்கரிக்கப்பட்டு எவரெடியாக (தயாராக இருப்பவராக), ஒரு நொடியில் எந்தவிதமான கட்டளையையும் நடைமுறையில் கொண்டு வரக்கூடிய எப்பொழுதுமே வெற்றி அடைபவராக யுத்த ஸ்தலத்தில் முன்னிலையில் இருக்கும் போர்வீரனாக தன்னை நினைக்கிறீர்களா? இப்பொழுதே பார்வையை கொஞ்சம் கூட தேக அபிமானம் இல்லாததாக, தெய்வீகமானதாக மேலும் எண்ண அளவில் கூட தேக அபிமானம் இல்லாததாக அப்படி தன்னை மாற்ற முடியுமா? அல்லது அப்படி ஆக்குவதில் நேரம் எடுக்குமா? ஒருவேளை ஒரு நொடிக்குப் பதிலாக இரண்டு நொடிகள் கூட எடுத்துக் கொண்டீர்கள் என்றால் அந்த மாதிரியானவரை எவரெடி என்று கூறுவோமா? தன்னுடைய உயர்ந்த நினைவின் ஆதாரத்தினால் இந்த மற்ற ஆத்மாக்களின் நினைவை மாற்றம் செய்து காண்பியுங்கள் என்று கட்டளை கிடைக்கிறது என்றால் அதற்கு எவரெடியாக இருக்கிறீர்களா? தற்சமய சூழ்நிலையை தன்னுடைய ஈஸ்வரிய உள்ளுணர்வு மூலமாக இப்பொழுதே மாற்றம் செய்யுங்கள் என்று கட்டளை கிடைத்தால் செய்ய முடியுமா? உங்களுடைய தற்சமயத்து சர்வ சக்திவான் நிலை மூலமாக மற்ற ஆத்மாக்களின் சூழ்நிலை வசமான எந்த நிலையையும் மாற்றம் செய்யுங்கள் என்று கட்டளை கிடைத்தால் நீங்கள் செய்ய முடியுமா? மாஸ்டர் படைப்பவராகி தன்னுடைய படைப்பிற்கு சுபபாவனையினால் மற்றும் நற்சிந்தனையுள்ளவராகி, கேட்பவர்களுக்கு அவர்கள் கேட்டபடி திருப்தி படுத்துங்கள் மற்றும் மகாதானி, வரதானி ஆகுங்கள் என்று கட்டளை

கிடைக்கிறது என்றால் அனைவரையும் திருப்தி செய்ய முடியுமா? அல்லது சிலர் திருப்தியாவார்கள் மற்றும் சிலர் வஞ்சிக்கப்பட்டு இருந்து விடுவார்களா? அனைத்து சக்திகளின் பொக்கிஷத்தினால் தன்னை நிரம்பியவன் என்று அனுபவம் செய்கிறீர்களா? அனைத்து ஆயுதங்களும் எப்பொழுதும் உங்கள் கூடவே இருக்கிறதா? அனைத்து ஆயுதங்கள் என்றால் அனைத்து சக்திகள். ஒருவேளை ஏதாவது ஒரு ஆயுதம் அல்லது சக்தி குறைவாக இருக்கிறது மற்றும் பலஹீனமாக இருக்கிறது என்றால் அவர் எவரெடி என்று கூறப்படுவாரா? தந்தை எவரெடியாக அதாவது அனைத்து சக்திகளினால் நிரம்பியவராக இருக்கிறார் என்றால், அந்த மாதிரியே தந்தையைப் பின்பற்றி நடப்பவர்களாக இருக்கிறீர்களா?

தற்சமயம் தந்தைக்கு அந்த மாதிரி எவரெடி, சகயோகிகளின் குரூப் (குழு) தேவையாக இருக்கிறது. ஒவ்வொரு குரூப்பிற்கும் ஏதாவது அடையாளம் மற்றும் விசேஷம் இருக்கும் இல்லையா? அப்படி அந்த மாதிரியான எவரெடி குரூப்பின் அடையாளம் என்னவென்று தெரிந்திருக்கிறீர்களா? உலகத்து இராணுவத்தின் அடையாளத்தையோ பார்த்திருப்பீர்கள். ஒவ்வொரு குரூப்பின் மெடல் வேறு வேறாக இருக்கும். அப்படி இந்த ஆன்மீக இராணுவத்தின் மற்றும் எவரெடி குரூப்பின் மெடலாக என்ன இருக்கிறது? இந்த ஸ்தூலமான பேட்ஜா அது? இதுவோ சேவைக்கான சாதனம் ஆகும் மற்றும் எப்பொழுதும் உடன் இருப்பதற்கான சாதனமாகும் ஆனால் முதல் குரூப்பின் மெடல் அல்லது அடையாளம் வெற்றி மாலை ஆகும். ஒன்றோ வெற்றி மாலையில் மணியாக உருட்டப்படுவர்களின் குரூப் தான் எவரெடி குரூப். இதே நிச்சயம் மற்றும் போதையில் எப்பொழுதும் வெற்றி மாலை கழுத்தில் இருப்பதாக இருக்கும். எப்பொழுதும் வெற்றி இது தான் மாலையின் முதல் அடையாளம் ஆகும். அந்த மாதிரி எவரெடி குழந்தைகள் இந்த நினைவினால் எப்பொழுதும் அலங்கரிக்கப் பட்டிருக்கிறார்கள். இரண்டாவது அடையாளம் எப்பொழுதும் சாட்சியாக மற்றும் தந்தையின் துணையுடன் இருப்பதற்கான கவசத்தை அணிந்திருப்பவர்களாக இருப்பார்கள். அந்த மாதிரி எவரெடியானவரின் ஒவ்வொரு நேரத்தின் கட்டளையை ஏற்று நடக்கக்கூடிய போர் வீரனாக மற்றும் உடன் இருப்பவைகளாக அனைத்து சக்திகளும் இருக்கும். கட்டளை கிடைத்தது மற்றும் ஒவ்வொரு சக்தியும் வந்தேன் ஐயா!

என்று கூறும். அவருடைய நெற்றி எப்பொழுதும் நெற்றியின் மணி அதாவது ஆத்மாவின் ஜொலிப்பினால் ஜொலித்துக் கொண்டிருப்பதாக தென்படும். அவருடைய கண் ஆன்மீக லைட் மற்றும் மைட்டின் ஆதாரத்தில் அனைத்து ஆத்மாக்களுக்கு முக்தி மற்றும் ஜீவன் முக்திக்கான மார்க்கத்தைக் காண்பிப்பதற்கு காரணமானதாக இருக்கும். அவருடைய மலர்ந்த முகம் அனேக ஜென்மங்களின் அனேக துக்கங்களை மறக்கச் செய்து, ஒரு நொடியில் மற்றவர்களையும் மலர்ந்த முகமுடையவர்களாக ஆக்கி விடும். அந்த மாதிரி எவரெடி குரூப்பாக இருக்கிறீர்களா மற்றும் வெற்றி மாலை கழுத்தில் இருக்கிறதா? வேறு வழிகளை மற்றவர்களிடமிருந்து தெரிந்து கொண்டிருக்கிறீர்களா அல்லது ஆயுதங்களை ஓரமாக வைத்து விட்டு தேவையான நேரத்தில் ஆயுதங்களுக்காக பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? இந்த சக்தியை கொடுங்கள், இந்த சகயோகம் கொடுங்கள் மற்றும் இந்த ஆதாரம் கிடைக்கட்டும் என்று இப்படி நினைப்பது கூட பிச்சை கேட்பதாகும். அந்த மாதிரியான பிச்சைக்காரர் எப்படி மகாதானியாக வரதானியாக ஆக முடியும். பிச்சைக்காரன் இன்னொரு பிச்சைக்காரனுக்கு என்ன கொடுக்க முடியும்? எவரெடி குரூப்பிற்கு தகுதியானவனாக ஆகி விட்டேனா என்று தன்னைப் பாருங்கள். கட்டளையிட்டது ஒன்று மற்றும் நடைமுறையில் நடந்தது இன்னொன்று என்று அப்படி இருக்க வேண்டாம். அந்த மாதிரி பலஹீனமானவராக இல்லை தானே? இப்பொழுதோ தாண்டிச் சென்று நிரப்புவதற்கான வாய்ப்பு இருக்கிறது, இப்பொழுது எந்த குரூப்பிலும் தன்னை மாற்றம் செய்ய முடியும் ஆனால் கொஞ்ச காலத்திற்கு பிறகு இடைவெளியை நிரப்புவதற்கான நேரமும் முடிவடைந்து விடும், மேலும் யார் எப்படி மற்றும் எவ்வளவு முயற்சி செய்திருந்தார்களோ அவர்கள் அங்கேயே இருந்து விடுவார்கள். பின்பு எவ்வளவு தான் விண்ணப்பம் போட்டாலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. நிர்பந்தமானவர்களாக ஆகி விடுவீர்கள். எனவே பாப்தாதா கொஞ்ச காலத்திற்கு முன்பாகவே எச்சரிக்கை கொடுக்கிறார் அதன் மூலம் பின்பு வரக்கூடியவர்களுக்கும் தந்தையிடம் எந்தவொரு புகாரும் இருக்காது. எனவே ஒவ்வொரு விநாடி மற்றும் ஒவ்வொரு எண்ணத்தின் மகத்துவத்தை தெரிந்து, தன்னை மகான் ஆக்குங்கள். பகுத்தறியும் சக்தியை தனக்காகவும் சேவைக்காகவும் உபயோகப்படுத்துங்கள் அப்பொழுது தான் தன்னுடைய பலஹீனங்களை அகற்ற முடியும்.

மேலும் மற்றவர்களின் ஆசையை நிறைவேற்றி மகாதானி மற்றும் மகா வரதானி ஆக முடியும்.

நல்லது. அந்த மாதிரி எப்பொழுதும் சுபசிந்தனையாளராக இருக்கக்கூடிய, எப்பொழுதும் நற்சிந்தனையில் இருக்கக்கூடிய, அனைவரின் மனவிருப்பங்களை நிறைவேற்றக்கூடிய, எப்பொழுதும் நெற்றியின் மணி மூலமாக அனைத்து ஆத்மாக்களுக்கு ஞானத்தின் ஒளி கொடுக்கக்கூடிய மற்றும் எப்பொழுதும் லைட் மற்றும் மைட் ஹவுஸ் பாப்தாதாவின் சகயோகி குழந்தைகளுக்கு அன்பு நினைவுகள், இரவு வணக்கம் மற்றும் நமஸ்காரம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

## 18.06.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# லைட் ஹவுஸ் மற்றும் மைட் ஹவுஸ் ஆகி புது உலகை படைப்பவர் ஆகுங்கள்!

தன்னை லைட் ஹவுஸ் மற்றும் மைட் ஹவுஸ் என்று நினைத்து நடந்து கொண்டிருக்கிறீர்களா? லைட் (ஒளி / ஞானம்) மற்றும் மைட் (சக்தி) என்று மட்டும் இல்லாமல் லைட் ஹவுஸ் மற்றும் மைட் ஹவுஸ் ஆக நினைப்பது. அதாவது லைட் மற்றும் மைட் கொடுக்கக்கூடிய வள்ளல், எப்பொழுது தன்னிடம் அவ்வளவு சேமிப்பு இருக்குமோ அப்பொழுது தான் ஹவுஸாக ஆக முடியும். ஒருவேளை சுயம் எப்பொழுதும் லைட் சொரூபமாக ஆக முடிவதில்லை மற்றும் லைட் சொரூபத்தில் எப்பொழுதும் நிலைத்திருக்க முடியவில்லை என்றால் அவர் லைட் ஹவுஸாகி மற்ற ஆத்மாக்களுக்கு லைட் கொடுக்க முடியாது. யார் அவரே மாஸ்டர் சர்வ சக்திவானாக இருந்தும் தனக்காக அனைத்து சக்திகளையும் உபயோகப்படுத்த முடியவில்லை என்றால் அவர் மைட் ஹவுஸாகி மற்ற ஆத்மாக்களுக்கு சர்வ சக்திகளின் தானத்தை எப்படி கொடுக்க முடியும்? நான் லைட் மற்றும் மைட் ஹவுஸாக ஆகியிருக்கிறேனா? என்று உங்களையே கேளுங்கள். எந்தவொரு ஆத்மாவும் ஒருவேளை ஏதாவது சக்தியைப் பெற வேண்டும் என்ற ஆசை வைத்து உங்கள் எதிரில் வருகிறது என்றால் அந்த ஆத்மாவுக்கு அந்த சக்தியை நீங்கள் கொடுக்க முடியுமா? ஒருவேளை சகித்துக் கொள்ளும் சக்தி மற்றும் நிர்ணயம் செய்யும் சக்தியின் ஆசையை வைத்துக் கொண்டு யாராவது வருகிறார், ஆனால் நீங்களோ அவருக்கு உள்ளடக்கும் சக்தி அல்லது பகுத்தறியும் சக்தியை தானமாகக் கொடுத்தீர்கள் என்றால் எப்படி அந்த நேரம் அந்த ஆத்மாவுக்கு சகித்துக் கொள்ளும் சக்தியின் தானம் அவசியமாக இருக்கும்பொழுது ஒருவேளை இவர் அதைக் கொடுக்க முடியவில்லை என்றால் அந்த மாதிரியான ஆத்மாவை மகாதானி, வரதானி அல்லது விஷ்வ கல்யாணி என்று கூற முடியுமா? ஒருவேளை தன்னிலேயே ஏதாவது ஒரு சக்தியின் குறை இருக்கிறது என்றால் மற்றவர்களை சர்வ

# 1974 அவ்யக்த முரளி

சக்திவான் தந்தையின் ஆஸ்தியின் அதிகாரியாக மற்றும் மாஸ்டர் சர்வ சக்திவானாக எப்படி ஆக்க முடியும்?

சூரிய வம்சத்தினர் சர்வ சக்திவான் ஆவார்கள் மற்றும் சந்திரவம்சத்தினர் சக்திவான் ஆவார்கள். ஒருவேளை ஒரு சக்தியின் குறை இருக்கிறது என்றாலும் சர்வ சக்திவானுக்குப் பதிலாக சக்திவான் என்று கூறப்படுவார். அதாவது சூரியவம்சத்தின் இராஜ்ய பாக்கியத்தின் அதிகாரியாக ஆக முடியாது. சர்வ சக்திவான் தான் சர்வகுண சம்பன்னமான 16 கலைகள் சம்பூர்ணமாவதற்காக உரிமையுள்ளவராக ஆகிறார். குறைந்த சக்தி உடையவர் நன்மை செய்பவர் ஆக முடியும் ஆனால் உலக நன்மை செய்பவராக ஆக முடியாது. ஒருவேளை ஏதாவது ஒரு ஆத்மாவிற்கு உள்ளடக்கும் சக்தி தேவையாக இருக்கிறது நீங்கள் அவருக்கு விஸ்தாரம் செய்யும் சக்தியைக் கொடுத்து விட்டீர்கள் மற்றும் பிற பல சக்திகளையும் கொடுத்து விட்டீர்கள் ஆனால் அவருக்கு என்ன தேவையாக இருந்ததோ அதைக் கொடுக்க முடியவில்லை என்றால் அந்த ஆத்மா திருப்தி அடையுமா? உங்களை உலகிற்கு நன்மை செய்பவர் என்று ஏற்றுக் கொள்ளுமா? யாருக்காவது தண்ணீர் தாகமாக இருக்கும்போது நீங்கள் அவருக்கு 36 வகை உணவை கொடுத்து விட்டீர்கள் ஆனால் தண்ணீர் தாகம் உள்ளவர் 36 வகை உணவினால் திருப்தி ஆவாரா? உங்களுக்கு நன்றி கூறுவாரா? தண்ணீருக்குப் பதிலாக நீங்கள் அவருக்கு வைரத்தையே கொடுத்தாலும், அந்த நேரம் அந்த ஆத்மாவிற்கு தண்ணீரின் ஒரு துளியின் மதிப்பு அனேக வைரங்களையும் விட அதிகமாகும். அது போலவே நீங்கள் உங்களிடம் அனைத்து சக்திகளின் இருப்பை சேமிப்பாக வைக்கவில்லை என்றால், அனைத்து ஆத்மாக்களைத் திருப்திப் படுத்தக்கூடிய திருப்திமணி ஆக முடியாது மற்றும் அனைத்து ஆத்மாக்களும் உங்களை உயிர் கொடுத்தவர், அனைத்து சக்திகளும் கொடுத்தவர் என்று ஏற்றுக் கொள்ளாது. ஒருவேளை உலகின் அனைத்து ஆத்மாக்களின் மூலமாக உலக நன்மை செய்பவர், மரியாதைக்குரியவராக ஆகவில்லை என்றால், மரியாதைக்குரியவர் ஆகாமல் பூஜைக்குரியவராகவும் ஆக முடியாது. திருப்திமணியாக ஆகாமல் பாப்தாதாவின் நெற்றியின் மணிகளாகவும் ஆக முடியாது. அந்த மாதிரி நுணுக்கமான சோதனை செய்கிறீர்களா? அல்லது

இதுவரையிலும் முக்கிய முக்கிய விஷயங்களின் சோதனை செய்வது கூட கடினமாக அனுபவம் ஆகிறதா?

ஒருவேளை சோதனை செய்யத் தெரியவில்லை மேலும் நினைத்தும் கூட தன்னுடைய இயற்கையான சம்ஸ்காரம் உருவாவதில்லை என்றால் அவருக்கு ஒரு டைட்டில் (பட்டம்) குறைந்து விடுகிறது, அது எது? ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வொரு டைட்டில் இருக்கிறது. நான்கு பாடங்களின் நான்கு டைட்டில்கள் எவை? முதலில் ஞானத்தின் பாடத்தில் முதன்மையான ஆத்மாவிற்கான டைட்டில் மாஸ்டர் ஞானக்கடல் மற்றும் ஞானம் நிறைந்தவர். மேலும் சுயதரிசன சக்கரதாரி என்று கூறினாலும் விஷயம் ஒன்று தான். இரண்டாவது நினைவு யாத்திரையில் யார் யதார்த்தமாக யுக்தியுக்த், யோகயுக்த் ஆக இருக்கிறாரோ அவருடைய டைட்டில் பவர்ஃபுல். ஏனென்றால் நினைவு மூலம் சக்திகளின் வரதானம் பிராப்தி ஆகிறது. அப்படி நினைவு யாத்திரையில் யார் யதார்த்தமாக நடந்து கொள்பவரோ அவருடைய டைட்டில் பவர்ஃபுல் (சக்திநிறைந்தவர்) என்பதாகும். மூன்றாவது பாடம் தெய்வீக குணங்கள். அந்த மாதிரி தெய்வீக குணங்கள் நிறைந்தவருக்கு என்ன டைட்டில் கொடுக்கலாம்? அவருடைய டைட்டிலாவது தெய்வீக குணங்களின் மணத்தைப் பரப்பும் எஸன்ஸ்ஃபுல் (சாறு நிறைந்தவர்). எப்படி எஸன்ஸை (சாற்றை) ஒருவேளை தூரமாக வைத்திருந்தாலும் தன்னுடைய பிரபாவத்தை ஏற்படுத்தும் அதாவது மணத்தை பரப்பும். அப்படி அந்த மாதிரி தெய்வீக குணங்களின் மலர்களின் சாறு நிறைந்த எஸன்ஸ்ஃபுல் ஆக இருக்கிறீர்களா? இந்தப் பாடங்களின் டைட்டிலை தாரணை செய்வதற்கான தகுதியானவராக ஆகியிருக்கிறோமா என்று தன்னில் சோதனை செய்யுங்கள். ஒருவேளை சோதனை செய்யத் தெரியாது என்றால் எந்த டைட்டில் துண்டிக்கப்பட்டு விடும்? சோதனை செய்ய விரும்புகிறோம் என்று அனேகர் கூறுகிறார்கள் ஆனால் தள்ளிவிட்டால் தான் வண்டி ஓடுகிறது. தன்னுடைய இயற்கையான சம்ஸ்காரம் எப்பொழுதும் இருப்பதில்லை. இதில் எதன் குறை என்று கூறலாம்? இதைச் செய்ய வேண்டும் என்ற ஞானம் இருக்கிறது. மூன்று காலத்தை தெரியும் நிலையின் ஞானமும் கிடைத்து விட்டது இல்லையா? அப்படியானால் நீங்கள் ஞானம் நிறைந்தவரா? ஒருவேளை இப்பொழுது ஏதாவது பலஹீனத்தின் வசமாகி விடுகிறீர்கள், அந்த பலஹீனத்தைத் தெரிந்தும் இருக்கிறீர்கள், அதை

வர்ணனையும் செய்கிறீர்கள். மேலும் அதை அகற்றுவதற்கான ஞானத் துளிகளையும் (பாயின்ட்டுகளையும்) வர்ணனை செய்கிறீர்கள் ஆனால் வர்ணனை செய்த போதிலும் என்ன விரும்புகிறீர்களோ அதைச் செய்ய முடிவதில்லை. ஞானமோ புத்தியில் முழுமையாக இருக்கத்தான் செய்கிறது ஆனால் எவ்வளவு ஞானம் நிறைந்த நிலையோ கூடவே அந்தளவு பவர்ஃபுல் ஆகவும் இருக்கிறீர்களா? இந்த சமநிலை சரியில்லாத காரணத்தினால் தெரிந்திருந்தும் செய்ய முடிவதில்லை. அப்படி யார் சோதனை செய்ய முடிவதில்லையோ அவர் தனக்கும் பிளிஸ் (ஆனந்தம்) கொடுக்க முடியாது, தந்தையிடமிருந்தும் பிளிஸ் பெற முடியாது. மேலும் மற்ற ஆத்மாக்களுக்கும் கொடுக்கவும் முடியாது. எனவே அந்த ஆத்மாக்களுக்கு சமநிலையில் இருக்கக்கூடிய பிளிஸ்ஃபுல் (ஆனந்தம் நிறைந்தவர்) என்ற டைட்டில் துண்டிக்கப்பட்டு விடுகிறது. சோதனை செய்வதற்கான இயற்கையான சம்ஸ்காரம் உருவாவதில்லை. எனவே சோதனை ஆவதில்லை. மேலும் மாற்றமும் ஏற்படுவதில்லை. யார் செக்கர் (சோதனையாளர்) ஆக முடிவதில்லையோ அவர் மேக்கராகவும் (உருவாக்குபவராகவும்) ஆக முடிவதில்லை. அவர் தன்னுடைய, மற்ற ஆத்மாக்களின், மற்றும் உலகின் மேக்கர் ஆக முடிவதில்லை. 'புது உலகைப் படைப்பவர் மற்றும் புது வாழ்க்கையை உருவாக்குபவர்' என்ற இந்த மகிமையின் அதிகாரியாக ஆக முடியாது. எனவே இப்பொழுது செக்கராக ஆகுங்கள். எப்படி அமிர்தவேளையில் ஆன்மீக உரையாடலில் முக்கியமான விஷயத்தை அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து, உறுதியான எண்ணத்தின் ஆதாரத்தில், தன்னை மற்றும் பிற உடன் இருப்பவர்களை வெற்றி அடைபவராக ஆக்கினீர்கள்! இதே போன்று இந்த விஷயத்தையும் முக்கியம் என்று நினைத்து ஒவ்வொருவரின் சகயோகி ஆகி வெற்றி மூர்த்தி ஆகுங்கள். அப்பொழுது தான் அனைத்துக் காரியமும் முழுமையடையும்.

தற்சமயம் பெரும்பான்மையோரிடம் விசேஷமாக இரண்டு பலஹீனங்கள் தென்படுகின்றன. அதை அகற்றுவதற்கும், அந்த இரண்டு பலஹீனங்கள் மேல் வெற்றி அடைபவராக ஆவதற்கும் முதலில் எப்பொழுது இந்த விஷயத்தில் வெற்றி அடைவீர்களோ அப்பொழுது தான் ஆக முடியும். அந்த இரண்டு பலஹீனங்கள் அலட்சியம் மற்றும் சோம்பேறித்தனம். இதை அகற்றுவதற்கான வழி சோதனையாளர்

ஆவதாகும். 99 சதவிகித முயற்சி செய்பவர்களிடம் இந்த சோம்பல் மற்றும் அலட்சியத்தன்மை ஏதாவது ரூபத்தில் எங்காவது அம்ச ரூபத்தில் இருக்கத்தான் செய்கிறது. மேலும் சிலரிடம் வம்ச ரூபத்திலும் இருக்கிறது. மகாரதிகளில் அம்ச ரூபம் எது மற்றும் குதிரைப்படையினரிடம் அம்ச ரூபம் எதுவாக இருக்கிறது என்று அதைத் தெரிந்திருக்கிறீர்களா? இது என்னுடைய சுபாவம் மற்றும் என்னுடைய சம்ஸ்காரம் என்பது அம்ச ரூபம் ஆகும். என்னுடைய நோக்கம் இல்லை, ஆனால் வார்த்தை, பார்வை, நடத்தை அப்படி தென்படுகிறது ஆனால் நான் அந்த மாதிரியானவன் இல்லை, இது அம்ச மாத்திரம் ஆகும். சம்பூர்ண வெற்றியாளர் ஆவதில் அலட்சியம் மற்றும் ராயல் ரூபத்தின் சோம்பேறித்தனம் தடையாக இருக்கிறது. குதிரைப்படையினர் மற்றும் இரண்டாம் நிலையில் தேர்ச்சி பெறும் ஆத்மாக்களில் வம்ச ரூபத்தில் எந்த ரூபம் இருக்கிறது? அதனுடைய ரூபம் என்ன? அவர்களுடைய வார்த்தைகளில் எந்த விஷயம் அவர்களுடைய டிரேட்மார்க்காக இருக்கிறது. அலட்சியமானவர்கள் மற்றும் சோம்பேறிகளின் அந்த வார்த்தை எது? அவர்கள் எப்பொழுதும் தன்னை பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்காக விஷயம் சொல்வதில் மற்றும் விஷயத்தை உருவாக்குவதில் மிகவும் கைதேர்ந்தவர்களாக இருப்பார்கள். தன்னை குறையற்றவராகவும் மற்றும் மற்றவர்கள் மேல் பழி சுமத்துவதில் மிகவும் சாதுர்யமானவர்களாக இருப்பார்கள். வக்கீலாக இருப்பார்கள்.ஆனால் சட்டப்படி நடப்பவர்களாக இருக்க மாட்டார்கள். அந்த மாதிரி டிரேட் மார்க் வார்த்தையாக எப்பொழுதுமே நான் இதைச் செய்தேனா? என்பது தான் வெளியாகும். நான் இந்த வார்த்தையைக் கூறினேனா? என்னுடைய மனதிலோ எதுவுமே இல்லை, வார்த்தைகளில் வந்து விட்டது என்றால் அதனால் (பிறகு) என்ன ஆகி விட்டது? அப்படி நடந்து விட்டது என்றாலும் சரி செய்து விடுவேன். அதனால் (பிறகு) என்ன, (பிறகு) என்ன என்ற டிரேட் மார்க் வார்த்தைகள் இருக்கும். எப்படி சிருஷ்டி சக்கரத்தைப் புரிய வைப்பதில் அதற்குப் பிறகு என்ன, அதற்குப் பிறகு என்ன என்று கூறி முழுக் கதையையும் கூறி விடுகிறீர்கள் இல்லையா?. சத்யுகத்திற்குப் பிறகு என்ன ஆனது? திரேதா வந்தது. பிறகு என்ன ஆனது. துவாபர் வந்தது.... பிறகு என்ன என்ற வார்த்தையில் முழுச் சக்கரத்தின் கதையைக் கூறுகிறீர்கள். அப்படியே அந்த வக்கீல் ஆத்மாக்கள் பிறகு என்ன என்ற வார்த்தையின் ஆதாரத்தில் மற்றவர்களின் மேல் முழு விஷயத்தையும்

சுற்றவிட்டு விடுவார்கள், தன்னை சாட்சியானவராக மற்றும் விலகியிருப்பவராக ஆக்கி விடுவார்கள் மற்றும் விடுவித்துக் கொள்வார்கள். பிறகு என்ன என்ற வார்த்தையினால் அதாவது இந்த ஒரு எண்ணத்தினால் அலட்சியம் மற்றும் ராயல் சோம்பேறித்தனத்தின் வம்சம் உள்ளுக்குள்ளேயே அதிகரித்துக் கொண்டிருக்கிறது. மேலும் அந்த மாதிரியான ஆத்மாவை பவர்ஃபுல் ஆக ஆக்குவதற்குப் பதிலாக பலமற்றவராக ஆக்கிக் கொண்டே இருக்கிறது. இது தான் இரண்டாம் நிலையில் உள்ள அதாவது குதிரைப்படையின் ஆத்மாக்களின் உள்ளே இருக்கும் அலட்சியம் மற்றும் சோம்பலின் வம்ச ரூபம் ஆகும். இந்த அம்சம் மற்றும் வம்சத்தை அழிப்பதற்காக சோதனையாளர் ஆவது மிக அவசியம் ஆகும். 8-நாட்களில் ஒரு நாள் சோதனையாளராக ஆகிறீர்கள், 7-நாள் அலட்சியமானவராக இருக்கிறீர்கள் என்றால் 7-நாளின் சம்ஸ்காரம் உருவாகுமா அல்லது 1-நாளின் சம்ஸ்காரம் உருவாகுமா? எனவே அலர்ட் (எச்சரிக்கையுடையவராக) ஆவதற்குப் பதிலாக ஈஸி (கவனமின்மை) மற்றும் லேஸி (சோம்பேறி) ஆகிறீர்கள். அந்த மாதிரியானவரின் ரிசல்ட் என்னவாக இருக்கும். அந்த மாதிரியானவர் உலகிற்கு நன்மை செய்பவராக அனைத்து சக்திகளின் மகாதானி, வரதானியாக ஆக முடியுமா? எனவே இப்பொழுது இந்த இரண்டு விஷயங்களை அம்ச ரூபத்தில் மற்றும் வம்ச ரூபத்தில் எந்த ரூபத்திலிருந்தாலும் அதை இப்பொழுதிலிருந்தே அழிப்பீர்கள் என்றால் தான் வெகுகாலமாக வெற்றி அடைபவரின் சம்ஸ்காரத்தின் அனுசாரம் வெற்றி மாலையின் மணி ஆக முடியும். நல்லது.

அந்த மாதிரி கேட்கும் மற்றும் சொரூபமாகக்கூடியவர்களுக்கு எண்ணத்தை ஒரு நொடியில் நடைமுறையில் கொண்டுவரக்கூடியவர்களுக்கு, லைட் ஹவுஸ் மற்றும் மைட் ஹவுஸாகி அனைத்து ஆத்மாக்களையும் சர்வ சக்திகளினால் திருப்திப்படுத்தக்கூடிய, திருப்தி மணிகள் நெற்றியின் மணிகள், எப்பொழுதும் தன் மேல் மற்றும் ஒவ்வொரு எண்ணத்தின் மேல் சோதனையாளர் ஆகக்கூடிய புது உலகின் படைப்பவர் மற்றும் உலக நன்மை செய்யும் ஆத்மாக்களுக்கு பரமாத்மா மற்றும் மிக உயர்ந்த ஆத்மா பாப்தாதாவின் அன்பு நினைவுகள். இரவு வணக்கம் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: பயிற்சி மூலமாக மனம், புத்தியை அனுபவங்களின் ஆசனத்தில் அமர்ந்திருக்கச் செய்யக்கூடிய தடையற்றவர் ஆகுக!

ஒருமுகப்படுத்தும் சக்தி சுலபமாகவே தடையற்றவராக ஆக்கி விடுகிறது. இதற்காக மனம் மற்றும் புத்தியை ஏதாவது அனுபவத்தின் ஆசனத்தில் நிலைத்திருக்கச் செய்து விடுங்கள். ஒருமுகப்படுத்தும் சக்தி தானாகவே ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற இந்த அனுபவத்தைச் செய்விக்கிறது. மேலும் இதனால் சுலபமாகவே ஒரே சீரான நிலை உருவாகி விடுகிறது. அனைவருக்காகவும் நன்மை பயக்கும் உள்உணர்வு இருக்கிறது, ஒருமுகப்படுத்தும் பயிற்சி மூலம் சகோதரன் சகோதரன் என்ற பார்வை இருக்கிறது. அவரை ஒருபொழுதும் ஏதாவது பலஹீனமான சம்ஸ்காரம், ஏதாவது ஆத்மா, இயற்கை, அல்லது எந்த விதமான ராயல் மாயாவும் நிலைகுலையச் செய்ய முடியாது.

சுலோகன்: ஒரு நொடியில் விஸ்தாரத்தை சாரத்தில் உள்ளடக்கும் பயிற்சி தான் கடைசிச் சான்றிதழை பெறச் செய்யும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

# 21.06.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மகான் (உயர்ந்த) பதவியின் புக்கிங் (முன்பதிவு) செய்வதற்காக நுண்ணிய ரூபத்தில் செக்கிங் (சோதனை) அவசியமாகும்!

இன்று அனைத்து அதிர்ஷ்டம் நிறைந்த விசேஷ ஆத்மாக்களின் விசேஷத்தை பார்த்துக் கொண்டிருக்கிறோம். சிலர் தன்னுடைய விசேஷத்தையும் சரியான முறையில் தெரிந்திருக்கவில்லை, சிலர் தெரிந்திருக்கிறார்கள் ஆனால் அவர்கள் தன்னுடைய விசேஷத்தை ஈடுபடுத்த முடியாது. மேலும் சிலர் தெரிந்திருந்தும் அந்த விசேஷத்தில் எப்பொழுதும் நிலைத்திருக்க முடியாது. அவர்கள் சில நேரம் விசேஷ ஆத்மா ஆகி விடுகிறார்கள் அல்லது சில நேரம் சாதாரண ஆத்மா ஆகி விடுகிறார்கள். கோடியில் சிலர் என்றால் முழு பிராமண பரிவாரத்திலிருந்து மிகக் குறைந்த ஆத்மாக்கள் தன்னுடைய விசேஷத்தை தெரிந்தும் இருக்கிறார்கள், அந்த விசேஷத்தில் நிலைத்தும் இருக்கிறார்கள் மேலும் காரியத்திலும் அது வருகிறது அதாவது தன்னுடைய விசேஷத்தினால் ஈஸ்வரிய காரியத்தில் எப்பொழுதும் சகயோகி ஆகிறார்கள். அந்த மாதிரி சகயோகி ஆத்மாக்கள் பாப்தாதாவின் மிக அன்பிற்குரியவர்கள். அந்த மாதிரியான ஆத்மாக்கள் எப்பொழுதும் சரள யோகியாக, சகஜயோகியாக மற்றும் இயல்பான யோகியாக இருக்கிறார்கள். அவருடைய சொரூபத்தில் எப்பொழுதும் சர்வ சக்திவானின் நெருங்கிய குழந்தையின் போதை மற்றும் குஷி தெளிவாகத் தென்படும் அதாவது எப்பொழுதும் அனைத்து பிராப்திகள் நிரம்பிய லட்சணம் அவருடைய நெற்றியிலிருந்து, கண்களிலிருந்து மற்றும் ஒவ்வொரு காரியத்தில் அனுபவம் ஆகும். அவருடைய புத்தி எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக வேண்டும் என்ற ஒரே நினைவு இருக்கிறது. அந்த மாதிரி ஆத்மாக்களின் ஒவ்வொரு அடி

பாப்தாதாவின் அடி மேல் அடி வைத்து தானாகவே சென்று கொண்டிருக்கிறது.

அந்த மாதிரி ஆத்மாக்களில் முக்கியமாக மூன்று விஷயங்கள் தென்படும். அவை யாவை? மூன்று உறவுகளையும் வைத்து நடக்கக்கூடிய திரிமூர்த்தி அன்பிற்குரிய ஆத்மாக்கள் மூன்று விஷயங்களினால் நிரம்பியிருப்பார்கள். தந்தையின் சம்மந்தத்தினால் அவர்களிடம் என்ன விசேஷம் இருக்கும்? சொற்படி நடப்பவர். ஆசிரியர் ரூபத்தில் என்ன இருக்கும்? படிப்பில் நேர்மையானவர் மற்றும் உண்மையானவராக இருப்பார். சத்குருவின் சம்மந்தத்தில் கட்டளைப்படி நடப்பவராக இருப்பார். அப்படி இந்த மூன்று விசேஷங்களும் அந்த மாதிரி திரிமூர்த்தி அன்பிற்குரிய ஆத்மாக்களில் தெளிவாகத் தென்படும். இந்த மூன்றில் என்னில் எத்தனை சதவிகிதம் இருக்கிறது என்று தன்னைப் பாருங்கள். முழு நாள் நடவடிக்கையில் மூன்று உறவுகளின் விசேஷங்களும் தென்படுகிறதா? இதன் மூலமாகத் தான் தன்னுடைய ரிசல்ட்டைத் தெரிந்து கொள்ள முடியும். சிலரோ தந்தையின் அன்பிற்குரியவர் அல்லது விசேஷ ஆசிரியரின் அன்பிற்குரியவர் அல்லது சத்குருவின் அன்பிற்குரியவராக ஆகி நடந்து கொண்டும் இருக்கிறர்கள் ஆனால் திரிமூர்த்தியின் அன்பிற்குரியவராக ஆக வேண்டும். தேர்ச்சி பெறுவதற்கும் மூன்றின் சதவிகிதமும் வேண்டும். ஒரு விஷயத்தில் கௌரவமாகத் தேர்ச்சி பெறுபவராக ஆகி விட்டு மற்ற இரண்டு விஷயங்களில் மதிப்பெண் குறைந்து விட்டது என்றால் ரிசல்ட்டில் தந்தையின் நெருக்கத்தில் வரக்கூடிய ஆத்மாக்களில் வர முடியாது. எனவே மூன்றிலேயுமே தன்னுடைய சதவிகிதத்தை சரி செய்யுங்கள்.

எப்பொழுது நீங்கள் மாஸ்டர் அனைத்து அதிகாரம் நிறைந்தவராக இருக்கிறீர்கள் என்றால் வீணான எண்ணங்களை அகற்றுவதிலும் சக்திவானாக ஆகுங்கள். எப்பொழுது சர்வ சக்திவானின் குழந்தை என்று கூறுகிறீர்கள் என்றால் நீங்கள் உங்களுடைய சம்ஸ்காரம், சுபாவம், எண்ணங்களின் மேல் வெற்றி அடைவதின் சக்தியுள்ளவராக ஆக முடியாதா? அதிகாரமுள்ளவர் யாருக்குள் அனைத்தின் மேலும் எப்பொழுது சட்டம் ஒழுங்கு இருக்கிறதோ அப்பொழுது தான் உலகில் சட்டம் ஒழுங்கு நிறைந்த இராஜ்யத்தை நடத்துவிக்க முடியும்.

## 1974 அவ்யக்த முரளி

உலகிற்கு முன்பு தன்னை சட்டம் ஒழுங்கில் நடத்துவிக்க முடியுமா? ஒருவேளை இப்பொழுதிலிருந்தே சட்டம் மற்றும் ஒழுங்கில் செல்வதற்கான சம்ஸ்காரம் தென்படவில்லை என்றால் எதிர்காலத்தில் உலகின் மேலும் இராஜ்யம் செய்ய முடியாது. நடப்பவர்கள் தான் நடத்துவிப்பவர்களாக ஆகிறார்கள். நடப்பதில் பலஹீனமானவராக இருந்து மற்றும் நடத்துவிக்க வேண்டும் என்ற நம்பிக்கை வைக்கிறார் என்றால் இதுவோ தன்னையே குஷிப்படுத்துவதாகும். "என்னுடைய எண்ணம், என்னுடைய சட்டம் ஒழுங்கிற்கு உட்பட்டு இருக்கிறதா? " என்று முதலில் தன்னைத் தானே கேளுங்கள். என்னுடைய சுபாவம் சட்டம் ஒழுங்கிற்கு உட்பட்டு இருக்கிறதா? ஒருவேளை சட்டப்படி இல்லையென்றால் மாஸ்டர் அனைத்து அதிகாரங்களும் நிறைந்தவர் என்று கூறுவதற்கு அதிகாரியாக ஆக முடியுமா? அனைத்து அதிகாரமுள்ளவர் ஒருபொழுதும் யாருடைய வசமானவராக ஆக முடியாது. அப்படி ஆகியிருக்கிறீர்களா?

இப்பொழுது முயற்சி செய்பவர்களுக்கு சுய சோதனைக்கான நேரம் நடந்து கொண்டிருக்கிறது. சோதனைக்கான நேரத்தில் சோதனை செய்யவில்லை என்றால் தன்னுடைய அதிர்ஷ்டத்தை மாற்றம் செய்ய முடியாது. யார் எவ்வளவு நுணுக்கமான ரூபத்தில் சுயத்தின் சோதனை செய்கிறார்களோ அந்த அளவே எதிர்காலத்தில் மஹான் பதவியின் பிராப்தியின் புக்கிங் ஆகிறது. அப்படி சோதனை செய்வது என்றால் புக்கிங் செய்வது. அப்படி செய்கிறீர்களா? அல்லது எப்பொழுது புக்கிங் முடிவடைந்து விடுமோ அதன் பின்பு செய்வீர்களா? அனைத்தையும் விட உயர்ந்த புக்கிங் எது? அஷ்ட ரத்தினங்களின் இருக்கை எவை? ஏர்கன்டிஷன் இருக்கையை வாங்கியிருக்கிறீர்களா? ஏர்கன்டிஷனுக்காக அதிக கன்டிஷன்கள் (நிபந்தனைகள்) இருக்கின்றன. எப்படி ஏர்கன்டிஷனில் எப்பொழுது எப்படி விரும்பு கிறீர்களோ அப்படி (கூடுதலாகவோ, குறைவாகவோ) ஏர்கன்டிஷன் செய்ய முடியும். அதே போலவே தன்னை எங்கு விரும்புகிறீர்களோ எப்படி விரும்புகிறீர்களோ அப்படி செட் செய்ய முடிய வேண்டும். அப்பொழுது தான் ஏர்கன்டிஷன் இருக்கையை வாங்க முடியும். இதற்காக அனைத்து பொக்கிஷங்களும் சேமிப்பாகி இருக்கிறதா? அனைத்து பொக்கிஷங்களும் யாவை? பொக்கிஷங்களைப் பற்றி கூறுவதிலோ அனைவருமே திறமை நிறைந்தவர்கள். எப்படி கூறுவதில் திறமை நிறைந்தவர்களாக

இருக்கிறீர்களோ அதே போலவே சேமிப்பதிலும் திறமை நிறைந்தவராக ஆகி விடுங்கள். அனைத்து பொக்கிஷங்களின் சேமிப்பு தேவையாக இருக்கிறது. ஒருவேளை ஒன்று குறைவாக இருக்கிறது என்றால் ஏர்கன்டிஷன் இருக்கை கிடைக்காது. இப்பொழுது தன்னுடைய புக்கிங்கை பாருங்கள். இப்பொழுதோ உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது ஆனால் எப்பொழுது வாய்ப்பு முடிவடைந்து விடும் என்றால் பின்பு என்ன செய்வீர்கள். எனவே இப்பொழுது ஒவ்வொரு நேரம், ஒவ்வொரு விஷயத்தில், ஒவ்வொரு பாடத்தில் மற்றும் ஒவ்வொரு சம்மந்தத்தின் விசேஷத்தில் சுயத்தை சோதனை செய்ய வேண்டும். புரிந்ததா.

அந்த மாதிரி திரிமூர்த்தி அன்பிற்குரிய, தன்னுடைய மற்றும் உலகின் ஞானத்தின் திரிகாலதரிசி, மூன்றாவது கண் மூலமாக சுயத்தை சூட்சும செக்கிங் செய்யக்கூடிய பாப்தாதாவின் எப்பொழுதும் அருகில் இருக்கக்கூடிய, அன்பிற்குரிய மற்றும் எப்பொழுதும் சகயோகியாகி இருக்கக்கூடிய சட்டம் மற்றும் ஒழுங்குப்படி எப்பொழுதும் நடந்து கொள்ளக்கூடிய விசேஷ ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள், இரவு வணக்கம் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: லைட் (ஒளி/லேசான நிலை) சொரூபத்தின் நினைவு மூலமாக வீணானவற்றின் சுமையிலிருந்து லேசாக இருக்கக்கூடிய தீவிரமாக முயற்சி செய்பவர் ஆகுக!

யார் தன்னுடைய இயற்கையான லைட் சொரூபத்தின் நினைவில் இருக்கிறார்களோ அவர்களில் வீணானவற்றை சக்திசாலியாக மாற்றம் செய்யும் சக்தி இருக்கிறது. அவர்கள் வீணான நேரம் வீணான தொடர்பு, வீணான சூழலை சுலபமாக மாற்றம் செய்யும் டபுள் லைட் ரூபத்தில் இருக்கிறார்கள். கூடவே பிராமண பரிவாரத்தின் சம்மந்தத்தில், சேவையின் சம்மந்தத்திலும் லேசாக இருக்கிறார்கள். அவர்களுடைய உறவு எந்த பழைய சம்ஸ்காரம், பழைய உலகினோடு இருப்பதில்லை. ஒரு மனிதர் மற்றும் எதன் பக்கத்திலும் அவருக்கு கவர்ச்சி இருக்க முடியாது. அந்த மாதிரி தீவிர முயற்சி செய்யும் குழந்தைகள் சுலபமாகவே ஃபரிஷ்தா நிலையின் ஸ்திதியை பிராப்தி செய்து விடுகிறார்கள்.

சுலோகன்: கவலையற்ற மகாராஜா ஆக வேண்டும் என்றால் உடல், மனம், பொருளை பிரபுவிடம் சமர்ப்பணம் செய்து விடுங்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

## 24.06.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இராஜயோகி தான் உலக இராஜ்யத்தின் அதிகாரி ஆவார்!

நீங்கள் அனைவரும் உங்களை யோகி என்று நினைக்கிறீர்களா? யோகி என்ற பட்டம் உங்கள் அனைவருக்கும் கிடைத்து விட்டதா? யோகியாக இருந்த போதிலும் நீங்கள் அனைவரும் ஒரே மாதிரியான யோகியாக இல்லை, மாறாக வரிசைக் கிரமமானவர்களாக இருக்கிறீர்கள். எப்படி ஏதாவது ஒரு படிப்பைப் படித்த பிறகு பரீட்சையில் தேர்ச்சி பெற்றதற்கான சான்றிதழ் கிடைக்கிறது, மேலும் பட்டத்தின் சான்றிதழும் கிடைக்கிறது என்றால் பொதுவாக அவரைப் பற்றிச் சொல்லும்பொழுது கூட அதே பெயரால் தான் அதாவது வக்கீல் அல்லது டாக்டர் என்று தான் சொல்ல வருகிறது. அதே போல் இங்கேயும் கூட எப்பொழுது ஞானம் நிறைந்த தந்தையின் மூலமாக யோகி மற்றும் போகி (கலியுக உலக வாழ்க்கை ) வாழ்க்கையின் ஞானம் கிடைத்திருக்கிறது என்றால் போகியாக இருந்த பிறகு உடலில் இருந்து கொண்டே இறந்து மறுபிறவியில் வாழ்பவராக ஆனீர்கள் என்றால் இங்கேயும் பிரம்மா குமார், பிரம்மா குமாரி என்ற பட்டம் உடலில் இருந்து கொண்டே இறந்து மறுபிறவி எடுத்த பிறகு இயற்கையாகவே கிடைத்து விடுகிறது. மேலும் அதே போலவே யோகியினுடைய பட்டமும் கிடைத்து விடுகிறது ஆனால் வரிசைக்கிரமமாகக் கிடைக்கிறது. மற்றபடி இதில் கூட என்ன வித்தியாசம் இருக்கிறது? எப்படி யோகாவின் மகிமையாக சகஜயோகா, நிரந்தர யோகா, கர்ம யோகா மற்றும் ஞான யோகா, புத்தி யோகா என்று கூறுகிறீர்கள். பின்பு இதனோடு மற்றதை ஒப்பிட்டுப் பார்க்கிறீர்கள் இல்லையா? எப்படி டாக்டர்களிலும், இராணுவத்திலும் விதவிதமான கிரேடுகள் (தகுதி நிலையம்} இருக்கின்றன. அதே போலவே இங்கேயும் யோகிகள் கர்ம யோகி மற்றும் புத்தி யோகிகளும் இருக்கிறார்கள். இங்கேயும் சிலரோ அனைத்து இலட்சணங்களும் உடையவர்களாக இருக்கிறார்கள் வேறு சிலர் அனைத்து இலட்சணங்களும் இல்லாது ஒன்று அல்லது இரண்டு

மட்டும் உடையவர்களாக இருக்கிறார்கள். எப்படி சிலருக்கு புத்தியின் யோகா இருக்கிறது, ஆனால் அவருக்கு கர்மயோகா இல்லை, வேறு யாருக்காவது கர்ம யோகா இருக்கிறது என்றால், அவர் சகஜயோகியாக இல்லை. அல்லது யார் ஞானத்தில் எப்பொழுதுமே இருப்பதில்லையோ அவரை ஞானி, யோகி என்று சொல்ல முடியாது. இங்கேயும் கூட ஒரே மாதிரி பட்டம் அனைவருக்கும் கிடைக்கிறது என்றால், நீங்கள் யோகாவின் மகிமையாக மற்றவர்களுக்குக் கூறுகிறீர்கள் இல்லையா அதை தன்னுள் தாரணை செய்யுங்கள். எப்படி இராஜயோகா என்பதாவது யார் கர்மேந்திரியங்கள் மேல் வெற்றியடைந்து அதன் மேல் இராஜ்யம் செய்பவரோ அவர் எதிர்காலத்திலும் உயர்ந்த பதவியை அடைகிறார். இராஜயோகிக்கு சக்திசாலியான யோகா இருக்கிறது என்றால் தான் அவரை இராஜயோகி என்று கூறுவோம். இல்லை என்றால் அவரை யோகி என்று மட்டும் தான் கூறுவோம் ஆனால் இராஜயோகி என்று கூறமாட்டோம். அப்படியானால் நான் அனைத்து பட்டங்களையும் தாரணை செய்யக்கூடிய யோகியாக ஆகியிருக்கிறேனா? என்று சோதனை செய்யுங்கள். அல்லது சிலருக்கு 8-10 பட்டங்களும், வேறு சிலருக்கு ஓரிரண்டு பட்டம் என்று அப்படித்தான் இருக்கிறதா?

எப்படி டாக்டர், வக்கீல் மற்றும் இன்ஜீனியர்கள் இருக்கிறார்கள்... இராணுவத்தில் இவர்கள் அனைவரும் இருப்பார்கள், அங்கே கர்னலும் இருப்பார் ஆனால் அவர்களுடைய பதவியின் வரிசைக்கிரமத்தின் பட்டியல் வேறு வேறாக இருக்கும். எப்படி வாரனாசியிலும் பல்கலைகழகம் மூலமாக பட்டம் கிடைக்கிறது. சிலருக்கு ஓரிரண்டு அல்லது 6 மற்றும் வேறு சிலருக்கு 8-10 என்றால், அதே போலவே இங்கேயும் பட்டத்தைப் பெறுகிறார்கள். நான் யோகி என்பதில் மட்டும் குஷியடைந்து விடாதீர்கள். யோகாவின் மகிமையாக என்ன வர்ணிக்கப்பட்டிருக்கிறதோ இவை அனைத்தையும் ஒருவேளை வாழ்க்கையில் தாரணை செய்திருக்கிறீர்கள் என்றால், அவர் எவ்வளவு இங்கு மகிமைக்குரியவராக ஆகிறாரோ அந்தளவே அங்கே பூஜைக்குத் தகுதியானவர் ஆவார். எப்படி லௌகீக பழக்கத்தில் கூட குழந்தை தந்தையின் பூஜை செய்வதில்லை ஆனால் தந்தையை பூஜைக்குரியவர் என்று கூறுவார் இல்லையா? இதே விதமாக சத்யுகத்தில் இருக்கும் பிரஜைகள் பூஜை செய்ய மாட்டார்கள் ஆனால் பூஜைக்குரியவர் என்று

கூறுவார் அதாவது மரியாதை கொடுப்பார். இப்பொழுது நீங்கள் தன்னில் எவ்வளவு பட்டங்களை தாரணை செய்திருக்கிறீர்கள் என்ற பட்டியலை எடுங்கள். பின்பு உங்களில் எதன் குறை இருக்கிறது என்று சோதனை செய்யுங்கள். எப்பொழுது அதில் தேர்ச்சி பெறுவார்களோ அப்பொழுது தான் பட்டம் கிடைக்கிறது. அப்படி உங்க கும் உங்களுடைய சகஜயோகியின் நிலை எப்பொ தென்படுகிறதோ மேலும் உங்களுடையது சகஜயோகம் என்று அனைவரும் உணருகிறார்களோ அப்பொழுது தான் தேர்ச்சி பெற்றவர் என்று கூறலாம். அது போலவே ஞானம் யோகத்தில் கூட ஞானத்தின் மகிமையாக என்ன இருக்கிறது அல்லது அதனுடைய ஒப்பிடுதலாக என்ன இருக்கிறது? அவை அனைத்தையும் நான் என்னில் தாரணை செய்திருக்கிறேனா? என்று சோதனை செய்தீர்கள் என்றால் பின்பு நீங்கள் தானாகவே தன்னுடைய (வரிசை) எண்ணை தெரிந்து கொள்ள முடியும். எப்படி இந்தப் படிப்பு சக்திசாலியானது என்று யாராவது கூறுகிறார் என்றால், இது ஞானத்தின் மகிமை தானே தவிர உங்களுடைய மகிமை இல்லை. எனவே ஞானத்தின் பெயராக என்னென்ன இருக்கிறதோ அவை அனைத்தையும் நான் தாரணை செய்திருக்கிறேனா என்று பாருங்கள்.

ஒருவேளை அனைத்து ஞான யோகத்தின் பட்டங்களை தாரணை செய்யவில்லை என்றால் உலக மகாராஜா மற்றும் உலக மகாராணி ஆக முடியாது. சரி, கௌரவமாக தேர்ச்சி பெறவில்லை, ஆனால் தேர்ச்சியாவது பெறத்தானே வேண்டும். பின்பு தேர்ச்சி பெறுவதற்காகவும் 75-சதவிகிதம் மதிப்பெண்கள் தேவையாக இருக்கிறது, அதாவது இந்த அனைத்து தாரணைகள் மற்றும் தகுதிகள் தன்னில் இருப்பதாக அனைவருக்கும் தென்பட வேண்டும் முழு நாளில் 24-மணி நேரம் இருக்கிறது. அதில் கூட 8-மணி நேரம் ஓய்விற்காக இருக்கட்டும், பின்பு மீதம் இருப்பது - 16-மணி நேரங்கள். இதில் 3/4 பங்கு 12-மணி நேரம் ஆனால் யாருக்கு அதிகமாக புத்தியால் செய்யும் வேலை / சேவை இருக்கிறதோ அவருக்கு மூன்று மணி நேரம் தள்ளுபடி செய்கிறோம். மேலும் தந்தையாக இருக்கும் காரணத்தினால் ஒரு மணி நேரம் அப்படியே விட்டு விடுகிறோம். அப்படி இந்த விதமாக 8-மணி நேரம் மீதம் இருக்கிறது. எனவே சகஜயோகி, இராஜயோகி என்ற என்னென்ன ஞானம் மற்றும் யோகாவின் பட்டங்கள் இருக்கின்றனவோ அவை உங்களில் 8-மணி நேரங்கள் முழுமையான வடிவத்தில்

இருக்கத் தான் வேண்டும். அதன் மூலம், ஆம் இந்த அனைத்து லட்சணங்களும் இவரிடம் இருக்கிறது, அதனால் தான் இந்த விஷயத்தில் 75-சதவிகிதம் மதிப்பெண்கள் கிடைக்க முடியும் என்ற இதையும் மற்ற ஆத்மாக்களும் உணரட்டும்.

யார் மகாரதியாக இருக்கிறாரோ அதாவது கௌரவமாகத் தேர்ச்சி பெறுபவராக (பாஸ்வித் ஹானர்) இருக்கிறாரோ அவருடைய தூக்கத்தின் நேரமும் யோகம் நிறைந்த நிலையில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். அவருடைய நிலை அந்த மாதிரியாக, தன்னுடைய அன்றைய நாளின் பங்கை முடித்து விட்டு சுயம் அவர் பரம்தாமத்தில் இருக்கிறார் என்பதாக இருக்கும். மேலும் (தூக்கத்தில்) அவருக்கு யோகாவின் உணர்வு மட்டும் தான் இருக்கும். எப்படி பிரம்மத்திலிருந்து பிராமணர் ஆனார் என்று வர்ணனை செய்யப்படுகிறது. இங்கோ பிராமணனிலிருந்து தேவதை ஆகிறார்கள் ஆனால் இந்த பிரம்மத்திலிருந்து பிராமணன் என்றால் இரவு நேரத்தில் நான் இப்பொழுது என்னுடைய பங்கை முடித்து விட்டு கர்மேந்திரியங்களிலிருந் விலகி என்னுடைய தொலைதூரத்தில் இருக்கும் பிரம்மத்திற்குச் செல்கிறேன் என்ற எண்ணம் தான் இருக்கும். மேலும் எப்பொழுது அமிர்தவேளையில் எழுந்திருப்பாரோ, அப்பொழுது. நான் என்னுடைய பங்கைச் செய்வதற்காக இந்த உடலை ஆதாரமாக எடுத்திருக்கிறேன் என்று அனுபவம் செய்வார். அதாவது பிரம்மத்தில் இருந்து பிராமணன் ஆகி வந்திருக்கிறேன் என்பதாகும். இங்கிருந்து சென்று நேராக தேவதை ஆவார்கள், ஆனால் இது இந்த நேரத்தின் அஷ்ட ரத்தினங்களின் மகிமை ஆகும். எப்படி சாகாரத்தில் தந்தை பிரம்மாபாபா மற்றும் தாய் சரஸ்வதியைப் பார்த்தீர்கள், அவர்களுக்கு முதல் மற்றும் இரண்டாம் நம்பர் எதன் ஆதாரத்தில் கிடைத்தது? அவர்களுடைய அதிகமான நேரத்தின் வருமானமோ தூக்கத்தினுடையது தான் சேமிப்பானது இல்லையா? அவர்கள் தூங்கவும் செய்தார்கள் ஆனால் தூக்கமில்லை, மாறாக நாங்கள் விழித்துக் கொண்டு தான் இருக்கிறோம் என்று அனுபவம் செய்தார்கள். மேலும் அவர்களுடைய களைப்பும் விலகி விட்டிருந்தது ஏனென்றால், எப்பொழுது ஆத்மா சம்பாதிப்பதில் விழிப்பாக இருக்கிறது என்றால், அவருக்கு களைப்பும் ஏற்படுவதில்லை. அதே போல் எப்படி தாய் தந்தை தூக்கத்தை யோகாவில் மாற்றினார்கள் என்றால் நீங்களும் முதல்

கிரேடில் இருக்கும் மகாரதிகளும் அதே போல் பின்பற்ற வேண்டும். இப்பொழுது தூக்கம் குறைந்து கொண்டே வருகிறது என்று அந்த மாதிரி அனுபவமோ செய்கிறீர்கள், ஆனால் அந்த மாதிரி நிலையை உருவாக்க வேண்டும். தூக்கத்தை யோகாவாக மாற்றம் செய்யுங்கள் மற்றும் தந்தையைப் பின்பற்றி நடப்பவர்களாக ஆகுங்கள். முழு நாளிலோ அவர்கள் உங்களைப் போலவே சாதாரணமாகத்தான் இருந்தார்கள் இல்லையா? இது தான் அஷ்ட ரத்தினங்களில் வருபவர்களின் முதல் அடையாளம் ஆகும். இரண்டாவது 100 ல் வருபவர்கள் மற்றும் மூன்றாவது 16,000 ல் வருபவர்கள் ஆனால் இங்கே அனைவருமே மகாரதிகள் தான் குதிரைப்படையினர் யாருமில்லை ஆனால் முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது நம்பர்களோ இருக்கின்றன.

இதே விதமாக, யாராவது கர்மேந்திரியங்களுக்குக் கட்டளை இட்டார் மற்றும் அவைகள் அதே போல் காரியங்களைச் செய்தன என்றால், அவர் கர்மயோகி ஆவார் ஆனால் யார் இரண்டாம் கிரேடைச் சேர்ந்தவராக இருப்பாரோ அவருக்கு இதில் சில நேரம் வெற்றி மற்றும் அனைத்து யோகியின் அனுபவம் சில சமயம் ஆகும். மேலும் சில சமயம் ஆகாது. மற்றபடி மூன்றாம் கிரேடைச் சேர்ந்தவரைப் பற்றியோ உங்களுக்கே தெரியும். அப்படி நீங்கள் முதல் கிரேடைச் சேர்ந்தவர்களாக ஆக வேண்டும் என்றால், முதலில் ஞானம், யோகத்தில் எத்தனை பட்டங்கள் இருக்கின்றன. மேலும் நீங்கள் அதிலிருந்து எத்தனை தாரணை செய்திருக்கிறீர்கள் என்ற பட்டியலை எடுங்கள். இந்த பாடத்தைப் படியுங்கள். பிரம்மா குமார் மற்றும் பிரம்மா குமாரி என்ற பட்டமோ அனைவருக்கும் கிடைத்து விட்டது, ஆனால் இதில் மட்டுமே குஷியடைய வேண்டாம் மாறாக அனைத்து பட்டங்களையும் முழுமையாக தாரணை செய்ய வேண்டும். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

## 26.06.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அனைத்து சித்திகளின் (வெற்றிகளின்) பிராப்தியின் ஆன்மீக போதையில் எப்பொழுதும் நிலைத்திருங்கள்!

இன்று ஞான சூரியன் தந்தை ஒவ்வொரு நட்சத்திரத்தின் நெற்றியில் அதிர்ஷ்ட ரேகையைப் பார்த்துக் கொண்டிருந்தார். உலகீய முறையில் கூட பக்தர்கள் மூலமாக கைகள் மூலம் என்ன ஜாதகம் பார்க்கப்படுகிறதோ, அதில் முக்கியமாக நான்கு விஷயங்களைப் பார்க்கிறார்கள். இங்கு கை மூலமாக இல்லை, ஆனால் நெற்றி மூலமாக முக்கியமாக நான்கு விஷயங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். 1) புத்தியின் லைன் எவ்வளவு தெளிவாக மற்றும் விசாலமாக இருக்கிறது என்பது ஒரு விஷயமாகும், 2) இரண்டாவது விஷயம், ஒவ்வொரு நேரமும் ஞானச் செல்வத்தை தாரணை செய்வதில் உடல் மூலமாக அனுபவிக்கும் கர்மத்தின் விளைவுகளிலிருந்து தடையற்றவராக மற்றும் மனம் மூலம் ஒரே சீரான ஆர்வத்தை வைத்திருப்பதில் இந்த மர்ஜீவா (உடலிலிருந்து கொண்டே இறந்து மறுபிறவி எடுத்த) ஜென்மத்தில் தொடக்கத்திலிருந்து இது வரை எவ்வளவு தடையற்றவராக நடந்து வந்து கொண்டிருக்கிறார்? 3) மூன்றாவது விஷயம் இந்த உயர்ந்த பிராமண ஜென்மத்தின் நினைவின் ஆயுள் நீளமாக இருக்கிறதா அல்லது சிறியதா? அடிக்கடி நினைவு என்றால் வாழ்வது, நினைவு மறந்த நிலை என்றால் இறக்கும் நிலைக்கு சென்றடைந்து விடுவது. இந்தக் கணக்குப்படி ஆயுள் சிறியது மற்றும் பெரியது என்று கணக்கு எடுக்கப்படுகிறது, 4) மர்ஜீவா ஜென்மம் எடுத்தவுடனேயே அன்பு, சம்மந்தம், நெருக்கம் மற்றும் அனைத்து சக்திகளில் எவ்வளவு அதிர்ஷ்டம் நிறைந்தவராக ஆகி விடுகிறார். அதிர்ஷ்டத்தின் ரேகை சதவிகித கணக்குப்படி துண்டுபடாமல் இருக்கிறதா மற்றும் கூடவே படிப்பிலும் வருமானத்தை சேமிப்பதில் எப்பொழுதும் வெற்றி

அடைபவராக, ரெகுலர் (இடைவிடாது) மற்றும் பங்க்சுவல் (சரியான நேரத்தில்) வருபவராக எவ்வளவு இருந்தார்? எத்தனை ஆத்மாக்களுக்காக மகாதானி, வரதானி, கல்யாணகாரியாக ஆகியிருக்கிறார். அதாவது தானம், புண்ணியத்தின் ரேகை நீளமாக இருக்கிறதா அல்லது சிறியதாக இருக்கிறதா? இந்த அனைத்து விஷயங்களின் அடிப்படையில் ஒவ்வொரு நட்சத்திரத்தின் தற்சமயம் மற்றும் எதிர்காலத்தை பார்த்துக் கொண்டிருந்தோம்.

நீங்கள் அனைவரும் தன்னுடைய நெற்றியின் ரேகைகளைத் தெரிந்தும் மற்றும் பார்க்கவும் முடியும் ஆனால் எப்படி? பாப்தாதாவின் இதய சிம்மாசனதாரியாகி, நினைவு என்ற திலகமிட்டவர் ஆகி, ஞானம் நிறைந்த மற்றும் சக்தி நிறைந்த நிலையில் நிலைத்திருந்து பார்த்தீர்கள் என்றால் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும். தன்னுடைய பதவியை விட்டு விட்டு மாயாவின் எதிர்ப்பின் நிலையில் நிலைத்திருந்து கொண்டு தன்னை மற்றும் பிற ஆத்மாக்களை எப்பொழுது பார்க்கிறீர்களோ அப்பொழுது தெளிவாகத் தென்படுவதில்லை. பொசிஷன் (பதவி) எது? உங்களுக்கு உங்களுடைய பொசிஷன் எது, அதில் தான் அனைத்து விஷயங்களும் வந்து விடுகிறது. மாஸ்டர் ஆல்மைட்டி அத்தாரிட்டி (அனைத்து சக்திகள் நிரம்பிய அதிகாரம் உள்ளவர்) எப்பொழுதும் இதே பதவியில் நிலைத்திருந்து கொண்டு ஒவ்வொரு காரியம் செய்து கொண்டே இருந்தீர்கள் என்றால், இந்த பொசிஷன் மாயாவின் ஒவ்வொரு தடையையும் தாண்டி தடையற்றவராக ஆக்கக்கூடியது. எப்படி உலகீய முறைப்படி ஏதாவது அதிகாரம் நிறைந்தவர் இருக்கிறார் என்றால், அவர் எதிரில் யாரும் மோதக்கூடிய தைரியம் வைப்பதில்லை. மேலும் ஒருவேளை யாராவது தன்னுடைய அதிகாரத்தை உபயோகிப்பதற்குப் பதிலாக ஒவ்வொரு நேரமும் தொய்வாக இருக்கிறார் என்றால் சாதாரண மனிதனும் எதிர்ப்பதற்காக மற்றும் தொந்தரவு செய்வதற்காக, தடை ஏற்படுத்துவதற்காக தயாராக இருக்கிறார்கள். அப்படி இதுவும் தன்னுடைய அதிகாரத்தை, பிராப்தியாகியிருக்கும் அனைத்து சக்திகளை, வரதானங்களை, உபயோகிப்பதற்குப் பதிலாக தொய்வாக இருக்கிறீர்கள். எனவே ஒவ்வொரு நேரமும் மாயாவை எதிர்கொள்வதற்கான தைரியம் இருக்கிறது. எண்ணத்தில், வார்த்தையில், காரியத்தில், சம்மந்தத்தில் மற்றும் செல்வத்தில் அனைத்திலும் தலையிடுவதற்கான தைரியம் வைக்கிறது. எந்த

விஷயத்தையும் விடுவதில்லை ஏனென்றால், தன்னுடைய பொசிஷனிலிருந்து (நிலையிலிருந்து) கீழே வந்து சாதாரணமாக ஆகி விடுகிறீர்கள்.

உலகிய முறைப்படி கூட ஒருவேளை ஏதாவது சாதாரண ஆத்மாக்கள் அற்பகாலத்தின் சித்தியை அடைந்து விடுகிறார்கள் என்றால், எவ்வளவு அதிகாரத்துடன் இருக்கிறார்கள். இங்கு அனைத்து சித்திகளும் பிராப்தி ஆகியிருந்தும் -1) எப்பொழுதும் நோயற்றவராக ஆவதின் சித்தி, 2) ஏதாவது இயற்கையின் தத்துவத்தை வசப்படுத்துவதின் சித்தி, 3) யாராவது துக்கமான, ஒன்றுமற்ற மற்றும் அமைதியில்லாத ஆத்மாவை அழியாத செல்வந்தன் ஆக்கும் மற்றும் எப்பொழுதும் சுகமானவராக்கும் சித்தி, 4) பலமற்றவரை மிகப் பெரிய பலம் பொருந்தியவர் ஆக்கும் சித்தி, 5) எண்ணங்களை ஒரு நொடியில் எங்கு மற்றும் எப்படி நிலைத்திருக்கச் செய்ய விரும்புகிறீர்களோ அப்படி நிலைத்திருக்கச் செய்யும் மற்றும் எண்ணத்தை தன் வசப்படுத்தும் சித்தி, 6) ஐந்து விகாரங்கள் என்ற மகாபூதங்களை வசப்படுத்தும் சித்தி, 7) கண்ணில்லாதவர்களை மூன்று கண்கள் உடையவராக்கும் சித்தி, 8) அனேக சூழ்நிலைகளின் பிரச்சனையில் நினைவிழந்திருக்கும் ஆத்மாக்களை சுயநிலை மூலமாக நினைவு பெறச் செய்யும் மற்றும் வாழ்க்கை தானம் (உயிர் பிச்சை) கொடுக்கும் சித்தி, 9) அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாவிற்கு நிரந்தரமான புகலிடம் கொடுக்கும் சித்தி, 10) பல ஜென்மங்களுக்காக ஆயுளை நீண்டதாக ஆக்கும் சித்தி, 11) அகால மரணத்திலிருந்து காப்பாற்றும் சித்தி, 12) இராஜ்ய பாக்கியம் மற்றும் ஆசனம், கிரீடம் பிராப்தி செய்வதின் சித்தி - அந்த மாதிரி அனைத்து சித்திகளை விதி மூலமாக பிராப்தி செய்யக்கூடிய ஆத்மாக்கள் எவ்வளவு போதையில் இருக்க வேண்டும்.

உங்களை நீங்களே ஏன் மறந்து விடுகிறீர்கள்? பெற வேண்டும் தந்தையின் ஆதரவை மற்றும் செய்து விடுகிறீர்கள் சர்வ சக்திவானிடமிருந்து விலகியிருக்கும் காரியத்தை. படகோட்டியிடமிருந்து விலகிச் சென்று மற்ற கரைகளை அதாவது லட்சியத்தை எப்பொழுது தேடுகிறீர்கள் என்றால் கிடைக்குமா அல்லது நேரம் வீணாகச் செல்லுமா? பாப்தாதாவிற்கு அந்த மாதிரி வெகுளியான மற்றும் மறந்திருக்கும் குழந்தைகள் மேல் இரக்கம் வருகிறது ஆனால்

இதுவும் எதுவரை? எதுவரை தந்தை மூலமாக இரக்கம் பெறுவதின் தேவை மற்றும் ஆசை இருக்கிறதோ அதுவரை மற்ற ஆத்மாக்களுக்காக இரக்கமனம் உடையவராக ஆக முடியாது, யார் அவரே பெறுபவராக இருக்கிறாரோ அவர் கொடுக்கக் கூடிய வள்ளலாக ஆக முடியாது. பிச்சைக்காரன் இன்னொரு பிச்சைக்காரனை நிரம்பியவராக ஆக்க முடியாது, ஆம், மற்றபடி அற்பகாலத்திற்காக சில சக்திகளின் ஆதாரத்தில் அவர்கள் மேல் கொஞ்ச நேரத்திற்காக பிரபாவத்தை ஏற்படுத்த முடியும் ஆனால் நிரந்தரமாக மற்றும் அனைத்திலும் நிரம்பியவராக ஆக்க முடியாது. நல்லது, நல்லது என்று சொல்லும் வரை அனுபவம் செய்விக்க முடியும், ஆனால் ஆசை என்றால் என்னவென்று அறியாத நிலை வரை கொண்டு வர முடியாது. நல்லது, நல்லது கூறுவதின் கூடவே அனைத்து பிராப்தியின் ஆசை முடிவடைவதில்லை, ஏனென்றால் அவரே தந்தை மூலமாக மற்றும் அனைத்து சகயோகி ஆத்மாக்கள் மூலமாக சகயோகம், அன்பு, தைரியம், உற்சாகம், ஊக்கத்தின் ஆசை வைக்கக்கூடியவர் மற்றும் வேறு ஏதாவது விதமான ஆதாரம் எடுப்பவர் அனைத்து ஆத்மாக்களுக்காக ஆதாரமூர்த்தியாக ஆக முடியாது. இயற்கையின் மற்றும் சூழ்நிலையின் மேலும் மனிதர்களின் மற்றும் சாதனங்களின் அடிமையாக இருக்கக்கூடிய ஆத்மா மற்ற ஆத்மாக்களையும் அனைத்து அதிகாரங்கள் நிறைந்தவராக ஆக்க முடியாது. எனவே தன்னுடைய அனைத்து சித்திகளைத் தெரிந்து அவற்றை உபயோகப்படுத்துங்கள் ஆனால் ஒரு கருவியாக ஆகி மட்டும் உபயோகம் செய்யுங்கள். நான், எனது என்பதை மறந்து ஸ்ரீமத்தின் ஆதாரத்தினால் ஒவ்வொரு சித்தியை உபயோகப்படுத்துங்கள். ஒருவேளை நான் என்பதில் வந்து ஏதாவது சித்தியை உபயோகித்தீர்கள் என்றால் என்ன பழமொழி இருக்கிறது? அதாவது உயர்ந்த பதவிக்குப் பதிலாக தண்டனை அடைபவராக ஆகி விடுகிறார். சாட்சி நிலை இல்லை என்றால் பின்பு தண்டனை இருக்கிறது. எனவே எப்பொழுதும் நினைவு சொரூபமானவராக மற்றும் சித்தி சொரூபமானவராக ஆகுங்கள். புரிந்ததா? நல்லது.

**வரதானம்: துணைவனின் துணை மூலமாக எப்பொழுதும் மனமகிழ்ச்சியை அனுபவம் செய்யக்கூடிய இணைந்த ரூபம் உடையவர் ஆகுக!**

எப்பொழுதெல்லாம் தனிமையின் அனுபவம் ஆகிறதோ என்றால் அந்த நேரம் புள்ளி ரூபத்தை நினைவு செய்யாதீர்கள். அது கடினமாக இருக்கும், அதன் மூலம் சோர்வடைந்து விடுவீர்கள். அந்த நேரம் தன்னுடைய சுவாரஸ்யமான அனுபவங்களின் கதைகளை நினைவில் கொண்டு வாருங்கள். தன்னுடைய சுயகௌரவத்தின், (சுய மரியாதை) பிராப்தியின் பட்டியலை எதிரில் கொண்டு வாருங்கள். புத்தியால் மட்டும் நினைவு செய்யாதீர்கள், ஆனால் உள்ளப்பூர்வமாக துணைவனுடன் சேர்ந்து இணைந்தவராகி அனைத்து உறவுகளின் அன்பின் இரசனையை அனுபவம் செய்யுங்கள் - இது தான் மன்மனாபவ ஆகும். மேலும் இந்த மன்மனாபவ ஆவது தான் மனமகிழ்ச்சி அடைவதாகும்.

சுலோகன்: தந்தையின் ஸ்ரீமத்படி சரி செய்கிறேன் என்று சொல்லிக் கொண்டே இருந்தீர்கள் என்றால் அனைத்து சக்திகளின் அதிகாரம் கிடைத்து விடும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 30.06.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## அவ்யக்த (வியக்த-பௌதீக நிலையிலிருந்து) நிலையில் நிலைத்திருப்பதினால் முயற்சி செய்வதின் வேகம் அதிகமாகிறது!

இன்று அனைத்து குழந்தைகளுக்கும் சூட்சும வதனத்தின் செய்தியைக் கூறுகிறோம். உங்கள் அனைவருக்குமே சூட்சும வதனத்தைச் சுற்றி வர வேண்டும் அதாவது ஒரு தடவை வதனத்தை அவசியம் பார்க்க வேண்டும் என்று ஆர்வம் இருக்கிறது இல்லையா? இந்த ஆசை மற்றும் எண்ணம் ஏன் ஏற்படுகிறது என்று தெரியுமா? ஏனென்றால் பாப்தாதா சூட்சும வதனவாசியாகி தனது பங்கைச் செய்கிறார். எனவே நாமும் ஒரு தடவை பாப்தாதாவுடன் இந்த அனுபவத்தைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் வருகிறது. எனவே பாப்தாதாவே தன்னுடைய அனுபவத்தைக் கூறி விடுகிறார். அனைத்தையும் விட முக்கியமாக அனுபவம் செய்வதற்கு மற்றும் கேட்பதற்குமான காட்சி எந்த நேரமாக இருக்கிறது என்பது தெரியும் இல்லையா? முக்கியமாக குழந்தைகளுக்காக அமிர்தவேளையின் நேரம் தான் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. பிறகு உலகின் மற்ற ஆத்மாக்களுக்காக, அவரவர்களின் சக்திக்கேற்றபடி பாவனைக்கான பலன் கொடுப்பதற்கு, ஏதாவது ரஜோபிரதான (உயர்ந்த காரியம் அற்பகாலத்திற்காக, ஏதோ ஆத்மாக்கள் மூலமாக நடந்து கொண்டே இருக்கிறது என்றால், அவர்களுக்கும் அவர்களுடைய கர்மத்தின் அனுசாரம் அற்பகாலத்திற்காக பலன் கொடுப்பதற்காக, கூடவே உண்மையான பக்தர்களின் அழைத்தலைக் கேட்பதற்கு மற்றும் பக்தர்களின் விதவிதமான பாவனையின் அனுசாரம் சாட்சாத்காரம் செய்விப்பதற்கு மற்றும் இதுவரையிலும் கூட நாலாபுறங்களிலும் இன்னும் மறைந்திருக்கும் சென்ற கல்பத்தின் பிராமண ஆத்மாக்களுக்கு

செய்தியை சென்றடையச் செய்வதற்காக குழந்தைகளைக் கருவியாக்கும் காரியத்திற்கு, பழைய உலகத்தின் அழிவைச் செய்விப்பதற்கு பொறுப்பாகியிருக்கும் விஞ்ஞானிகளை மேற்பார்வை செய்வதற்காக, ஞான சொரூப ஆத்மா, அன்பான மற்றும் கயோகி குழந்தைகளை முழு நாளில் ஈஸ்வரிய சேவையின் காரியம் செய்வதில் மற்றும் மாயாவை வென்றவர் ஆவதில், தைரியம் வைத்து செய்யும் குழந்தைகளுக்கு தந்தையின் உதவி கிடைக்கிறது என்ற நியமத்தின் அனுசாரம், அவர்களுக்கு உதவி செய்யும் காரியத்தில் நாடகப்படி பாப்தாதா பொறுப்பாளர் ஆகியிருக்கிறார். முழு நாளும் தந்தை என்ன செய்கிறார் என்று இப்பொழுது புரிந்து கொண்டீர்களா? சாகார தந்தையும் இப்பொழுது அவ்யக்தம் ஆனதின் காரணம் துரித வேகத்தில் நிராகார தந்தையின் துணைவன் மற்றும் சகயோகியாக நிரந்தரமாக ஆகி தன்னுடைய பங்கைச் செய்ய முடியும் என்பதற்காக.

பிரம்மாபாபா, அவ்யக்த உடல் உடையவர். உடலின் பந்தனத்தில் இல்லாத காரணத்தினால் இப்பொழுது எப்படி துரித வேகத்தில் தந்தைக்குச் சமமாக துணைவனாக ஆகியிருக்கிறார், அந்த மாதிரி உடலில் இருக்கும் போது துணைவனாக ஆக முடியாமல் இருந்தார், ஏன் முடியாமல் இருந்தார்? வியக்கத்தில் (ஸ்தூலத்தில்) மற்றும் அவ்யக்த ரூபத்தில் என்ன காரணத்தினால் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது? வியக்தமான உடலில் வியக்த உடலுக்காக நேரம் கொடுக்க வேண்டியதாக இருந்தது. மேலும் சில நேரம் கர்ம வினையை அனுபவிப்பதற்காகவும், தன் பொருட்டு அனைத்து சக்திகளையும் உபயோகிக்க வேண்டியதாக இருந்தது. அப்படி வியக்தமான உடலில் தனக்காக, குழந்தைகளுக்காக மற்றும் உலகிற்காக இந்த மூன்றிலுமே நேரம் கொடுக்க வேண்டியதாக இருந்தது. மேலும் வியக்த உடலில் இருக்கும் காரணத்தினால் வியக்தமான சாதனங்களின் ஆதாரத்தில் சேவை செய்ய வேண்டியதாக இருந்தது ஆனால் அவ்யக்த ரூபத்தில் தனக்காகக் கூட சாதனங்களின் ஆதாரத்தை எடுக்க வேண்டியதிருப்பதில்லை. இந்த விதமாக ஒன்று, சம்பூர்ணமாக இருக்கும் காரணத்தினால் சம்பூர்ண நிலையின் அதிவேகம் இருக்கிறது, இன்னொன்று, தனக்காக நேரம் மற்றும் சக்திகளை உபயோகிக்காத காரணத்தினால் சேவையிலும் அதிவேகம் இருக்கிறது. மூன்றாவது, அழியும் சாதனங்களின் ஆதாரம் இல்லாத காரணத்தினால்

எண்ணத்தின் வேகமும் மிக அதிகமாக இருக்கிறது. எண்ணத்தின் மூலமாக எங்காவது சென்றடைவது மற்றும் அழியும் உடலின் மூலமாக எங்காவது சென்றடைவதில் நேரம் மற்றும் சக்தியில் எவ்வளவு வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. அதே போலவே வியக்தம் மற்றும் அவ்யக்தத்தின் வேகத்திலும் வித்தியாசம் இருக்கிறது. அறிவியலைச் சேர்ந்தவர்கள் நேரத்தை மற்றும் தன்னுடைய சக்தியை அதாவது உழைப்பை, சாதனங்களின் விஸ்தாரத்தை சூட்சுமமானதாகவும், சிறியதாகவும் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். குறைந்தது ஒரு நொடியில் சென்றடைவதற்கான தீவிர முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் வெற்றியை அடைந்து கொண்டிருக்கிறார்கள். எப்படி விநாசத்திற்காக பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களின் வேகம் சூட்சுமமானதாகவும், தீவிரமானதாகவும் ஆகிக் கொண்டிருக்கிறது. அதே போலவே ஸ்தாபனைக்காக பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களின் நிலை மற்றும் வேகமும் சூட்சுமமானதாகமற்றும் வேகமானதாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் இரண்டு காரியங்களும் நிறைவேறும். அப்படி இப்பொழுது வியக்தமான மற்றும் அவ்யக்தமான உடலின் வித்யாசத்தை தெரிந்து கொண்டீர்களா? அவ்யக்தமானது நாடகப்படி எந்த சேவையின் காரணமாக ஆனது என்ற இந்த ரகசியத்தைப் புரிந்து கொண்டீர்களா? பிரம்மாபாபாவின் பங்கு ஸ்தாபனையின் காரியத்தில் கடைசி வரை அடங்கியிருக்கிறது. எது வரை ஸ்தாபனை காரியம் நிறைவேறவில்லையோ அதுவரை பொறுப்பாகியிருக்கும் ஆத்மா (பிரம்மா) வின் பங்கு முடிவடையாது. அவர் அதுவரை இன்னொரு பங்கைச் செய்ய முடியாது. ஜெகத் பிதாவின் (உலக தந்தையின்) புதிய ஜெகத்தின் (உலகின்) படைப்பை நிறைவேற்றச் செய்ய வேண்டும் என்ற பங்கு நாடகத்தில் அடங்கியிருக்கிறது. மனிதப் படைப்பின் அனைத்து வம்சாவளிகளையும் படைப்பவர் என்று பிரம்மாவைத் தான் வர்ணனை செய்கிறார்கள், எனவே தான் முப்பாட்டனார் என்று சொல்கிறார்கள். நிலை. இடம் மற்றும் வேகத்தின் மாற்றம் மட்டும் ஏற்பட்டிருக்கிறது, ஆனால் பிரம்மாவின் பங்கு இன்று வரை அதே தான்.

இவ்வளவு காலம் பாபா என்ன செய்து கொண்டிருக்கிறார் என்ற அனேகர் உங்களுடைய எண்ணம் பாபாவிடம் வந்து சேருகிறது. பிரம்மாவின் கூடவே, அனைத்து ஆத்மாக்களுக்கு நன்மை செய்வதற்கு

பொறுப்பாளர் ஆகியிருக்கும் பிராமணர்களின் பங்கு மற்றும் புது உலக ஸ்தாபனைக்காக அடங்கியிருக்கும் பங்கு முடிவடைந்து விட்டதா? என்று தந்தையும் கேள்வி கேட்கிறார். எப்பொழுது பங்கு முடிவடையவில்லையோ மற்றும் உலக மாற்றமும் ஏற்படவில்லையோ பின்பு பிரம்மாவின் பங்கு எப்படி முடிவடைய முடியும்? வதனத்தில் இவ்வளவு காலம் என்ன செய்கிறார் என்று அவர் மேல் உள்ள அன்பின் காரணமாகத் தான் எண்ணம் வருகிறது. வதனத்தின் பங்கு இவ்வளவு காலம் ஏன் மற்றும் எப்படி என்ற இந்த எண்ணமும் கூட எப்பொழுது வருகிறது? இதுவும் ஒரு குப்தமான (மறைவான) ரகசியம் ஆகும். கர்ம பந்தனத்திலிருந்து விடுபட்டு, சம்பன்னமாகியிருக்கும் ஆத்மா இந்தக் கல்பத்தின் பிறப்பு இறப்பின் சக்கரத்தை முடிக்கக்கூடிய ஆத்மா, நிராகார தந்தையின் முதல் நம்பர் துணைவனாக இருக்கும் ஆத்மா, உலக நன்மை காரியத்திற்கு பொறுப்பாளராகியிருக்கும் முதல் ஆத்மா, தனக்காக மற்றும் உலகத்திற்காக அனைத்து சித்தியையும் பிராப்தி ஆக்கியிருக்கும் ஆத்மா, எங்கு விரும்புகிறாரோ மற்றும் எவ்வளவு நேரம் விரும்புகிறாரோ அங்கு அவர் சுதந்திரமான ரூபத்தில் தன் பங்கைச் செய்ய முடியும். எப்பொழுது அற்ப காலத்தின் சித்தியை பிராப்தி செய்யக்கூடிய ஆத்மாக்கள் தன்னுடைய சித்தி நிலையின் ஆதாரத்தில் தன்னுடைய ரூபத்தை மாற்றம் செய்ய முடியும் என்றால், அனைத்து சித்தி நிலைகளையும் அடைந்திருக்கும் ஆத்மா அவ்யக்த ரூபம் உடையவராகி எவ்வளவு காலம் விரும்புகிறாரோ அவ்வளவு காலம் நாடகப்படி அவர் இருக்க முடியாதா? ஆத்மாவை நிராகார மற்றும் அவ்யக்த நிலையிலிருந்து வியக்தத்தில் கொண்டு வருவதற்கான காரணம் என்னவாக இருக்கிறது? ஒன்று, கர்மங்களின் பந்தனம், இரண்டாவது சம்மந்தத்தின் பந்தனம், மூன்றாவது ஸ்தூல உலகத்தில் தனக்குள்ள பங்கின் பந்தனம் மற்றும் உடலின் பந்தனம் அதாவது உடல் தயாராகிறது மற்றும் ஆத்மாவை பழைய உடலிலிருந்து புதியதில் ஈர்க்கிறது, அப்படி இந்த அனைத்து பந்தனங்களையும் யோசியுங்கள். ஸ்தாபனையின் பங்கின் பந்தனமாக என்ன இருக்கிறதோ அது வியக்தத்திலிருந்து அவ்யக்த ரூபத்தில் இன்னும் அதிக வேகத்தில் நடந்து கொண்டிருக்கிறது. இந்தக் கல்பத்தில் இப்பொழுது வேறு உடலின் ஈர்ப்பின் பந்தனம் இல்லை. தேகதாரியாகி கர்மபந்தனங்களில் வருவதற்கான பந்தனத்தை முடித்து விட்டார். எப்பொழுது அனைத்து

பந்தனங்களி லிருந்தும் விடுபட்ட ஆத்மா ஆகி விட்டதோ அப்பொழுது இந்த ஸ்தூல உடல் மற்றும் இந்த ஸ்தூல தேசம் ஆத்மாவை ஈர்க்க முடியாது. எப்படி அறிவியல் மூலமாக ஆகாய மண்டலத்தில் சென்று விடுகிறார்கள் மேலும் புவி ஈர்ப்பிலிருந்தும் விலகிச் சென்று விடுகிறார்கள் என்றால், பூமி அவரை ஈர்க்க முடியாது. அதே போலவே எதுவரை புதிய கல்பத்தில், புதிய ஜென்மம் மற்றும் புதிய உலகத்தில் பங்கு செய்வதற்கான நேரம் வரவில்லையோ அது வரை இந்த ஆத்மா சுதந்திரமாக இருக்கிறது, மேலும் அவர் ஸ்தூல பந்தனங்களிலிருந்து விடுபட்டிருக்கிறார். புரிந்ததா?

எனவே இப்பொழுது பலவிதமான எண்ணங்களை உருவாக்காதீர்கள். உடன் செல்வோம், உடன் வாழ்வோம் மற்றும் உடன் இறப்போம். அதாவது நம்முடைய பங்கை முடிப்போம் என்று பிராமணக் குழந்தைகளுக்குக் கொடுத்த தந்தையின் வாக்குறுதி இருக்கிறது. பிரம்மாபாபா குழந்தைகளுடன் சேர்ந்து உலக மாற்றத்திற்கான எந்த கான்டிராக்ட் (ஒப்பந்தம்) எடுத்திருக்கிறாரோ அதை பாதியில் விட முடியுமா என்ன? ஸ்தாபனைக் காரியத்தில் பொறுப்பாகியிருக்கும் வேர் (அஸ்திவாரம்) இடையே அகன்று விடுமா என்ன? என்ன காரியம் நான் செய்வேனோ என்னைப் பார்த்து அனைவரும் பின்பற்றுவார்கள் என்ற சுலோகன் பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்கள் தாங்கள் செய்யும் காரியத்தை பாதியிலேயே விட்டுவிட மாட்டார்கள் என்பதற்காக இருக்கிறது. இப்பொழுது சேவை என்ற காரியத்தை தந்தையைப் பார்த்துக் கொண்டே செய்து கொண்டிருக்கிறீர்கள் இல்லையா. காரியம் செய்து காண்பிப்பதற்கு பொறுப்பாகியிருக்கும் ஆத்மா கடைசி வரை துணைவனாக மற்றும் சகயோகியாக அவசியம் ஆகுகிறார். நல்லது. இது தான் உங்கள் எண்ணத்திற்கான பதில். அமிர்தவேளையின் செய்தியை பின்பு வேறொரு தடவை கூறுவோம். ஏனென்றால் அது விசேஷமான முறையில் தந்தை மற்றும் குழந்தைகளினுடைய செய்தி தான் மேலும் அதனுடைய விஸ்தாரமும் இருக்கும். நல்லது.

அந்த மாதிரி ஆழமான ரகசியங்களைப் புரிந்து கொள்ளக் கூடிய, ரகசியத்தைத் தெரிந்து நடந்து கொள்பவர்களுக்கு, யோக சொரூப, ஞானம் நிறைந்த, யுக்தி நிறைந்த, சர்வ குணங்கள் நிறைந்த, இயற்கை மற்றும் விகாரங்களின் கவர்ச்சியிலிருந்து எப்பொழுதும்

விலகியிருக்கக்கூடிய, தந்தையுடன் ஸ்தாபனையின் காரியத்தில் அதிவேகத்தில் சகயோகி ஆகக்கூடிய மற்றும் எப்பொழுதும் அன்பிற்குரிய ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள். இரவு வணக்கம் மற்றும் நமஸ்காரம்.

# ஆன்மீக சேனையின் முக்கிய சட்டம்

ஆன்மீக சேனையினர் எப்பொழுதும் ஆயுதம் ஏந்தி, சட்டம் மற்றும் கட்டளைப்படி நடப்பவர்களாக இருப்பார்கள். சேனையின் முக்கிய குணமாக சட்டம் மற்றும் கட்டளைப்படி எவ்வளவு நடக்கிறார் என்ற இவைதான் முக்கியமாகப் பார்க்கப்படுகிறது. அப்படியானால் நீங்கள் அனைவரும் சட்டம் மற்றும் கட்டளைப்படி நடப்பவர்களாக இருக்கிறீர்களா? ஆன்மீக சேனைக்காக முக்கியமான சட்டம், அதில் அனைத்து சட்டங்களும் வந்து விடும் மாதிரி எந்த சட்டம் இருக்கிறது. ஒருபொழுதும் தன்னுடைய உடலையும் மற்ற தேகதாரிகளின் பக்கமும் பார்க்காதீர்கள் என்ற சட்டம் தான் ஆன்மீக சேனைக்கான முக்கியமான சட்டமாகும். தந்தையின் பக்கம் பார்த்துக் கொண்டு தான் ஒவ்வொரு அடியும் எடுத்து வைக்க வேண்டும். இது தான் ஆன்மீக சேனைக்கான முக்கியமான சட்டமாகும். ஒருவேளை கொஞ்மாவது வேறு தேகதாரிகளை மற்றும் தன்னுடைய தேகத்தை பார்த்தீர்கள் என்றால் தந்தை வரை சென்றடைய வேண்டும் மேலும் தந்தையைச் சந்திக்க வேண்டும் என்ற லட்சியமாக என்ன இருக்கிறதோ அதுவரை சென்றடைய முடியாது. நல்லது.

**1) தன்னை துக்கமற்ற ஊரின் மகாராஜா என்று நினைக்கிறீர்களா?**
பிச்சைக்காரனுடன் ராஜபதவியும் இருக்கிறது. பிச்சைக்காரன் ஆகும் விஷயத்தில் ராஜாவாகவும் ஆகக்கூடாது மற்றும் ராஜா ஆகும் விஷயத்தில் பிச்சைக்காரனாகவும் ஆகக்கூடாது. புத்தியின் இந்த அதிசயச் செயல் தான் தேவையாக இருக்கிறது. எப்படிப்பட்ட நேரமோ, எப்படிப்பட்ட விஷயமோ, அப்படி தன்னுடைய சொரூபத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள். இதற்காக முக்கியமான எந்த சக்தி தேவையாக இருக்கிறது? இதில் முடிவெடுக்கும் சக்தி தேவையாக இருக்கிறது. முதலில் சரியான முடிவெடுப்பதற்காக நேரம் எது என்ற இதைத் தெரிந்து கொள்ளுங்கள், பின்பு அதன் பிரகாரம் எந்த சொரூபம்

வேண்டுமோ அதை தாரணை செய்யுங்கள். அப்பொழுது தான் வெற்றி அடைபவர் ஆக முடியும் இல்லையா? முடிவெடுக்கும் சக்தியைத் தன்னுள் கொண்டு வருவதற்காக முக்கியமாக எந்த முயற்சி தன்னுள் வேண்டும். இதற்காக முக்கியமான விஷயமாக தன்னுடைய புத்தியின் ஈடுபாட்டில் உண்மை மற்றும் சுத்தம் தேவையாக இருக்கிறது. எந்த பொருளும் எவ்வளவு சுத்தமாக இருக்கிறதோ அந்த அளவே அதில் அனைத்தும் தெளிவாகத் தென்படும், அதாவது முடிவெடுத்தல் சுலபமாக இருக்க முடியும் ஆனால் இங்கு சுத்தம் மட்டும் இல்லை, அந்த சுத்தமும் எதனுடையது, உண்மையின் சுத்தம். எவ்வளவுக்கு எவ்வளவு புத்தியின் ஆர்வம் / ஈடுபாட்டில் தெளிவுத்தன்மை அதாவது உண்மை மற்றும் சுத்தம் தாரணை ஆகியிருக்கிறதோ அந்த அளவே முடிவெடுக்கும் சக்தி சுலபமாக வந்து விடும். தன்னில் அந்த மாதிரி சோதனை செய்கிறீர்களா? நினைவிலிருப்பது மிக சுலபம். நினைவில் சாகார சொரூபத்தின் சுகத்தைப் பெறுவதற்காகத்தானே இங்கு வருகிறீர்கள் இல்லையா? இருந்தும் வரிசைக்கிரமமானவர்களாக எதன் ஆதாரத்தில் ஆகிறார்கள். அது இது தான் - உண்மை மற்றும் சுத்தம்! மேலும் இதன் மூலமாகத் தான் முடிவெடுக்கும் சக்தி உயர்ந்ததாக இருக்கும். எவ்வளவு நிர்ணய சக்தி இருக்கிறதோ அந்த அளவே வெற்றி கிடைக்கும். உண்மை மற்றும் சுத்தம் இருக்கிறது என்பது பெரிய விஷயம் கிடையாது, ஆனால் எத்தனை சதவிகிதத்தில் இருக்கிறது என்பதை சோதிப்பதினால் வரிசை எண் தானாகவே வெளியாகி விடும். நல்லது.

வரதானம்: ஒவ்வொரு நாளின் முரளியின் சாதனம் மூலமாக வீணானதை அழிக்கக்கூடிய பாஸ் வித் ஆனர் (கௌரவத்துடன் தேர்ச்சி அடைபவர்) ஆகுக!

ஒவ்வொரு நாளின் முரளி மனதை பிஸியாக வைப்பதற்கான சாதனம் ஆகும். முரளியில் ஏதாவது கருத்தை சிந்தித்துக் கொண்டே இருந்தீர்கள் என்றால், மனம் பிஸியாக இருக்கும். மேலும் வீணானது தானாகவே முடிவடைந்து விடும். எண்ணம், சொல் மற்றும் செயலின் சேவையில் வீணான எண்ணம் முற்றிலும் வராத அளவிற்கு மனதை பிஸியாக ஆக்கி விடுங்கள். அப்பொழுது தான் கடைசிப் பரீட்சையில் பாஸ் வித் ஆனர் ஆக முடியும். ஒருவேளை வீணான எண்ணம் வைப்பதின்

பழக்கம் இருக்கிறது என்றால் அந்த நேரத்தில் ஏமாற்றப்பட்டு விடுவீர்கள்.

**சுலோகன்: திட்டத்தை நடைமுறையில் கொண்டு வருவதற்காக குழந்தை மற்றும் எஜமானத்தன்மையின் சமநிலை வையுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 04.07.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சுயநிலையின் சிரேஷ்ட தன்மையின் மூலம் வீணான எண்ணங்களின் குழப்பத்தின் முடிவு!

தன்னுடைய சம்பூர்ண இலக்கின் அருகில் வந்து விட்டீர்களா? இலக்கின் அருகில் வந்ததற்கான அடையாளங்கள் தென்படுகிறதா? சம்பூர்ண இலக்கின் அருகில் வந்தடைந்ததின் அடையாளமாக இரட்டை போதை உருவாகிறதா? முதல் போதையானது கர்மாதீத் நிலை அதாவது அனைத்து கர்ம பந்தனங்களிலிருந்து விடுபட்டு, விலகியவராகி இயற்கையை (உடலை) கருவியாக்கி அதன் மூலம் காரியம் செய்விப்பது. அந்த மாதிரி கர்மாதீத் நிலையின் அனுபவம் ஆகும். விலகியவராக ஆவதற்கான முயற்சி அடிக்கடி செய்ய வேண்டியதாக இருக்காது. செய்விக்கக்கூடிய மற்றும் செய்யக்கூடிய இந்த கர்மேந்திரியங்கள் சுயம் தன்னில் இருந்து (ஆத்மாவிலிருந்து) வேறாகவே இருக்கிறது என்ற அனுபவம் சுலபமாகவும், இயல்பாகவும் இருக்கும். இரண்டாவது போதை உலகின் அதிபதி ஆவதற்கானது. ஸ்தூலமான உடல் மற்றும் ஆடை தயாராகி எதிரில் தென்பட்டுக் கொண்டிருக்கிறது என்று அந்த மாதிரி அனுபவம் செய்வீர்கள். மேலும் ஆடை தயாராகி விட்டது மற்றும் கொஞ்ச நேரத்தில் அதை அணிய வேண்டும் என்ற நிச்சயம் இருக்கும். அந்த சர்வ குணம் நிரம்பிய மற்றும் சதோபிரதான புது உடல் தெளிவாகத் தென்படும். மேலும் நாளை இந்த பழைய உடலை விட்டு விட்டு புதிய உடலை தாரணை செய்வேன் என்று முழு நாளும் அனைத்துக் காரியங்களையும் செய்து கொண்டே, போகும்பொழுதும் வரும்பொழுதும் இந்த போதை மற்றும் குஷி இருக்கும். தேவதைப் பதவி கிடைக்குமா அல்லது இல்லையா? தேவதை ஆவோமா அல்லது இல்லையா? மேலும் ராஜா ஆவேனா அல்லது பிரஜையாக ஆவேனா என்ற இந்த எண்ணம் கொஞ்சம் கூட உருவாகாது. ஞானத்தின் மூன்றாவது கண் மூலமாக யோகயுக்த்

அதாவது எப்பொழுதும் யோகியான காரணத்தினால் புத்தியின் போக்கு சீராக (லைன் க்ளியர்) அதாவது தெளிவாக இருக்கும் காரணத்தினால் நிச்சயபுத்தி உடையவர் வெற்றி அடைவார் என்பதின் ஆதாரத்தில் அனேக தடவை இந்த உடலை தாரணை செய்திருக்கிறேன். மேலும் இப்பொழுதும் செய்யத் தான் வேண்டும் என்ற அனுபவம் ஆகும். அந்த மாதிரி அசைக்க முடியாத விசுவாசம் இருக்கும் மற்றும் தெளிவான சாட்சாத்காரம் ஏற்படும். இப்படி ஆவேனா அல்லது ஆக மாட்டேனோ என்று எதுவரை இந்தக் குழப்பம் புத்தியில் இருக்கிறதோ அது வரையிலும் மனநிலையிலும் குழப்பம் இருக்கும்.

எவ்வளவிற்கு எவ்வளவு சுயநிலை, உயர்ந்த நிலை, ஞான சொரூபம் மற்றும் அனைத்து குணங்களினால் நிரம்பிய நிலை, ஆடாத அசையாத நிரந்தரமான ஒரே சீரான நிலை ஆகிக் கொண்டே இருக்கும் என்றால், அந்த அளவே எண்ணங்களின் குழப்பம் முடிவடைந்து கொண்டே இருக்கும். எப்படி சாகாரத்தில் தாய் தந்தை இருவரையும் பார்த்தீர்கள். இருவருடைய போதையில் எண்ண அளவின் குழப்பமும் இல்லாமல் இருந்தது. இதுவோ ஏற்கனவே உருவாக்கப்பட்டதே தான் மற்றும் இதுவோ நிச்சயிக்கப்பட்டதே தான் என்றும் முழுமையான ஆடாத அசையாத நிச்சயம் இருந்தது. அப்படி போதையின் அடையாளம் அசைக்க முடியாத நிச்சயம் மற்றும் கவலையற்ற நிலை அனுபவம் ஆகும். லட்சியத்தின் அடையாளம் போதை மற்றும் போதையின் அடையாளம் நிச்சயம் மற்றும் கவலையற்ற நிலை. கூடவே மாயாவின் எந்த விதமான தாக்குதல் ஏற்படுவதிலிருந்தும் தோல்வி அடைவதிலிருந்தும் கவலையற்ற நிலை. மாயா தோற்கடித்து விடக்கூடாதே. வெற்றி அடைபவர் ஆவேனா அல்லது இல்லையா தெரியவில்லையே என்ற இந்த பலஹீனமான எண்ணத்திலிருந்தும் கவலையற்ற நிலை. ஏனென்றால் எதிரில் தென்பட்டுக் கொண்டிருக்கிறது. அப்படி அனுபவம் ஆகிறதா? பலஹீனமான எண்ணங்களின் கவலையில் மாயா வந்து விட வேண்டாம், பலஹீனமானவராக ஆகி விடாதீர்கள் மற்றும் எனக்கு வெற்றி கிடைக்குமா, கிடைக்காதா என்ற இந்த பயம் என்ற பூதத்தின் வசமாகி தன்னுடைய நேரம் மற்றும் சக்தியை வீணாக இழக்கவில்லையே? அந்த மாதிரி பலஹீனமான எண்ணம் வைப்பது அதாவது தன்னில் சந்தேகமான எண்ணம் வைப்பதினால் ஒருபொழுதும் சம்பூர்ணம் ஆக

முடியாது. இந்த எண்ணம் வைப்பது என்றால் பலஹீனங்களின் ரூபத்தில் ஒரு பூதத்தினுடன் மாயாவின் மற்ற பூதங்களை வரவேற்கிறீர்கள் மற்றும் புத்தியில் இடம் கொடுக்கிறீர்கள் மற்றும் ஒன்றுடன் அனேகர்களுக்கு அழைப்பு கொடுக்கிறீர்கள். எனவே இந்த பயத்தின் பூதத்தையும் எதுவரை புத்தியிலிருந்து அகற்றவில்லையோ அதுவரை இந்த பூதத்துடன் தந்தையின் நினைவு எப்படி இருக்க முடியும்? தந்தையின் நினைவு மற்றும் பூதம் இந்த இரண்டும் சேர்ந்தே இருக்க முடியாது. எனவே தான் நிச்சயபுத்தியுடையவர் வெற்றி அடைவார் என்ற பழமொழியும் இருக்கிறது.

நான் அனேக தடவை தந்தையின் குழந்தை ஆகியிருக்கிறேன் மற்றும் மாயாவை வென்றவர் ஆகியிருக்கிறேன் என்ற இந்த நிச்சயத்தையும் நினைவையும் வையுங்கள் மற்றும் பலத்தையும் வையுங்கள். அப்படியானால் இப்பொழுது அந்த மாதிரி ஆவதில் என்ன கடினம் இருக்கிறது? உயர்ந்த ஆத்மா நான் வெற்றியடைந்தவர் ஆனதின் பங்கை அனேக தடவை செய்திருக்கிறேன் என்ற இந்த நினைவு தெளிவாக இல்லையா? ஒருவேளை தெளிவான நினைவு இல்லை என்றால் தந்தையின் எதிரே தன்னையும் தெளிவாக்கிக் கொள்ளவில்லை என்பது நிரூபணம் ஆகிறது. ஏதாவது காரணத்தினால் தந்தையின் எதிரில் ஏதாவது மறைத்தீர்கள் என்றால், இந்த பயம் என்ற பூதம் இந்தக் காரணத்தினால் தான் ஒளிந்து இருக்கிறது. நான் என்னவாக இருக்கிறேன் மற்றும் எப்படி இருக்கிறேன் அப்படியே தந்தையினுடையவனாக இருக்கிறேன் என்ற இந்த நிச்சயத்தின் குறைவின் காரணமாக இந்த மாதிரி நான் அனேக தடவை ஆகியிருக்கிறேன் என்ற நிச்சயமும் இல்லை. எனவே தன்னை தந்தையின் எதிரில் தெளிவாக்கி இருக்கிறேனா என்ற இதை முதலில் சோதனை செய்யுங்கள். தந்தையோ அனைத்தும் தெரிந்தவர் என்றால், அவர் அனைத்துமே தெரிந்தே இருக்கிறார் என்று தன்னையும், தந்தையையும் குஷிப் படுத்துகிறீர்கள். நான் (பாபா) தெரிந்திருக்கிறேன் என்று தந்தைக்கு தெரியாதா என்ன? உலகிற்கே ஆசிரியரானவருக்கும் ஆசிரியர் ஆகிறீர்கள். தந்தை மறந்து விட்டாரா என்ன அவருக்கு நினைவூட்டு கிறீர்கள்? எனவே ஏதாவது ஒரு மரியாதையைக் கடைப் பிடிக்கவில்லை என்றால், அவர் மரியாதா புருஷோத்தம் ஆக முடியாது என்ற இதுவும் ஈஸ்வரிய நியமம் மற்றும் மரியாதை ஆகும். எனவே

காரணத்திற்கு நிவாரணம் செய்யுங்கள். தந்தை எதிரில் மறைப்பதினால் ஒன்றின் மேல் லட்ச மடங்கில் சுமை ஏறும் காரணத்தினால் எதுவரை தன்னை லேசாக்கவில்லையோ, ஒரு தவறுக்குப் பின்னால் அனேக தவறுகளைச் செய்வதினால் மேலும் ஒரு மரியாதையை மீறுவதினால் அனேக மரியாதைகள் மீறப்படுவதின் காரணமாக இத்தனை லட்ச மடங்கு சுமை ஏறியிருக்கும் காரணத்தினால் முன்னேறும் கலையில் எப்படி அடியெடுத்து வைக்க முடியும்? மேலும் லட்சியத்தின் அருகில் எப்படி வர முடியும்? வெளியுலகில் ஏதாவது ஒரு பொருளை மறைக்கிறார் என்றால் அவருக்கு எந்த பட்டம் கொடுக்கப் படுகிறது? சிறிய பொருளை மறைப்பவர் கூட திருடனின் பட்டியலில் தான் எண்ணப்படுவார் இல்லையா? அப்படி பாப்தாதாவின் எதிரில் பொய் சொல்வது மற்றும் எந்தவிதமான விஷயத்தையும் அதனால் என்ன என்ற இந்த சம்ஸ்காரம் எதுவரை இருக்கிறதோ இதன் மூலம் எவ்வளவு பாவம் நிகழ்கிறது தெரியுமா? அந்த மாதிரி அனேக விதமான சரித்திரத்தை தந்தையின் எதிரில் காண்பிக்கிறார்கள், அந்த மாதிரி சரித்திரத்தைக் காண்பிப்பவர்கள் ஒருபொழுதும் உயர்ந்த ஒழுக்கமுடையவர் (சரித்திரவான்) ஆக முடியாது. தந்தையை போலாநாத் என்று நினைக்கிறார்கள் இல்லையா? எனவே தான் செய்தது மறைந்து விடும் மேலும் காரியம் நடந்து விடும் என்று நினைக்கிறார்கள் ஆனால் தந்தையின் ரூபத்தில் போலாநாத் ஆக இருக்கிறார், கூடவே கணக்கு வழக்கை முடிக்கும் நேரத்தில் சட்டம் நிறைந்தவராகவும் இருக்கிறார். பின்பு அந்த நேரம் என்ன செய்வீர்கள்? தன்னை மறைக்க முடியுமா மற்றும் காப்பாற்ற முடியுமா?

தன்னுடைய அனேக விதமான சுமையை சோதனை செய்யுங்கள். அமிர்தவேளையில் தொடங்கி என்னென்ன ஈஸ்வரிய மரியாதைகள் உருவாக்கப்பட்டிருக்கிறதோ மேலும் முழு நாளிலும் எத்தனை மரியாதைகளை மீறி நடந்து இருக்கிறோம் என்று தெரிந்தும் இருக்கிறீர்கள். ஒவ்வொரு மரியாதையின் மேல் பிராப்தியின் மதிப்பெண்ணும் இருக்கிறது மேலும் கூடவே தலை மேல் சுமைக்கான கணக்கும் இருக்கிறது. மேலும் எந்த மரியாதைகளை சாதாரணம் என்று நினைக்கிறீர்களோ அவற்றிற்கும் கூட அவற்றின் பிராப்தியும் இருக்கிறது மற்றும் அவற்றின் சுமைக்கான கணக்கும் இருக்கிறது. எண்ணம், சொல், நேரம் மற்றும் சக்திகளின் பொக்கிஷம் இவை

அனைத்தையும் வீணாக்குவதினால் வீணானதின் சுமை ஏறுகிறது. எப்படி யக்ஞத்தின் ஸ்தூல பொருட்கள், உணவு ஆகியவற்றை வீணாக்கினீர்கள் என்றால் சுமை ஏறுகிறது. அதே போலவே இந்த மர்ஜீவா ஜென்மத்தின் (உடலில் இருந்து கொண்டே இறந்து மறுபிறவி எடுத்து வாழ்வது) நேரத்தை தந்தை உலக சேவைக்காக கொடுத்திருக்கிறார், தன்னுடைய அனைத்து சக்திகளையும் உலக நன்மை காரியத்திற்காக கொடுத்திருக்கிறார். மனதை சுத்த எண்ணம் வைப்பதற்காக கொடுத்திருக்கிறார் மேலும் இந்த உடலை உலக நன்மையின் சேவைக்காக கொடுத்திருக்கிறார். நீங்கள் அனைவரும் கூட உடல், மனம் மற்றும் பொருளை கொடுத்திருக்கிறீர்கள் என்றால் அது உங்களுடையதா என்ன? எதை அர்ப்பணம் செய்து விட்டீர்களோ அது தந்தையினுடையது ஆகி விட்டது இல்லையா? தந்தை அதை உலக சேவைக்காக கொடுத்திருக்கிறார். உயர்ந்த எண்ணம் மூலம் சூழ்நிலை மற்றும் சுற்றுப்புறத்தை சுத்தம் செய்வதற்காக மனதைக் கொடுத்திருக்கிறார், அந்த மாதிரி இறைவனின் கொடுப்பினையை அதாவது ஈஸ்வரன் மூலமாக கொடுக்கப்பட்ட பொருளை ஒருவேளை வீணானதில் ஈடுபடுத்தினீர்கள் என்றால் சுமை ஏறாதா?

இன்றைய நாட்களில், கூட மூர்த்திகள் மூலமாக மற்றும் கோவில்களில் சிறிதளவு கிடைக்கும் பிரசாதத்தையும் அவர்கள் ஒருபொழுதும் வீணாக்க மாட்டார்கள். ஒருவேளை அதன் ஒரு துளி கூட காலில் விழுந்து விட்டது என்றால் பாவம் என்று நினைத்து நெற்றியில் ஒற்றி, மரியாதையுடன் எடுத்துக் கொள்வார்கள். அனேகரின் வாயில் போட்டு பிரசாதத்தை பயனுள்ளதாக ஆக்கும் முயற்சி செய்வார்கள் மற்றும் அதை வீணாக இழக்க மாட்டார்கள். சுயம் தந்தை மூலமாகக் கிடைத்திருக்கும் இந்த மனம் மற்றும் உடல் பரமாத்மா பிரசாதமாக இருக்கிறது, இதை வீணாக்குவதினால் சுமை ஏறாதா? எப்படி நேரத்தின் வேகம் நுண்ணியதாக ஆகிக் கொண்டே இருக்கிறதோ அதே போல் இப்பொழுது முயற்சி செய்வதின் பிராப்தி மற்றும் சுமையின் வேகமும் நுண்ணியமாக ஆகிக் கொண்டே இருக்கிறது. இதைத் தான் கர்மங்களின் விளைவு மிக ஆழமானது என்று கூறப்படுகிறது. அப்படி இன்று கர்மங்களின் ஆழமான விளைவுகளைத் தெரிந்து சத்கதி அடைய வேண்டும் என்பதற்காக அதை கூறிக் கொண்டிருந்தோம். லட்சியத்தின் நெருக்கத்தின் அடையாளங்கள்

என்ன என்று இப்பொழுது புரிந்து கொண்டீர்களா? மற்றும் லட்சியத்தின் அருகில் செல்வதற்கான விதி என்ன என்பதையும் புரிந்து கொண்டீர்களா?

அனைவரையும் இப்பொழுதே சம்பூர்ணமாக ஆக்கி விடலாமா என்று பாப்தாதாவிற்கும் இரக்கம் வருகிறது ஆனால் படைப்பவரும் மரியாதைகள் மற்றும் ஈஸ்வரிய நியமங்களில் கட்டப்பட்டு இருக்கிறார். தந்தையும் மரியாதைகளை மீறிச் செய்ய முடியாது. யார் செய்வார்களோ அவர் அடைவார் என்ற மரியாதையை தந்தை நிறைவேற்ற வேண்டியதாக இருக்கிறது. ஆம் ஒன்றிற்கு நூறு மடங்கு கொடுத்து விடுகிறார் என்ற இந்த வாய்ப்பு இருக்கிறது. தைரியம் வைப்பதினால் உதவி செய்ய முடியும். மற்றபடி வேறு எதுவும் செய்ய முடியாது.

நல்லது. அந்த மாதிரி தைரியம் மற்றும் உற்சாகத்தில் இருக்கக்கூடிய, எப்பொழுதும் நிச்சயபுத்தி உடையவர் ஆகி வெற்றி அடையக்கூடிய, லட்சியத்தின் அருகில் சென்றடைந்து இருக்கும் ஆத்மாவிற்கு, எப்பொழுதும் போதையில் இருக்கக்கூடிய ஆத்மாக்களுக்கு, வீணானதை சக்தி பலம் நிரம்பியதாக ஆக்கக்கூடிய ஆத்மாக்களுக்கு, ஒவ்வொரு விநாடி மற்றும் ஒவ்வொரு எண்ணத்தை பயனுள்ளதாக ஆக்கக்கூடிய வெற்றியடையும் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள். இரவு வணக்கம் மற்றும் நமஸ்காரம்.

<u>வரதானம்: எண்ணத்திலிருந்தும் என்னுடையது என்பதின் அழுக்கை அகற்றி சுமையிலிருந்து விடுபட்டு லேசாக இருக்கக்கூடிய பரிஷ்தா ஆகுக!</u>

என்னுடையது என்பதின் விஸ்தாரம் தான் சுமையாகும். எந்தவொரு என்னுடையது. என்னுடைய சுபாவம், என்னுடைய சம்ஸ்காரம், என்னுடைய இயல்பு அப்படி ஏதாவது என்னுடையது இருக்கிறது என்றால் சுமை ஆகும். மேலும் சுமை உள்ளவர் மேலே செல்ல முடியாது, ஃபரிஷ்தா ஆக முடியாது. எண்ணத்தில் கூட என்னுடையது என்ற உணர்வு வந்தால் அழுக்காகி விட்டோம் என்று புரிந்து கொள்ளுங்கள். எந்த ஒன்றிலும் அழுக்கு ஏறிவிட்டது என்றால்

அழுக்கின் சுமையாகி விடும். அப்படி அனைத்து சுமைகளை தந்தையிடம் ஒப்படைத்து விட்டு என்னுடையது என்பதின் அழுக்கை அகற்றினீர்கள் என்றால் ஃபரிஷ்தா ஆகி விடுவீர்கள்.

சுலோகன்: ஒவ்வொரு சூழ்நிலையிலும் முழுமையான தேர்ச்சி பெறுபவர் தான் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆவார்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

## 08.07.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மாஸ்டர் ஞானம் நிறைந்தவர் மற்றும் சர்வ சக்திவான் விதவிதமான க்யூவிலிருந்து (வரிசையிலிருந்து) விடுபட்டிருக்கிறார்!

இன்று எந்த விதமான மேளா (சந்திப்பு / விழா) என்று கூறலாம். தந்தை மற்றும் குழந்தைகளினுடையது. இதுவோ லௌகீக சம்மந்தத்திலும் இருக்கிறது ஆனால் இன்றைய மேளாவின் விசேஷமாக என்ன இருக்கிறது, அது வேறு எங்குமே இருப்பதில்லை. ஆத்மாக்கள் மற்றும் பரமாத்மாவின் மேளாவோ இருக்கவே இருக்கிறது. வேறு ஏதாவது ஆன்மீக விஷயங்களைக் கூறுங்கள். இந்த மேளா ஒரே நேரத்தில் ஒருவருடன் அனைத்து சம்மந்தங்களினால் அனைத்து சம்மந்தங்களின் அன்பு மற்றும் பிராப்தியின் மேளா என்ற இது தான் இதனுடைய விசேஷம் ஆகும். தந்தை மற்றும் குழந்தைகள், சத்குரு மற்றும் பின்பற்றி நடப்பவர்கள் மற்றும் சமமாக ஆகக்கூடிய கட்டளைப்படி நடக்கும் குழந்தை களினுடையது மட்டும் இல்லை, ஆனால் ஒரே நேரத்தில் ஒருவருடன் அனைத்து சம்மந்தங்களினால் சந்திப்பை ஏற்படுத்தும் ஆன்மீக மேளாவாகும். இந்த ஆன்மீகத்தன்மை மற்றும் விசேஷம் வேறு எங்கும் கிடைக்காது. அந்த மாதிரி மேளாவைக் கொண்டாடுவதற்காக அனைவரும் கடலின் கரையில் வந்திருக்கிறீர்கள். எப்பொழுது அனைத்து சம்மந்தங்களினால் அனைத்து பிராப்திகளைச் செய்ய முடியும் என்றால் ஓரிரண்டு உறவினால் மட்டும் சந்திப்பு மற்றும் பிராப்தி செய்வதில் திருப்தி அடைந்து விடாதீர்கள். கொஞ்சத்தில் திருப்தி ஆகுபவர்களை பக்தர்கள் என்று கூறுவோம். குழந்தைகள் அனைத்து சம்மந்தங்கள் மற்றும் அனைத்து பிராப்திகளின் அதிகார உரிமையுடையோர் ஆவார்கள். இதே அதிகார உரிமையை பிராப்தி செய்யக்கூடிய ஆத்மாக்கள் ஞானம்

நிறைந்த, யோகம் நிறைந்த ஆத்மாக்கள் தந்தைக்குப் பிரியமானவர்களாக இருக்கிறார்கள். நான் அந்த மாதிரி தந்தைக்கு பிரியமானவனாக ஆகியிருக்கிறேனா? என்று தன்னைத் தானே கேளுங்கள். தந்தைக்குச் சமமாக நிராகாரி (ஆத்ம நிலை), நிர்.அகங்காரி (அகங்காரமற்ற நிலை). நிர்விகாரி (விகாரங்கள் அற்ற நிலை), நஷ்டமோஹா (பற்றுதலை வென்ற) மற்றும் நினைவு சொரூபமானவராக ஆகியிருக்கிறீர்களா? நினைவு சொரூபமாக ஆகக்கூடியவர்களின் அடையாளமாக என்ன அனுபவம் ஆகும். அவர்கள் எப்பொழுதும் அனைத்து சக்திகள் நிரம்பிய சொரூபமானவர்களாக இருப்பார்.

பற்றுதலை வென்றவராக ஆவதற்கான சுலபமான யுக்தி எது? இதனுடைய அனுபவிகளாக இருக்கிறீர்கள் இல்லையா? எப்பொழுதும் தன் எதிரில் அனைத்து சம்மந்தங்களினால் தந்தையைப் பார்ப்பது மற்றும் அனைத்து சம்மந்தங்கள் மூலமாக அனைத்து பிராப்திகளைப் பார்ப்பது. இப்பொழுது அனைத்து சம்மந்தங்கள் மற்றும் அனைத்து பிராப்திகளும் ஒருவர் மூலமாக அனுபவம் ஆகிக் கொண்டிருக் கிறது என்றால் பின்பு ஏதாவது ஒரு சம்மந்தம் மற்றும் பிராப்தி இன்னும் பாக்கி இருக்கிறதா என்ன? எங்கு பற்றுதல் அதாவது உள்ளப்பூர்வமான ஈடுபாடு இருக்கிறது என்றால் சுலபமாக மற்றும் இயல்பாகவே அனேக பக்கங்களைத் துண்டித்து ஒரு பக்கத்தோடு இணைப்பதின் அனுபவம் ஆகாதா? இதுவரையிலும் எங்காவது மற்றும் யாருடனாவது பற்றுதல் மற்றும் ஈடுபாடு இருக்கிறது என்றால் அனைத்து சம்மந்தங்கள் மற்றும் அனைத்து பிராப்திகளை அனுபவம் செய்து கொண்டிருக்கவில்லை என்று நிரூபணம் ஆகிறது.

இன்று தந்தை மற்றும் குழந்தைகளிடையே நடக்கும் ஆன்மீக உரையாடல் மற்றும் சந்திப்பு விழாவின் செய்திகளைக் கூறுகிறோம். செய்தியைக் கேட்பதில் அனைவருக்கும் ஆர்வம் வருகிறது இல்லையா? இப்பொழுது இந்த செய்தியில் நான் எங்கே இருக்கிறேன் என்று பாருங்கள். முதலிலோ அமிர்தவேளையின் செய்தியைக் கூறுகிறோம். அமிர்தவேளையின் விதவிதமான போஸ் (தோற்றம்) மற்றும் பொசிஷனை (நிலையை) ஏற்கனவே கூறியிருந்தோம். இன்று வேறு விஷயங்களைக் கூறுகிறோம். எப்படி அமிர்தவேளை

தொடங்குகிறது என்றால் நாலாபுறமும் உள்ள அனைத்து குழந்தைகளும் முதலில் தொடர்பை ஏற்படுத்துவதற்கான (எண்ணை சுழற்றும்) முயற்சி செய்கிறார்கள் அல்லது கனக்ஷன் (தொடர்பை) இணைப்பதற்கான முயற்சி செய்கிறார்கள். பின்பு என்ன ஆகிறது? லைன் தெளிவாக இருக்கும் காரணத்தினால் சிலருக்கு நம்பர் விரைவில் கிடைத்து விடுகிறது மற்றும் சிலர் நம்பரை அடைய முயற்சி செய்வதிலேயே நேரம் கழித்து விடுகிறார்கள். சிலர் நம்பர் கிடைக்காத காரணத்தினால் மனமுடைந்தவர்களாக ஆகி விடுகிறார்கள், வேறு சிலருக்கு தந்தையோடு இணைப்பு என்ற நம்பர் கிடைத்து விடுகிறது என்றாலும் இடையிடையே கனக்ஷன் மாயாவுடன் இணைக்கப்பட்டு விடுகிறது. மாயா அந்த மாதிரி இடையூறு செய்கிறது அவர் விரும்பினாலும் கூட மாயாவுடன் இருக்கும் கனக்ஷனை துண்டிக்க முடிவதில்லை. எப்படி இங்கேயும் உங்களுடைய இந்த உலகத்தில் யாருக்காவது தவறான எண் கிடைத்து விடுகிறது என்றாலும் மறு பக்கத்தில் உள்ள அவர் சொன்னாலும் கூட துண்டிப்பதில்லை, நீங்கள் அவரை மற்றும் அவர் உங்களை துண்டியுங்கள். துண்டியுங்கள் என்று கூறிக் கொண்டிருப்பீர்கள். அதே போலவே மாயாவும் அந்த நேரம் பலஹீனமான குழந்தைகளின் கனக்ஷனையே துண்டித்து விடுகிறது. மேலும் அவர்களைத் தொந்தரவும் செய்கிறது. ஏன் தொந்தரவு செய்கிறது? அதற்கும் காரணம் இருக்கிறது. ஏனென்றால் அவர்கள் முழு நாளும் அலட்சியமுடையவர்களாக மற்றும் சோம்பலின் வசமானவர்களாக இருக்கிறார்கள். மேலும் அவர்களுடைய கவனம் குறைவாக இருக்கிறது. அந்த மாதிரி அலட்சியமான ஆத்மாக்களை மாயாவும் விசேஷமான வரதானத்தின் நேரத்தில் தந்தையின் கட்டளைப்படி நடக்க விடாமல் பழி வாங்கி விடுகிறது. மேலும் அந்த மாதிரி ஆத்மாக்களின் காட்சி மிகவும் ஆச்சர்யப்படும்படியாகத் தென்படுகிறது. அமிர்தவேளையின் கொஞ்ச நேரத்தின் இடையில் அனேக சொரூபம் தென்படுகிறது. ஒன்றோ சில நேரம் தந்தையிடமிருந்து உதவி பெறுவதற்கான முறையீடுகளை மிகவும் அன்போடு வைக்கிறார்கள். சில நேரம் தந்தையை குஷிப் படுத்துவதற்காக தந்தைக்கே தந்தையின் மகிமை மற்றும் காரியங்களை நினைவூட்டுகிறார்கள். பாபா! நீங்களோ இரக்க மனமுடையவர். சர்வ சக்திவான், வரதானி ஆவீர்கள். குழந்தைகளுக்காகத் தானே வந்திருக்கிறீர்கள் என்று இப்படி அப்படி.

## 1974 அவ்யக்த முரளி

சில நேரம் பின்பு ஆவேசத்தில் வந்து மாயாவினால் தொந்தரவு செய்யப்பட்டு அனைத்து சக்திகள் என்ற ஆயுதங்களை உபயோகிப்பதற்கான முயற்சி செய்கிறார்கள். பின்பு அவர்கள் வாளை சுழற்றுகிறார்கள், மேலும் சில நேரம் கேடயத்தை முன்னுக்கு வைக்கிறார்கள் ஆனால் ஆவேசத்தின் கூடவே கட்டளைப்படி நடப்பவர், நம்பிக்கைக்குரியவர் மற்றும் நிரந்தரமான நினைவு சொரூபமானவர் ஆவதற்கான சுயநினைவு இல்லாத காரணத்தினால் அவர்களுடைய ஆவேசம் சரியான இலக்கை சென்று அடைய முடியவில்லை. இது மிகவும் சிரிப்பூட்டும் காட்சியாக இருக்கிறது.

சில சில குழந்தைகள் அந்த மாதிரி வெகுளிக் குழந்தைகளாக இருக்கிறார்கள், ஈஸ்வரிய பிராப்தி மற்றும் மாயாவின் வித்தியாசத்தைக் கூடத் தெரிந்திருக்கவில்லை. தூக்கத்தையே அமைதி சொரூபம் மற்றும் விதை ரூப நிலை என்று புரிந்து கொள்கிறார்கள். தூக்கம் மூலமாக அற்ப காலத்தின் ஓய்வின் சுகத்தை அதீந்திரிய சுகம் என்று நினைத்து விடுகிறார்கள். அப்படி அனேக விதமான குழந்தைகள் அனேக விதமான காட்சிகளைக் காண்பித்துக் கொண்டே இருக்கிறார்கள் ஆனால் யார் இதுவரை மகாரதிக் குழந்தை என்ற கணக்கில் வருகிறார்களோ மற்றும் உங்களுடைய கணக்குப் படியும் இருக்கிறார்களோ அவர்கள் மேலே சொன்ன அவர்களை விட குறைவாக இருக்கிறார்கள். எட்டில் இருக்கும் நீங்களோ புரிந்து கொள்கிறீர்கள், ஆனால் தந்தையின் கணக்கில் எட்டு குறைவானது. இதுவரையிலும் அஷ்ட இரத்தினங்களின் அஷ்ட சக்தி சொரூபம், எண்ணம், சொல் மற்றும் காரியத்தை தந்தைக்குச் சமமானதாக ஆக்கும் நிலையை அடைந்து கொண்டிருக்கிறார்கள். நாடகப்படி அந்த மாதிரி அஷ்ட இரத்தினங்களுக்கு தந்தையைச் சந்திப்பதற்காக விசேஷ அதிகாரம் கிடைத்திருக்கிறது. அவர்களுக்கு தொடர்பை ஏற்படுத்துவதற்காக எண்ணை சுழற்ற வேண்டியதில்லை. ஏனென்றால், அவர்களுடைய கனக்ஷன் நிரந்தரமாக இருக்கிறது. இந்த வயர்லஸ் (கம்பியில்லா தொடர்பு) வைஸ்லஸ் (விகாரமற்ற) ஆத்மாக்களுக்குத் தான் கிடைக்கிறது. நினைத்தீர்கள், உடனேயே சந்திப்பு ஏற்பட்டது. அந்த மாதிரி வரம் பெற்ற குழந்தைகள் மிகக் குறைவாக இருக்கிறார்கள். இது தான் அமிர்தவேளையின் காட்சி.

பாப்தாதாவிடம் நாள் முழுவதும் ஐந்து விதமான க்யூ (வரிசை) ஏற்படுகிறது: (1) ஒரு க்யூ விதவிதமான வேண்டுதல்களைக் கொண்டு வருபவர்களுடையது. சில நேரம் தனக்காக எங்களுக்கு சக்தி கொடுங்கள், சகயோகம் கொடுங்கள், புத்தியின் பூட்டைத் திறங்கள், தைரியம் கொடுங்கள் அல்லது வழி கொடுங்கள் என்று வேண்டுதல்களைக் கொண்டு வருகிறார்கள். சில நேரம் நெருக்கத்தில் வரக்கூடிய ஆத்மாக்களுக்காக என்னுடைய கணவன் மற்றும் இந்த உறவினரின் புத்தியின் பூட்டை திறந்து விடுங்கள் என்று வேண்டுதல்களைக் கொண்டு வருகிறார்கள். சில நேரம் தன்னால் செய்த சேவையில் வெற்றி கிடைக்காததைப் பார்த்து நம்முடைய வெற்றி ஏற்பட்டு விட வேண்டும். நாங்கள் சேவை செய்வோம் மற்றும் நீங்கள் வெற்றியைக் கொடுங்கள் என்ற வேண்டுதலையும் கொண்டு வருகிறார்கள். சிலர் எங்களுடைய நினைவு யாத்திரை நிரந்தரமானதாக மற்றும் சக்திசாலியாகி விடட்டும், நம்முடைய இந்த சம்ஸ்காரம் அழிந்து விடட்டும், அந்த மாதிரி விதவிதமான வேண்டுதல் செய்யக்கூடியவர்கள் தந்தையிடம் வந்து கொண்டே இருக்கிறார்கள்.

(2) இரண்டாவது வரிசை புகார்கள் கூறக்கூடியவர்களுடையது. அவர்களின் பாஷையே - இது ஏன். இது எப்படி எப்பொழுது மற்றும் எதற்கு என்பதாக இருக்கும். நான் விரும்புகிறேன் இருந்தாலும் ஏன் நடக்கவில்லை, நினைவு ஏன் நிரந்தரமாக இருப்பதில்லை? லௌகீக மற்றும் அலௌகீக (ஈஸ்வரிய பரிவாரத்திலிருந்து ஏன் சகயோகம் கிடைப்பதில்லை? அப்படி அனேக விதமான புகார்கள் இருக்கின்றன. அவற்றில் கூட விசேஷமாக இரண்டு விஷயங்களில் அதாவது வீணான எண்ணம் ஏன் வருகிறது, உடல் நோய் ஏன் வருகிறது. நினைவு ஏன் மறந்து விடுகிறது ஆகியவை. இந்த விதமான புகார்களின் க்யூ நீளமானதாக இருக்கிறது.

(3) சிலர் பாப்தாதாவை ஜோதிடர் என்று நினைத்து வரிசையில் நிற்கிறார்கள். என்னுடைய நோய் அகலுமா? சேவையில் வெற்றி கிடைக்குமா? என்னுடைய இந்த உறவினர் ஞானத்தில் வருவாரா? என்னுடைய கிராமம் மற்றும் நகரத்தில் சேவை வளர்ச்சி அடையுமா? விவகாரத்தில் வெற்றி கிடைக்குமா? இந்த விவகாரம் செய்யலாமா அல்லது விட்டு விடவா? வியாபாரம் செய்யவா அல்லது வேலை

செய்யவா? நான் மகாரதியாக ஆக முடியுமா? நான் ஆவேன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அந்த மாதிரி இல்லற விவகாரத்தின் சின்ன சின்ன விஷயங்களின் க்யூவும் வருகிறது. என்னுடைய மாமனாரின் கோபமும் குறையுமா? நான் பந்தனத்தில் உள்ளவன் / உள்ளவள் என்னுடைய பந்தனம் விடுபடுமா? நான் சுதந்திரமாவேனா? மேலும் நான் முழுமையாக சரண்டர் ஆவேனா? என்று இந்த மாதிரியும் கேட்கிறார்கள். என்னுடைய விருப்பம் நிறைவேறுமா? அப்படி இந்த மாதிரி க்யூவும் ஏற்படுகிறது.

(4) நான்காவது க்யூ முறையீடு கொடுப்பவர்களுடையது. எப்பொழுது நான் வயதானவர் ஆகியிவிட்டேனோ, எப்பொழுது என்னுடைய உடல் நோயுற்றதாக ஆகி விட்டதோ அந்த நேரத்தில் நீங்கள் ஏன் வந்தீர்கள்? நீங்கள் ஏன் என்னை முன்பாகவே எழுப்பவில்லை? கால தாமதமாக ஏன் எழுப்பினீர்கள்? மீண்டும் சிந்து தேசத்திலேயே ஏன் வந்தீர்கள்? முதன் முதலில் அங்குள்ள சகோதரிகள் ஏன் உருவானார்கள்? சங்கமயுகத்தில் எங்களை கோபர்களாக (சகோதரர்களாக) ஏன் ஆக்கினீர்கள்? சக்திகள் முதலில் என்ற பழக்கத்தை ஏன் உருவாக்கினீர்கள்? இந்தக் கடைசி ஜென்மத்திலேயே நான் பந்தனமுள்ளவளாக ஆக வேண்டுமா? எனக்கு மட்டும் இந்த மாதிரி கர்ம பந்தனம் ஏன்? என்னை ஏன் ஏழை ஆக்கினீர்கள் அதனால் பணத்தினால் என்னால் சகயோகம் செய்ய முடியவில்லை? சாகார ரூபத்தில் சந்திப்பதற்கான பங்கு எங்களுக்கு ஏன் உருவாக்கப்படவில்லை? அந்த மாதிரி அனேக விதமான முறையீடு கொடுப்பவர்களின் க்யூ இருக்கிறது.

(5) ஐந்தாவது க்யூவும் இருக்கிறது, அது இப்பொழுது குறைந்து கொண்டே வந்து கொண்டிருக்கிறது. அது ராயல் ரூபத்தில் கேட்பதற்கானது. இப்பொழுது கிருபை மற்றும் ஆசீர்வாதம் என்ற வார்த்தையை கூறுவதில்லை ஆனால் அதில் விருப்பமோ நிரம்பியே இருக்கிறது.

அப்படி எத்தனை விதமான க்யூ ஏற்படுகிறது என்று கேட்டீர்களா? இப்பொழுது ஒவ்வொருவரும் முழு நாளில் இன்று நான் எத்தனை க்யூவில் நின்றேன் என்று தன்னைத் தானே பாருங்கள். எப்படி இன்றைய

நாட்களில் ஒரே நாளில் அனேக க்யூவில் நிற்க வேண்டியது இருக்கிறது இல்லையா? அப்படியே பாப்தாதாவிடமும் அனேகக் குழந்தைகள் முழு நாளில் இந்த க்யூவிலேயே நின்று கொண்டிருக்கிறார்கள். அவ்யக்த ரூபம் மற்றும் சூட்சும ரூபத்தில் மட்டுமின்றி ஆனால் எப்பொழுது அவ்யக்கத்திலிருந்து வியக்தத்தில் சந்திப்பதற்காக வருகிறார் என்றாலும் இந்த சின்ன சின்ன விஷயங்களைக் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். மாஸ்டர் ஞானம் நிறைந்தவராக மற்றும் மாஸ்டர் சர்வ சக்திவானின் நிலையில் நிலைத்திருந்து விட்டீர்கள் என்றால் அனைத்து விதமான க்யூ முடிவடைந்து உங்கள் ஒவ்வொருவரின் எதிரில் உங்களுடைய பிரஜை மற்றும் பக்தர்களின் க்யூ ஏற்படும். எதுவரை தானே இந்த க்யூவில் பிஸியாக இருக்கிறீர்களோ அதுவரை அந்த க்யூ எப்படி ஏற்படும். எனவே இப்பொழுது தன்னுடைய நிலையில் நிலைத்திருந்து, இந்த அனைத்து க்யூவிலிருந்தும் விடுபட்டு தந்தையுடன் எப்பொழுதும் சந்திப்பை ஏற்படுத்துவதற்கான முழு ஈடுபாட்டில் தன்னுடைய நேரத்தை செலவழியுங்கள் மற்றும் அன்பிலேயே ஐக்கியமானவர் ஆகி விட்டீர்கள் என்றால், இந்த அனைத்து விஷயங்களும் முடிவடைந்து விடும். இந்த அனைத்து முறையீடுகள், புகார்களுக்கான பதில் அடுத்த முறை கூறுவோம். அதனால் அடிக்கடி இந்த விஷயத்தை கேட்பதற்கும் மற்றும் இதில் நேரத்தை இழப்பதற்கும் அவசியம் இருக்காது. நல்லது.

அந்த மாதிரி அனேக விதமான க்யூவிலிருந்து விடுபட்டு, பாப்தாதாவின் எப்பொழுதும் துணைவராக எப்பொழுதும் சகயோகியாக இருக்கும் குழந்தைகளுக்கு, ஒரு நொடியில் சந்திப்பை ஏற்படுத்தக்கூடிய, அனைத்து உறவுகளையும் ஒரு தந்தையோடு வைத்துக் கொள்ளக்கூடிய, அனைத்து பிராப்தி சொரூபம், ஆசை என்றால் என்னவென்று அறியாத நிலையில் எப்பொழுதும் இருக்கக்கூடிய மற்றும் அஷ்ட சக்தி சொரூப குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள், இரவு வணக்கம் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: சாதனம் மற்றும் சால்வேஷனின் (ஆபத்துக்கால மீட்பு-தீர்வு) பிரபாவத்தில் வருவதற்குப் பதிலாக இயற்கையை தாசியாக ஆக்கக்கூடிய வெற்றியாளர் ஆகுக!

ஒருபொழுதும் யோகி ஆத்மா மற்றும் புருஷோத்தம ஆத்மாக்கள் இயற்கையின் பிரபாவத்தில் வர முடியாது. நீங்கள் பிராமண ஆத்மாக்கள் புருஷோத்தம மற்றும் யோகி ஆத்மாக்கள் ஆவீர்கள். இயற்கை எஜமானர்கள் உங்களுடைய தாசியாகும். எனவே இயற்கையின் எந்தவொரு சாதனம் மற்றும் சால்வேஷன் (ஆபத்துக்கால மீட்பு) உங்களை தன்னுடைய பிரபாவத்தில் பிரபாவம் செய்து விட வேண்டாம். சாதனம் சாதனையின் (இடைவிடாத பயிற்சியின்) ஆதாரமாக இருக்க வேண்டாம் ஆனால் சாதனை சாதனங்களை ஆதாரமாகக் கொள்ளட்டும். அப்பொழுது தான் இயற்கையை வென்ற வெற்றி ஆத்மா என்று கூறுவோம்.

சுலோகன்: யார் ஒவ்வொரு நேரத்தையும் கடைசி நேரம் என்று புரிந்து நடந்து கொள்கிறாரோ அவர் தான் எவரெடி ஆவார்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 11.07.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# முரளியில் கொடுக்கப்பட்டுள்ள டைரக்ஷன் (வழிகாட்டுதல்) மூலமாக அனைத்து குறைகளிலிருந்து விடுபடுதல்!

தன்னை மகாதானி, அனைத்து சக்திகளின் அதிகாரி, திரிமூர்த்தி தந்தை மூலமாக கிடைத்துள்ள மூன்று ஆசனதாரி என்று நினைக்கிறீர்களா? மூன்று ஆசனங்கள் எவை? ஒன்று துக்கமற்ற உலகின் மகாராஜா ஆவதற்காக சாட்சி நிலையில் நிலைத்திருக்கும், சாட்சி நிலைக்கான ஆசனம். இரண்டாவது பலம் நிறைந்த மாஸ்டர் சர்வ சக்திவான், தந்தைக்குச் சமமாக ஆகக்கூடிய தந்தையின் இதயம் என்ற ஆசனம். மூன்றாவது எதிர்காலத்தில் உலக மகாராஜாவின் ஆசனம், இந்த மூன்று ஆசனங்களின் அதிகாரியாக ஆகியிருக்கிறீர்களா? மூன்று ஆசனங்களின் அதிகாரியின் தற்சமய நிலை என்னவாக இருக்கிறது? மூன்று ஆசனங்களின் மூன்று விசேஷங்களைக் கூறுங்கள்.

சாட்சி நிலையின் ஆசனத்தின் முக்கியமான அடையாளமாக என்ன இருக்கிறது? அவர் ஒவ்வொரு அடியிலும், ஒவ்வொரு எண்ணத்திலும் பாப்தாதாவை துணைவனாக எப்பொழுதும் அனுபவம் செய்வார். எவ்வளவு துணையின் நிலை அனுபவம் ஆகுமோ அந்த அளவே ஆடாத அசையாதவராகி அதீந்திரிய சுகத்தில் இருப்பார். அவருடைய ஒவ்வொரு வார்த்தையிலும் தந்தையின் துணை தென்படும். எப்படி பாப்தாதா நடைமுறையில் எப்பொழுதுமே துணைவனாக இருக்கிறார், நீங்கள் அவரை தனியாக்க விரும்பினாலும் பிரிக்க முடியாது, எப்படி இரண்டு துணைவர்களின் நெருக்கத்தை இருவரா அல்லது ஒருவரா என்று நினைக்கும் அளவிற்கு அனுபவம் ஆகும். சில நேரம் இருவருடைய தோழமை ஒன்று என்பது மாதிரியும் அனுபவம் செய்கிறீர்கள். அதே போலவே இருவரின் துணை ஒரே சமமாக இருக்கட்டும். ஒன்றாக மட்டும் அல்ல ஆனால் ஒரே சமமாக

இருக்கட்டும். சமமானதை மனிதர்கள் ஒன்றரக் கலந்து விடுவது என்று கூறிவிட்டார்கள். அப்படி தன்னை பாப்தாதாவின் துணைவன் என்று அனுபவம் செய்கிறீர்களா? ஃபாலோ ஃபாதர் (தந்தையை பின்பற்றி நடக்கும்) காரியம் செய்கிறீர்களா? எப்பொழுது ஃபாலோ ஃபாதர் இருக்கிறது என்றால் சாட்சி நிலை மற்றும் துணையின் அனுபவம் ஒவ்வொரு விநாடியும் மற்றும் ஒவ்வொரு அடியிலும் இருக்க வேண்டும். அந்த மாதிரி சாட்சி நிலையின் அனுபவி தான் ஆசனதாரியாக இருக்கிறார்கள். இரண்டாவது யார் உண்மையானவராக இருப்பாரோ அதாவது எண்ணம், சொல், செயல் மற்றும் உடல், மனம், பொருள் அனைத்து விஷயங்களிலும் பாப்தாதாவை பின்பற்றி நடப்பதில் நிரூபணம் கொடுப்பவராக யார் இருப்பாரோ அவர் தான் தந்தையின் இதய சிம்மாசனதாரியாக இருப்பார். மூன்றாவது உலக மகாராஜா ஆகி உலக ராஜ்யத்தின் சிம்மாசனதாரி ஆவதற்கானது. அவர் கர்மேந்திரியங்களை வென்றவராக மட்டுமின்றி கூடவே இயற்கையையும் வென்றவராக இருப்பார். அந்த மாதிரி பாவங்களை வென்றவர், கர்ம இந்திரியங்களை வென்றவர், இயற்கையை வென்றவர், உலகை வென்றவர் ஆகிறார். அந்த மாதிரி மூன்று ஆசனதாரியாக ஆகியிருக்கிறீர்களா? ஒருவேளை மூன்று ஆசனங்களின் அதிகாரியாக ஆகி விட்டீர்கள் என்றால் அந்த மாதிரி அதிகாரி தந்தையிடம் எந்த விதமான க்யூவிலும் (வரிசையில்) இருக்க மாட்டார். யார் ஏதாவது க்யூவில் இருக்கிறார் என்றால் அவருக்கு எந்த விதமான அதிகாரத்தின் பிராப்தியும் இல்லை என்பதாகும்.

இன்று பாப்தாதா க்யூவில் நிற்கும் ஒவ்வொருவருக்கும் பதில் கொடுத்துக் கொண்டிருக்கிறார். இதைச் செய்யுங்கள், அதைச் செய்யுங்கள் என்று வித விதமான வேண்டுதல் செய்கிறீர்கள். அந்த மாதிரி வேண்டுதல் செய்கிறீர்கள் மற்றும் பாப்தாதா தன்னையும் விட அதிகமாக குழந்தைகளை ஒவ்வொரு காரியத்திலும் முன்னுக்கு வைக்கிறார். எப்பொழுது அனைத்து சக்திகளையும் அதாவது பவர் குழந்தைகளுக்கு கொடுத்து விட்டது என்றால் அந்த மாதிரி குழந்தையாக இருந்து எஜமானன் ஆகுபவர்கள் ஏன் வேண்டுதல் செய்கிறார்கள்? எப்படி தந்தை யாருடைய புத்தியில் போடப்பட்ட பூட்டையும் திறக்க முடியும் மற்றும் சம்ஸ்காரத்தை மாற்ற முடியும் என்றால் நீங்கள் அதைச் செய்ய முடியாதா? உங்களுடைய புத்தியில்

போடப்பட்டிருந்த பூட்டு திறந்து விட்டதா? இந்த விசயத்தில் இல்லை என்று கூற மாட்டீர்கள் அல்லவா? பாப்தாதா ஒவ்வொருவரின் புத்தியின் பூட்டை திறந்து அனுபவி ஆக்கியிருக்கிறார் இல்லையா? எப்படி உங்களுடையதை தந்தை திறந்தார், அனுபவம் செய்வித்தார். என்றால் அனுபவம் செய்த விஷயத்தை சுயம் நீங்களே செய்ய முடியாதா? எப்படி உங்களுடையது திறந்து விட்டது, அப்படியே மற்றவர்களுடையதைத் திறவுங்கள். மற்றவர்களின் பூட்டைத் திறப்பது கடினமா என்ன? பூட்டுகளின் சாவி எது? அந்தச் சாவியை தந்தை உங்களுக்கு கொடுக்கவில்லையா என்ன? எப்பொழுதிலிருந்து தந்தையின் குழந்தைகளாக ஆகி விட்டீர்களோ அப்போதிருந்தே தந்தையினுடையது உங்களுடையதாக ஆகவில்லையா என்ன? சாவியும் உங்களுடையது தான் இல்லையா? சாவி இருக்கிறது, இருந்தும் பூட்டைத்திறவுங்கள் என்று பாப்தாதாவிடம் கூறுகிறார்கள். அல்லது தேவையான நேரத்தில் சாவி கிடைப்பதில்லையா? தந்தையோ திவ்ய திருஷ்டியின் சாவியை மட்டும் தன்னிடம் வைத்துக் கொள்கிறார். மற்றபடி புத்தியின் பூட்டைத் திறக்கும் சாவியை தன்னிடம் வைத்துக் கொள்வதில்லை. புத்தியின் பூட்டைத் திறக்கும் சாவி எது? அனைத்து சக்திகள், இது தான் சாவி ஆகும். இதுவோ அனைவரிடமும் இருக்கிறது இல்லையா? திவ்ய திருஷ்டியை கொடுப்பவராகவோ நீங்கள் இல்லை ஆனால் மாஸ்டர் சர்வ சக்திவானாகவோ இருக்கிறீர்கள் இல்லையா. எப்பொழுது அனைத்து சக்திகளின் சாவி தந்தை மூலமாக கிடைத்து விட்டது என்றால் பிறகும் ஏன் வேண்டுதல் செய்கிறீர்கள்? தந்தையை சேவகன் ஆக்கியிருக்கிறீர்கள் என்ற காரணத்தினால் இதைச் செய்யுங்கள் மற்றும் அதைச் செய்யுங்கள் என்று கட்டளை கொடுக்கிறீர்களா? வானபிரஸ்த (வயோதிக) நிலை வரை சென்றடைந்தவர் கூட இதுவரையிலும் சிறியவர்களாகவே இருக்கிறார்கள். இப்பொழுதோ தன்னுடைய படைப்பை படைப்பதற்கும், பிரஜை மற்றும் பக்தர்களின் மாலையை உருவாக்குவதற்கும் நேரம் இருக்கிறது. நான் சிறியவன் என்று படைப்பவர் கூறினார் என்றால் எப்படி படைப்பை படைப்பார். எனவே இந்த விதவிதமான வேண்டுதல்களை தந்தையிடம் கூறுகிறீர்கள். முதலில் சாவியை அடையுங்கள், பின்பு வேண்டுதல்கள் தானாகவே நிறைவேறிவிடும்.

இரண்டாவது விஷயம் தந்தையிடம் முறையீடு செய்கிறீர்கள். முறையீடுகளுக்கும் வரிசை இருக்கிறது இல்லையா? எந்தவிதமான முறையீட்டை யார் கொடுப்பார்? எப்பொழுது ஞானம் நிறைந்தவராக இல்லையோ அப்பொழுது தான் ஏதாவது விஷயத்தின் முறையீடு கொடுக்கப்படுகிறது. இது ஏன் நடந்தது? அந்த மாதிரி நடக்கக்கூடாது, பிற்காலத்தில் ஏன் வந்தோம், சாகாரத்தில் ஏன் சந்திக்கவில்லை, இவை அனைத்தும் முறையீடுகள் தான் இல்லையா? ஒருவேளை மாஸ்டர் ஞானம் நிறைந்தவரின் நிலையில் நிலைத்து விட்டீர்கள், திரிகாலதரிசியின் நிலையில் நிலைத்து விட்டீர்கள் என்றால் ஏதாவது முறையீடு செய்வீர்களா? முறையீடுகள் மூலமாக சாகார உடலில் சந்திப்பதற்கான பிராப்தி ஏற்பட முடியுமா? நடந்து முடிந்த நடிப்பின் பாகம் மீண்டும் நடக்குமா என்ன? அதுவே 5000 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் அதே போல் நடக்கும். அப்படி ஞானம் நிறைந்த நிலையில் நிலைத்திருப்பவர் ஒருபொழுதும் எந்தவிதமான முறையீடும் செய்ய மாட்டார். முறையீடு என்றாலே ஞானத்தின் குறை மற்றும் லைட், மைட்டின் (ஞானம், சக்தியின்) குறை என்பதாகும்.

மூன்றாவது விஷயம் புகார்கள் செய்கிறீர்கள். அதனுடையதும் கூட நீளமான க்யூ தான் இல்லையா? யோகா வருவதில்லை, வீணான எண்ணம் அதிகமாக வருகிறது அல்லது இந்த சக்தியை தாரணை செய்ய முடிவதில்லை என்று விதவிதமான வகைகளில் புகார்கள் செய்து கொண்டே இருக்கிறீர்கள். இந்த புகார்களுக்கான காரணம் என்ன? வீணான எண்ணம். முக்கியமான புகார் அதிகமானவர்களிடம் இது தான் தென்படுகிறது. இரண்டாவது முக்கியமான புகார் உள்உணர்வு மற்றும் பார்வையில் சஞ்சலம் ஏற்படுகிறது. எதுவரை இந்த இரண்டு புகார்களும் இருகின்றனவோ அதுவரை தினசரி முரளி மூலமாக என்ன டைரக்ஷன் (வழிகாட்டுதல்) கிடைத்துக் கொண்டிருக்கிறதோ அந்த டைரக்ஷனை அதாவது முரளியை கவனமாகக் கேட்டு மற்றும் தாரணை செய்வதில்லை. வீணான எண்ணம் இருப்பதற்கான மூல காரணம் தந்தை மூலமாக தினசரி கிடைக்கும் ஞான பொக்கிஷத்தின் குறைவு ஆகும். ஒருவேளை முழு நேரமும் ஞான ரத்தினங்களோடு விளையாடுவதில் மற்றும் ஞான பொக்கிஷங்களைப் பார்ப்பதில், சிந்தனை செய்வதில் புத்தியை பிஸியாக வைத்தீர்கள் என்றால் வீணான எண்ணம் வர முடியுமா என்ன? முதலில் என்னுடைய புத்தி

முழு நாளும் ஞானத்தை சிந்திப்பதில் மற்றும் உலக நன்மைக்கான திட்டம் தீட்டுவதில் பிஸியாக இருக்கிறதா என்று தன்னைத் தானே கேளுங்கள்.

எப்படி லௌகீக முறையில் கூட ஏதாவது காரியத்தில் புத்தி பிஸியாக இருக்கிறது என்றால் மற்ற எண்ணம் மற்றும் மற்ற விஷயங்கள் வருவதில்லை. ஏனென்றால் புத்தி பிஸியாக இருக்கிறது. உங்களுக்குக் கூட தந்தை மூலமாக என்ன காரியம் செய்வதற்காக கிடைத்திருக்கிறதோ அது எவ்வளவு பெரிய பொறுப்பானது. மேலும் இதுவரையிலும் கூட இன்னும் எவ்வளவு காரிய செய்ய ண்டியதாக இருக்கிறது? இப்பொழுது உலகின் மொத்த ஆத்மாக்களின் கணக்குப்படி ஐந்து பாண்டவர்கள் உருவாகியிருக்கிறார்கள். இவ்வளவு மீதம் இருக்கும் காரியம் மற்றும் அவற்றின் கூடவே தன்னுடைய பாவங்களை பஸ்மம் செய்யும் காரியமும் இருக்கிறது. எத்தனை ஜென்மங்களின் சுமையை பஸ்மம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. 63 ஜென்மங்களின் பாவ கர்மங்களின் கணக்கை பஸ்மம் செய்ய

வேண்டும். கூடவே ஞான பொக்கிஷத்தை சிந்தித்துக் கொண்டே இருந்தீர்கள் என்றால் நேரம் மிச்சமாகுமா அல்லது குறைவாகத் தென்படுமா? மூன்று விஷயங்கள் கூறினோம் ஒன்று ஞான பொக்கிஷத்தை சிந்தனை செய்யும் காரியம், இரண்டாவது பாவங்களை பஸ்மம் செய்யும் காரியம், மூன்றாவது உலக நன்மைக்கான காரியம். இந்த மூன்றுமே விசேஷமானவை மேலும் எல்லைக்கப்பாற்பட்ட காரியம் ஆகும். இவ்வளவு புத்திக்கான காரியங்கள் இருந்த போதிலும் புத்தி எப்படி ஃப்ரீ ஆக இருக்கிறது? உங்களுக்கு எப்படி ஓய்வு கிடைக்கிறது? உலக நன்மைக்கான காரியத்தை முடித்து விட்டீர்களா என்ன? பாவத்தை அழித்து விட்டீர்களா என்ன? இவ்வளவு காரிய நடவடிக்கைகளை செய்விப்பவர்கள் மற்றும் இவ்வளவு பெரிய காரியத்திற்குப் பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்கள் ஃப்ரீ ஆக இருக்கிறார்கள் என்றால் அதை என்னவென்று கூறுவது? தன்னுடைய காரியத்தின் ஞானமும் இல்லை மற்றும் தனக்கு செய்விப்பதற்கான ஞானம் இல்லை அல்லது தன்னுடைய தினசரி நடவடிக்கைகளை ஒருங்கமைப்பதற்கான ஞானம் இல்லை என்று தான் சொல்லலாம். இன்றைய நாட்களில் அந்த அரசாங்கத்தின் சிறு சிறு எழுத்தர் கூட

தன்னுடைய கால அட்டவணையை அமைத்துக் கொள்ள முடிகிறது என்றால் மாஸ்டர் ஞானம் நிறைந்தவர், மாஸ்டர் சர்வ சக்திவான் தன்னுடைய கால அட்டவணையை அமைத்துக் கொள்ள முடியாதா? ஏனென்றால் சுயம் நீங்கள் தன்னுடைய ஆசனத்தில் செட் ஆவதில்லை. எனவே அப்செட் ஆகி விடுகிறீர்கள்.

தினசரி அமிர்தவேளை பாபாவுடன் சந்திப்பை செய்த பிறகு மற்றும் ஆன்மீக உரையாடல் செய்த பிறகு தினசரி கால அட்டவணையை வடிவமைத்துக் கொள்ளுங்கள். எப்படி ஸ்தூலமான காரியத்திற்கான நிகழ்ச்சியை வடிவமைக்கிறீர்கள் அதே போல் தினசரி நடவடிக்கையின் கூடவே பரமாத்ம (ஆன்மீக) காரியத்திற்கான நிகழ்ச்சியையும் வடிவமைத்துக் கொள்ளுங்கள். வீணான எண்ணம் இருப்பது என்றால் கிரீடம் அணிந்தவராக ஆவதில்லை என்பதாகும். கிரீடம் பொறுப்பிற்கானது. தன்னுடைய பொறுப்பு மற்றும் உலகின் பொறுப்பு. ஒருவேளை இப்பொழுது கூட கிரீடத்தை இறக்கி வைத்து விடுகிறீர்கள் மற்றும் கிரீடம் அணிந்தவராக ஆக முடியவில்லை என்றால் எதிர்காலத்தில் ஒருபொழுதும் கிரீடம் அணிந்தவராக ஆக முடியாது. இப்பொழுதிலிருந்தே கிரீடம் அணிந்தவராக ஆவதற்கான பயிற்சி தேவை. சாட்சி நிலையின் ஆசனம் மற்றும் பாப்தாதாவின் இதயத்தின் ஆசனம் அப்படி இப்பொழுதிலிருந்தே கிரீடம் மற்றும் ஆசனதாரியாக ஆனீர்கள் என்றால் எதிர்காலத்திலும் கிரீடம் மற்றும் ஆசனத்தை அடைவீர்கள். உங்களுடைய கால அட்டவணையை தயார் செய்யுங்கள். நீங்களே உங்களுடைய ஆசிரியராகி உங்களுக்கு வீட்டுப்பாடம் கொடுங்கள். எப்படி ஆசிரியர் மாணவர்களுக்கு வீட்டுப்பாட வேலை கொடுக்கிறார் இல்லையா. இதில் புத்தி பிஸியாக இருக்கட்டும், இந்த விதமாக தினசரி தனக்கு வீட்டுப்பாடம் கொடுங்கள் பின்பு சாட்சியாகி வீட்டுப்பாடத்தில் பிஸியாக இருக்கிறீர்களா அல்லது மாயாவின் கவர்ச்சியில் வீட்டுப்பாடத்தை மறந்து விட்டீர்களா என்று பாருங்கள். பின்பு புகார்கள் முடிவடைந்து விடும்.

இரண்டாவது விஷயம் உள்உணர்வு மற்றும் பார்வை சஞ்சலமாவதற்கானது தற்சமயத்திலும் பெரும்பான்மையோரின் ரிசல்ட்டில் எண்ணத்தில், கனவில், காரியத்தில், உள்உணர்வு மற்றும் பார்வை சஞ்சலப்படுகிறது என்று 50 சதவிகிதத்தினருக்கு இன்று வரை

புகார் இருக்கிறது. உள்உணர்வு மற்றும் பார்வை ஏன் சஞ்சலப்படுகிறது? எந்தவொரு பொருளும் ஏன் சஞ்சலப்படுகிறது, என்ன காரணம்? எந்தவொரு பொருளும் ஏன் ஆடுகிறது? ஆடுவதற்கான வாய்ப்பு இருக்கிறது எனவே ஆடுகிறது. ஒருவேளை அது நிரம்பி இருக்கிறது என்றால் அது ஆடுமா? எனவே பார்வை மற்றும் உள்உணர்வு சஞ்சலம் ஆவதற்கான காரணம் பாபா என்னென்ன நினைவு இருக்க வேண்டும் என்று கூறினாரோ அதற்கு பதிலாக நினைவு மறந்த நிலை இருக்கிறது என்றால் அப்பொழுது தான் ஆடுகிறது மற்றும் சஞ்சலப்படுகிறது. ஒருவேளை எப்பொழுதுமே நினைவு சொரூபமாக இருக்கிறீர்கள்? நினைவு சம்பன்னமாக இருக்கிறது என்றால் உள்உணர்வு மற்றும் பார்வை சஞ்சலப்படுவதற்கான இடமே இல்லை. இதற்காக சின்ன சுலோகனை மறந்து விடுகிறீர்கள். லௌகீகத்திலும் தீயதை பார்க்காதீர்கள், தீயதை நினைக்காதீர்கள், தீயதை சொல்லாதீர்கள் என்று கூறுகிறீர்கள். உடலைப் பார்ப்பது என்றால் தீயதைப் பார்ப்பது என்ற இந்த சுலோகனை எப்பொழுதும் நினைவில் வைக்க வேண்டும் மற்றும் நடைமுறையில் கொண்டு வர வேண்டும். தேகதாரிகளைப் பற்றி நினைப்பது மற்றும் எண்ணத்தை உருவாக்குவது தீயதாகும். தேகதாரியிடம் அவர் தேகதாரி என்று உணர்ந்து பேசுவது அவரை தேகதாரி என்று நினைத்து பேசுவதும் தீயது ஆகும். எனவே ஒருவேளை இந்த சாதாரண சுலோகனையும் நடைமுறையில் கொண்டு வந்தீர்கள் என்றால் பார்வை மற்றும் உள்உணர்வு சஞ்சலமாகாது.

எந்த நேரத்தில் உள்உணர்வு மற்றும் பார்வை சஞ்சலம் ஆகிறதோ அப்போது நான் அனைத்து உறவுகளின் மற்றும் அனைத்து ரசனைகளையும் தந்தை மூலமாக பிராப்தி செய்யவில்லையா என்று தன்னை புரிந்து கொள்ள வேண்டும். ஏதாவது உறவின் ரசனை அனுபவம் செய்யாமல் இன்னும் இருந்து விட்டதா என்ன? அதன் காரணமாக பார்வை மற்றும் உள்உணர்வு சஞ்சலப்படுகிறதா? எந்த உறவின் காரணமாக உள்உணர்வு மற்றும் பார்வை சஞ்சலம் ஆகிறதோ, அதே உறவின் ரசனையை ஒருவேளை தந்தையிடமிருந்து பெறுவதற்கான அனுபவம் செய்தீர்கள் என்றால் மற்ற பக்கம் பார்வை போகுமா என்ன? உதாரணமாக ஏதாவது ஒரு ஆணின் பார்வை பெண்ணின் பக்கம் செல்கிறது அல்லது பெண்ணின் பார்வை ஆணின் பக்கம் செல்கிறது என்றால் தந்தையினுடைய அனைத்து ரூபத்தையும்

தாரணை செய்ய முடியாதா என்ன? பிரியதர்ஷன் மற்றும் பிரியதர்ஷினியின் ரூபத்தில் கூட தந்தையின் பிரியதர்ஷினியாகி மற்றும் பிரியதர்ஷன் ஆகி அதீந்திரிய சுகத்தின் ரசனையை நிரந்தரமாக நினைவில் மற்றும் காரியத்தில் கொண்டு வரக்கூடியவரால், அந்த அனுபவத்தைச் செய்ய முடியாதா? தந்தை மூலமாக அனைத்து உறவுகளின் ரசனை மற்றும் அன்பின் அனுபவம் ஆகாத காரணத்தினால் தேகதாரிகள் மேல் உள்உணர்வு மற்றும் பார்வை சஞ்சலம் ஆகிறது. அந்த நேரத்தில் தந்தையை தர்மராஜின் ரூபத்தில் எதிரில் கொண்டு வர வேண்டும் மற்றும் தன்னை ஒரு கொடூரமான நரகவாசி மற்றும் மிகவும் அறுவறுப்பான புழுவிற்கு சமமாக நினைக்க வேண்டும். மேலும் மாஸ்டர் சர்வ சக்திவான் எங்கே மற்றும் நான் இந்த நேரம் என்னவாக ஆகி விட்டேன்? என்று தன்னைப் பாருங்கள். கொடூரமான நாகவாசி மிகவும் அறுவறுப்பான புழு என்று தன்னை அந்த ரூபத்தில் தன் முன் கொண்டு வாருங்கள் மேலும் நேற்று என்னவாக இருந்தேன் மற்றும் இன்று என்னவாகி விட்டேன் என்று எடை போட்டுப் பாருங்கள். ஆசனதாரியிலிருந்து என்னவாகி விட்டேன்? ஆசனம், கிரீடத்தை விட்டு விட்டு இப்பொழுது என்ன எடுத்துக் கொண்டிருக்கிறேன். அசுத்தத்தை எடுத்துக் கொண்டிருக்கின்றேன். அசுத்தத்தைப் பார்ப்பவர் மற்றும் எடுப்பவர் யாராக ஆனார்? இந்த மாதிரி சாக்கடையில் வேலை செய்பவர்களை என்ன சொல்வார்கள்? முற்றிலும் பொறுப்பான ஆத்மாவிலிருந்து தோட்டியாகி விடுகிறீர்கள். அந்த மாதிரியானவரை பாப்தாதா தொட முடியுமா? அன்பின் பார்வை கொடுக்க முடியுமா? முறையீட்டை ஏற்றுக்கொள்ள முடியுமா? புகார் மற்றும் வேண்டுதலைக் கேட்க முடியுமா? இவ்வளவு ஞானம் நிறைந்தவர் ஆன பிறகும் கூட உள்உணர்வு மற்றும் பார்வை சஞ்சலம் ஆகிறது என்றால் பக்த ஆத்மாவையும் விட கீழே விழுந்திருக்கும் ஆத்மா என்று தான் கூறுவோம். பக்தர்கள் கூட ஏதாவது யுக்தியினால் தன்னுடைய உள்உணர்வை ஸ்திரமாக்குகிறார்கள் அப்படி மாஸ்டர் ஞானம் நிறைந்தவர் பக்த ஆத்மாவையும் விட கீழே விழுந்து விடுகிறார். அந்த மாதிரி ஆத்மாவிற்கு ஏதாவது பிரஜை உருவாகுமா? தோட்டிக்கு ஏதாவது பிரஜை உருவாகுமா அல்லது சுயம் அவரே பிரஜை ஆவாரா?

தன்னுடைய ஒரு புகைப்படத்தை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். ஒன்று சாக்கடையை எடுப்பவராக, கூடைகளை நிரப்பி நிரப்பி எடுப்பவராக புகைப்படம் எடுத்து புத்தியில் வைத்துக் கொள்ளுங்கள். எந்த நேரம் உள்உணர்வு மற்றும் பார்வை சஞ்சலம் ஆகிறதோ அந்த நேரம் அந்த புகைப்படத்தைப் பாருங்கள். எப்படி பாப்தாதா எதிர்காலத்து பிராப்தியின் புகைப்படத்தை எடுக்க வைத்தார். ஏனென்றால் படத்தைப் பார்த்து சரித்திரம் நினைவில் வரும். அப்படி அந்த மாதிரியான படம் எதிரில் வந்தது என்றால் வெட்கம் வராதா? ஒரு பக்கம் மாஸ்டர் சர்வ சக்திவானின் புகைப்படம், இன்னொரு பக்கம் அந்த படத்தை வைத்தீர்கள் என்றால் நான் என்னவாகி விட்டேன் என்று உங்களுக்கே தெரிய வந்து விடும். மாஸ்டர் சர்வ சக்திவானின் எதிரில் இது வரையிலும் உள்உணர்வு மற்றும் பார்வை சஞ்சலம் ஆவது அழகில்லை.

உடலை ஏன் பார்க்கிறீர்கள் என்பது தான் முதல் தவறாகும். உங்களுக்கோ நெற்றியில் ஆத்மாவைப் பார்க்க வேண்டும் இல்லையா? நெற்றியில் மணி இருக்கிறது இல்லையா. நெற்றியில் மணிக்குப் பதிலாக விஷம் கிடைக்கும் பாம்பை ஏன் பார்க்கிறீர்கள்? அப்படி நெற்றிக்குப் பதிலாக உடலைப் பார்க்கிறீர்கள் என்ற இந்த முதல் தவறை செய்கிறீர்கள். சூழ்நிலை மற்றும் தொடர்பு அந்த மாதிரி இருக்கிறது, உடன் இருப்பவர் அப்படி இருக்கிறார், அலுவலகத்தில், வியாபாரத்தில் வேலை செய்ய வேண்டியதாக இருக்கிறது, நெருக்கத்தில் வர வேண்டியதாக இருக்கிறது என்று அனேகர் புகார் செய்கிறார்கள். நெருக்கத்தில் வந்து ஒருவர் இன்னொருவருடன் பேசிக் கொண்டே நெற்றிக்கு பதிலாக வேறு எங்கும் ஏன் பார்க்கவே செய்கிறீர்கள். இரண்டாவது விஷயம் சூழ்நிலைக்கு வசமாகக்கூடியவர் நான் தந்தையுடன் சேர்ந்து எந்த விஷயத்தின் கான்டிராக்ட் (ஒப்பந்தத்தை) எடுத்திருக்கிறேன் என்று தன்னைத் தானே கேளுங்கள். நீங்கள் அனைவரும் கான்டிராக்டர்கள் (ஒப்பந்ததாரர்) தான் இல்லையா? நரகத்தை மாற்றி சொர்க்கமாக்குவது, தமோகுண இயற்கையை சதோகுணமாக மாற்றுவது என்ற இந்த கான்டிராக்டை எடுத்திருக்கிறீர்கள் தான் இல்லையா? இயற்கையை மாற்றுபவர்கள் அவர்களே மாறிவிட்டார்களா? ஐந்து தத்துவங்களை மாற்றுவதற்கான கான்டிராக்ட் எடுத்திருக்கிறீர்கள் மேலும் சூழ்நிலைக்கு வசமாகி

விடுகிறீர்கள். எந்த நேரம் சூழ்நிலைக்கு வசமாகி விடுகிறீர்களோ அந்த நேரம் ஸ்தூல உதாரணத்தை எதிரில் வையுங்கள். அகர்பத்தி ஒருபொழுதும் சூழ்நிலைக்கு வசமாவதில்லை. சூழ்நிலையை மாற்றுவதற்காகத் தான் அகர்பத்தி இருக்கிறது. அகர்பத்தியை தயாரிப்பவர்கள் யார்? மனித ஆத்மாக்கள். உங்களுடைய படைப்பில் இந்த விசேஷம் இருக்கிறது மேலும் படைப்பவரிடம் இல்லை. அப்படியானால் படைப்பவராக இருக்கிறீர்களா அல்லது பலவீனமானவராகவா? இந்தப் புகாரையும் தன்னுடைய நினைவு மற்றும் யுக்தி மூலமாக முடிவு கட்டுங்கள்.

முக்கியமான இந்த இரண்டு புகார்கள் இருக்கின்றன. எப்பொழுது ஏதாவது பார்ட்டியை சந்திக்கிறீர்கள் என்றால் இந்தப் புகார் தான் விசேஷமாக இருக்கிறது. எனவே நாடகப்படி அடிக்கடி இதே விஷயத்தை பேசுவது மற்றும் அடிக்கடி தந்தை மூலமாக இதே அறிவுரை கிடைப்பது, இதற்கும் கணக்கு வழக்கு உருவாகிறது. எனவே நாடகப்படி இதுவரையிலும் விசேஷமான சேவையைப் பெறுவது என்ற இந்த பாகமும் முடிவடைகிறது. இதிலும் இரகசியம் இருக்கிறது. அதே விஷயத்தை பல தடவை கேட்கிறார் - அடுத்த வருடம் இந்தப் புகார் இருக்காது என்று ஒரு வருடம் உறுதிமொழி எடுத்துச் செல்கிறார். இன்னொரு வருடம், அடுத்த வருடம் இது நடக்காது என்று மீண்டும் கூறுகிறார். எந்த வருடம் கடந்து சென்று விட்டதோ அது எந்தக் கணக்கில் சென்றது. பாப்தாதாவிற்கு நாம் சொன்ன உறுதிமொழி மறந்து விடுகிறது என்று நினைக்கிறார்கள். பாப்தாதாவிற்கு என்ன நினைவு இருக்குமா என்ன என்று நினைக்கிறார்கள். பாப்தாதாவிற்கு அனைவரின் உறுதிமொழியும் நினைவிருக்கிறது ஆனால் பாப்தாதா குழந்தைகளை அவமரியாதை செய்வதில்லை. எதிரில் அமர்ந்து கொண்டு கொடுத்த உறுதிமொழியை கடைபிடிக்கவில்லை என்று கூறுவது கூட அவமரியாதை தான். எப்பொழுது தலையில் கிரீடம் உருவாக்குகிறார், தன்னையும் விட முன்னுக்கு வைக்கிறார் என்றால் அந்த மாதிரி ஆத்மாவை எப்படி அவமரியாதை செய்வார்? எனவே புன்முறுவல் செய்கிறார். நினைவு இல்லை என்பது இல்லை. ஆத்மாக்களுக்கு செய்து காட்டுகிறார். பொறுப்பிலிருப்பவராக ஆகியிருக்கும் ஆசியர்களை மிகவும் சாமர்த்தியமாக நடத்துகிறார். நீங்கள் எங்களுடைய உள்உணர்வின் அர்த்தத்தைப் புரிந்து

கொள்ளவில்லை, எங்களுடைய உள்நோக்கம் இந்த மாதிரியானதாக இல்லை, வாயிலிருந்து வார்த்தை வந்து விட்டது என்று கூறுகின்றனர் ஆனால் பாப்தாதா உள்நோக்கத்தின் உணர்வையும் தெரிந்திருக்கிறார். அவரிடம் மறைக்க முடியாது. என் மூலம் தவறு நடந்து விட்டது என்று டீச்சர் புரிந்திருக்கலாம், அப்படியும் ஆகக்கூடும் ஆனால் தந்தை மூலமாகவோ நடக்க முடியாது இல்லையா? எனவே இப்பொழுது சின்ன சின்ன விஷயங்களுக்கான நேரமில்லை. இதுவும் வீணானதில் சேர்ந்து விடுகிறது. பாபாவிடமிருந்து எவ்வளவு உழைப்பை பெறுகிறீர்கள் அதற்கான பிரதிபலன் கொடுக்க வேண்டியதாக இருக்கும். வியக்த ரூபத்திலும் உழைப்பை பெற்றிருக்கிறீர்கள். அவ்யக்த ரூபத்திலும் எத்தனை வருடங்கள் ஆகி விட்டன. இப்போதும் கூட தந்தையிடமிருந்து சேவை பெறுவதற்கான நேரமா அல்லது பிரதிபலன் கொடுப்பதற்கான நேரமா? ஒருவேளை பிரதிபலன் கொடுக்கவில்லை என்றால் பிரஜைகளை உருவாக்க முடியாது. எனவே இப்பொழுது தன்னை சக்திசாலியாக ஆக்குங்கள். ஞானம் நிறைந்தவராக ஆக்குங்கள். அனேக விதமான க்யூவில் இருந்து தன்னை விடுவியுங்கள். என்ன யுக்தி கிடைக்கிறதோ அதைக் காரியத்தில் கொண்டு வருவதில்லை. எனவே முக்தி அடைய முடிவதில்லை. நல்லது. இது தான் க்யூவிற்கான பதில். இப்பொழுது பாப்தாதா குழந்தைகளிடமிருந்து விடை பெறுகிறார். நல்லது. ஓம் சாந்தி,

**வரதானம்: தன்னை விசேஷமான பங்கைச் செய்பவர் என்று நினைத்து சாதாரணத்தை முடிவுகட்டக்கூடிய உயர்ந்த மற்றும் சிரேஷ்டமானவர் ஆகுக!**

எப்படி தந்தை பரம் ஆத்மாவாக இருக்கிறார், அதே போல் விசேஷ பங்கைச் செய்யக்கூடிய குழந்தைகளும் ஒவ்வொரு விஷயத்தில் பரம் அதாவது சிரேஷ்டமானவர்கள். அனைத்து காரியங்களை செய்து கொண்டே தன்னை விசேஷமான பங்கு செய்பவர் என்று நினைத்து மட்டும் வாழ்க்கை நாடகத்தின் மேடையில் தன்னுடைய பங்கைச் செய்யுங்கள். ஒவ்வொரு நேரமும் தன்னுடைய காரியம் அதாவது (நடிப்பின்) பாகத்தின் மேல் கவனம் இருக்கட்டும். விசேஷ பங்கைச் செய்பவர் ஒருபொழுதும் அலட்சியமானவராக ஆக முடியாது. ஒருவேளை கதாநாயக நடிகர் சாதாரண நடிப்பை செய்தார் என்றால்

அனைவரும் சிரிப்பார்கள். எனவே ஒவ்வொரு அடியில், ஒவ்வொரு எண்ணத்தில் மற்றும் ஒவ்வொரு நேரமும் விசேஷமானவர்கள், சாதாரணமானவர்கள் இல்லை.

**சுலோகன்: தன்னுடைய உள்உணர்வை சக்திசாலியானதாக ஆக்கினீர்கள் என்றால் சேவையில் தானாகவே முன்னேற்றம் ஏற்படும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 14.07.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தந்தைக்குச் சமமாக வெற்றி அடைபவராக ஆவதற்கான சாதனம் அனைவருக்காக சுபபாவனை வைப்பது!

இன்று இந்த சபையின் நடுவே, பாப்தாதா மூன்று விதமான நட்சத்திரங்களை பார்த்துக் கொண்டிருக்கிறார். ஞான நட்சத்திரமாகவோ நீங்கள் அனைவரும் இருக்கிறீர்கள் ஆனால் ஞான நட்சத்திரங்களிலும் மூன்று விதமானவை இருக்கின்றன. அவைகள் எவை எவை? ஒன்று வெற்றி நட்சத்திரம், இரண்டாவது அதிர்ஷ்ட நட்சத்திரம் மற்றும் மூன்றாவது நம்பிக்கை நட்சத்திரம். ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் அவரவர்களுடைய உலகம் இருக்கிறது. நீங்கள் அனைவருமே அவரவர்களின் உலகத்தை பார்த்திருக்கிறீர்களா? அல்லது உங்களை மட்டுமே பார்த்திருக்கிறீர்களா? உலகம் என்றால் படைப்பு உங்களுடைய படைப்பு உங்களுக்கு தென்படுகிறதா? படைப்பில் எத்தனை மற்றும் என்னென்ன விஷயங்கள் பார்க்கப்படுகிறது என்று தெரிந்திருக்கிறீர்களா? நீங்கள் உங்களுடைய படைப்பையோ பார்ப்பீர்கள் தான் இல்லையா? எது தந்தையின் படைப்போ அது உங்களுடைய படைப்பாகவும் ஆனது. நீங்களோ மாஸ்டர் படைப்பவர்கள் இல்லையா? உங்களுக்கு தந்தையின் பிரஜை மீது இராஜ்யம் செய்ய வேண்டாம் இல்லையா? நீங்கள் மாஸ்டர் படைப்பவராக ஆவதில்லையா என்ன? எப்பொழுதுமே படைப்பாகவே இருப்பீர்களா என்ன? படைப்பு என்றால் தன்னுடைய இராஜ்யத்தையோ உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? இராஜ்யத்திலோ வரிசைக்கிரமமோ இருக்கும் அதுவும் எதன் ஆதாரத்தில் உருவாகிறது. மேலும் அதிலும் கூட உங்களுடைய பக்தர்கள் இருக்கிறார்கள். சக்திகளின் பக்தர்கள் மற்றும் தந்தையின் பக்தர்கள் வேறு வேறானவர்கள். உங்களுடைய பக்தர்களாக யார் ஆவார்கள், எந்தக் கணக்குப்படி உங்களுடைய பக்தர்கள் ஆவார்கள்? எந்த

ஆத்மாக்களுக்கு, எந்த உயர்ந்த ஆத்மாக்கள் மூலமாக மற்றும் பொறுப்பிலிருப்பவராக ஆகியிருக்கும் ஆத்மாக்கள் மூலமாக ஏதாவது பிராப்தியின் அனுபவம் ஆகிறது, அவர் மூலமாக ஏதாவது சாட்சாத்காரம் ஏற்படுகிறது அல்லது ஏதாவது வரதானத்தின் பிராப்தியின் அனுபவம் ஆகிறது என்றால் அதன் ஆதாரத்தில் அவர் அவர்களுடைய பிரஜை மற்றும் பக்தர்கள் ஆகிறார். யார் நெருக்கமான ஆத்மாக்களாக இருக்கிறார்களோ, எந்த ஆத்மாக்களுக்கு தந்தையோடு சம்மந்தம் இணைந்து விடுகிறதோ மற்றும் கூடவே தந்தை மூலமாக ஆஸ்தியின் அதிகாரியாகவும் ஆகிறார்களோ, அவர்கள் ராயல் குடும்பத்தில் வருகிறார்கள். ஒரே நேரத்தில், ஒவ்வொரு ஆத்மாவும் தன்னுடைய இராஜ குடும்பத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். எதிர்காலத்து சம்மந்தம் மற்றும் இராஜ குடும்பத்தையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறார், பிரஜையையும் அதாவது அவர் உருவாக்கிக் கொண்டிருக்கிறார். பக்தர்களையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறார். பக்தர்கள் மற்றும் பிரஜையின் அடையாளம் என்னவாக இருக்கும்? இராஜ்யத்தின் சம்மந்தத்தில், வருவதற்கான விஷயத்தையோ கூறினோம், ஆனால் பிரஜை மற்றும் பக்தர்கள் இந்த இருவரின் வித்தியாசம் என்னவாக இருக்கும். பிரஜை ஞானம் மற்றும் யோகத்தின் பிராப்தி செய்வதற்கான முயற்சி செய்பவராக இருப்பார், அவர் சம்மந்தத்தில், நெருக்கத்தில் இருக்க மாட்டார் ஆனால் தூரத்து சம்மந்தத்தில் அவசியம் இருப்பார். அவர் மரியாதை நிறைந்த வாழ்க்கை உருவாக்குவதில், தகுதிக்கு ஏற்றபடி மற்றும் சக்திக்கு ஏற்றபடி முயற்சி செய்பவராக இருப்பார். மற்றபடி இன்னுமிருக்கும் மற்ற பாடங்கள் அதாவது தாரணை மற்றும் ஈஸ்வரிய சேவை அதிலேயும் சக்திக்கு தகுந்தாற்போல் சகயோகியாக இருப்பார் ஆனால் வெற்றி அடைபவராக இருக்க மாட்டார். எனவே அவர் 16 கலைகள் நிரம்பியவராக ஆக முடிவதில்லை. ஏதாவது சம்ஸ்காரம் மற்றும் சுபாவத்தின் வசமாகும் காரணத்தினால் பலமற்ற ஆத்மா ஹைஜம்ப் (உயரே தாண்டிச் செல்வது) கொடுக்க முடியாது. எனவே ராயல் பரிவாரத்தில் மற்றும் ராஜகுலத்தில் வருவதற்கு பதிலாக அவர் ராயல் பிரஜை ஆகி விடுகிறார். ராயல் குலம் இல்லை, ராயல் பிரஜையாக. மற்றபடி பக்தர்களாக இருப்பவர்கள் ஒருபொழுதும் தன்னை அதிகாரி என்று அனுபவம் செய்ய மாட்டார்கள். அவர்களிடம் கடைசி வரை பக்தியின் சம்ஸ்காரம் இருக்கும். மேலும் அவர்கள் ஆசீர்வாதம்

கொடுங்கள், சக்தி கொடுங்கள், கிருபை செய்யுங்கள், பலம் கொடுங்கள் அல்லது திருஷ்டி கொடுங்கள் என்று எப்பொழுதும் கேட்டுக் கொண்டே இருப்பார்கள். அந்த மாதிரி கேட்பதின் சம்ஸ்காரம் மற்றும் அடிமை யாகும் சம்ஸ்காரம் அவர்களுக்கு கடைசி வரை தென்படும். அவர்கள் எப்பொழுதும் மாணவன் ரூபத்திலேயே இருப்பார்கள். அவர்களுக்கு குழந்தைத்தன்மையின் போதை, எஜமானத்தன்மையின் போதை மற்றும் மாஸ்டர் சர்வ சக்திவானின் போதையை தாரணை செய்வித்தும் கூட அவர்களால் தாரணை செய்ய முடியாது. அவர்கள் கொஞ்சத்திலேயே திருப்தி அடைபவர்களாக இருப்பார்கள் இது தான் பக்தர்களின் அடையாளம். இப்பொழுது பிரஜைகள் மற்றும் பக்தர்கள் எவ்வளவு ஆகியிருக்கிறார்கள்? என்று இதிலிருந்து பாருங்கள். பக்தர்கள் ஒருபொழுதும் நேரடியாக தந்தையின் தொடர்பில் வருவதற்கான சக்தி வைப்பதில்லை. அவர்கள் எப்பொழுதும் ஆத்மாக்களின் சம்மந்தத்திலேயே திருப்தியாக இருக்கிறார்கள். நீங்கள் தான் எங்களை பொறுத்தவரை அனைத்துமே என்ற வார்த்தை அவர்களிடமிருந்து அடிக்கடி வெளியாகிக் கொண்டிருக்கும். உங்களிடம் அந்த மாதிரியான பக்தர்களும் வருவார்கள். விரும்பாவிட்டாலும் நிமித்தமாகியிருக்கும் ஒவ்வொரு ஆத்மாக்களுக்கும் பிரஜை மற்றும் பக்தர்கள் உருவாகிக் கொண்டே இருப்பார்கள். உங்களுடைய உலகம் மற்றும் படைப்பு எது என்று இப்பொழுது புரிந்ததா? வரும் நாட்களில் ஒவ்வொருவருக்கும் நான் எந்த இராஜ்யத்தில் ராஜ பதவி அடைபவன்? என்று சாட்சாத்காரமும் ஏற்படும்.

நல்லது. இது தான் நட்சத்திரங்களின் உலகம் அதாவது அவருடைய படைப்பு. நட்சத்திரங்களில் முதல் நம்பர் நட்சத்திரமானது-வெற்றி நட்சத்திரமாகும். நான் வெற்றி நட்சத்திரமா அல்லது அப்படி ஆகப்போகும் நட்சத்திரமா என்று தன்னைத் தானே சோதனை செய்ய முடியும் அளவிற்கு வெற்றி நட்சத்திரங்களின் அடையாளம் என்னவாக இருக்கிறது? அதிர்ஷ்ட நட்சத்திரங்களின் அடையாளம் மற்றும் நம்பிக்கை நட்சத்திரங்களின் அடையாளம் என்ன? உங்களை நீங்களே தெரிந்திருந்தும் பாப்தாதா ஞானத்தின் கண்ணாடி மூலமாக மூன்று நிலைகளின் சாட்சாத்காரம் செய்விக்கிறார். சாட்சாத்காரம் பார்ப்பதையோ அனைவரும் விரும்புகிறீர்கள் இல்லையா? திவ்ய திருஷ்டி மூலமாக இல்லை என்றாலும் ஞானத்தின் கண்ணாடி

மூலமாகவோ செய்ய முடியும் இல்லையா? அவருடைய ஒவ்வொரு எண்ணத்தில், வெற்றி அனேக தடவை ஏற்பட்டிருக்கிறது. மேலும் இப்பொழுதும் நிச்சயமாக ஏற்படும் என்ற திடத்தன்மை இருக்கும் என்பது தான் வெற்றி நட்சத்திரங்களின் அடையாளமாகும். ஆகவே வேண்டும். ஆகும் அல்லது ஆகாது என்ற இது கனவில் கூட ஒருபொழுதும் அவருடைய நினைவில் வராது. மாறாக அவர்களுக்கு நம்முடைய வெற்றி ற்கனவே நிச்சயிக்கப்பட்டது என்று 100 விகிதம் நிச்சயம் இருக்கும். அவர்கள் ஒவ்வொரு விஷயத்திலும் நிச்சயபுத்தி உடையவர்களாக இருப்பார்கள். மேலும் அவர்களுடைய வார்த்தையில் ஈஸ்வரிய குழந்தையின் பெருமிதம் தென்படும் அதாவது அவர்களில் ஈஸ்வரிய போதை தென்படும் என்று இது தான் அவர்களுடைய பேச்சின் விசேஷமாகும், அவர்களில் தேக அபிமானத்தின் போதை தென்படாது. அவர்களுடைய பேச்சினால் சந்தேகபுத்தி உடையவர்கள் கூட நிச்சயபுத்தி உடையவர் களாக ஆகி விடுவார்கள். ஏனென்றால் ஒன்று அவர்களுக்கு ஈஸ்வரிய பெருமிதம் இருக்கும் மேலும் இரண்டாவது அவர்களுடைய ஒவ்வொரு வார்த்தையும் சக்திசாலியாக இருக்கும். அவர்களுடைய பேச்சு சாதாரணமானதாக மற்றும் வீணானதாக இருக்காது. மேலும் அவர்களுடைய ஒவ்வொரு காரியத்தில் உயர்ந்த நிலை இருக்கவே இருக்கும் ஆனால் அவர்களுடைய ஒவ்வொரு காரியம் மூலமாக அனேக ஆத்மாக்களுக்கு மார்க்கம் தென்படும் என்ற இந்த விசேஷம் இருக்கும். எப்படி நாம் காரியம் செய்வோமோ, நம்மைப் பார்த்து மற்ற அனைவரும் செய்வார்கள் என்ற வர்ணனை இருக்கிறது. அதே போல் ஒவ்வொரு காரியமும் அனேக ஆத்மாக்களுக்கு ஒரு பாடம் கற்பிப்பதற்கான காரணமாகி விடும். அவர்களுடைய ஒவ்வொரு காரியமும் கற்பிக்கும் சொரூபமுடையதாக இருக்கும். இதைத் தான் சக்தி நிறைந்த காரியம் என்று கூறுவது. அந்த மாதிரியான எண்ணம், வார்த்தை மற்றும் செயல் உள்ளவர் தான் ஒவ்வொரு விஷயத்திலும் தன் மேல் எப்பொழுதும் திருப்தியாக இருப்பார். திருப்தியாக இருக்கும் காரணத்தினாலேயே அவர் மகிழ்ச்சி நிறைந்தவராகவும் இருப்பார் ஆனால் அவரை மகிழ்விக்க வேண்டும் என்பதில்லை மாறாக இயல்பாகவே எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பார்.

அந்த மாதிரி வெற்றி அடைபவர்கள் மேல் மற்ற ஆத்மாக்களும் கூட எப்பொழுதும் திருப்தியாக இருப்பார்கள். அதாவது அவர்கள் அனைவரின் திருப்தியின் வெற்றி உடனடிப் பலனின் ரூபத்தில் தென்படும். எதிர்காலத்து பலனாக இல்லாமல் மாறாக உடனடிப்பலனாக இருக்கும். அந்த மாதிரி எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கும் ஆத்மாவைப் பார்த்து மற்ற ஆத்மாக்களும் அவருடைய பிரபாவத்தினால் துக்கம் மற்றும் வேதனையின் உணர்வுகளை மாற்றி மகிழ்ச்சி அடைந்து விடுவார்கள் அதாவது அந்த மாதிரி ஆத்மாக்களின் நெருக்கத்தில் மற்றும் அவர்களின் அருகில் வருவதினால் மற்ற ஆத்மாக்களின் மேலும் மகிழ்ச்சியின் பிரபாவம் ஏற்பட்டு விடும். எப்படி சூரியனின் அருகில் மற்றும் எதிரில் செல்பவரின் மேல் விரும்பாவிட்டாலும் கிரணங்கள் பட்டுக் கொண்டே இருக்கிறது.

போலவே வெற்றி அடைபவரின் மகிழ்ச்சியின் கிரணங்கள் மற்ற ஆத்மாக்கள் மேல் விழுகிறது அதாவது எப்படி தந்தையின் துணையின் / தொடர்பின் பிரபாவத்தை ஒரு நொடியில் அனுபவம் செய்கிறீர்கள் அதாவது எப்பொழுது யோக சொரூபமாக இருக்கிறீர்கள் என்றால் தந்தையின் தொடர்பு ஏற்படுகிறது அதனால் அதன் பிரபாவத்தின் அனுபவம் ஆகிறது. அதே போலவே வெற்றி நட்சத்திரங்களின் தொடர்பின் பிரபாவம் மற்ற ஆத்மாக்களுக்கும் அனுபவம் ஆகும். இது தான் வெற்றி மூர்த்தி மற்றும் வெற்றி நட்சத்திரங்களின் அடையாளம்.

இரண்டாவது அதிர்ஷ்ட நட்சத்திரங்கள், அவர்களுடைய அடையாளமாக என்ன இருக்கும்? அதிர்ஷ்ட நட்சத்திரங்கள் விசேஷ ரூபத்தில் தந்தையின் அன்பிற்குரிய, தந்தையின் சரித்திரம், தந்தையுடன் அனைத்து உறவுகளின் ரசனையில் அதிகமாக மூழ்கியிருப்பார்கள். அவர்களுடைய எண்ணமும் அதிக சக்திசாலியானதாக இன்றி அன்பானதாக இருக்கும். அவர்களுடைய நினைவு ரூபத்திலும் தந்தையின் சந்திப்பு மற்றும் தந்தையின் சரித்திரங்களின் வர்ணனை அதிகமாக இருக்கும். அவர்களுடைய விதை ரூப நிலை குறைவாக இருக்கும் ஆனால் அவ்யக்த சந்திப்பு, அவ்யக்த நிலை மற்றும் அன்பு நிரம்பிய ஆன்மீக உரையாடல் நிலையில் இவர்கள் அதிகமாக இருப்பார்கள். அந்த மாதிரி ஆத்மாக்கள் அன்பின் காரணமாக மற்ற தொடர்புகளை துண்டித்து ஒருவருடன்

அனைத்து உறவுகளையும் வைத்துக் கொள்ளும் காரணத்தினாலேயே உதவி கிடைக்கிறது. அவர்களுக்கு தந்தையின் உதவியின் காரணமாக உழைப்பு குறைவாக செய்ய வேண்டியதாக இருக்கிறது மேலும் பிராப்தி அதிகமாக இருக்கிறது. அவர்கள் எப்பொழுதும் என்னுடைய அதிர்ஷ்டம் நன்றாக இருக்கிறது. எனக்கு தந்தையின் அதிகப்படியான உதவி இருக்கிறது, மேலும் நான் கடந்து சென்றே விடுவேன் என்று அனுபவம் செய்வார்கள். என் மீது இருக்கும் அன்பு போல வேறு யாரும் மீது இருக்க முடியாது. உதவி இருக்கும் காரணத்தினால் அவர்களுடைய வார்த்தைகள் தங்கு தடையின்றி வெளியாகுபவையாக இருக்கும். முதல் நம்பரில் இருப்பவர்களிடம் ஜொலிப்பு இருக்கும். இரண்டாம் நம்பரை சேர்ந்தவரிடம் ஜொலிப்பின்றி மாறாக பொலிவு இருக்கும். அவர்கள் தந்தைக்கு சமமானவர்களாக இருப்பார்கள். மேலும் அவர்கள் தந்தையின் அன்பிற்குரியவர்களாக இருப்பார்கள் ஆனால் உதவி ஏன் மற்றும் எதன் ஆதாரத்தில் கிடைத்தது அல்லது அவர்கள் அதிர்ஷ்டம் நிறைந்தவர்களாகவும் ஏன் ஆனார்கள்? என்றால் இதன் மூல அதாரம் மற்ற அனைத்து உறவுகளையும் துண்டித்து ஒருவருடன் இணைத்து கொண்டதால், இந்த உறவில் அவர் உறுதியாக துண்டிக்க முடியாதவராக இருக்கிறார். இதன் காரணமாக அவரை அதிர்ஷ்டம் நிறைந்தவர் என்று கூறப்படுகிறது. இதுவோ ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டது என்று வெற்றி அடைபவர்களின் வார்த்தை இருக்கும். மேலும் இது அவசியம் நடக்கும் என்று நான் நினைக்கிறேன் என்று அதிர்ஷ்ட நட்சத்திரங்களின் வார்த்தை இருக்கும். ஆம் இது அவசியம் நடக்கும் என்று நான் நினைக்கிறேன், தந்தை உதவி செய்பவராக ஆவார் இது இன்னொரு நிலையாகும்.

மூன்றாவது நம்பிக்கை நட்சத்திரங்கள். அந்த மாதிரி ஆத்மாக்கள் எப்பொழுதும் வெற்றி கிடைக்காத காரணத்தினால் அவசியம் நான் செய்வேன், அவசியம் சென்றடைவேன் மற்றும் அவசியம் ஆவேன் என்று நம்பிக்கை வைக்கிறார்கள் ஆனால் இடையிடையே நிற்கவும் செய்கிறார்கள், மாட்டிக் கொள்ளவும் செய்கிறார்கள் மற்றும் சில நேரம் அவர்கள் மனமுடைந்தும் போய் விடுகிறார்கள். அனேக விதமான தடைகள் வரும் காரணத்தினால் சில நேரம் அவர்கள் பயப்படுகிறார்கள் மற்றும் சில நேரம் அவர்கள் மகாவீரர்கள் ஆகி விடுகிறார்கள். சில நேரம் தந்தையின் சந்திப்பிற்காக அவர்களுக்கு நம்பர் கிடைக்கிறது.

மேலும் சில நேரம் அவர்களுக்கு கடும் முயற்சிக்குப் பிறகு கிடைக்கிறது. எனவே அவர்களை மூன்றாம் நம்பர் என்று கூறப்படுகிறது. அவர்கள் எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்தவர்களாக இருப்பதில்லை மேலும் அவர்கள் எப்பொழுதும் திருப்தியாகவும் இருப்பதில்லை ஆனால் நம்பிக்கையை ஒருபொழுதும் விட மாட்டார்கள். அவர்கள், நான் தந்தையின் குழந்தை ஆவேன் என்ற நிச்சயத்திலும் ஒரு பொழுதும் ஆட்டம் காண மாட்டார்கள் ஆனால் பலமற்றவரான காரணத்தினால் அவர்கள் சில நேரம் மனமுடைந்து போய்விடுகிறார்கள். இது தான் நம்பிக்கை நட்சத்திரங்கள், புரிந்ததா.

இப்பொழுது தன்னுடைய ஞானக் கண்ணாடியில் நான் யார் என்று பார்க்க வேண்டும். இந்த விடுகதைக்கு விடை காண்பதற்காகத் தானே வந்தீர்கள் இல்லையா? மேலும் இப்பொழுது கடைசியிலும் நான் யார் என்ற விடுகதைக்கு விடை காண வேண்டும். வெற்றி நட்சத்திரம் ஆவதற்கான லட்சியம் வைக்க வேண்டும் ஏனென்றால் தந்தைக்குச் சமமானவராக ஆக வேண்டும். தந்தையின் அன்பிற்குரியவர் ஆனதில் மட்டும் குஷியாக இருக்காதீர்கள். தந்தைக்குச் சமமாக ஆவதற்காக மற்றும் வெற்றி மூர்த்தி ஆவதற்காக உங்களுக்கு இரண்டு விஷயங்களை இரண்டு வார்த்தைகளில் மட்டும் கூறுகிறோம். இரண்டு வார்த்தைகளை தாரணை செய்வதோ சுலபம் தான் இல்லையா? எப்பொழுதும் அனைத்து ஆத்மாக் களுக்காக உறவு நெருக்கத்தில் வந்து கொண்டே மற்றும் சேவையில் வந்து கொண்டே தன்னுடைய சுபபாவனையை வையுங்கள். சுபபாவனை மற்றும் சுத்தமான விருப்பங்கள். உங்களுடைய எதிரில் ஏதாவது சோதனை ரூபத்தில் வந்தாலும், உங்களுடைய நிலை மேலே கீழே செல்வதற்கு காரணமாகி வந்தாலும் ஆனால் ஒவ்வொரு ஆத்மாவிற்காக நீங்கள் சுபபாவனை மற்றும் சுபவிருப்பங்கள் என்ற இந்த இரண்டு விஷயங்களை ஒவ்வொரு எண்ணம், சொல் மற்றும் காரியத்தில் கொண்டு வந்தீர்கள் என்றால் நீங்கள் வெற்றி நட்சத்திரம் ஆகி விடுவீர்கள். இதுவோ சுலபம் தான் இல்லையா? இது தான் பிராமணர்களுடைய தர்மம் மற்றும் கர்மம் ஆகும். எது தர்மமாக இருக்குமோ அதுவே கர்மமாக இருக்கும். என்னுடைய ஒவ்வொரு குழந்தையும் தந்தையை விட உயர்ந்தவராக ஆக வேண்டும் என்பது தான் ஒவ்வொரு குழந்தைக்காக தந்தையின் சுபபாவனை மற்றும் சுப விருப்பம் ஆகும். இந்தக் காரணத்தினால்

எப்பொழுது சின்ன சின்ன விஷயங்களை பார்க்கிறோம், கேட்கிறோம் என்றால் இந்த நேரமே அனைவரும் சம்பன்னம் ஆகி விடட்டுமே என்று நினைக்கிறோம். மாஸ்டர் சர்வ சக்திவான் ஒருவேளை திருஷ்டி மற்றும் உள்உணர்வின் விஷயத்தை கூறுகிறார் என்றால் இது அழகாக இருக்கிறதா? அதாவது சர்வ சக்திவான் தந்தையின் எதிரில் மாஸ்டர் சர்வ சக்திவான் பலஹீனத்தின் விஷயங்களை கூறுகிறார்கள். எனவே இப்பொழுது மாஸ்டர் ஆகுங்கள் என்று தந்தை இஷாரா (சமிக்ஞை) கொடுக்கிறார். ஏனென்றால் தன்னை ஆக்கி பின்பு உலகையும் ஆக்க வேண்டும். புரிந்ததா.

அந்த மாதிரி விவேகம் நிறைந்த குழந்தைகளுக்கு, கேட்பது மற்றும் செய்வதை சமமாக்கக்கூடியவர்களுக்கு, ஒவ்வொரு எண்ணம் மற்றும் ஒவ்வொரு வார்த்தையில் பாப்தாதாவை பின்பற்றக்கூடியவர்களுக்கு வெற்றி நட்சத்திரம், அதிர்ஷ்ட மற்றும் நம்பிக்கை நட்சத்திரங்களுக்கு, லட்சியத்தை சம்பூர்ணமாக அடையும் அதிகாரி குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள். இரவு வணக்கம் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: பழைய உலகம் மற்றும் சம்ஸ்காரங்களின் கவர்ச்சியிலிருந்து உயிரோடு இருந்தே இறக்கக்கூடிய யதார்த்தமான மர்ஜீவா (உடலில் இருந்து கொண்டே இறந்து மறுபிறவி எடுத்து வாழ்பவராக) ஆகுக!**

யதார்த்தமாக உயிரோடு இருந்து கொண்டே இறப்பது என்றால் நிரந்தரமாக பழைய உலகம் மற்றும் பழைய சம்ஸ்காரங்களில் இருந்து எண்ணம் மற்றும் கனவிலும் இறப்பது. இறப்பது என்றால் பரிவர்த்தனை ஆவது. அவர்களை எந்தவொரு கவர்ச்சியும் தன் பக்கம் கவர்ச்சி செய்ய முடியாது. அவர்கள் என்ன செய்வது விரும்பாவிட்டாலும் ஆனால் ஆகி விட்டது என்று கூற முடியாது. சில குழந்தைகள் உயிரோடு இருந்து கொண்டே இறந்து பின்பு உயிர் பெற்று விடுகிறார்கள். இராவணனின் ஒரு தலையை வெட்டினார்கள் என்றால் இன்னொன்று வந்து விடுகிறது ஆனால் அஸ்திவாரத்தையே அழித்து விட்டீர்கள் என்றால் ரூபத்தை மாற்றி மாயா தாக்குதல் செய்யாது.

சுலோகன்: யார் நினைவு மற்றும் சேவையில் எப்பொழுதும் பிஸியாக இருக்கிறாரோ அவர் தான் அனைவரையும் விட அதிர்ஷ்டம் நிறைந்தவர்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 18.07.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சம்பூர்ண தூய்மையான உள்உணர்வு மற்றும் பார்வை மூலமாக உயர்ந்த அதிர்ஷ்டத்தின் சித்திரம்!

இன்று விசேஷ ரூபத்தில் மதுபன் நிவாசிகளின் எதிர்காலத்து ரேகையை பார்த்துக் கொண்டிருந் தோம். ஒவ்வொருவரும் ஸ்ரீமத்தின் அனுசாரம் மற்றும் பாப்தாதாவின் பாலனையின் அனுசாரம் அவரவர்களின் எதிர்காலத்தின் ரேகையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். தன்னுடைய சித்திரத்தை எப்பொழுதும் கண்ணாடியில் பார்த்துக் கொண்டே இருக்கிறீர்களா? இந்த அதிர்ஷ்டத்தின் ரேகையின் முக்கியமான விசேஷங்களைத் தெரிந்திருக்கிறீர்களா? ஸ்தூலமான ஓவியம் மற்றும் படங்களை வரைபவர்கள் இந்தப் படத்தின் விலைமதிப்பு எந்தெந்த விசேஷங்களின் ஆதாரத்தில் இருக்கும் என்று தெரிந்திருக்கிறார்கள். ஸ்தூல படத்தின் முக்கியமான விசேஷம், கவர்ச்சி மற்றும் மதிப்பு அதனுடைய முகத்தின் ஆதாரத்தில் தான் இருக்கிறது. எந்தப் படத்தைப் பார்த்தாலும் அனைவரின் பார்வையும் முதலில் அதனுடைய முகத்தில் தான் செல்லும். ஒவ்வொரு படத்தின் கண், பார்வை, பாவனையின் வெளிப்பாடை பார்த்துத் தான் அந்தப் படங்கள் மதிப்பிடப்படுகின்றன. அதே போலவே இந்த அதிர்ஷ்டத்தின் ஓவியத்தின் மதிப்பு முக்கியமாக எந்த விஷயங்களின் ஆதாரத்தில் இருக்கிறது? அதனுடைய முக்கியமான விசேஷங்கள் எவை? ஒருவேளை யாருடைய எதிர்காலத்தின் ஓவியத்தை பார்க்கிறார்கள் என்றால் என்ன விசேஷங்களைப் பார்ப்பார்கள்?

ஒரு முக்கியமான விஷயமாக அதிர்ஷ்டத்தின் ஓவியத்தில் நினைவு சக்திசாலியாக இருக்கிறதா அதாவது எப்பொழுதும் நினைவு சொரூபமாக இருக்கிறதா? என்று இதைத் தான் பார்க்கப்படுகிறது.

இரண்டாவது, சகோதரன் - சகோதரனின் உள்உணர்வு எப்பொழுதுமே நிலைத்திருக்கிறதா? மூன்றாவது, ஆன்மீகம் அதாவது சம்பூர்ண தூய்மையின் பார்வை இருக்கிறதா? அடிப்படையில் இந்த மூன்று விஷயங்கள் தான் - நினைவு, உள்உணர்வு மற்றும் பார்வை. இந்த மூன்று விசேஷங்களின் ஆதாரத்தினால் தான் தெய்வீக குணங்களின் அலங்காரம் மற்றும் பொலிவு, ஜொலிப்பு, பாவனை ஓவியத்தில் தென்படும். ஒருவேளை இந்த மூன்று விஷயங்களும் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இருந்து மற்றும் உயர்ந்ததாக இருக்கிறது மேலும் யதார்த்தமாக இருக்கிறது என்றால் அந்த மாதிரி அதிர்ஷ்டத்தின் ஓவியம் இயல்பாகவே அனைத்து ஆத்மாக்களையும் தன் பக்கம் கவர்ச்சி செய்யும். எப்படி ஸ்தூலமான கண்களின் பார்வை மற்றும் பாவனை வழியில் சென்று கொண்டிருக்கும் போதே ஆத்மாவை தன் பக்கம் கவர்ந்து விடுகிறது. அதே போலவே இந்த அதிர்ஷ்டத்தின் ஓவியமும் அனைத்து ஆத்மாக்களை தன்னுடைய ஆன்மீகப் பார்வை மற்றும் எப்பொழுதும் நினைவு மற்றும் உள்ளுணர்வினால் தன் பக்கம் அவசியம் கவர்ச்சி செய்கிறது. எப்படி ஸ்தூலமான படம் தேகதாரியாக ஆக்குவதில் அதாவது தேக அபிமானத்தில் கொண்டு வருவதற்கு பொறுப்பாகி விடுகிறது. விரும்பாவிட்டாலும் கவர்ச்சி செய்கிறது, உறுதியில்லாத பிராமணர்களை மற்றும் ஆத்ம அபிமானி ஆவதின் முயற்சியாளர்களையும் கவர்ச்சி செய்து தேக அபிமானிகளாக ஆக்கி விடுகிறது. இவர்கள் தான், சென்று கொண்டிருக்கும்போதே சைத்தன்ய மான மற்றும் ஜடச்சித்திரங்களைப் பார்த்து ஆத்ம அபிமானியிலிருந்து தேக அபிமானி ஆகி விடுகிறார்கள் என்று புகார் செய்கிறார்கள். அதே போலவே எப்பொழுது ஆன்மீக படம் மற்றும் ஓவியத்தை கவர்ச்சிகரமானதாக ஆக்கினீர்கள் என்றால், அனேக ஆத்மாக்கள் காலப்போக்கில் தேக அபிமானியிலிருந்து விடுபட்டு ஆத்ம அபிமானி ஆகி விடுவார்கள். எப்பொழுது ஸ்தூல படங்களில் இவ்வளவு கவர்ச்சி இருக்கிறது என்றால் ஆன்மீக சைத்தன்ய ஓவியங்களாகிய உங்களில் இவ்வளவு ஆன்மீக கவர்ச்சி இல்லையா? இப்பொழுது என்னுடைய ஓவியம் மற்றும் படம் எவ்வளவு கவரக்கூடியதாக ஆகியிருக்கிறது என்ற இதைத்தான் சோதனை செய்ய வேண்டும். இந்த ஆன்மீக ஓவியங்களில் ஒருவேளை இந்த மூன்று விசேஷங்களிலிருந்து ஒன்றாவது குறைவாக இருக்கிறது என்றால் அது மிகமதிப்புள்ளது என்று எடுத்துக் கொள்ளப்படாது, எப்படி ஸ்தூல படங்களிலும் கண்,

மூக்கு மற்றும் காது ஆகியவை ஏதாவது ஒன்றாவது யதார்த்தமாக இல்லை என்றால், படத்தின் மதிப்பு குறைந்து விடுகிறது. முழு படமும் எவ்வளவு தான் அழகாக இருந்தாலும் ஆனால் முக்கியமாக முகத்தில் ஒருவேளை கொஞ்சமாவது குறை இருக்கிறது என்றால், அந்தப் படம் உபயோகமற்றதாக ஆகி விடுகிறது அல்லது அதனுடைய மதிப்பு பாதியாக குறைந்து விடுகிறது. அதே போலவே இங்கேயும் இந்த மூன்று விசேஷங்களிலிருந்து ஒன்றின் குறை இருக்கிறது என்றாலும் பிராப்தியின் காலத்திலிருந்து பாதி காலம் குறைந்து விடுகிறது அதாவது 16-கலையிலிருந்து, 14-கலையாக ஆவதினால் பாதி மதிப்புள்ளதாக ஆகி விட்டது இல்லையா? எனவே இந்த மூன்று விஷயங்களிலும் ஒவ்வொரு நேரமும் சோதனை வேண்டும். நல்லது அந்த மாதிரி சோதனை செய்கிறீர்களா?

சோதனைக்கான இயந்திரம் என்னவென்று தெரிந்திருக்கிறீர்களா? இயந்திரம் மூலமாகத் தான் சோதனை செய்வார்கள் இல்லையா? அப்படி தன்னை சோதிக்க முடியும் அளவிற்கு அது எந்த இயந்திரம்? புத்தி தான் இயந்திரம் ஆகும், ஆனால் தெய்வீக புத்தி என்ற கண்ணை பிராமணன் ஆனவுடனேயே கொடுத்து விடுகிறார். எப்படி அந்த மாதிரி அனேக லௌகீக குலங்கள் இருக்கின்றன. ஜென்மம் எடுத்தவுடனேயே யுத்தத்தில் மற்றும் இம்சை செய்வதில் முதன்மையாக ஆக்குவதற்காக குழந்தைப் பருவத்திலிருந்தே வாளிற்குப் பதிலாக கத்தி மற்றும் கம்பை எப்படி உபயோகப்படுத்த வேண்டும் என்று கற்றுக் கொடுக்கிறார்கள். அதன் மூலம் அவருக்கு தன்னுடைய வீரம் நிறைந்த குலத்தின் நினைவு இருக்க வேண்டும் என்பதற்காகவும் கற்றுக் கொடுக்கிறார்கள். பாப்தாதாவும் ஒவ்வொரு பிராமணனையும் மாயாவின் தாக்குதலிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்காக மற்றும் மாயாவைப் பகுத்தறி வதற்காக இந்த தெய்வீக புத்தி என்ற கண் கொடுக்கிறார் ஆனால் எப்பொழுது தெய்வீக புத்திக்குப் பதிலாக சாதாரண லௌகீக புத்தி உடையவர்களாக ஆகி விடுகிறார்களோ அப்பொழுது மாயாவை பகுத்தறிய முடிவதில்லை மற்றும் மாயாவின் தாக்குதலிலிருந்து பாதுகாப்பாக இருக்க முடிவதில்லை. மற்றும் தன்னுடைய சோதனை செய்யமுடிவதில்லை. எனவே தன்னுடைய தெய்வீக புத்தி என்ற கண் தன்னிடம் நிலைத்திருக்கிறதா என்று முதலில் இதைப் பாருங்கள். தெய்வீக புத்தி என்ற கண்ணில் மாயாவின் தீய சேர்க்கை மற்றும்

சூழ்நிலையின் மிகவும் பிரபாவம் நிறைந்த துருவோ ஏறவில்லையே மற்றும் ஏதாவது ஒரு பாதகத்தை செய்து கொண்டிருக்கவில்லையே? என்று பாருங்கள்.

தன்னுடைய அந்த மாதிரி உயர்ந்த ஓவியத்தை உருவாக்குவதற்காக முக்கியமாக மூன்று விசேஷங்களை நிரப்புவதற்காக மூன்று வார்த்தைகளை நினைவு வைத்துக் கொள்ளுங்கள். 1) நிர்வாண நிலையில் (ஆத்ம நிலையில்) இருக்க வேண்டும், 2) பணிவானவராக வேண்டும் மற்றும் 3) படைப்புக் காரியம் செய்ய வேண்டும். இந்த மூன்று வார்த்தைகளை நினைவில் வைத்தீர்கள் என்றால் எதிர்காலத்தின் ஓவியம் கவர்ச்சி நிறைந்ததாக ஆகி விடும். காலப்போக்கில் இந்த மூன்று விஷயங்களின் குறை ஏற்பட்டு விடுகிறது. நிர்வாண நிலையில் குறைவாக இருக்கிறார்கள். வார்த்தைகளில் சுலபமாகவும் ஆர்வத்துடனும் வருகிறார்கள். எவ்வளவு வார்த்தையில் வருவதில் ஆர்வம் இருக்கிறதோ அந்த அளவு வார்த்தையிலிருந்து விலகிய நிலையில் நிலைத்திருப்பதற்கான ஆர்வம் மற்றும் ரசனை குறைவாக அனுபவம் செய்கிறீர்கள். பணிவானவர் ஆவதற்குப் பதிலாக அனேக விதமான மரியாதை, உடல் சம்மந்தப்பட்ட, பதவி சம்மந்தப் பட்ட, குணங்களின், சேவையின் வெற்றியின் அனேக விதமான மரியாதையை சுலபமாக ஏற்றுக் கொள்கிறீர்கள் அல்லது கிடைக்க வேண்டும் என்ற விருப்பத்தில் இருக்கிறீர்கள். மரியாதையின் விருப்பமுள்ளவராக இருக்கிறீர்கள். எனவே சுயமரியாதையின் பாடத்தை இதுவரையிலும் முடிக்க முடியாமல் இருக்கிறீர்கள். எதுவரை விருப்பமுள்ள நிலை முடிவடைந்து விடுகிறதோ அப்பொழுது தான் சுயமரியாதையின் நிலை சுலபமாக மற்றும் எப்பொழுதும் இருக்கிறது. மரியாதை சுயமரியாதையை மறக்க வைத்து விடுகிறது. அதே போலவே புதுப்படைப்பு செய்வதற்குப் பதிலாக அல்லது உருவாக்குவதற்குப் பதிலாக கெடுப்பவராக ஆகி விடுகிறீர்கள். அதாவது புதுப்படைப்பை செய்வதற்குப் பதிலாக சில நேரம் யாராவது ஒருவரின் நிலையை கீழே இறக்குவதற்கான காரணமானவர் ஆகி விடுகிறீர்கள். எப்பொழுதும் ஒவ்வொரு காரியத்தில் மற்றும் ஒவ்வொரு எண்ணத்தில், இந்த எண்ணம், வார்த்தை மற்றும் காரியம் புது படைப்பிற்கு பொறுப்பானதாக இருக்கிறதா என்று சோதனை செய்யுங்கள். அந்த மாதிரி நிலை

வைப்பதினால் அனைத்து விசேஷங்களும் தானாகவே வந்து விடும். இது தான் தற்சமயம் முயற்சி செய்வதை தீவிரமாக்குவதற்கான யுக்தி ஆகும்.

மதுபன் நிவாசிகளின் ரிசல்ட் நல்லதாக இருந்தது. பெரும்பான்மையோர் அன்பு மற்றும் சகயோகத்தில் களைப்பற்ற சேவாதாரிகளாக இருந்திருக்கிறார்கள். மேலும் வரும் காலத்திலும் ஆகிக் கொண்டே இருப்பார்கள். மகிமைக்கு தகுதியானவராகவோ ஆகியிருக்கிறீர்கள். சுயம் பாப்தாதா உங்களை மகிமை செய்கிறார். இப்பொழுது இன்னும் என்ன செய்ய வேண்டும். மதுபன் நிவாசிகளுக்கு மற்றும் அனைத்து ஆத்மாக்களிடம் விசேஷ விரதம் எடுக்க வேண்டும். எந்த விரதம் எடுக்க வேண்டும்? விரதமாக இதைத் தான் எடுக்க வேண்டும். நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக, ஒரே ஒரு உயர்ந்த உள்உணர்வு, ஒரே ஆன்மீக திருஷ்டி மற்றும் ஒரே சீரான நிலை மூலமாக ஒவ்வொருவருக்கும் சகயோகி ஆகி, சுப சிந்தனையாளராகி, சுபபாவனை மற்றும் சுபவிருப்பங்கள் வைத்து மற்றும் அனேக சம்ஸ்காரங்கள் இருந்த போதிலும், ஒரு தந்தைக்குச் சமமாக சதோபிரதான சம்ஸ்காரம் மற்றும் சுயத்தின் பாவத்தில் இருக்கக்கூடிய சுபாவத்தை உருவாக்குவதற்கான கோட்டையை உறுதியாக்குவோம் என்ற இது தான் விரதம் ஆகும். தனக்காகவும் மற்றும் மற்ற ஆத்மாக்களுக்காகவும் இந்த விரதம் எடுப்பதற்கான தைரியம் இருக்கிறதா? தனக்காகவோ குடும்பத்தில் இருப்பவர்களும் உலகியல் சூழ்நிலைகளில் இருப்பவர்களும் செய்கிறார்கள். மதுபன் நிவாசிகளில் தனக்காக மட்டுமின்றி கூடவே சங்கடனில் (கூட்டாக) இருக்கும் மற்றவர்களுக்காகவும் விரதம் எடுப்பதற்கான தைரியம் வேண்டும். இது தான் மதுபன் வரதான பூமியின் விசேஷம் ஆகும். புரிந்ததா?

எப்படி இப்பொழுது தைரியத்தின் உடனடி பலனை காண்பித்தோம். அதே போலவே ஒவ்வொரு வருக்கும் எச்சரிக்கை செய்து கொண்டே மேலும் ஒவ்வொருவரின் சகயோகி ஆகிக் கொண்டே இந்த விரதத்தை சாகார ரூபத்தில் கொண்டு வருவதில் வெற்றி அடைந்து விடுவீர்கள். எப்படி மற்ற மண்டலத்தைச் சேர்ந்தவர்களுக்கு அவரவர்களின் விசேஷ சேவையில் நிரூபணத்தைக் கொடுப்பதற்காக கூறினீர்கள் அதே போலவே மதுபன் நிவாசிகளுக்கும் இந்த விஷயத்தின் நிரூபணம்

கொடுக்க வேண்டும். நிரூபணம் கொடுப்பது கடினமா என்ன? சாகார ரூபம் மூலமாக மற்றும் அவ்யக்த ரூபம் மூலமாக கல்வி மற்றும் அன்பின் பாலனையை எவ்வளவு காலம் எடுத்து வந்திருக்கிறீர்கள்? பாலனையைப் பெற்ற பிறகு மற்ற ஆத்மாக்களுக்கு பாலனை செய்வதற்கான பொறுப்பாளர் ஆகி விடு கிறீர்கள். அந்த மாதிரி பாலனை செய்வதற்கான பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்களா? அல்லது இதுவரையிலும் எடுப்பவர்களாகவே இருக்கிறீர்களா? இப்பொழுதோ பழையவர்கள் வரக்கூடிய புதிய குழந்தைகளை பாலனை செய்ய வேண்டும். அதாவது தன்னுடைய கல்வி சொரூபம் மூலமாக மற்றும் அன்பு மூலமாக அவர்களை முன்னேற்றுவதில் சகயோகி ஆக வேண்டும். மேலும் இந்தக் காரியத்தில் இரவு பகலாக பிஸியாக இருக்க வேண்டும். இந்த அவ்யக்த பங்கு கூட விசேஷமாக புதியவர்களுக்காக இருக்கிறது. மேலும் பழையவர்களுக்கோ இப்பொழுது தந்தைக்குச் சமமானவராகி புதிய ஆத்மாக்களின் தைரியம் மற்றும் உற்சாகத்தை அதிகரிக்க வேண்டும். எப்படி பாப்தாதா குழந்தைகளை தன்னை விடவும் முன்னுக்கு வைத்து கொண்டே தன்னையும் விட உயர்ந்தவர்களாக ஆக்கியிருக்கிறாரோ. அது போலவே புதியவர்களையும் தன்னை விட முன்னேற்றம் செய்வதற்கான நிரூபணத்தை பழையவர்கள் கொடுக்க வேண்டும் மற்றும் அனைத்து கல்வி அறிவுரைகளை சாகார சொரூபத்தில் காண்பிக்க வேண்டும். பாலனையின் நடைமுறை ரூபத்தை பிரதிபலனின் ரூபத்தில் கொடுக்க வேண்டும்.

நல்லது. அந்த மாதிரி உண்மையான குழந்தைகளுக்கு, தன்னுடைய எதிர்காலத்தின் ஓவியத்தை தன்னுடைய தாரணைகள் மூலமாக காண்பிக்கக்கூடிய, எப்பொழுதும் மூல மந்திரம் மற்றும் இயந்திரத்தை காரியத்தில் கொண்டு வரக்கூடிய பாப்தாதாவிற்குச் சமமாக ஒவ்வொரு விநாடி மற்றும் எண்ணத்தை அனைத்து ஆத்மாக்களின் நன்மைக்காக ஈடுபடுத்தக்கூடிய, எப்பொழுதும் சுயத்தின் பாவத்தில் இருக்கக்கூடிய, பாப்தாதாவிற்குச் சமமாக உயர்ந்த சம்ஸ்காரம் அதாவது அனாதி மற்றும் ஆதி சம்ஸ்காரங்களை பிரத்யக்ஷ ரூபத்தில் கொண்டு வரக்கூடிய, ஒவ்வொரு எண்ணம் மற்றும் நேரத்தை பயனுள்ளதாக ஆக்கக் கூடிய வெற்றி மூர்த்தி நட்சத்திரங்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவு, இரவு வணக்கம் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: சக்திகளை தன்னுடைய அதிகாரத்தில் வைத்து சுலபமாக வெற்றியை பிராப்தி செய்யக்கூடிய மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகுக!

எவ்வளவிற்கு எவ்வளவு மாஸ்டர் சர்வ சக்திவானின் சீட்டில் அமர்ந்திருப்பீர்களோ அந்த அளவே இந்த சக்திகள் உங்களுடைய கட்டளைப்படி இருக்கும். எப்படி ஸ்தூல கர்மேந்திரியங்கள் எந்த நேரம் என்ன சொல்கிறீர்களோ அதன் படி நடக்கின்றன. அதே போலவே சூட்சும சக்திகளும் உங்களுடைய கட்டளைப்படி நடப்பவைகளாக இருக்கட்டும். எப்பொழுது இந்த அனைத்து சக்திகளும் இப்பொழுதிலிருந்தே உங்களுடைய கட்டளைப்படி நடக்குமோ அப்பொழுது தான் கடைசியில் வெற்றி அடைய முடியும். ஏனென்றால் எங்கு அனைத்து சக்திகளும் இருக்கின்றனவோ அங்கு பற்றி பிறப்புரிமை ஆகும்.

சுலோகன்: ஆகார (பரிஷ்தா) மற்றும் நிராகார (ஆத்ம நிலை) நிலையில் சுலபமாக நிலைத்திருக்க வேண்டுமென்றால் நிர் அகங்காரி (அகங்காரமற்றவராக) ஆகுங்கள்!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 13.09.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# முரபி குழந்தையாகி (ஒரு பாபாவை முழு ஆதாரமாக ஆக்கியிருக்கும் குழந்தையாகி) தன்னுடைய நிலையை யோகயுக்த் (யோகம் சொரூபமானதாக) மற்றும் யுக்தி யுக்தானதாக (புத்தி கூர்மையானதாக) ஆக்குங்கள்!

இன்று விசேஷ ரூபத்தில் தந்தை எந்தமாதிரியானவர்களைச் சந்திக்க வந்திருக்கிறார்? இன்றைய இந்த சபை எந்த விதமான சபை? பாப்தாதா இந்த சபையைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டே இது பாப்தாதாவின் முரபி குழந்தைகளின் (ஒரு பாபாவை முழு ஆதாரமாக ஆக்கியிருக்கும் குழந்தைகளின்) சபை என்று அனைவருக்கும் பட்டம் கொடுக்கிறார். முரபி குழந்தைகளாக யார் இருக்கிறார்களோ அவர்கள் தந்தையுடன் சேர்ந்து ஒவ்வொரு அடியும் எடுத்து வைத்து மற்றும் ஒவ்வொரு காரியத்தில் எப்பொழுதும் சகயோகியாக இயல்பாகவே ஆகி விடுகிறார்கள், அவர்கள் ஆக வேண்டியதில்லை மேலும் அவர்களுக்கு ஆவதற்கான யோசிக்க வேண்டியதுமில்லை. முரபி குழந்தை அன்பிற்குரியவரான காரணத்தினால் எப்பொழுதும் சகயோகியாகவே இருக்கிறார். முரபி குழந்தைகளுக்கு நாடகப்படி அன்பின் பிரதிபலனாக வரதான ரூபத்தில் சகயோகி ஆவது சுலபமாகவே பிராப்தி ஆகிக் கொண்டே இருக்கிறது. ஒருவேளை இந்த வரதானம் இயல்பாகவே பிராப்தி ஆகிறது என்றால் நாம் முரபி குழந்தை ஆவேன் என்று புரிந்து கொள்ளுங்கள். முரபி குழந்தைகளின் நிலை எப்பொழுதும் யோகயுக்த் மற்றும் யுக்தியுக்தானதாக இருக்கும். முரபி குழந்தை என்றால் தந்தைக்குச் சமமாக அனைத்து குணங்களின் சொரூபமானவர். எது தந்தையின் குணமோ அந்த குணங்களை

நடைமுறையில் கொண்டு வருபவரைத் தான் முரபி குழந்தை என்று கூறப்படுகிறது. இது அந்த மாதிரியான குரூப் மேலும் இவர்கள் சேவைக்கு பொறுப்பாளர் ஆகியிருக்கும் பொறுப்பு நிறைந்த ஆத்மாக்கள் ஆவார்கள்.

சேவைக் காரியத்திற்காக பொறுப்பாளர் ஆகியிருக்கும் அதாவது தந்தையின் குணங்களை நடைமுறையில் செய்து காண்பிப்பதற்கு பொறுப்பாளர் என்ற இதையோ அனைவரும் கூறுவீர்கள், இதைத் தான் சேவை என்று கூறுவது. மற்றபடி ஞானத்தை வர்ணனை செய்வதோ சாதாரண விஷயமாகும். இது விசேஷ சேவை இல்லை. சேவையின் விசேஷம் என்றால் தந்தையின் அனைத்து குணங்களின் சொரூபமாகி, தந்தையின் சாட்சாத்காரத்தை தன்னுடைய சொரூபம் மூலமாக செய்விப்பதாகும். கேட்பது, சொல்வது இதுவோ துவாபரயுகத்திலிருந்து வந்து கொண்டிருக்கிறது ஆனால் விசேஷ ஆத்மாக்கள் உங்களுடைய விசேஷம் எந்த விஷயத்தில் இருக்கிறது? தந்தைக்குச் சமமானவராகி அனைவருக்கும் தந்தையின் சாட்சாத்காரத்தை செய்விப்பதில் மற்றும் சாட்சாத் அவர் மாதிரியே ஆகி சாட்சாத்காரம் செய்விப்பது ஆகும். இதை விசேஷ ஆத்மாக்கள் மட்டும் தான் செய்ய முடியும். இதை வேறு எந்த ஆத்மாவும் செய்ய முடியாது. பக்தி மார்க்கத்தைச் சேர்ந்தவர்களும் செய்ய முடியாது மேலும் ஞான மார்க்கத்தில் வரக்கூடிய சாதாரண ஆத்மாக்களும் செய்ய முடியாது. முரபி குழந்தைகளின் கடமையும் விசேஷமாக இதுவே தான்.

சாதாரண ஆத்மாக்கள் மற்றும் விசேஷ ஆத்மாக்களில் முக்கியமாக எந்த விஷயத்தின் வித்தியாசம் இருக்கிறது? ஏதாவது ஆழமான வேற்றுமையைக் கூறுங்கள். விசேஷ ஆத்மாக்களின் வார்த்தையால் மற்றும் அனுபவத்தினால் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் ஒரு நொடியில் மற்றும் மிக சுலபமாகவே நேரடியாக தந்தையோடு தொடர்பு ஏற்பட்டு விடும். மேலும் யார் சாதாரண ஆத்மாவாக இருப்பாரோ, இடையில் அவர் தரகராக ஆகிறார், என்றால் முதலில் தரகரிடம் நின்று பிறகு தந்தையுடன் நேரடியாகத் தொடர்பு ஏற்படுகிறது. சாதாரண ஆத்மாக்களின் சேவையின் ரிசல்ட் மூலமாக வரக்கூடிய ஆத்மாக்கள் இவ்வளவு சக்திசாலியாக ஆவதில்லை. ய ..ஹ.ஹ.ஹ..ஹ...ார் சுலபமாக மற்றும் வெகு விரைவில் தந்தையோடு தொடர்பை

இணைப்பதற்கு பொறுப்பாளர் ஆகிறார்கள் தான், ஆனால் யாருக்கு பொறுப்பாளர் ஆகிறாரோ அவர்களுக்கு இந்த மாதிரி அனுபவம் ஆவதில்லை. கடின உழைப்பு செய்ய வேண்டியது வரும் மற்றும் காலமும் எடுக்கும். என்ன செய்வது, எப்படி செய்வது, இது நடக்குமா? அல்லது இல்லையா? என்ற இந் கேள்விகள் அ வரும் ஆனால் விசேஷ ஆத்மாக்கள் தன்னுடைய விசேஷத்தின் ஆதாரத்தினால், தன்னுடைய சக்தியின் ஆதாரத்தினால் இந்த ஏன் மற்றும் எப்படி என்ற கேள்வியை முடித்து விடுவார்கள். அவர்கள் கடினம் மற்றும் உழைப்பை அனுபவம் செய்ய விடுவதில்லை. வந்த உடனேயே ஒவ்வொருவரும் இதுவோ நான் இழந்த என்னுடைய பரிவாரம் ஆகும் அல்லது மறந்த தந்தை எனக்கு மீண்டும் கிடைத்து விட்டார் என்று அனுபவம் செய்வார்கள். நான் எப்படி மறந்தேன் என்று மறந்த விஷயத்தின் மேல் மிகவும் ஆச்சரியம் ஏற்படும். அந்த மாதிரி தந்தையை நான் மறந்து விட்டேன் என்று நினைப்பார். இது தான் விசேஷ ஆத்மாக்கள் மற்றும் சாதாரண ஆத்மாக்களில் இருக்கும் முக்கியமான வித்தியாசம் ஆகும். சாதாரண ஆத்மாக்கள் தந்தையோடு நேரடியாகத் தொடர்பு ஏற்பட்டு விட வேண்டும் என்று முயற்சி செய்வார்கள் ஆனால் தற்சமயத்து பலமற்ற ஆத்மாக்களுக்கு தன்னுடைய பலம் மட்டும் தேவையாக இல்லை, ஏனென்றால் அவர்கள் ஞானம் மற்றும் யோகத்தின் ஆதாரத்தினால் மட்டும் செல்ல முடிவதில்லை மாறாக அவர்களுக்கு பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களின் சக்தியின் சகயோகம் தேவையாக இருக்கிறது அதன் மூலம் அவர்கள் ஹை ஜம்ப் செய்து இடைவெளியை நிரப்ப வேண்டியதாக இருக்கிறது.

நாளாக நாளாக உங்களிடம் வரக்கூடிய ஆத்மாக்கள் மிக அதிக பலமற்ற நிலை உள்ளவர்கள் தான் வருவார்கள். எப்படி முதல் குரூப்பில் நீங்கள் உருவானீர்கள். முதல் குரூப்பின் சக்தி மற்றும் தைரியம், இரண்டாவது குரூப்பின் சக்தி மற்றும் தைரியம் மற்றும் மூன்றாவது குரூப்பின் சக்தி மற்றும் தைரியத்தில் வித்தியாசம் தென்படுகிறது தான் இல்லையா? அதே போலவே பின்பு புதுப்புது ஆத்மாக்கள் யார் இப்பொழுது உருவாகிறார்களோ அவர்களின் சக்தி மற்றும் தைரியத்திலும் வித்தியாசம் தென்படுகிறது. உடல் மூலமாகவும் மற்றும் மனதினாலும் ஒவ்வொரு குரூப்பில் வித்தியாசம் தென்பட்டுக் கொண்டே இருக்கிறது. இதுவோ அனைவருக்கும் அனுபவம் இருக்கிறது இல்லையா? அந்தக்

கணக்குப்படி யோசித்தீர்கள் என்றால் கடைசி ஆத்மாக்கள் யார் இப்பொழுது வருகிறார்களோ அவர்கள் எப்படி இருப்பார்கள்? மிக பலமற்றவர்களாக இருப்பார்கள் இல்லையா. அந்த மாதிரி பலமற்ற ஆத்மாக்களுக்கு ஞானம் மட்டும் கொடுத்தாகி விட்டது, அவர்களுக்கு பாடம் எடுத்தாகி விட்டது மற்றும் யோகாவில் அமர்த்தி விட்டோம். இதன் மூலம் அவர்கள் முன்னேற முடியாது. இப்பொழுதோ பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களுக்கு, தான் பிராப்தி செய்திருக்கும் சக்திகளின் ஆதாரத்தினால் தான் பலமற்ற ஆத்மாக்களுக்கு சகயோகம் கொடுத்துக் கொண்டே முன்னேற்ற வேண்டியதாக இருக்கும். இதற்காக இப்பொழுதிலிருந்தே தன்னுள் அனைத்து சக்திகளின் இருப்பை சேமிப்பு செய்யுங்கள். எப்படி ஸ்தூலமான உணவிற்காக கூட்டம் கூடுகிறது இல்லையா அதே போலவே உங்களிடம் சக்தி பெறுவதற்கான காட்சி வெகுவிரைவில் எதிரில் வரும். அதாவது நீங்களும் சக்தி கொடுப்பதற்காக கூட்டத்தை கூட்ட வேண்டியதாக இருக்கும் அதற்காக உங்களுக்கு முன்கூட்டியே உங்களுக்குள் இருப்பை சேமிக்க வேண்டியதாக இருக்கும். திரௌபதியின் அட்சய பாத்திரத்தின் வர்ணனை இருக்கிறது. நீங்கள் அனைவருமே தான் திரௌபதிகள். திரௌபதி என்றால் யக்ஞ மாதாவின் அட்சய பாத்திரம். இரண்டு விஷயங்களிலுமே பிரசித்தியானது. ஒன்று ஸ்தூல சாதனங்களின் எந்தவொரு குறையுமில்லை மற்றும் இரண்டாவது அனைத்து சக்திகளின் குறையுமில்லை. அனைத்து சக்திகளினால் நிரம்பிய அட்சய பாத்திரம் ஒருபொழுதும் காலியாவதில்லை. எத்தனை நபர்கள் வந்து விட்டாலும் எவ்வளவு பெரிய கூட்டம் கூடிவிட்டாலும் யாரும் பட்டினியாக திரும்பிச் செல்ல முடியாது.

வரக்கூடிய நாட்களில், எப்பொழுது இயற்கையின் சீற்றம் இருக்குமோ மற்றும் ஆபத்துக்கள் வருமோ அப்பொழுது அனைவரின் வயிறு நிரம்புவதற்காக எது உபயோகத்தில் வரும்? அந்த நேரம் அனைவரின் மனதில் எந்தப் பசி இருக்கும்? உணவின் குறைவா அல்லது செல்வத்தின் குறைவா? அப்பொழுதோ அமைதி மற்றும் சுகத்தின் பசி இருக்கும், ஏனென்றால் இயற்கையின் ஆபத்துக்களின் காரணமாக செல்வம் இருந்த போதிலும் செல்வத்தை காரியத்தில் உபயோகப்படுத்த முடியாது. இருந்த போதிலும் சாதனங்கள் மூலமாக பிராப்தி ஏற்பட

முடியாது. எப்பொழுது அனைத்து ஸ்தூல சாதனம் சாதனங்களினால் மற்றும் ஸ்தூல செல்வத்தினால் பிராப்தியின் எந்த ஆசையும் இருக்காதோ அந்த நேரம் அனைவரின் எண்ணத்தில் ஏதாவது சக்தி கொடுங்கள் என்பது இருக்கும். இந்த ஆபத்துக்களை கடந்து செல்வதற்காக யாராவது எங்களுக்கு சக்தி கொடுக்கட்டுமே என்ற எண்ணம் இருக்கும். அப்படி இந்த மாதிரியான கூட்டம் மிக அதிகமாக ஏற்படப்போகிறது, அந்த நேரம் தண்ணீரின் ஒரு துளி கூட எங்கும் தென்படாது. தானியமும், இயற்கையின் ஆபத்துக்களின் காரணமாக சாப்பிடத் தகுதியானதாக இருக்காது என்றால் அந்த நேரம் நீங்கள் என்ன செய்வீர்கள்? ஒருவேளை அந்த மாதிரி சோதனைகள் உங்கள் எதிரில் வருகிறது என்றால் அந்த நேரம் நீங்கள் என்ன செய்வீர்கள்? அந்த மாதிரி சோதனைகளை சகித்துக் கொள்வதற்கு அந்த அளவு தைரியம் இருக்கிறதா? அந்த நேரம் யோகா செய்ய முடியுமா? அல்லது தாகம் எடுக்குமா? ஒருவேளை கிணறும் காய்ந்து போய்விட்டது என்றால் பின்பு என்ன செய்வீர்கள்? எப்பொழுது இது விசேஷ ஆத்மாக்களின் குரூப்பாக இருக்கிறது என்றால் அவர்களது முயற்சியும் விசேஷமானதாக இருக்க வேண்டும் இல்லையா. இந்த அளவு சகித்துக் கொள்ளும் சக்தி இருக்கிறதா? எப்படி நாலாபுறமும் நெருப்பு பிடித்து எரிந்தது, ஆனால் சூளையில் இருந்த பூனைக்குட்டிகள் பாதுகாப்பாக இருந்தன. அவைகள் மேல் வெப்பம் கூட படவில்லை என்ற இந்த வர்ணனையை ஏன் புரிந்து கொள்வதில்லை. நீங்கள் இந்த நிச்சயத்தோடு ஏன் கூறுவதில்லை? ஒருவேளை யோக சொரூபமானவர்களாக இருக்கிறீர்கள் என்றால் அருகில் இருக்கும் இடத்தில் நஷ்டம் ஏற்பட்டாலும், தண்ணீர் வந்து விட்டாலும் தந்தை மூலமாக எது பொறுப்பான சேவை ஸ்தானமாக ஆகியிருக்கிறதோ அது பாதுகாப்பாக இருக்கும். ஒருவேளை நீங்கள் எந்தவொரு தவறும் செய்யவில்லை என்றால். ஒருவேளை இதுவரை எங்காவது நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்றால், அது தன்னுடைய புத்தியின் தீர்மானத்தின் பலஹீனத்தின் காரணமாகத் தான் ஏற்பட்டது ஆனால் ஒருவேளை மகாரதி, விசாலபுத்தி உடையவர் மற்றும் அனைத்து சக்திகளின் வரதானத்தை பிராப்தி செய்திருப்பவர் எந்த இடத்தில் இருந்தாலும் அங்கு பெரிய ஈட்டி கூட சிறிய முள்ளாக ஆகி விடும் அதாவது அவர்கள் பாதுகாப்பாகி விடுவார்கள். எப்படிப்பட்ட நேரமாக இருந்தாலும் ஒருவேளை சக்திகளின் இருப்பு சேமிப்பாகியிருக்கிறது என்றால்

சக்திகள் உங்களுடைய இயற்கையை அவசியம் தாசியாக்கும் அதாவது சாதனம் தானாகவே பிராப்தி ஆகும்.

தொடக்க காலத்தில் ஓம் மண்டலி தான் உலகத்திலேயே செல்வந்தமானது என்று செய்தித் தாள்களில் வெளியானது. இதே விஷயம் பின்பு கடைசியிலும் அனைவரின் வாயிலிருந்து வெளியாகும் ஆனால் ஒருவேளை ஏதாவது ஒரு சக்தியின் குறை இருக்கிறது என்றால், எங்காவது ஏமாற்றம் அடையும் அனுபவமாகும். எனவே இந்த நுண்ணியமான விஷயங்களில் தான் முயற்சி செய்ய வேண்டும் என்ற இந்த கவனத்தை அவசியம் வைக்க வேண்டும். யாருக்காவது துக்கமோ கொடுக்கவில்லையே சூழ்நிலையை கையாளத் தெரிகிறதா? அல்லது இல்லையா? இவை அனைத்துமோ சிறு சிறு விஷயங்கள். முரபி குழந்தைகளின் முயற்சி இது வரையிலும் இந்த விஷயங்களின் மேல் இருக்கக்கூடாது. இப்பொழுதைய முயற்சி அனைத்து சக்திகளின் இருப்பை நிரப்புவதற்கானதாக இருக்க வேண்டும். முரபிக் குழந்தைகளின் தினசரி சார்ட்டில் இன்று யார் மேலாவது கோபப்படவில்லையே மற்றும் யாராவது அதிருப்தி அடையவில்லையே என்று சார்ட்டின் சோதனையாக மட்டும் இருக்கக்கூடாது. அப்படி மேலோட்டமான விஷயங்களை சோதிப்பது என்பதோ குதிரைப்படையினர் மற்றும் காலாட்படையினரின் வேலையாகும். முரபி குழந்தைகளின் முயற்சி இதுவரையிலும் இந்த விஷயங்களின் மேல் இருக்கக்கூடாது. இப்பொழுதைய முயற்சியானது அனைத்து சக்திகளையும் நிரப்புவதற்கானதாக இருக்க வேண்டும். ஏதாவது ஒரு சக்தி இல்லை என்றால் முரபி குழந்தைகளின் பட்டியலிலிருந்து வெளியாவதாகும். ஆறு சக்திகள் என்னுள் இருக்கிறது மேலும் எட்டு சக்திகளிலிருந்து இரண்டு இல்லை என்றால் 50 சதவிகிமோ முன்னுக்கு வந்து விட்டோம் என்று அப்படியில்லை. இதிலேயே குஷி அடையக்கூடாது. முக்கியமானதாக அஷ்ட சக்திகள் கூறப்பட்டிருக்கிறது ஆனால் அனைத்து சக்திகளும் இருக்க வேண்டும். அஷ்ட சக்திகள் மட்டும் இல்லை இல்லையா? சக்திகளோ அதிகமாக இருக்கின்றன. மற்றபடி சொல்வதற்காக சுலபமாக இருக்க வேண்டும் என்ற காரணத்திற்காக அஷ்ட சக்திகள் கூறப்பட்டிருக்கிறது. இப்பொழுது ஏதாவது ஒரு சக்தியின் குறை கூட இருக்கக்கூடாது. ஏனென்றால், இப்பொழுது எந்த சக்தியின் குறை இருந்தாலும் அதுவே

சோதனை ரூபத்தில் வரும். அதாவது ஒவ்வொருவரின் எதிரில் நாடகப்படி பரீட்சையில் அதே கேள்வி வரும். எனவே அனைத்து குணங்கள் நிரம்பிய, 16-கலைகள் நிரம்பிய மற்றும் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகுங்கள். ஒருவேளை ஒரு சக்தியின் குறை இருக்கிறது என்றாலும் சக்திகள் என்று தான் கூறுவோமே அன்றி சர்வ சக்திகள் என்று கூற மாட்டோம். முரபி குழந்தைகள் என்றால் மாஸ்டர் சர்வ சக்திவான். முரபி குழந்தை என்றால் மரியாதை புருஷோத்தமர், எப்பொழுது அவரே மரியாதை புருஷோத்தமராக இருக்கிறார் என்றால் அவருடைய எண்ணமும் மரியாதைக்கு விபரீதமானதாக இருக்க முடியாது. எப்பொழுது உங்களுடைய நடத்தையை மரியாதை மற்றும் ஈஸ்வரிய நியமங்கள் என்று புரிந்து நடக்கிறார்கள் என்றால் நீங்களும் மரியாதை புருஷோத்தமர் ஆவீர்கள் இல்லையா?

பாப்தாதா இந்த சபையின் ரூப்ரேகா (யார் எப்படி எனும் முழு விபரம்) கேட்டும் இருக்கிறார் மற்றும் பார்த்தும் இருக்கிறார். மிக நல்லதாக பார்த்தோம் மற்றும் மிக நல்லதாகக் கேட்டோம். ஒவ்வொருவரும் தன்னுடைய நகையை மிக நன்றாக தயார் செய்திருக்கிறார்கள். எப்பொழுது நகை தயாரிக்கிறார்கள் என்றால் முதலில் தங்கத்தின் நகை தயார் செய்கிறார்கள் பிறகு தான் அதில் வைரம் வைடூரியங்களை பதிக்கிறார்கள். அப்படி நகையையோ மிக நல்ல நல்ல நகை தயாரிப்பவர்கள் தயாரித்திருக்கிறார்கள். வடிவமும் மிக நல்லதாக இருக்கிறது ஆனால் அதில் ரத்தினத்தைப் பதிக்கவேண்டும். அது இன்னும் ஆகவில்லை. எப்பொழுது திட்டத்தை நடைமுறையில் கொண்டு வருவீர்களோ அப்பொழுது ரத்தினம் பதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லலாம். நகை மிக நன்றாக தயாரித்திருக்கிறீர்கள் என்றால் திட்டத்தை மிக நல்லதாக உருவாக்கியிருக்கிறீர்கள். இப்பொழுது ஒவ்வொருவரும் எவ்வளவு விலைமதிக்க முடியாத வைரங்களினால் தன்னை அதாவது நகைகளை உயர்ந்ததாக ஆக்குகிறார்கள் என்ற இதைப் பார்க்க வேண்டும். இப்பொழுது அந்த ரிசல்ட்டைப் பார்ப்போம். ஞானம் நிறைந்தவராகவோ ஆகியிருக்கிறீர்கள் ஆனால் நேரத்திற்குத் தகுந்தாற்போல் இப்பொழுது சக்திசாலியாக ஆவதற்கான அவசியம் இருக்கிறது. ஞானம் நிறைந்த நிலையின் நகையோ தயாரித்திருக்கிறீர்கள். மேலும் இப்பொழுது சக்திசாலியான கற்களைத் தயார் செய்து பதிப்பது பாக்கி இருக்கிறது. நன்றாக

முற்றுகையிட்டிருக்கிறீர்கள். ஒருவர் இன்னொருவரின் கையோடு கை கோர்த்திருக்கிறீர்கள். அப்பொழுது தான் முற்றுகை ஏற்பட்டது இல்லையா? இப்பொழுது இன்னும் என்ன செய்ய வேண்டும். ஒருவேளை எப்பொழுதாவது கையோடு கை கோர்ப்பவரின் கை பலஹீனம் ஆகி விட்டது மற்றும் களைப்படைந்து விட்டது என்றாலும் அவரை பலஹீனம் ஆகவிடாதீர்கள் மற்றும் அந்த மாதிரி களைப்படைந்துள்ள கையையும் களைப்பற்றதாக ஆக்க வேண்டும். அப்பொழுது தான் வெற்றி கிடைக்கும். இந்த சபையின் வெற்றி தன்னை உருவாக்குவதில் மட்டும் இல்லை ஆனால் சபையை உறுதியாக்க வேண்டும். அனைத்து உடன் இருப்பவர்களையும் ஊக்கம் உற்சாகத்தில் கொண்டு வர வேண்டும். இது தான் இந்த சபையின் வெற்றி ஆகும். எப்பொழுது மற்றவர்களின் குறையை தன்னுடைய குறை என்று புரிந்து கொள்வீர்களோ அப்பொழுது தான் சபையை வெற்றியுடையதாக ஆக்க முடியும். ஒருவரின் குறையை, களைப்பை, பலஹீனத்தைப் பார்த்துக் கொண்டே தன்னை அந்த மாதிரியான தொடர்பின் பாதிப்பில் கொண்டு வர வேண்டாம். இன்னார் இந்த மாதிரி செய்கிறார் என்றால் பின்பு நானும் செய்வேன், இன்னார் செய்தார் ஒருவேளை நானும் செய்தேன் என்றால் என்னவாகி விட்டது? இந்த எண்ணத்தை கனவில் கூட வரவிடாதீர்கள். அப்பொழுது வெற்றி என்று புரிந்து கொள்ளுங்கள். மதுபன் நிவாசிகளும் அதிர்ஷ்டசாலிகள், மதுபன் நிவாசிகளின் ரிசல்ட்டில் ஊக்கம், உற்சாகம் மற்றும் களைப்பற்ற நிலை நன்றாக இருக்கிறது. மற்றபடி வரும் நாட்களுக்காக இன்னும் மாயை தாக்க முடியாதவராக ஆகுங்கள். எப்படி வாட்டர் ப்ரூஃப் (நீரால் பாதிக்கப்படாத நிலை) இருக்கிறது. அதே போல் மதுபன் நிவாசிகளுக்கு மாயா ப்ரூஃப் ஆக வேண்டும். புரிந்ததா,

அந்த மாதிரி தன்னை மற்றும் அனைத்து ஆத்மாக்களையும் சக்திசாலியாக ஆக்கக்கூடிய, பலமற்றவர்களை பலம் நிரம்பியவர்களாக ஆக்கக்கூடிய, சபையில் மற்றவர்களின் குறையை தன்னுடைய குறை என்று புரிந்து அகற்றக்கூடிய சர்வ சக்திகளின் களஞ்சியத்தால் நிரம்பிய மாஸ்டர் சர்வ சக்திவான், எப்பொழுதும் தன் மேல் மற்றும் அனைவரின் மேல் திருப்தியாக இருக்கக்கூடிய திருப்தி மணிகளுக்கு, பாப்தாதா மற்றும் அனைவரின் உள்ளத்தின் மேல் வெற்றி அடையக்கூடிய அதாவது அனைத்து ஆத்மாக்களின் சம்ஸ்காரம்,

சுபாவத்தை தந்தைக்குச் சமமானதாக ஆக்கக்கூடிய அந்த மாதிரி வெற்றி ரத்தினங்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவு, இரவு வணக்கம் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: பரிவர்த்தனை சக்தி மூலமாக கடந்ததை முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய நிர்மலமான மற்றும் பணிவானவர் ஆகுக!

பரிவர்த்தனை சக்தி மூலமாக முதலில் தன்னுடைய சொரூபத்தை நான் உடல் இல்லை ஆத்மா ஆவேன் என்று பரிவர்த்தனை (மாற்றம்) செய்யுங்கள். பிறகு சுபாவத்தை பரிவர்த்தனை செய்யுங்கள். பழைய சுபாவம் தான் முயற்சி செய்யும் வாழ்க்கையில் ஏமாற்றம் கொடுக்கிறது. எனவே பழைய சுபாவம் அதாவது இயல்பை மாற்றம் செய்யுங்கள். பிறகு எண்ணங்களின் பரிவர்த்தனை. வீணான எண்ணங்களை சக்தி நிறைந்ததாக மாற்றம் செய்யுங்கள். இந்த விதமாக பரிவர்த்தனை சக்தி மூலமாக ஒவ்வொரு கடந்த விஷயத்திற்கும் புள்ளி வைத்தீர்கள் என்றால் நிர்மலமான மற்றும் பணிவானவராக இயல்பாகவே ஆகி விடுவீர்கள்.

சுலோகன்: நெற்றியில் எப்பொழுதும் நினைவின் திலகம் ஜொலித்துக் கொண்டே இருப்பது தான் உண்மையான சுமங்கல்யத்தின் அடையாளம் ஆகும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋ ❋❋❋❋❋❋❋❋

## 15.09.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# முயற்சி செய்வதின் கடைசி லட்சியம் அவ்யக்த ஃபரிஷ்தா நிலை!

இப்பொழுது குழந்தைகள் உங்களுடைய கடைசி நிலை உருவாக்குவதற்கான கடைசி முயற்சி நடந்து கொண்டிருக்கிறது. மஹாரதி குழந்தைகள் யார் பொறுப்பாளர் ஆகியிருக்கிறார்களோ அவர்களுக்கு தன்னுடைய முயற்சியின் வேகத்திலும் அனைவரின் எதிரில் ஒரு எடுத்துக்காட்டாக ஆக வேண்டும். உயர்ந்த முயற்சி என்றால் என்ன? அதை யாரைப் பார்த்து பின்பற்றுவீர்கள்? எப்படி சாகாரத்தில் முயற்சி எப்படி செய்வது மற்றும் முயற்சி செய்வது என்று எதைக் கூறுவது? முதலிலோ முயற்சியின் சிம்பலாக (அடையாளமாக) அதாவது சாகார பிரம்மாபாபாவை பார்த்து அனைவரும் முன்னேறிக் கொண்டிருந்தார்கள் ஆனால் இந்த நேரம் சாகாரத்தில் சிம்பல் யாராக இருக்கிறார்? மஹாரதி. மஹாரதி களிடம் அந்த மாதிரி முயற்சி நடந்து கொண்டிருக்கிறதா? அவர்களைப் பார்த்து மற்ற ஆத்மாக்களின் முயற்சி செய்வதும் சிம்பிலாக (இலகுவாக) ஆகி விட வேண்டும். கடைசி முயற்சி எது, அதைத் தெரிந்திருக்கிறீர்களா? எப்படி தொடக்கத்தில் தேக அபிமானத்தை அகற்றுவதற்காக "நான் சதுர்புஜ் (நான்கு கைகள் உள்ளவன்)" என்ற முயற்சி செய்வது வைக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் தான் பெண் என்ற உணர்வு, பலஹீனம், கோழைத்தனம் ஆகியவை அகன்று விட்டன மற்றும் நீங்கள் பயமற்றவராக மற்றும் சக்திசாலியாக ஆகி விட்டீர்கள். அப்படி தொடக்கத்தில் எப்படி தேக அபிமானத்தை அகற்றுவதற்காக நான் சதுர்புஜமாவேன் என்ற இந்த நடைமுறை முயற்சி இருந்தது இல்லையா? போகும்பொழுதும் வரும்பொழுதும் மற்றும் பேசும்பொழுதும் நான் பெண் அல்ல நான் சதுர்புஜம் ஆவேன் என்ற போதை இருந்தது என்ற இந்த இரண்டு சம்ஸ்காரம் மற்றும் அந்த இரண்டு சக்திகள் கிடைத்து விட்டன. அதாவது இந்த இரண்டு காரியத்தையும் நாம் செய்ய முடியும். அதே போல் கடைசி லட்சியமாக எது நினைவில் இருக்க வேண்டும் அதன்

மூலம் லட்சணம் தானாகவே வந்து விட வேண்டும்? முயற்சி செய்வதற்காக அந்த கடைசி லட்சியம் எது? அவ்யக்த பரிஷ்தாவாகி இருப்பது தான் அதுவாகும். அவ்யக்த ரூபம் எது? ஃபரிஷ்தா நிலை. அதிலேயும் ஒளிவடிவமான ரூபம் எதிரில் இருக்கிறது. இது தான் என்னுடைய லட்சியம். அதை எதிரில் வைப்பதினால் ஒளி மண்டலத்தில் என்னுடைய ஒளி வடிவமான உடல் இருக்கிறது என்ற மாதிரி இருக்கும். எப்படி சூட்சும வதனத்திலும் அவ்யக்த ரூபத்தைப் பார்க்கிறீர்கள் என்றால், அவ்யக்தம் மற்றும் வியக்தத்தில் என்ன வித்தியாசம் பார்க்கிறீர்கள்? வியக்தம் ஐந்து தத்துவங்களினால் ஆனது மற்றும் அவ்யக்தம் ஒளி வடிவிலானது. ஒளி வடிவமான ரூபமோ இருக்கிறது, ஆனால் அக்கம் பக்கம் நாலாபுறமும் ஒளியே ஒளி தான் அதாவது ஒளிமண்டலத்தில் இந்த ஆகார உடல் (ஒளி வடிவமான உடல்) தென்படுகிறது. சூரியனின் ஒளியோ இருக்கிறது ஆனால் அதன் நாலாபுறத்திலும் சூரியனின் ஒளி நிழல் ரூபத்தில் பரவி இருப்பது தென்படுகிறது. மேலும் ஒளியில் விசேஷ பிரகாஷம் தென்படுகிறது. இந்த விதமாக நான் ஆத்மா ஜோதி ரூபமானவன் என்ற இந்த லட்சியமோ இருக்கவே இருக்கிறது ஆனால் நான் ஆகாரத்திலும் ஒளி மண்டலத்திலிருக்கிறேன். நாலாபுறங்களிலும் தன்னுடைய சொரூபம் ஒளியே ஒளியின் நடுவில் இருப்பதாக நினைவில் இருக்கட்டும் மற்றும் தென்படவும் வேண்டும், அந்த மாதிரி அனுபவம் ஆகட்டும். கண்ணாடியில் பார்க்கிறீர்கள் என்றால் தெளிவான ரூபம் தென்படுகிறதல்லவா?. அதே போலவே ஞானம் என்ற கண்ணாடியில் தன்னுடைய இந்த ரூபம் தெளிவாகத் தென்படும். மேலும் அனுபவம் ஆகட்டும். காரியங்கள் செய்து கொண்டே, போகும் பொழுதும் வரும்பொழுதும் மற்றும் பேசிக் கொண்டே நான் ஒளிரூபமானவன், நான் ஃபரிஷ்தா சென்று கொண்டிருக்கிறேன் மற்றும் நான் ஃபரிஷ்தா பேசிக் கொண்டிருக்கிறேன் என்ற உணர்வு இருக்கட்டும். அப்பொழுது தான் உங்களுடைய நினைவு மற்றும் நிலையின் பிரபாவம் மற்றவர்கள் மேல் ஏற்படும். காரியங்கள் செய்து கொண்டே நான் ஃபரிஷ்தா இந்தக் காரியத்திற்காக பூமியில் கால் வைத்திருக் கிறேன், ஆனால் நான் அவ்யக்த தேசத்தைச் சேர்ந்தவன் என்ற இந்த நினைவை இப்பொழுது அதிகப்படுத்துங்கள். நான் இந்த காரியத்திற்காக அவதரிக்கிறேன், அதாவது நான் இந்தக் காரியத்திற்காக வதனத்தில் இருந்து பூமிக்கு வந்திருக்கிறேன். காரியம் முடிவடைந்தது. பின்பு திரும்பி என்னுடைய

வதனத்தில் இருக்கிறேன். எப்படி தந்தை வருகிறார் என்றால் நான் வதனத்தில் இருந்து வந்திருக்கிறேன், இந்தக் காரியத்திற்காக வந்திருக்கிறேன் மற்றும் நான் திரும்பிச் செல்ல வேண்டும் என்ற இந்த நினைவு இருக்கிறது இல்லையா? அதே போலவே உங்கள் அனைவருக்கும் நான் அவதாரம் ஆவேன் அதாவது நான் அவதரித்திருக்கிறேன். நான் இப்பொழுது பிராமணனாக இருக்கிறேன். பின்னர் தேவதை யாக ஆவேன் - உண்மையில் இது கூட மேலோட்டமான ரூபமாக இருக்கிறது. இந்த நிலை கூட சாகாரமாகும். இப்பொழுது உங்களுடைய நிலை ஆகாரமாக ஆக வேண்டியதாக இருக்கிறது. ஏனென்றால் ஆகாரத்திலிருந்து பின்பு நிராகாரமாவது சுலபமாகி விடும். எப்படி தந்தையும் (பிரம்மாபாபாவும் சாகாரத்திலிருந்து ஆகாரியாக ஆனார், ஆகாரியிலிருந்து பிறகு நிராகாரி மற்றும் பின்பு சாகாரி ஆவார்.

இப்பொழுது நீங்களும் அவ்யக்த வதனவாசி நிலை வரை சென்றடைய வேண்டும் அப்பொழுது தான் நீங்கள் உடன் செல்ல முடியும். இப்பொழுது இந்த சாகாரத்திலிருந்து அவ்யக்த ரூபத்திற்கான பங்கு ஏன் ஏற்பட்டது? அனைவரையும் அவ்யக்த நிலையில் நிலைத்திருக்கச் செய்வதற்காக. ஏனென்றால் இது வரை அந்த நிலை வரை சென்றடையவில்லை. இப்பொழுது கடைசி முயற்சியாக இது தான் இன்னும் இருக்கிறது. இதன் மூலமாகத் தான் சாட்சாத்காரம் ஏற்படும். சாகார சொரூபத்தின் போதைக்கான விஷயங்களோ அதிகமாக இருக்கின்றன - நான் உயர்ந்த ஆத்மா, நான் பிராமணன் ஆவேன் மற்றும் நான் சக்தி ஆவேன் என்பது போல. இந்த நினைவின் மூலமாக உங்களுக்கு போதை மற்றும் குஷியின் அனுபவம் ஆகும் ஆனால் எதுவரை இந்த அவ்யக்த சொரூபத்தில், ஒளி மண்டலத்தில் தன்னை அனுபவம் செய்யவில்லையோ அது வரை மற்றவர்களுக்கு உங்களுடைய காட்சி கிடைக்காது. ஏனென்றால் தேவி சொரூபத்தின் சாட்சாத்காரமாக என்ன பக்தர்களுக்கு கிடைக்குமோ அது அனைத்து காரியங்களையும் செய்து கொண்டு போகும்பொழுதும் வரும்பொழுதும் ஒளி மண்டலத்திலேயே இருப்பதினால் தான் ஏற்படும். சாட்சாத்காரம் கூட லைட் (ஒளி) இன்றி ஏற்படாது. எப்பொழுது நீங்களே லைட் ரூபத்தில் நிலைத்திருப்பீர்களோ அப்பொழுது உங்களுடைய லைட் ரூபத்தின் பிரபாவத் தினால் தான் அவர்களுக்கு சாட்சாத்காரம் ஏற்படும்.

இதைத் தான் சாஸ்திரங்களில் கம்சன் குமாரியை வெட்டினான் என்றால் அது மேலே பறந்து சென்று விட்டது. சாட்சாத் ரூபமுடையதாக ஆகி விட்டது. பின்பு ஆகாஷ்வாணி (அசரீரி வாக்கு) கூறியதாக என்று காண்பித்திருக்கிறார்கள். அதே போலவே உங்களுடைய சாட்சாத்காரம் ஏற்படுகிறது என்றால், இது தேவி மூலமாக ஆகாஷவாணி ஒலித்துக் கொண்டிருக்கிறது என்று அந்த மாதிரி அனுபவம் ஆகும். இந்த தேவி அல்லது சக்தி எனக்காக என்ன ஆகாஷவாணி சொல்லிக் கொண்டிருக்கிறார் என்று கேட்பதற்கு ஆவல் உள்ளவர்களாக இருப்பார்கள். உங்களில் இந்தப் புதுமை தென்பட வேண்டும். சாதாரண பேச்சு தென்பட வேண்டாம், மேலே இருந்து ஆகாஷவாணி கேட்டுக் கொண்டிருக்கிறது என்று அந்த மாதிரி மட்டும் அனுபவம் ஆகட்டும். எனவே இப்பொழுது ஜுவாலாமுகி ஆவதற்கான நேரம் என்று கூறினோம். இப்பொழுது உங்களுடைய கோபி நிலையின் பங்கு முடிவடைந்து விட்டது. மகாரதிகள் யார் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கு இந்த விதமாக சேவை செய்வதற்கான பங்கும் தானாகவே மாறிக் கொண்டே இருக்கிறது. முன்பு நீங்கள் சொற்பொழிவு நிகழ்த்தினீர்கள் மற்றும் 7 நாள் பாடம் செய்வித்தீர்கள். இப்பொழுது தலைமை என்ற ரூபத்தில் கொஞ்சம் ஆசீர்வாத உரை நிகழ்த்துகிறீர்கள். பாடமுறை ஆகியவற்றை உங்களுடன் இருப்பவர்கள் செய்விக்கிறார்கள். இப்பொழுது இந்த நேரம் யாரையாவது கவர வேண்டும். தைரியம் மற்றும் உற்சாகத்தில் கொண்டு வர வேண்டும் என்ற இந்த சேவை இன்னும் செய்ய வேண்டியது இருக்கிறது என்றால் வித்தியாசம் வந்து விடுகிறது இல்லையா? இதையும் தாண்டி ஆகாஷவாணி ஒலித்துக் கொண்டிருக்கிறது என்று அனுபவம் ஆகும். ஏதோ அவதாரம் மற்றும் இவர்கள் ஒரு சாதாரண மனிதர்கள் இல்லை என்று கூறுவார்கள். அவதாரம் தோற்றம் காட்சியாக ஆகியிருக்கிறது என்று கூறுவார்கள். சாட்சாத்காரத்தில் அனுபவம் செய்து செய்து தேவி தோற்றம் காட்சியாக (பிரகடணம்) ஆனது என்பது போல் ஆகும். மகாவாக்கியம் கூறினார் மற்றும் மறைந்து விட்டார். இப்பொழுதைய நிலை மற்றும் முயற்சியின் லட்சியமாக இது இருக்க வேண்டும். இப்பொழுது ஸ்தூல காரியங்களில் இருந்தும் விலகிக் கொண்டே இருப்பவர்கள் ஆவீர்கள். இஷாராவில் (சமிக்ஞையில்) கேட்டீர்கள், டைரக்ஷன் கொடுத்தீர்கள். பின்பு அவ்யக்த வதனத்தில் வந்து விட்டீர்கள். எப்படி சாகார பாபாவில்

பார்த்தீர்கள், அனுபவம் செய்தீர்கள். கீழே வந்தார். டைரக்ஷன் கொடுத்தார், கேட்டீர்கள், மேலும் மீண்டும் மேலே வந்து விட்டார். தொடக்கத்தில் மற்றும் கடைசியின் காரியத்தில் இரவு மற்றும் பகலுக்கான வித்தியாசம் தென்படவில்லை. இப்பொழுது பொறுப்புக்களோ இன்னும் அதிகரிக்கும். எப்பொழுது பொறுப்புக்கள் குறையுமோ அப்பொழுது ஃபரிஷ்தா ஆவோம் என்று அப்படி இல்லை. பொறுப்புக்கள் மற்றும் சேவையின் விஸ்தாரமோ நாலாபுறமும் இன்னும் அதிகரிக்கும். எப்படி இப்பொழுது வெளிநாட்டின் சேவையும் அதிகரித்தது. மற்றும் விஸ்தாரமானதாகவும் ஆனது இல்லையா? அது போலவே விதவிதமான சேவைகள் என்ன நடந்து கொண்டிருக்கிறதோ அவை அவசியம் அதிகரிக்கும். உலகின் ஒவ்வொரு விதமான ஆத்மாக்களுக்கு நன்மை ஏற்பட்டதாக சாஸ்திரங்களிலும் வர்ணனை இருக்கிறது. நடை முறையில் நடந்தது இல்லையா? அதனால் தான் இதன் வர்ணனையும் சாஸ்திரங்களில் இருக்கிறது. இவை அனைத்தும் நடக்கும். இப்பொழுதோ ஒரு இடத்தில் அமர்ந்திருக்கிறீர்கள். பின்னாட்களில் 10 இடங்களைக் கவனிக்க வேண்டியதாக இருக்கும் என்றால் ஒரு இடத்தில் அமர்ந்திருக்க முடியாது. இப்பொழுதோ 6-8 மாதம் ஒரே இடத்தில் அமர்கிறீர்கள். பின்போ லைட் ஹவுஸ் மாதிரி சேவை செய்து கொண்டே இருப்பீர்கள். பொறுப்பாளராகியிருக்கும் முக்கியமானவர்கள், சேவை செய்பவர்கள் மற்றும் இராஜ்ய பாக்கியத்தின் ஆசனத்தை அடைபவர்கள் அந்த மாதிரி நெருக்கமான ரத்தினங்கள் லைட் ஹவுஸ் மாதிரி சுற்றி சுற்றி நாலாபுறமும் லைட் கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். லைட் ஹவுஸின் நடைமுறை ரூபமும் தேவை இல்லையா? ஒருவர் அனேகர்களுக்கு லைட் கொடுப்பார். எல்லைக்கப் பாற்பட்ட உலகின் அதிபதி என்றால் பிறகு அவர் ஒரு ஏரியாவின் எல்லைக்குட்பட்ட பொறுப்பாளராக இருக்கிறார் என்ற இதுவோ இருக்க முடியாது இல்லையா? அவருக்கு ஏதோ ஒரு இடம் இருப்பிடமாக இருந்தாலோ எப்படி லைட் ஹவுஸிற்கும் ஒரு இடம் நிரந்தரமாக இருக்கிறது. சேவை ஒரு இடத்திற்கு மட்டும் செய்யாமல் நாலாபுறமும் லைட்டை பரப்புவார்கள். இதே விதத்தில் ஸ்தானம் ஒன்றாக இருந்தாலும் தன்னில் என்ன விசேஷங்கள் மற்றும் சக்திகள் இருக்கின்றனவோ அதன் லாபம் நாலாபுறங்களிலும் ஏற்படட்டும். இதுவரையிலும் ஒரு இடத்திற்கு மட்டும் உங்களுடைய விசேஷத்தின் லாபம் இருக்கிறது. சூரியன் ஒரு இடத்திற்கு மட்டும்

தான் வெளிச்சம் கொடுக்கிறாரா என்ன? உங்களுடைய விசேஷ சக்தி என்ற கிரணங்கள் நாலாபுறமும் பரவ வேண்டும் இல்லையா? இல்லை என்றால் மாஸ்டர் சர்வ சக்திவான் மற்றும் ஞான நட்சத்திரங்கள் நீங்கள் எப்படி நிரூபணம் ஆவீர்கள். மாஸ்டர் ஞான சூரியன் என்றால் தந்தைக்குச் சமமானவர். நட்சத்திரமாக இருந்த போதிலும் தந்தைக்குச் சமமான நிலை. அதையோ அஷ்ட ரத்தினங்கள் மட்டும் தான் அடைவார்கள் இல்லையா? ஒருவேளை ஏதாவது ஒரு நட்சத்திரம் ஒரு இடத்தில் மட்டும் தன்னுடைய பிரகாசத்தைப் பரப்புகிறது மற்றும் மின்னிக் கொண்டிருக்கிறது, தன்னுடைய ஏரியாவில் மட்டும் வெளிச்சம் கொடுக்கிறது என்றால் அவரை மாஸ்டர் ஞான சூரியன் மற்றும் தந்தைக்குச் சமமானவர் என்று கூற முடியாது. எது வரை தந்தைக்குச் சமமான நிலையில் வரவில்லையோ அது வரை தந்தைக்குச் சமமான ஆசனத்தை அடைய முடியாது. எனவே சேவை அதிகரிக்கின்ற மாதிரி தன்னுடைய நிலையையும் அந்த மாதிரி உருவாக்குங்கள்.

சக்கரதாரி (சுற்றி வருபவராக) ஆனீர்கள் என்றால் சக்கரவர்த்தி மகாராஜா ஆவீர்கள். இங்கு (சங்கமயுகத்தில்) சக்கரதாரி, அங்கு (சத்யுகத்தில்) சக்கரவர்த்தி. யாரில் லைட்டின் சக்கரமும் இருக்கிறது மற்றும் சேவையில் ஒளி பரப்பக்கூடிய சக்கரமும் இருக்கிறது என்றால் தான் சக்கரதாரி என்று கூறுவோம். அந்த மாதிரி சக்கரதாரி தான் சக்கரவர்த்தி ஆக முடியும். போகும் பொழுதும், வரும்பொழுதும் எப்படி இந்த கண்களுக்குத் தென்படுகிறதோ அதே போல் ஒவ்வொருவருக்கும் லைட்டின் சக்கரம் தென்படும். உண்மையிலேயே இருக்கிறதா மற்றும் நான் மட்டும் தான் பார்த்துக் கொண்டிருக்கிறேனா என்று ஆச்சரியப்படுவார்கள். உங்களுடைய லைட்டின் ரூபம் மற்றும் லைட்டின் கிரீடம் அந்த மாதிரி அனைவருக்கும் தென்படுகின்ற மாதிரி பொதுவானதாக ஆகி விடும். இது லைட்டின் கிரீடம் அணிந்தவர்கள் எப்படி சாகார பாபாவில் லைட்டின் அனுபவம் செய்வது பொதுவான விஷயமாக இருந்ததோ. எப்படி இந்தக் கண்களால் பார்க்கிறீர்களோ அப்படி அனைவருக்கும் அந்த ரூபத்தில் பார்க்க தென்பட்டது. அந்த மாதிரி உங்களுக்கு அனுபவம் ஆகும். பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவர்கள் மறைய ஆரம்பிப்பார்கள் - நான் எங்கிருக்கிறேன் மற்றும் என்ன பார்த்துக் கொண்டிருக்கிறேன். எப்படி சாகார பாபா மூலமாக

# 1974 அவ்யக்த முரளி

நீங்களே உங்கள் மேல் எப்பொழுதாவது ஆச்சரியப்பட்டீர்கள், என்னுடைய கால்கள் இங்கிருக்கிறதா அல்லது மூல வதனத்திலா அல்லது சூட்சம வதனத்திலா என்று அனுபவம் செய்தீர்கள். எப்படி சாகார பாபா மூலமாக உங்களுக்கு அனுபவம் ஏற்பட்டதோ. அதே போலவே பின்பு உங்கள் மூலமாக அனைவருக்கும் அனுபவம் ஆகும். அப்பொழுது தான் சமமான நிலையில் வருவீர்கள். எப்பொழுது இடையிடையே தன்னுடைய இந்த சொரூபத்தின் நினைவைக் கொண்டு வந்து கொண்டே இருப்பீர்களோ அப்பொழுது அது ஏற்படும். சாகார பாபாவும் குப்தமான (ரகசியமாக) முயற்சி செய்தார், இதே போல் நீங்களும் இந்த குப்த முயற்சி மற்றும் குப்த கடின உழைப்பை செய்ய வேண்டும். அந்த அளவு கவனம் இருக்கிறதா? டென்ஷன் இருந்தாலும் அடென்ஷன் இருக்க வேண்டும்.

இப்பொழுதோ, இருந்தாலும் இரவு மற்றும் பகலில் ஓய்வு எடுப்பதற்கான நேரம் கிடைக்கிறது ஆனால் பிறகோ இந்த ஓய்வு எடுப்பதும் முடிவடைந்து விடும் ஆனால் எவ்வளவு அவ்யக்த லைட் ரூபத்தில் நிலைத்திருப்பீர்களோ அந்த அளவே உடலிலிருந்து விலகியிருப்பதற்கான பயிற்சி இருக்கும் காரணத்தினால் இரண்டு, நான்கு நிமிடங்கள் கூட அசரீரி ஆனீர்கள் என்றால் நான்கு மணிநேரம் ஓய்வு எடுத்ததாக எடுத்துக் கொள்ளுங்கள். தூக்கத்திற்குப் பதிலாக நான்கு ஐந்து நிமிடங்கள் அசரீரி ஆகி விடுவீர்கள் அந்த மாதிரியான நேரமும் வரும். எப்படி தூக்கத்தினால் உடலுக்கு சக்தி கிடைத்து விடுகிறதோ அது போலவே இதுவும் சக்தி கிடைத்து விடும். உடலோ பழையது தான் இருக்கும். கணக்கு வழக்கும் பழையதாகவே இருக்கும். அதில் இது மட்டும் கூடுதலாக சேர்ந்து விடும். லைட் சொரூபத்தின் நினைவை உறுதியாக்குவதினால் கணக்கு வழக்கை முடிப்பதிலும் கூட லைட் ரூபம் ஆகி விடுவீர்கள். எப்படி இன்ஜக்ஷன் போடுவதினால் ஐந்து நிமிடத்திலேயே வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது, தூக்க மாத்திரை எடுப்பதினாலேயும் துயரம், துன்பம் முடிந்து விடுகிறது. அதே போல் நாம் தூக்கத்திற்கான சக்தியை எடுக்கிறோம் என்று அந்த மாதிரியே நினைத்துக் கொள்ளுங்கள். அந்த மாதிரியான நிலையைக் கொண்டு வருவதற்காகத் தான் இந்தப் பயிற்சி ஆகும்.

நாம் அவதரித்தவராக இருக்கிறோம் என்று அமிர்தவேளையிலும் விசேஷ பயிற்சி செய்ய வேண்டும். சில நேரம் நான் அசரீரி மற்றும் பரந்தாம நிவாசி ஆவேன், மேலும் அவ்யக்த ரூபத்தில் அவதரித்திருக்கிறேன் என்று அந்த மாதிரி நினைத்துக் கொள்ளுங்கள் மற்றும் சில நேரம் தன்னை நிராகாரமானவன் என்று நினைத்துக் கொள்ளுங்கள். இந்த மூன்று நிலையின் பயிற்சி எப்படி ஒரு அறையிலிருந்து இன்னொரு அறைக்குச் செல்வது போல் பயிற்சி ஆகி விட வேண்டும். எனவே அமிர்த வேளையில் இந்த விசேஷ அசரீரி ஆகுக என்ற வரதானத்தை எடுக்க வேண்டும். விசேஷமாக இப்பொழுது இந்த அனுபவம் இருக்கட்டும். நல்லது. முன்னேறும் கலை அனைவருக்காகவும் நன்மை பயப்பது. முன்னேறும் கலைக்கான நடைமுறை சொரூபமாக என்ன இருக்கிறது? அதில் அனைவருக்கும் நன்மை ஏற்படும். இதன் மூலம் தான் முன்னேறும் கலைக்கான தன்னுடைய முயற்சியை பார்க்க முடியும். அனைவருக்கும் நன்மை ஏற்படுவது தான் முன்னேறும் கலையை நிரூபிக்கிறது. உண்மையில் இது தான் தெர்மாமீட்டர் ஆகும். தொடக்கத்தில் உங்களுக்கு சீதளாதேவியின் பங்கு இருந்தது. இப்பொழுது ஜுவாலா தேவி யினுடைய பங்கு இருக்கிறது. முதலில் அன்பினால் நெருக்கமான உறவில் வந்தீர்கள். மேலும் இப்பொழுது சக்தி சொரூபம் ஆக வேண்டும். இப்பொழுது குணம் மற்றும் அன்பின் பிரபாவம் மட்டும் இருக்கிறது அல்லது ஞானத்தின் பிரபாவம் இருக்கிறது ஆனால் இவர் ஒரு சாதாரண சக்தி இல்லை, சாட்சாத்காரம் செய்விப்பவர் என்று அனுபவம் செய்யட்டும். எப்படி சூரியனின் கிரணங்கள் பரவுகிறது அதே போலவே மாஸ்டர் சர்வ சக்திவானின் நிலையில் சக்திகள் மற்றும் விசேஷங்கள் என்ற கிரணங்கள் நாலாபுறமும் பரவுவதாக அனுபவம் செய்யட்டும். நான் தடைகளை அழிப்பவன் என்ற இந்த நினைவின் ஆசனத்தில் அமர்ந்திருந்து காரியங்களை செய்வித்தீர்கள் என்றால் தடை எதிரில் கூட வராது. நல்லது.

**வரதானம்: கம்பைன்ட் (இணைந்த) சொரூபத்தின் நினைவு மூலமாக கம்பைன்ட் (இணைந்த) சேவை செய்யக்கூடிய வெற்றி அடைபவர் ஆகுக!**

எப்படி உடல் மற்றும் ஆத்மா இணைந்திருக்கிறது, எதிர்காலத்து விஷ்ணு சொரூபம் கம்பைன்ட் ஆக இருக்கிறது, அதே போல் தந்தை மற்றும் நான் ஆத்மா கம்பைன்ட் ஆக இருக்கிறேன் என்ற இந்த சொரூபத்தின் நினைவில் இருந்து சுயசேவை மற்றும் அனைத்து ஆத்மாக்களின் சேவையை சேர்த்தே செய்தீர்கள் என்றால் வெற்றி அடைபவர் ஆகி விடுவீர்கள். சேவையில் மிகவும் பிஸியாக இருந்தேன் எனவே சுயநிலை தொய்வாகி விட்டது என்று அந்த மாதிரி ஒருபொழுதும் கூறாதீர்கள். சேவைக்குச் சென்றீர்கள் மற்றும் திரும்பி வந்து மாயா வந்து விட்டது. மூட் ஆஃப் ஆகி விட்டது, டிஸ்டர்ப் ஆகி விட்டேன் என்று அந்த மாதிரி இருக்க வேண் சேவையில் வளர்ச்சிக்கான வழி இருக்கவே இருக்கிறது. சுயத்தின் மற்றும் அனைவரின் சேவை இணைந்தே இருக்கட்டும்.

சுலோகன்: எல்லைக்குட்பட்ட ஆசைகள் என்னவென்று தெரியாதது தான் மகான் செல்வந்தன் ஆவதாகும்!

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 05.12.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வீணான எண்ணங்களை சக்திசாலியாக ஆக்குவதின் மூலம் காலன் மீது வெற்றி அடையலாம்!

அவ்யக்த சந்திப்பு என்று எதைக் கூறுவது? யாரை சந்திக்க வேண்டியதாக இருக்கிறதோ அவருக்குச் சமமானவராக ஆக வேண்டியது இருக்கிறது. அப்படி அவ்யக்த சந்திப்பு என்றால் தந்தைக்குச் சமமாக அவ்யக்த ரூபமுடையவர் ஆவது ஆகும். அவ்யக்தம் என்றால் எங்கு வியக்த பாவம் (பௌதீக உணர்வு) இல்லையோ அது தான். அப்படி ஆகியிருக்கிறீர்களா? வியக்த தேசத்தின் வியக்த தேகத்தின் மற்றும் வியக்த பொருட்களின் கவர்ச்சி கொஞ்சம் கூட தன் பக்கம் கவர வேண்டாம், அந்த மாதிரியான நிலையை உருவாக்கியிருக்கிறீர்களா? நீ சொல்வதைத் தான் கேட்பேன் மற்றும் உன்னுடன் தான் பேசுவேன் என்ற இந்த முதன்முதல் உறுதிமொழி இருக்கிறது இல்லையா? அந்த உறுதிமொழியை நிறைவேற்றுவதற்காக முழு நாள் மற்றும் இரவில் அவ்யக்த மற்றும் நிராகார நிலையில் நிலைத்திருக்க வில்லை என்றால் பாப்தாதாவின் கூடவே இருப்பதின் அனுபவம் செய்ய முடியுமா? அதாவது உறுதி மொழிப்படி நடக்க முடியுமா? முழு நாளில் நீங்கள் எவ்வளவு நேரம் இந்த உறுதிமொழிப்படி நடந்து கொள்கிறீர்கள். யாருடன் சந்திக்க வேண்டியதாக இருக்கிறதோ அவருடைய இடத்தில் மற்றும் அதே மாதிரியான நிலையை தன்னுடையதாக உருவாக்க வேண்டியதாக இருக்கிறது. அந்த ஸ்தானம் மற்றும் ஸ்திதி (நிலை) இரண்டையுமே மாற்ற வேண்டியதாக இருக்கிறது. அப்பொழுது தான் இந்த உறுதி மொழிப்படி நடக்க முடியும். வியக்த உணர்வில் வருவது மற்றும் எந்தவொரு வியக்த பொருளின் மேல் இது எனக்கு பிரியமானது மற்றும் நன்றாக இருக்கிறது என்ற பாவனை வைப்பது அப்படி, வியக்த பொருள் மற்றும் வியக்தியின் மேல் (மனிதர்கள் மேல்) பாவனை வைப்பது கூட

காமனாவின் (ஆசை) ரூபமாக ஆகி விடுகிறது. எதுவரை காமனா இருக்கிறதோ அதுவரை மாயாவுடன் முழுமையான முறையில் சாமனா செய்ய (எதிர்க்க) முடியாது. எதுவரை சாமனா செய்ய முடியாதோ அதுவரை சமமாக ஆக முடியாது அதாவது உறுதிமொழிப்படி நடக்க முடியாது.

எப்படி நீங்கள் படத்தில் கிருஷ்ணனை உலக உருண்டையின் மேல் காண்பிக்கிறீர்கள். அதே போலவே தன்னுடைய நடைமுறை நிலைக்கான படத்தையும் உருவாக்குங்கள். இந்த ஸ்தூல தேசம் மற்றும் இந்த பழைய உலகத்திலிருந்து விலகிய நிலை. வியக்த உணர்வு மற்றும் வியக்த பொருட்கள் ஆகிய அனைத்திலிருந்தும் விலகிய அதாவது இவைகளின் மேல் பார்வையாளராகி நின்று கொண்டிருப்பது. எப்படி (கிருஷ்ணரின்) காலின் கீழே உலகத்தை காண்பிக்கிறார்கள் மற்றும் உலகின் மேல் அமர்ந்திருப்பதாக காண்பிக்கிறார்கள் அதாவது அவருடைய எஜமானத்தன்மை மற்றும் அதிகாரத்தன்மையைக் காண்பிக் கிறார்கள் என்றால் அந்த மாதிரி தன்னுடைய படத்தையும் உருவாக்குங்கள். இந்த பழைய உலகில் மனிதர்கள் மற்றும் பொருட்களின் கவர்ச்சியின் அடிமையாகி வராமல் தன்னுடைய சுய ஆசையினால் தன்னால் உருவாக்கப்பட்ட எண்ணத்தின் ஆதாரத்தினால் அவ்பக்தத்திலிருந்து வியக்தத்தில் வர வேண்டும். எப்படி லிப்ட்டில் உயரே செல்கிறீர்கள் என்றால் விரும்பினால் முதல் மாடிக்கு செல்லலாம், விரும்பினால் இரண்டாவது மாடிக்கும் செல்லலாம். ஏனென்றால் சுவிட்ச் தன்னுடைய கையிலிருக்கிறது, சுவிட்ச் கட்டுப்பாட்டிற்கு வெளியே சென்று விடுகிறது என்றால், அப்பொழுது விளைவு என்னவாக இருக்கும்? இடையில் நின்று விடும் இல்லையா? அதே போல் இந்த நினைவு என்ற சுவிட்ச்சை தன்னுடைய கட்டுப்பாட்டில் வையுங்கள். எங்கு விரும்புகிறீர்களோ, எப்பொழுது விரும்புகிறீர்களோ மற்றும் எவ்வளவு நேரம் விரும்புகிறீர்களோ அப்படி தன்னுடைய ஸ்தானம் மற்றும் ஸ்திதியை உருவாக்க முடிய வேண்டும். அந்த மாதிரி அதிகாரியாக ஆகியிருக்கிறீர்களா? காலன் மேல் வெற்றி அடைந்திருக்கிறீர்களா? காலன் என்றால் நேரம் அப்படி காலன் மேல் வெற்றி அடைபவராக ஆகியிருக்கிறீர்களா? ஒருவேளை பாண்டவ சேனை மற்றும் சக்தி சேனையின் இந்த நிலை கடைசியில் வருகிறது

என்றால் அமைதி சக்தியோ அறிவியல் சக்தியை விட குறைந்ததாக ஆகி விட்டது. ஏனென்றால் அறிவியலோ இப்பொழுது கூட இந்த தத்துவங்களின் மேல் வெற்றி அடைந்து விட்டது.

கண்காட்சியில் நீங்கள் ஒரு படம் காண்பிக்கிறீர்கள் இல்லையா, அதில் இராவணன் நான்கு தத்துவங்களின் மேல் வெற்றி அடைந்திருக்கிறான், அதில் காலனையும் காண்பிக்கிறீர்கள் இல்லையா? எப்பொழுது இராவணன் அதாவது இராவணனின் சக்தி அறிவியல் இப்பொழுது கூட மிக அதிகமான எல்லைக்குட்பட்ட தத்துவங்களின் மேல் வெற்றி அடைந்து விட்டது என்றால் அறிவியல் உங்களை விட சக்திசாலியானதாக ஆனது இல்லையா? எப்பொழுது அறிவியலின் சக்தி தன்னுடைய வெளிப்படையான நிரூபணத்தைக் கொடுக்கிறது என்றால் அமைதியின் சக்தி தன்னுடைய வெளிப்படையான நிரூபணத்தை கடைசியில் கொடுக்குமா என்ன? தேவையான நேரத்தில் வெற்றி என்றால் காலன் மேல் வெற்றி அடைவதாகும். இதனுடைய சதவிகிதம் இப்பொழுது குறைவாக இருக்கிறது. தன்னை நிராகார நிலையில் மற்றும் அவ்யக்த நிலையில் நிலைத்திருக்கவோ செய்கிறீர்கள் ஆனால் எவ்வளவு நேரம் நிலைத்திருக்க விரும்புகிறீர்களோ அவ்வளவு நேரம் அந்த நிலையில் நிலைத்திருக்க முடிவதில்லை. அந்த நிலையின் அனுபவத்தையும் பிராப்தி செய்கிறீர்கள், கடின உழைப்பையும் செய்கிறீர்கள் ஆனால் காலன் மேல் வெற்றி அடைய முடிவதில்லை. இதன் காரணம் என்ன? அரை மணி நேரம் சக்திசாலியான நினைவில் அமருவேன் என்று நினைக்கிறீர்கள். மேலும் அரை மணி நேரம் அமரவும் செய்கிறீர்கள் மற்றும் திட்டத்தையும் உருவாக்குகிறீர்கள் ஆனால் எவ்வளவிற்கு எவ்வளவு எந்த நிலையில் இருக்க வேண்டும் என்று யோசிக்கிறீர்களோ அவ்வளவு நேரம் அந்த நிலையில் நிலைத்திருப்பதில்லை. மூன்றாவது மாடியில் செல்வதற்காக சுவிட்ச் ஆன் செய்யலாம் என்று யோசிக்கிறீர்கள் ஆனால் இரண்டாவது மாடிக்கு அல்லது தரைதளத்திற்கு சென்றடைந்து விடுகிறீர்கள் ஏனென்றால் காலன் மேல் வெற்றி அடையவில்லை. இதற்கான காரணம் அடிக்கடி முழு நாளில் நேரத்தை வீணாக இழக்கும் பயிற்சி உடையவராக இருக்கிறீர்கள். வீணானதின் மேல் கவனம் கொடுப்பதினால் தான் காலன் மேல் வெற்றி அடைவதினால் சக்திசாலியாக ஆவீர்கள். எதுவரை நேரம் வீணாகச்

செல்கிறது என்றால் அதுவரை வெற்றி அடைவதில் சக்தி நிறைந்தவராக ஆக முடியாது. இந்தக் காரணத்தினால் சந்திப்பின் அனுபவமாக என்ன செய்ய விரும்புகிறீர்களோ மற்றும் நிரந்தரமாக உறுதிமொழிப்படி நடக்க விரும்பு கிறீர்களோ அதை அப்படி அனுபவமும் செய்ய முடிவதில்லை மற்றும் நடக்க முடிவதில்லை. எனவே தன்னுடைய அதிர்ஷ்டத்தின் படத்தை அனைத்து தத்துவங்களின் மேல் மற்றும் காலன் மேல் எப்பொழுதும் வெற்றி அடைபவராக உருவாக்குங்கள். எப்பொழுது ஒவ்வொரு விநாடியும், வீணானதை சக்திசாலியானதாக மாற்றம் செய்வீர்களோ அப்பொழுது தான் வெற்றி அடைபவர் ஆவீர்கள். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் வெற்றி அடையும். எப்பொழுதும் அதிகாரி நிரந்தரமாக உறுதிமொழிப்படி நடக்கக்கூடிய குழந்தைகளுக்கு, ஒவ்வொன்றையும் வீணானதையும் சக்தி நிறைந்ததாக மாற்றம் செய்யக்கூடிய, எப்பொழுதும் வியக்த உணர்விலிருந்து விலகி அவ்யக்த நிலையில் நிலைத்திருக்கக்கூடிய அதிர்ஷ்ட நட்சத்திரங்கள் மற்றும் நெருக்கமான நட்சத்திரங்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

# 24.12.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஒரு தடவை சகயோகம் கொடுப்பது என்றால் கடைசி வரை சகயோகம் பெறுவதாகும்!

பாப்தாதா எப்பொழுதும் வெளிநாட்டினரை முதலில் நினைவு செய்கிறார். எப்படி பந்தனத்தில் இருப்பவர்கள் முதலில் நினைவில் வருகிறார்கள். அதே போலவே வெளிநாட்டில் இருக்கக்கூடிய குழந்தைகளும் நினைவில் வருகிறார்கள். அவர்களுக்கும் அடிக்கடி இந்த தேசத்தில் வர முடியாத பந்தனமும் இருக்கிறது இல்லையா? பாப்தாதாவோ அவர்களை அனைவரையும் விட அருகில் பார்க்கிறார். யார் வெளிநாட்டின் சேவைக்காக சென்றிருக்கிறார்களோ அது என்ன தூரமா? அவர்கள் கண்களின் எதிரிலும் இல்லை ஆனால் கண்களில் நிரம்பியிருப்பவர்கள் ஒருபொழுதும் தூரமாக இருப்பதில்லை. அதுவோ அனைவரையும் விட அருகில் இருப்பவர்களாக ஆனார்கள் இல்லையா? நீங்கள் கண்களின் எதிரில் இருக்கிறீர்களா அல்லது கண்களிலேயே நிரம்பியிருக்கிறீர்களா? யார் நிரம்பியிருக்கிறாரோ அவர்கள் நிரந்தர யோகியாக இருக்கிறார்கள். வெளிநாட்டில் இருக்கக்கூடிய குழந்தைகள் அருகில் வந்து விடுகிறார்கள். மேலும் தேசத்தின் கணக்குப்படி யார் அருகாமையில் இருக்கிறார்களோ அவர்கள் 4 வருடங்களிலும் ஒரு தடவை கூட வருவதில்லை என்றால், அருகில் இருப்பவர்களாக யார் ஆனார்கள். இவை அனைத்தும் சூட்சும தொடர்பு ஆகும். நெருக்கமான உறவு இருக்கிறது அதனால் தான் நெருக்கமாக வந்திருக்கிறீர்கள். இதுவோ நிரூபணம் இருக்கிறது இல்லையா? நாடகப்படி பாருங்கள். இவ்வளவு மகாரதிகளின் எண்ணம் நிறைவேற முடியவில்லை, ஆனால் உங்களுடைய எண்ணம் தான் நிறைவேறி விட்டது அப்படியானால் நெருக்கமானவர்கள் ஆனீர்கள் இல்லையா? தன்னை பாப்தாதாவிடமிருந்து தூரமாக இருக்கிறேன் என்று ஒருபொழுதும் நினைக்காதீர்கள். தன்னுடைய ஜாதகத்தைப் பார்க்க வேண்டும்

என்றால் தொடக்கத்திலிருந்து அதாவது பிறந்ததி லிருந்தே என்னுடைய அதிர்ஷ்டத்தின் ரேகை எப்படி இருக்கிறது? என்று பாருங்கள். யாருக்கு பிறவி எடுத்தவுடனேயே அதிர்ஷ்டம் பிராப்தியாகி இருக்கிறதோ, தொடக்க காலத்தின் அதிர்ஷ்டத்தை உருவாக்கி விட்டே வந்திருக்கிறாரோ, அதன் ஆதாரத்தில் பிற்காலத்திலும் அவருக்கு லிஃப்ட் (வேகமாக முன்னேறு வதற்கான உதவி) கிடைக்கிறது. தொடக்கத்திலேயே சகஜ பிராப்தி ஆகியிருக்கிறது இல்லையா? உழைப்பு குறைவு மற்றும் பிராப்தி அதிகம். இந்த லாட்டரி கிடைத்திருக்கிறது. ஒரு ரூபாயின் லாட்டரியில் லட்சக் கணக்கான ரூபாய் கிடைத்து விட்டது என்றால் உழைப்பு குறைவு பிராப்தி அதிகமானது இல்லையா? எந்தவொரு விஷயத்திலும் ஒருவேளை ஒரு தடவை தேவையான நேரத்தில் எந்தவொரு எண்ணத்தையும் வைக்காமல், கட்டளை என்று புரிந்து யார் சகயோகி ஆகி விடுகிறார்களோ அந்த மாதிரி தேவையான நேரத்தில் சகயோகிகளாக ஆனவர்களுக்கு பாப்தாதாவும் கடைசி வரை சகயோகம் கொடுப்பதற்காக கட்டுப்பட்டிருக்கிறார். ஒரு தடவையின் சகயோகம் கொடுத்ததின் உயரே தாண்டுதல் கடைசி வரை சகயோகம் பெறுவதற்கான அதிகாரியாக ஆக்குகிறது. ஒன்றிற்கு நூறு மடங்கு கிடைப்பதினால் உழைப்பு குறைவு பிராப்திஅதிகமாகிறது. சகயோகத்தை மனதால், உடலால் மற்றும் பொருளால் எப்படி செய்திருந்தாலும், ஆனால் தேவையான நேரத்தில் சகயோகம் கொடுத்தார் என்றால் பாப்தாதா கடைசி வரை சகயோகம் கொடுப்பதற்காகக் கட்டுப்பட்டிருக்கிறார். அப்படி ஒருவேளை யாராவது ஒரு தடவையாவது வாழ்க்கையில் பாப்தாதாவின் காரியத்தில் சகயோகம் கொடுத்திருக்கிறார் என்றால் கடைசி வரை பாப்தாதா சகயோகியாக இருப்பார். இதுவும் ஒரு கணக்கு புரிந்ததா? நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋ ❋❋❋❋❋❋❋❋

## 27.12.1974 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# யோகி ஆகுக மற்றும் தூய்மை ஆகுக என்பதின் மூலம் வரதானங்களின் பிராப்தி!

இன்றைய சபை வரமளிக்கும் வள்ளல் மூலமாக அனைத்து வரதானங்களையும் பிராப்தி செய்திருக்கும் ஆத்மாக்களினுடையது. வரமளிக்கும் வள்ளல் மூலமாக அனைத்து வரதானங்களில் முக்கியமாக இரண்டு வரதானங்கள் இருக்கின்றன, அதில் அனைத்து வரதானங்களும் அடங்கியிருக்கிறது. அந்த இரண்டு வரதானங்கள் எவை? அதை நல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்களா? அல்லது சுயம் வரதான சொரூபம் மற்றும் வரதானிமூர்த்தியாக ஆகியிருக்கிறீர்களா? யார் வரதானமூர்த்தியாக இருக்கிறாரோ அவர் சுயம் சொரூபமாகி மற்றவர்களுக்குக் கொடுக்கக்கூடிய வள்ளல் ஆக முடியும். எனவே முக்கியமான அந்த இரண்டு வரதான சொரூபமாக ஆகியிருக்கிறேனா என்று தன்னைத் தானே கேளுங்கள். அதாவது யோகி பவ மற்றும் பவித்ர பவ இந்த இரண்டு படிப்பின் சொரூபமாக ஆகியிருக்கிறேனா? இந்த படிப்பை முடித்தாகி விட்டதா அல்லது இதுவரையிலும் செய்து கொண்டிருக்கிறீர்களா? ஏழு நாள் பாடத்தின் இரகசியம் இந்த இரண்டு வரதானங்களில் அடங்கியிருக்கிறது. இங்கு யார் யார் அமர்ந்திருக்கிறீர்களோ அவர்கள் அனைவரும் இந்த படிப்பை முடித்தாகி விட்டதா அல்லது அவர்களுக்கு இதுவரையிலும் இந்த படிப்பு நடந்து கொண்டிருக்கிறதா? கோர்ஸ் (படிப்பு) அதாவது ஃபோர்ஸ் (சக்தி) நிரம்பிவிடுவது. எப்பொழுதும் யோகி பவ, மற்றும் எப்பொழுதும் பவித்ர பவ-வின் ஃபோர்ஸ் அதாவது சக்தி சொரூபத்தின் அனுபவம் ஆகவில்லை என்றால், அவரை சக்தி சொரூபம் என்று கூற மாட்டோம் ஆனால் அவரை சக்தி சொரூபம் ஆவதற்கான பயிற்சி செய்பவர் என்று தான் சொல்வோம். ஏனென்றால் தன்னுடைய சொரூபம் எப்பொழுதும் மற்றும் இயல்பாகவே நினைவிலிருக்கிறது. எப்படி தன்னுடைய ஸ்தூல சொரூபம் எப்பொழுதும் மற்றும் இயல்பாகவே நினைவிருக்கிறது. மேலும் அதற்கான பயிற்சி செய்வதில்லை. மாறாக

அதை மறப்பதற்கான பயிற்சி செய்கிறீர்கள். அது போலவே தன்னுடைய இயற்கையான சொரூபம் மற்றும் வரதானி சொரூபம் எப்பொழுதுமே நினைவில் இருக்க வேண்டும். தூய்மையின்மையின் மற்றும் நினைவு மறந்ததின் பெயர், அடையாளம் இருக்க வேண்டாம். இதைத்தான் வரதானங்களின் படிப்பது என்று கூறுவது. அப்படிப்பட்ட படிப்பை செய்திருக்கிறீர்களா? எப்படி நீங்கள் ஏழு நாள் பாடம் முடிப்பதற்கு முன்பாக எந்தவொரு ஆத்மாவையும் வகுப்பில் வர விடுவதில்லை. அதேபோலவே பிராமண குழந்தைகள் யார் இந்த நடைமுறை படிப்பை முடிக்கவில்லை என்றால் பாப்தாதா மற்றும் டிராமாவும் அவரை ஃபர்ஸ்ட் கிளாசில் (முதல் தரத்தில்) வர விடுவதில்லை. ஃபர்ஸ்ட் கிளாஸ் என்பது எது? அவர்கள் சத்யுகத்தின் தொடக்கத்தில் வர முடியாது. நீங்கள் அவர்களை வகுப்பில் வரவிடுவதில்லை என்றால் டிராமாவும் ஃபர்ஸ்ட் கிளாசில் செல்வதற்கான அதிகாரி ஆக்க முடியாது. ஃபர்ஸ்ட் கிளாசில் வருவதற்காக இந்த முக்கிய இரண்டு வரதானங்கள் நடைமுறை ரூபத்தில் தேவையாக இருக்கிறது. நினைவு மறந்த நிலை அல்லது தூய்மையின்மை என்றால் என்ன என்ற இதன் அறியாமை இருக்கட்டும். நீங்கள் சங்கமயுகத்தில் இருக்கிறீர்கள் இல்லையா? எனவே இந்த சம்ஸ்காரம் மற்றும் சொரூபம் என்னுடையது இல்லை என்ற அந்த மாதிரி அனுபவம் ஆகட்டும் ஆனால் இவை என்னுடைய கடந்த கால ஜென்மத்தினுடையதாக இருந்தது மற்றும் இப்பொழுது இல்லை. நானோ பிராமணன் ஆவேன். மேலும் இதுவோ சூத்திரர்களின் சம்ஸ்காரம் மற்றும் அவர்களுடைய சொரூபம் ஆகும். அப்படி தன்னிடமிடருந்து வேறுபட்டதாக அதாவது மற்றவர்களின் சம்ஸ்காரம் என்று அப்படி அனுபவம் ஆவது என்ற இதைத் தான் நியாரா (விலகியிருந்து) மற்றும் ப்யாரா (அன்பாக இருப்பது). எப்படி உடல் மற்றும் ஆத்மா வேறு வேறான பொருளாக இருக்கிறது, ஆனால் அஞ்ஞான வசமாகி இந்த இரண்டையும் சேர்த்து விட்டார்கள்., அதே போலவே என்னுடையதை நான் என்று புரிந்து கொண்டார்கள். அப்படி இந்த தவறின் காரணமாக எவ்வளவு பிரச்சனை, துக்கம் மற்றும் அமைதியின்மையை பிராப்தி செய்திருக்கிறோம். அதே போலவே இந்த தூய்மையின்மை மற்றும் நினைவு மறந்த நிலையின் சம்ஸ்காரம் எது என்னுடையது அதாவது பிராமண தன்மையினுடைய தாக இல்லை ஆனால் சூத்திரத்தன்மையினுடையது, அதை என்னுடையது என்று

புரிந்து கொள்வதினால் மாயாவின் வசம் மற்றும் பிரச்சனைக்குரியவர்களாக ஆகி விடுகிறீர்கள். அதாவது பிராமணத் தன்மையின் மரியாதையிலிருந்து தூரமாக விலகிச் சென்று விடுகிறீர்கள். இது என்னுடைய சம்ஸ்காரமோ இல்லையே அல்லது இது எங்காவது என்னுடைய சொரூபமாகவோ இல்லையே என்று இந்த சின்னஞ்சிறு தவறை சோதனை செய்யுங்கள். புரிந்ததா? அப்படி முதல் பாடமாக தூய்மையாகுங்கள் மற்றும் யோகி ஆகுங்கள் என்பதை நடைமுறை சொரூபத்தில் கொண்டு வாருங்கள். அப்பொழுது தான் தந்தைக்குச் சமமாக மற்றும் தந்தையின் அருகில் வருவதற்கான அதிகாரியாக ஆக முடியும். இன்று சென்ற கல்பத்தைச் சேர்ந்த வெகு காலமாகப் பிரிந்திருந்த, தந்தையின் நினைவில் துடித்துக் கொண்டிருப்பவர்கள் மற்றும் அவ்யக்த சந்திப்பைச் செய்வதற்கான சுத்தமான எண்ணத்திலேயே இருப்பவர்கள், தன்னுடைய அன்பு என்ற கயிற்றினால் பாப்தாதாவையும் கட்டிப்போடுபவர்கள் மற்றும் அவ்யக்தமாக இருப்பவரையும் தனக்குச்சமமாக வியக்தமாக ஆக்கக்கூடியவர்கள், அந்த புதுப்புது குழந்தைகள் மற்றும் சாகார உலகில் தொலைதூர தேசத்தைச் சேர்ந்த குழந்தைகள் யார் இருக்கிறார்களோ அவர்களுக்காக விசேஷமான சந்திப்பைச் செய்வதற்காக பாப்தாதாவிற்கும் வர வேண்டியதாக இருந்தது. அப்படியானால் சக்திசாலியானவர்களாக யார் ஆனார்கள்? கட்டிப்போடுபவர்களா அல்லது கட்டப்பட்டவரா? ஆஹா குழந்தைகளே, சபாஷ் குழந்தைகளே என்று தந்தை கூறுகிறார். புதியவர்களுக்காக விசேஷமாக பாப்தாதாவின் அன்பு இருக்கிறது. அப்படி ஏன்? நிச்சயத்திற்கு எப்பொழுதும் வெற்றி இருக்கிறது. விசேஷமான அன்பிற்கான முக்கிய காரணம் புதுக் குழந்தைகள் எப்பொழுதும் அவ்யக்த சந்திப்பைச் செய்வதற்கான கடின உழைப்பில் இருக்கிறார்கள். அவ்யக்த ரூபம் மூலமாக வியக்த ரூபத்தினால் செய்திருக்கும் சரித்திரங்களை அனுபவம் செய்வதற்கான நல்ல ஆசைகள் என்ற தீபம் எப்பொழுதும் எரிந்து கொண்டிருப்பதாக இருக்கிறது. அந்த மாதிரி கடின உழைப்பு செய்பவர்களுக்கு பலன் கொடுப்பதற்காக பாப்தாதாவிற்கும் விசேஷமாக நினைவு இயல்பாகவே வருகிறது. எனவே இன்றைய நினைவு, இன்றைய காலை வணக்கம் மற்றும் நமஸ்காரம் விசேஷமாக நாலாபுறங்களிலும் உள்ள புதுப்புது குழந்தைகளுக்கு முதன் முதலில் பாப்தாதா கொடுக்கிறார். கூடவே அனைத்து

குழந்தைகளுமோ இருக்கவே இருக்கிறார்கள். இப்பொழுது வியக்தம் மூலமாக அவ்யக்த சந்திப்பு நிரந்தரமாகவோ இருக்க முடியாது. எனவே வந்த பிறகு செல்ல வேண்டியதாக இருக்கிறது. அவ்யக்த ரூபத்தில் அவ்யக்த சந்திப்போ நிரந்தரமானதாக இருக்கவே இருக்கிறது. அந்த மாதிரி வரதானி குழந்தைகளுக்கு அன்பு நினைவு மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: உள்ளப்பூர்வமான தபஸ்யா மூலமாக திருப்தியின் சான்றிதழை அடையக்கூடிய அனைவரின் ஆசீர்வாதங்களுக்கு அதிகாரி ஆகுக!

தபஸ்யாவின் சார்ட்டில் தனக்கு சான்றிதழ் கொடுப்பவரோ அதிகமானோர் இருக்கிறார்கள், ஆனால் அனைவரின் திருப்தியின் சான்றிதழ் எப்பொழுது கிடைக்கும் என்றால், எப்பொழுது உள்ளப்பூர்வமான தபஸ்யா இருக்கிறதோ, அனைவருக்காகவும் உள்ளப்பூர்வமான அன்பு இருக்கிறதோ, பொறுப்புணர்வு மற்றும் நல் உணர்வு இருக்கிறதோ அப்பொழுது தான். அந்த மாதிரி குழந்தைகள் அனைவரின் ஆசீர்வாதங்களுக்கு அதிகாரி ஆகி விடுகிறார்கள். குறைந்தது 95 சதவிகித ஆத்மாக்கள் திருப்தியின் சான்றிதழ் கொடுக்க வேண்டும். அனைவரின் வாயிலிருந்தும் ஆம், இவர் நம்பர் ஒன்-ல் இருக்கிறார் என்று அந்த மாதிரி அனைவரின் உள்ளப்பூர்வமான ஆசீர்வாதங்களின் சான்றிதழை அடைபவர் தான் தந்தைக்குச் சமமாக ஆகிறார்.

சுலோகன்: நேரத்தை விலைமதிப்பில்லாதது என்று புரிந்து பயனுள்ளதாக ஆக்கினீர்கள் என்றால் தேவையான நேரத்தில் ஏமாற்றம் அடைய மாட்டீர்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்